மாக்சீகப் பார்வையில்
இலங்கை சரித்திரம்

சண்முகநாதன்

STACKS

1972

954.93
CAN
S

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்தியாயம் - 1 | — | புராதன இலங்கை | 01 |
| அத்தியாயம் - 2 | — | ஐரோப்பியர்களின் வருகை | 21 |
| அத்தியாயம் - 3 | — | முதலாவது உலக யுத்தமும் அதன் பின்னரும் | 43 |
| அத்தியாயம் - 4 | — | நவ காலனித்துவத்தின் தோற்றம் | 59 |
| அத்தியாயம் - 5 | — | பண்டாரநாயக்கா சகாப்தம் | 70 |
| அத்தியாயம் - 6 | — | இலங்கையின் 1971 ம் ஆண்டு ஏப்பிரல் சம்பவங்களைப் பற்றிய ஓர் ஆய்வு | 99 |
| அத்தியாயம் - 7 | — | முடிவுகள் | 118 |
| பிற்சேர்க்கை: | — | சேகுவேரா கும்பலினால் திசை திருப்பப்பட்டவர்களுக்கு | 121 |


STACKS

# முன்னுரை

1971 ம் ஆண்டு ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் நான் பத்து மாதங்கள் அநீதியான முறையில் சிறைவைக்கப்பட்டிருந்த காலத்தில் இப்புத்தகத்தை எழுதினேன். என்னை நிலைகுலையச் செய்வதின் மூலம் எதிரி என்னை வெற்றியீட்டப் பார்க்கிறான் என்பதை உணர்ந்து இதற்குக் கொஞ்சமேனும் இடமளிப்பதில்லை என்று உறுதிபூண்டேன். கெட்ட ஒரு விஷயத்தை நல்லதொன்றாக மாற்ற முடிவு செய்தேன்.

எமது கட்சியில், இலங்கை வரலாற்றை எழுதுவதென பல முறை முடிவு செய்யப்பட்டது. தமது நாட்டின் வரலாற்றை புரட்சிவாதிகள் அறிந்திருக்க வேண்டும் என்பது ஒரு அதி முக்கியமான விஷயமாகும். தோழர் மாஓ சேதுங் கூறினார்: ''புரட்சிகர தத்துவமும், வரலாற்று அறிவும், நடைமுறை இயக்கம் பற்றிய ஆழ்ந்த கிரகிப்புமின்றி எந்தவொரு அரசியல் கட்சியும், ஒரு புரட்சிகர இயக்கத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியாது.''

இதுவே இப்புத்தகத்தை எழுத என்னைத் தூண்டியது. இப்புத்தகத்தில் குறைபாடுகள் காணப்பட்டாலும் கூட, எமது தோழர்களுக்கும், அனுதாபிகளுக்கும் இலங்கை வரலாற்றின் மாக்சிச விளக்கமொன்றை வழங்குவதே இதன் நோக்கம். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றில் நான் பட்டம் பெற்றிருப்பதுவே இப்புத்தகத்தை எழுத பெற்றுள்ள தகைமை எனப் பலர் எண்ணலாம். கீழை நாட்டு வரலாற்றை நான் பாடமாகக் கற்ற போதிலும், அந்நாட்களில் இறுதித் தேர்வுக்குக் கொடுக்கப்பட்ட பத்துக் கேள்வித் தாள்களில் ஒன்றே ஒன்றுதான் இலங்கை வரலாற்றுடன் தொடர்புடையதாய் இருந்தது. அது கூட ''தென் இந்திய - இலங்கை வரலாறு'' என்றே தலைப்பிட்டிருந்தது. எனவே நான் பெற்றிருக்கும் வரலாறு பற்றிய அறிவு முழுவதும் நான் பல்கலைக் கழகத்தை விட்டு விலகிய பின் பெற்றதேயாகும். இவ்வறிவை நான் மாக்சிய ஆராய்ச்சிக்கு உட்படுத்தியுள்ளேன்.

நான் வழங்கி இருக்கும் பல விளக்கங்கள் பலருக்கு திருப்தியளிக்காது. ஏனென்றால் இதுவரை வரலாற்று உண்மைகள் என்று பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பலவற்றை வெறும் கட்டுக் கதைகளே எனச் சுட்டிக் காட்டியுள்ளேன். ஆனால் இப்புத்தகம் எவரையும் திருப்திப் படுத்துவதற்காக எழுதப்படவில்லை. கடந்த காலத்தைப் புரிந்து கொண்டு, அதன் மூலம் நிகழ்காலத்தை விளங்கிக் கொள்ளவும், எதிர்காலத்தை உருவாக்கவுமே இப்புத்தகம் எழுதப்பட்டது. இதில் ஒரு சிறு வகையிலாவது, இப்புத்தகம் உதவுமாகவிருந்தால் நான் திருப்தியடைந்தவனாவேன்.

1-5-72

— ஆசிரியர் —

முதலாவது அத்தியாயம்

# புராதன இலங்கை

இலங்கை மாம்பழத்தை ஒத்த உருவமுடைய ஒரு தீவு, முத்தைப் போன்ற தீவு என புவியியல் புத்தகங்கள் கூறுகின்றன. இத்தீவு இந்திய உபகண்டத்தின் அதி தென் முனையில் இருக்கின்றது. இலங்கையை இந்தியாவிலிருந்து பிரிக்கும் மிகக் குறுகிய தூரம் 20 மைல்களேயாகும். உண்மையில் அலங்காரப் பிரியர்களான வரலாற்றாசிரியர்கள் சிலர் இலங்கையை இந்தியாவென்ற பதக்கத்தில் தொங்கும் முத்தென வருணித்திருக்கிறார்கள்.

இலங்கை இந்தியாவுக்கு இவ்வளவு அண்மையில் இருப்பதை ஆரம்பத்திலேயே வற்புறுத்துவதன் நோக்கம்; இலங்கையின் சரித்திரத்தையும், அரசியலையும், புவியியல் அம்சம் ஏதுவும் பாதித்திருக்குமென்றால், அது இந்தியாவிற்கு அண்மையில் இருப்பதென்ற இந்த அம்சமேயாகும். இலங்கை இந்தியாவிலிருந்து அதன் மக்களையும், மொழிகளையும், மதங்களையும், நாகரிகங்களையும் படையெடுப்பாளர்களையும், பெருந்தொகை அரசியற் கருத்துக்களையும் பெற்றிருக்கின்றது.

சிங்கள இனம் என தற்போது அழைக்கப்படும் இனம் கி. மு. 6 ம்நூற்றாண்டில் (கி. மு. சுமார் 543) இந்தியாவிலிருந்து வந்திறங்கிய விஜயனினதும், அவனது நண்பர்களினதும் வழித்தோன்றல்களே! (விஜயன் கதை அநேகமாகக் கட்டுக் கதையேயாகும்.) இப்படிக் கூறும் போது இக்காலத்துக்கு முன்னர் இலங்கையில் மக்கள் வாழவில்லை என்று பொருள்படாது. ஆனால் சான்றுடைய வரலாறு இவ்வாறு தான் கூறுகின்றது.

கி. பி. 412 ல் இலங்கை வந்திருந்த புகழ்பெற்ற சீன யாத்திரிகனான பாகியன் பின்வருமாறு கூறுகின்றார்; ''இலங்கையில் முன்னர் மக்கள் வாழவில்லை. பிசாசுகளும் யாழிகளும் தான் வசித்தன. பல்வேறு நாட்டு வணிகர்கள் இங்கு வர்த்தகம் செய்ய வந்தார்கள். வியாபாரத்தின் போது பிசாசுகள் நேரே தோன்றவில்லை. தமது மதிப்பிடற்கரிய பண்டங்களில் பெறுமதியைப் பொறித்து மாத்திரம் காட்டின. அப்பொழுது வர்த்தகர்கள் பொறிக்கப்பட்ட விலைகளின் பிரகாரம், பொருட்களைக் கொள்வனவு செய்து எடுத்துச் சென்றார்கள். ஆனால் இந்த வருகைகளின் விளைவாக

இதர நாட்டு ஆட்கள் இந்த மக்களின் சந்தோஷமான இயல்பை அறிந்து பெருந்தொகையாக இங்கு வந்தார்கள். இவ்வாறு ஒரு பெரும் ராஜ்யம் உருவாகியது.''

இலங்கையில் ஆதிவாசிகள் இந்த நாட்டின் மீது பின்னர் படையெடுத்து வந்த, இந்தோ-ஆரியர்களிலும் பார்க்க நாகரிகம் குறைந்தவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதையே விபரம் அர்த்தப்படுத்துகின்றது. ஆனால் குறைந்த பட்சம் இந்த மக்கள் வெளிநாட்டு வர்த்தகர்களுடன் (ஒருவேளை அராபியர்களாக இருக்கலாம்) தம் பரிமாறிய பண்டங்களுக்குக் குறித்த விலை பெறுமளவிற்கு நாகரிகம் படைத்தவர்களாக இருந்தனர் போலும்.

இலங்கை 3,000 ஆண்டுகளுக்கு மேலான நாகரிக வாழ்வைக் கொண்டிருக்கிறது எனவும், இத்தீவின் தற்போதைய மக்களின் மூதாதையர் கி. மு. 6 ம் நூற்றுண்டில் இந்தியாவிலிருந்து வந்தார்கள் எனவும் இதிலிருந்து நாம் ஊகித்தறியலாம். இந்தோ ஆரிய இனத்தைச் சேர்ந்த இவர்கள் வட இந்தியாவிலிருந்து (மேற்கு, கிழக்கு பகுதிகளில் இருந்தவர்களாக இருக்கலாம்) வந்தவர்கள் எனத் தெரிகின்றது. இவர்கள், மிகவும பின்னதாகத் தென் இந்தியாவிலிருந்து வந்த திராவிட இன மக்களிலும் பார்க்க வித்தியாசமானவர்கள்.

ஆரம்பகால சிங்கள மன்னர்கள் கி. பி. 1 ம் நூற்றுண்டிலிருந்தே ரோமச் சக்கராதிபத்தியத்துடனும், கி. பி. 4 ம் நூற்றுண்டிலிருந்து சீன அரசவையுடனும் தொடர்புகளை வைத்திருந்தார்கள்.

ஆரம்ப கால எகிப்திய, ரோம, சீன நாகரிகங்களுடன் தொடர்புகளை வைத்திருந்த புராதன நாகரிகம் ஒன்றின் வாரிசுகள் நாம் என்பதை இவை அனைத்தும் காட்டுகின்றன. இந்த நாகரிகத்துக்குப் பல சாதனைகள் உண்டு. இவற்றில் பிரதான சாதனை, ஆரம்பகால சிங்கள மன்னர்கள் கட்டியமைத்த, பிரமாண்டமான குளங்களைக் கொண்ட, அற்புதமான நீர்ப்பாசன அமைப்பாகும். ஆனால் இந்தச் சாதனைகள் அனைத்தும் நிலப்பிரபுத்துவச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும், நாம் மறந்துவிடக் கூடாது. இந்த நிலப்பிரபுத்துவச் சுரண்டலின் கீழ் மக்களின் வாழ்வு படுமோசமானதாக இருந்தது. இந்தச் சாதனைகள் காரணமாக நாம் எப்பொழுதும் எமது நாகரிகத்தின் புராதன புகழைப் பாடிக் கொண்டிருக்கக் கூடாது. முதலாளித்துவ வர்க்க அரசியல் வாதிகள் உடனடிக் கடமைகளிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பிவிட, இந்தப் பழம் புகழ் பாடுவதில் பெரிதும் விருப்பத்துடன் ஈடுபடுகின்றார்கள். ஆனால் நாம் சுரண்டல் அனைத்

தையும் அழித்தொழிக்கும் அடிப்படையில் அமைந்ததும், இன்னும் பிரகாசமுள்ளதுமான எதிர்காலத்தை முன்னோக்கிப் பார்க்க வேண்டும்.

இலங்கை ஒரு உஷ்ண வலயத் தீவு. பூமத்திய ரேகைக்குச் சற்று வடக்கில் அமைந்திருக்கின்றது. அதன் பரப்பு 25,481 சதுர மைல்களாகும். வடக்கிலிருந்து தெற்கு வரையான தூரம் 270 மைல்களும், கிழக்கிலிருந்து மேற்கு வரையான தூரம் 140 மைல்களும் ஆகும். இத்தீவு மத்திய மலைத் தொடர் ஒன்றினால் கிட்டத்தட்ட இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் தென் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் இம் மலைத் தொடர் பேதுரு தாலகாலைச் சிகரத்தில் 8,292 அடிவரை உயர்கின்றது. பொதுவாகவே மே மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை தென்மேற்குப் பருவப் பெயற்சிக் காற்றினால் இப்பகுதியும், மத்திய பகுதியும் கூடுதலான மழையைப் பெற்று ஈரலிப்புப் பிரதேசமாக விளங்குகின்றது. இத்த மலைத் தொடர் ஒரு வகை எல்லையாக அமைகின்றது. இம் மலைத் தொடருக்கு வட கிழக்கிலுள்ள பிரதேசம் ஒக்டோபர் மாதம் முதல் ஏப்பிரல் மாதம் வரை நிலவும் வடகிழக்குப் பருவப் பெயற்சிக் காற்றினால் மழையைப் பெறுகின்றது. இப் பருவ காலத்தில் மழை வீழ்ச்சி குறைவு; இப்பருவ காலம் உடைய பிரதேசம் பொதுவாக வரண்ட பிரதேசம் என அழைக்கப்படுகின்றது.

(இலங்கையின் பெரும் பகுதி வரண்ட பிரதேசம் ஆகும். சரித்திர ரீதியில் இது மிகவும் முக்கியமான பகுதியாகும். ஏனென்றால் இது சிங்கள நாகரிகத்தின் தொட்டிலாகும். இன்று இப்பிரதேசத்திலுள்ள ஜனத் தொகை ஈரலிப்புப் பிரதேசத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கின்ற போதிலும், ஆரம்பகால சிங்கள நாகரிகம் செழிப்படைந்திருந்த இடமாக வரண்ட பிரதேசம் விளங்குகின்றது. கலாநிதி பரணவித்தான சுட்டிக் காட்டியவாறு, ''இங்குதான் சிங்களவர்கள் ஆரம்ப காலத்தில் குடியேறி பின்னர் தமது நகரங்களையும், மத ஞாபகச் சின்னங்களையும் கட்டியமைத்தார்கள்'' ''இப் பிரதேசங்களின் உற்பத்தி ஆற்றல், விரிவான நீர்ப்பாசன அமைப்பொன்றினால் அதிகரித்தது. இந்த அமைப்பு 7 ம் நூற்றாண்டில் அதன் உச்ச கட்ட வளர்ச்சியை அடைந்தது. 12 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாம் பராக்கிரமபாகுவினால் அதன் மிகக் கூடிய அளவுக்கு புனரமைக்கப்பட்டது'' எனவும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.)

''இலங்கைக்கு வந்து குடியேறிய இந்தோ-ஆரியர்கள் நெல் பயிரிடுதல், நீர்ப்பாசனம் ஆகியன பற்றி அறிந்திருந்தார்கள்.

இந்த அடிப்படையான, ஆரம்பமட்ட அறிவிலிருந்து ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய அணைக்கட்டுகளின் பிரமாண்டமான, சிக்கலான அமைப்பொன்றைப் படிப்படியாகக் கட்டியமைத்தல், பல்வேறு திசைகளிற் பாயும் நதிகளின் நீரை ஒன்று சேர்த்தல் ஆகிய புராதன சிங்கள ராஜ்யத்தில் காணப்பட்ட மகத்தான நிர்மாண நுட்பம் பின்னர் விருத்தியடைந்தது. இதே அளவான அல்லது இதே சிக்கலான, இது போன்ற அமைப்பெதுவும் அக்கால இந்தியாவில் இருக்கவில்லை'' என்று கலாநிதி பரணவித்தான சுட்டிக்காட்டுகின்றார்.

எமது கடந்த காலத்தின் மகத்தான பிதுரார்ஜிதத்துடன் தொடர்புடைய பல மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்· பாண்டுகாபயன் வாவிகளை நிர்மாணிப்பதை ஆரம்பித்து வைத்தார். வாவிகளின் நிர்மாணஸ்த்தர் என்று அழைக்கப்படும் மகாசேனனின் (கி. பி. 276-303) ஆட்சிக் காலத்தில் நீர்ப்பாசன இயலிலும், நடைமுறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாக பிரமாண்டமான நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் மிகவும் பிரசித்தி பெற்றது மின்னேரியா வாவியாகும். மஹா பராக்கிரமபாகு இந்த நீர்ப்பாசன வேலையை உச்ச நிலைக்குக் கொண்டு வந்தான். முதலாம் பராக்கிரமபாகுவின் புகழ் பெற்ற வார்த்தை மேற்கோள் காட்டத் தக்கது இலங்கையைத் தனது ஆட்சியின் கீழ் ஒருமுகப்படுத்துவதற்கு முன்னர், மாயரட்டையின் ஆட்சியாளராக இருந்த போது அவன் இதைக் கூறியதாகக் குறிப்பிடப்படுகின்றது. முதலாம் பராக்கிரமபாகு கூறியதாவது; ''எனது ஆட்சியின் கீழுள்ள பிரதேசத்தில் பிரதானமாக மழை நீரினால் விளைச்சல் பெறும் பல நிலப்பரப்புக்கள் தவிர, நிரந்தரமாக நீரோடும் நதிகளிற் தங்கியிருக்கும் அல்லது பெரும் நீர்த்தேக்கங்களிற் தங்கியிருக்கும் சில வயல்களும் இருக்கின்றன. மலைகள், அடர்ந்த காடுகள், விசாலமான சேற்றுச் சகதி நிலங்கள் ஆகியனவும் எனது ராஜ்யத்தில் நிறைந்திருக்கின்றன. உண்மையில் இத்தகையதோர் நாட்டில் மழைமூலம் கிடைக்கும் ஒரு துளி நீர் தானும் மனிதனுக்குப் பிரயோஜனப் படாமல் சமுத்திரத்துக்குட் பாயக் கூடாது. பொன் போன்ற, மதிப்புள்ள கற்கள் இருக்கும் சுரங்கங்களைத் தவிர, இதர இடங்கள் அனைத்திலும் வயல்களை அமைக்க வேண்டும்.''

முதலாம் பராக்கிரமபாகு இலங்கையின் ஏக ஆட்சியாளனாகியபோது அவன் 3,910 கால்வாய்களையும், 163 பெரும் வாவிகளையும், 2,376 சிறு வாவிகளையும் கட்டினான் அல்லது புதுப்பித்தான் என அறியப்படுகிறது. இது ஈடிணையற்ற சாதனையாகும். ஆனால் அவனுடைய மாபெரும் சாதனை பராக்கிரம சமுத்திரம் என்ற வாவியை கட்டியமைத்ததாகும். இவ்வாவி ''அங்கமடில்ல

வில் கர (அம்பன்) கங்கையை அணைக்கட்டுப் போட்டுத் தடுத்து அங்கமடில்ல அலவால் நீரை இத் தேக்கத்துக்கு எடுத்துச் செல்வதன் மூலம் உருவாக்கப்பட்டது. இடையிலுள்ள இரண்டு வாவிகளிலிருந்து கால்வாய் மூலம் கிரித்தல வேவாவிலிருந்து இத் தேக்கம் நீரைப் பெற்றது.''

புராதன சிங்களவர்களின் நிர்மான நுட்பத்துக்கு ஒரு பாராட்டாக விளங்கும் இந்த விபரமான விவேகமான நீர்ப்பாசன அமைப்புத்தான் அனுராதபுர காலத்திலும் பொலனறுவை காலத்திலும் புராதன சிங்கள நாகரிகத்தின் புகழ் அனைத்தினதும் அடிப்படையாகும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இந்த நீர்ப்பாசன அமைப்பின் வீழ்ச்சியுடன் புராதன சிங்கள நாகரிகத்தின் வீழ்ச்சியும் ஆரம்பிக்கின்றது. இந்த வீழ்ச்சி வெளிநாட்டு படையெடுப்புகளாலும் உள் நாட்டுப் பிரிவுகளாலும் ஏற்பட்டது. இது பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

புவியியல் ரீதியில் இலங்கையை வரண்ட பிரதேசம், ஈரலிப்புப் பிரதேசம் எனப் பிரிக்க முடியும் என்ற போதிலும், புராதன காலங்களில் அரசியல் ரீதியில் அது மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது;

(1) ராஜரட்ட; இது அடிப்படையில் இலங்கையின் மிகப் பெரிய நதியான மகாவலி கங்கைக்கு மேற்கில் இருக்கும் வரண்ட பிரதேசம் முழுவதுமாகும். இதன் தலைநகரம் அநுராதபுரம். (2) றுகுணு ரட்ட; இது மகாவலிக்குக் கிழக்கில் இருக்கும் பிரதேசமாகும். ஆனல் மட்டக்களப்பு, மொனராகல, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலிப் பிரதேசங்கள் ஆகியன உட்பட தென்பகுதிகள் அனைத்தும் இதில் அடங்கும். திசமகாறம இதன் தலைநகரம். (3) மலாய தேசம்; இது கிட்டத்தட்ட இன்றைய மலைப் பிரதேசமாகும்.

சரியான நிலவியல் அளவீடு இலங்கையில் ஒருபோதும் செய்யப்படவில்லை. ஆனல் புராதன காலம் தொட்டு அதன் மன்னருக்கருகாமையிலுள்ள முத்துத்துறைகள், கிளிஞ்சிற் சிப்பிகள் ஆகியவற்றுக்கு இலங்கை புகழ் பெற்றது. இவை தவிர ஏராளம் மதிப்பிடற்கரிய மாணிக்கக் கற்களுக்கு, பிரதானமாக சிவப்பு ரத்தினக் கற்களுக்கும், நீலமணிக்கற்களுக்கும் இலங்கை எப்பொழுதும் புகழ் பெற்றது. மிகவும் புராதன நிலவியல் மூலமுடையனவும், ஒரு காலத்தில் இன்றிருப்பதிலும் பார்க்கப் 10,000 அடி உயரத்தில் இருந்தவையாகக் குறிப்பிடப்படுபவையுமான உயர் மலைச் சிகரங்கள் அரிக்கப்பட்டபோது கீழே அடித்துச் செல்லப்

பட்ட இக்கற்கள் இப்போது எடுக்கக் கூடியனவாக இருக்கின்றன. இதனுற்றான் இலங்கையை முன்னொரு காலத்தில் ''ரத்ன துவீபம்'' என்று அழைத்தார்கள். இயற்கை இரும்புக் கனியப் படிவுகள் புராதன காலந்தொட்டு இலங்கையில் இருந்து வருகின்றது போற் தெரிகின்றது. காரீயம், சுண்ணக்கல், களிமண், இல்மெனைட் மொனசைட் ஆகியன இலங்கையிற் காணப்படும் இதர மதிப்புள்ள தாதுப் பொருட்கள் ஆகும். இலங்கையின் வாசனைத் திரவியங்கள் எப்பொழுதும் புகழ் பெற்றவை. இலங்கையின் வடகிழக்கில் பெற்றோலியம் இருப்பதாகச் சமீப கால நிலவியல் அளவீடுகள் காட்டுகின்றன.

துரதிருஷ்டவசமாக இலங்கையின் ஆரம்பகால வரலாற்று மூலாதாரங்கள் போதாது. அநேகமாக இலங்கையின் ஆரம்ப கால வரலாற்றில் பெரும்பகுதி மகாவம்சத்திலிருந்தும், அதன் பிற்தொடர்ச்சியான சூலவம்சத்திலிருந்தும் பெறப்படுகின்றன. மகாவம்சம் கி. பி. 6-ம் நூற்றுண்டில் தான் எழுத்துருவம் பெற்றது. தாதுசேனனின் ஆட்சியின் போது இம்மன்னனின் மாமனுரான மகாநாமன் என்ற புத்த பிக்குவால் மகாவம்சம் தொகுக்கப்பட்டது. மகாவிகாராவின் சங்கவினுல் பேணி வைத்திருக்கப்பட்ட சான்றுகள் அவருடைய தனி மூலாதாரங்கள். இக்கதை இதேபாணியில் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் தொடர்ந்து எழுதப்பட்டது. 18-ம் நூற்றுண்டின் இறுதிவரை பிற்காலக் கல்விமான்களால் காலத்துக்குக் காலம் எழுதப்பட்டு வந்தது

இலங்கை இத்தகைய புராதன வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டிருப்பது குறித்து இலங்கையர் பொதுவாகப் பெருமை கொண்ட போதிலும், இச் சான்றுகள் வரலாற்றடிப்படை எனும் முக்கியத்துவத்தைச் சந்தேகமின்றிக் கொண்டிருந்த போதிலும் இவை பக்கசார்புள்ளது என்பதிற் சந்தேகத்திற்கே இடமில்லை. இலங்கைச் சரித்திரம் புத்த பிக்குகளில் ஒருவரால் அவர்கள், அரசனுக்கு ஆலோசகராய் விளங்கிய காலத்தில் எழுதப்பட்டது ஒரு குறைபாடாகும். அதன் பொதுப் போக்கு சங்கத்தை ஆதரித்த அரசரைப் புகழ்வதும், ஆதரிக்காதோரை இழித்துக் கூறுவதுமாய் இருந்தது.

ஒரு பிக்கு வரலாற்றுசிரியனுகும் போது மதமும் வரலாறும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைக்கப்படுகிறது. இதன் விளைவாகவே பின்வரும் கதை போன்ற கதைகள் உருவாகின. ஈற்றில் தன் தத்துவம் இலங்கையில் நிலைநாட்டப்படுமென அறிந்து, இறக்கும் தறுவாயில் புத்தர் இலங்கையைப் பாதுகாக்கும் பொறுப்பைச் சக்ராவுக்குக் கொடுத்தாரென்றும், புத்தரின்

ஆணையை ஏற்றுக்கொண்ட சக்ரா விஷ்ணுவை அழைத்து அப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தாரென்றும் அக்கதை கூறுகிறது. இத்தகைய கட்டுக்கதைகள் உண்மையெனவும், வரலாறெனவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதுபோலவே, புத்தர் தன் வாழ்நாளில் மூன்று முறை இலங்கை வந்தாரென்றும், அப்படி ஒருமுறை வந்த சமயத்தில் சிவனொளி பாதத்தில் தன் அடிச்சுவடுகளைப் பொறித்துச் சென்றாரென்றும் கூறப்படுவதைக் கூடச், சில புத்த வரலாற்றாசிரியர்கள் சரித்திர உண்மையென வாதாடுகின்றனர். இதை மறுத்துரைக்கப் போதிய விஞ்ஞானபூர்வமான அறிவும் துணிவும் கொண்டிருந்த ஒரேயொரு வரலாற்றாசிரியர் கலாநிதி பரணத்விதான ஆவார்! இதேபோன்ற கதைகள் இதர பௌத்த நாடுகளிலும் காணப்படுகின்றன என அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிலைமை சங்கத்திற்குள் ஏற்பட்ட ஒரு பிளவால் மேலும் மோசமடைந்தது. தத்துவ, ஒழுக்க விவகாரங்களிலும், இலங்கைப் புத்த பிக்குகளனைவரும் மகாவிகாரையின் தலைமையையே ஏற்றுக்கொண்டனர். இது ஆரம்பம் முதல் ஒரு அதிகாரபூர்வமான புத்த மதபீடமாக கருதப்பட்டு வந்தது. முதலாவது பிளவு வத்தகாமினி அபய (கி. மு. 103-102, கி.மு. 89-77) ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது. புதிய பிரிவு அபயகிரிப் பிரிவு எனப்பட்டது. இது இதற்குப் புத்த தத்துவங்களுக்கு விளக்கங்கொடுத்த ஆசிரியரின் பெயரைக் கொண்டு பெயர் பெற்றது. பின்னர் அபயகிரிப் பிரிவிலிருந்து இன்னொரு குழு பிரிந்து சென்றது. அது மகாசேனனால் கட்டப்பட்ட ஜெத்தவன விகாரையைத் தன் தலைமையாகக் கொண்டது.

உள்ளடக்கத்திலும் விளக்கத்திலும் சில வேறுபாடுகளைக் கொண்டிருந்தபோதும் இம்மூன்று பிரிவுகளும் தேரவாதத்தை அதாவது பாரம்பரிய புத்தமதப் பிரிவைச் சேர்ந்தவையாய் இருந்தன. புத்தமதம் இலங்கையிற் போதிக்கப்படுவதற்கு முன், அதன் ஸ்தாபகர் இறந்த காலம் முதல் ஏற்கனவே பதினெட்டுப் பிரிவாகப் பிரிந்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்பொழுது ஒரு புதிய இயக்கம் இந்தியாவிலிருந்த புத்தமதத்தவர் மத்தியில் பரவியது. கலாநிதி எஸ். பரணவித்தான இப்புதிய தத்துவத்தை பின்வருமாறு விளக்கிக் கூறுகின்றார். "தேரவாதப் பிரிவையும் இதிலும் பழைய பிரிவுகளையும் சேர்ந்த புத்த மதத்தவர்களின் இலட்சியம், ஒரு சீடனின் அல்லது சிரவாக்கவின் வாழ்வை நடத்தி நிர்வாண நிலையை அடையப் பெறுவதாகும். இது ஒருவருடைய சொந்த விமோசனத்

துக்கு வழிகோலுகின்றது. புத்தமதத்தவன் ஒருவனின் உன்னத இலட்சியம் அவனுடைய ஆசானைப் போல, ஒரு போதிசத்துவனின் வாழ்வை நடத்தி முழு மனித குலத்தினதும் விமோசனத்துக்காகப் பாடுபடுவதாகும் என்று, இந்தப் புதிய இயக்கத்தின் ஆசான் பிரகடனம் செய்தார். ஆகவே அவர்கள் இம்மை வாழ்வில் அர்காத்துக்களாவதற்குப் பாடுபடவில்லை. மாறாக எதிர் காலத்தில் புத்தர்களாகுவதற்குப் பாடுபட்டார்கள். இதனை அவர்கள் மகாயான அதாவது மாபெரும் வாழ்வு என்று அழைத்தார்கள். ஒருவர் தன்னுடைய சொந்த விமோசனத்துக்காகப் பாடுபடுவதை இவர்கள் கீழான வாழ்வு, அதாவது உறீனயான என்று அழைத்தார்கள்.''

புத்த மதபீடத்தில் ஏற்பட்ட இந்தப் பிளவு சில அம்சங்களில் சீர்திருத்தத்தினால் ரோமன் கத்தோலிக்க மதபீடத்தில் ஏற்பட்ட பிளவை ஒத்தது என்பதில் சந்தேகமில்லை. சீர்திருத்தவாதிகளைப் போல மகாயான புத்த மதபீடம் தாராளவாதமானது. ஆகவே முற்போக்கானது. அதன் அணியில் துணிகரமான தத்துவ ஞானிகள் சேர்ந்து கொண்டார்கள். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் அபயகிரி விஹாரையில் மகாயான தத்துவத்தின் சீடர்கள் கிடைத்ததும் மகாவீர அதனை வன்மையாக எதிர்த்ததும் முக்கியமானதாகும். மகாவீர தேரவாத புத்த மதப் பாரம்பரியக் கருத்தின் அரணாகியது.

மகாவீர இலங்கை, பர்மா, சயாம், கம்போடியா ஆகியவற்றின் ''தென்'' புத்த மதத்தவர்களின் போதனைகளைப் போதித்தது. அபயகிரி விஹாரை இந்திய வைத்துலியவிலிருந்து கற்றுக்கொண்ட காஷ்மீர், திபெத், சீனு ஆகியவற்றின் வட தத்துவங்களின் போதனைகளைப் போதித்தது.

மகாவீரவுக்கும், அபயகிரி விஹாரைக்கும் இடையிலான இந்தத் தத்துவ ரீதியான வித்தியாசங்கள் காரணமாக எழுந்த உக்கிரமான பிளவு, ஆரம்பகால இலங்கை வரலாற்றை சரியாக விளக்குவதற்கு பிரதான தடையாகவிருக்கின்றது. ஏனென்றால் வொக்கரக்க திஸ்ஸவின் (கி. மு. 215-237) ஆட்சியில் தொடங்கியதும் சில வேளைகளில் எதிர் பிரிவை முற்று முழுதாக அழித்தொழிக்கும் வடிவத்தை எடுத்ததுமான இந்த உக்கிரமான வாதப் பிரதிவாதத்தின் போக்கில் அபயகிரி விகாரை பேணிவந்த பதிவுகள் எரிக்கப்பட்டன., இவ்வாறு மகாவீர அல்லது பாரம்பரிய தத்துவத்தின் வெற்றி பூரணமாகியது. இலங்கை வரலாறு பற்றிய இவர்களுடைய கருத்துத்தான் இன்று வரலாறெனக் கொள்ளப் படுகின்றது.

தேவநம்பிய தீசனின் ஆட்சியின் போது (கி. மு. 250-210) புத்தமதம் கொண்டுவரப்பட்டமை, ஆரம்பகால இலங்கை வரலாற்றில் மிகப் பெரிய செல்வாக்கு வகித்த சம்பவம் என்பதிற் சந்தேகமில்லை. இலங்கையில் புத்த மதத்தின் செல்வாக்குப் பற்றியோ அதன் வரலாறு பற்றியோ ஆராய்வது இந்த நூலினது நோக்கமல்ல. புத்தரின் போதனைகளால் உந்தப்பட்ட மாபெரும் இந்தியச் சக்கரவர்த்தியான அசோகன் கலிங்கத்தை வென்ற பின் பலாத்காரமென்பது மடைத்தனம் எனக் கருதி, பலாத்காரத்தைக் கைவிட்டு இந்தியாவில் மட்டுமல்லாமல், சுற்றியுள்ள நாடுகளிலும் இப்புதிய மதத்தைப் பரப்புவதில் தனது சக்தியைச் செலவிட்டானென்று வரலாறு கூறுகின்றது. ஆனால் அவனுக்குப் பின்னர் புத்த மதத்தைத் தழுவிய இலங்கை அரசர்கள் மத்தியில், புத்தரின் போதனைகள் இம்மாதிரியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதை நாம் சுட்டிக் காட்டாமலிருக்க முடியாது. ஏனென்றால் துட்டகைமுனு முதல் பராக்கிரமபாகு வரையும், பின்வந்த சிங்கள மன்னர்கள் அனைவரும் அரியாசனம் ஏறும் தமது பேராசையை அடைவதற்கு பலாத்காரத்தில் ஈடுபட்டார்கள். கிட்டத்தட்ட எல்லோருக்கும் சங்கவின் ஆசிகள் கிடைத்தன. பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் இந்தியா, பர்மா ஆகியவற்றுக்கு எதிராக வெளிநாட்டுப் படையெடுப்புகளையும் நடத்தினார்கள். சங்கவின் பூரண ஆசிகளுடன் இவை செய்யப்பட்டன என்பதிற் சந்தேகம் இல்லை.

ஆகவே இத்தகைய நிலையில் இலங்கையில் புத்த மதத்தின் செல்வாக்குப் பற்றிப் பேசும் உரிமை எமக்குண்டா? அல்லது இலங்கை புத்த மதத்தின் புனித வடிவத்தின் புகலிடம் என்று பேசும் உரிமை எமக்குண்டா?

புத்த மதத்தின் வருகை நிச்சயமாக வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியது. முந்திய இந்திய ஆரியக் குடியேறிகளின் வருகையிலும் பார்க்க, புத்த மதத்தின் வருகைதான் எழுதும் கலை, கட்டடக் கலை, சிற்பக்கலை, இலக்கியம் ஆகியன போன்ற இந்தியத் துணைக் கண்டத்தின் கலாச்சாரத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தது. புத்த மதத்தின் வருகையுடன் எமது தீவுக்குள் இந்தியக் கலாச்சாரம் ஊடுருவிய படியாற்தான் குறிப்பிட்ட சில வட்டாரங்களில் புத்த மத கலாச்சாரம் என்ற ஒன்றைப் பற்றிப் பேச்சு எழுந்தது; இலங்கை நாகரிகத்தைப் புத்த மதத்துடன் ஒன்றுக்கும் போக்கும் எழுந்தது. இவ்வாறு தான் இன்று இன வெறி அரசியல் வாதிகள், "நாடு, மதம், மொழி" ஆகியன பற்றிப் பேசுகின்றார்கள். இத்தகைய ஒன்றுபடுத்தல் சாத்தியமா? புத்த மத நாகரிகம் என ஒன்றுண்டா? இது முடியுமென்று கூறினால் சிங்களவர்

கள் அல்லாத புத்த மதத்தவர் உளர் என்பதை மறுப்பதாகும். அல்லது இவர்கள் புத்த மதத்தினுல் பாதிக்கப் பட்டார்கள் என் பதை மறுப்பதாகும். நாகரிகம் என்பது ஒரு மக்களின் வாழ்க்கை முறையும் வாழும் போக்கில் அவர்கள் பழகிக் கொள்ளும் நெறி முறைகளுமாகும். இந்த வளர்ச்சியைப் பல பாதிப்புகள் உருவாக்கு கின்றன. இதைவிட்டு மதங்களின் அடிப்படையில் நாகரிகம் பற் றிப் பேசுவது பிளவுவாதக் கருத்தொன்றைப் புகுத்துவதாகும். எமது நோக்கமென நாமனைவரும் ஏற்றுக் கொள்ளும், பல இனங் கள், பல மதங்கள், பல மொழிகளைச் சேர்ந்த மக்களின் வளர்ச்சி அவர்களின் ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு இது நல்லதல்ல.

இத்தகைய பொருள்படுத்தலுக்கு அடிப்படையும் கிடை யாது. புத்த மதம் அடிப்படையில், சமுதாயத்தில் பிராமணர் களின் ஆதிக்கத்துக்கு எதிரான சைத்திரியர்களின் அல்லது அரசர் குலத்தின் கிளர்ச்சியாகும். சைத்திரிய குலத்தைச் சேர்ந்த புத்தர் இந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினுர். புத்த மதத்தின் பிரா மண எதிர்ப்பு அம்சங்களையும் நாஸ்திக அம்சங்களையும் இவ்வாறு தான் விளக்க முடியும். ஆனுல் புத்தரின் போதனைகள் காலம் செல்லச் செல்ல பல மாற்றங்களுக்கு உட்பட்டது. புத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே பதினெட்டு வித்தியாசமான பிரிவுகள் தோன்றியதை இவ்வாறு தான் விளக்க முடியும். ஒரு நாஸ்திகத் தத்துவம் மிகவும் காலத்துக்கு முந்தியதாக அதாவது கி.மு. 6 ம் நூற்ருண்டுக்கு முன்னர் இருந்தமை ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்துமதம் பின்னிருந்து செயற்பட்டது. அது ஆரம்பத் தில் தோற்கடிக்கப்பட்டாலும் இறுதியில் புத்த மதத்தைத் தனது அரவணைப்பில் இழுத்தெடுப்பதில் வெற்றி கண்டது. இவ்வாறு தான் புத்த மதம் இந்தியாவில் மறைந்தது. இலங்கையில் கூட புத்த மதத்தில் இந்து மதத்தின் செல்வாக்கு ஏற்பட்டது. வரலாற் றுக் கட்டுக் கதையான விஜயன் காலம் முதல், சிங்கள மன்னர்கள் தமது ராணிகளைப் பெற தென் இந்தியாவுக்குச் செல்லும் பழக்கம் இருந்த படியால் இது சுலபமாகியது. இந்த ராணிமார் இயற்கை யாக தம்முடன் கூட தமது கடவுள்களைக் கொண்டு வந்தார்கள். இவ்வாறு புத்த தெய்வக் கூட்டத்துடன், இந்துக் கடவுள்களும் சேர்ந்து கொண்டன. இவ்வாறு தான் இலங்கையில் புத்தமத வழி பாட்டில் விஷ்ணு வழிபாடும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கமா கியது. பொலனறுவையில் நிசங்கமல்லனின் அரண்மனை இடிபாடு களைப் பார்க்கச் செல்பவர்கள் இந்த அரண்மனைக்கு முன்னிலையில் இரண்டு கோயில்களின் இடிபாடுகளைக் காண முடியும் ஒன்று மன் னர் வழிபட்ட புத்த கோயில். மற்றது விஷ்ணுவுக்கான ஆலயம்.

இதில் அவருடைய இந்திய ராணி வழிபட்டார். பின்னர் விஷ்ணு புத்த கோயிலுக்குள்ளேயே அனுமதிக்கப் பட்டார். இன்று முழுக்க முழுக்க இந்து வழக்கமான காவடியாட்டம் கூட புத்த வழக்கமாகி உள்ளது. மேல்த் தட்டைச் சேர்ந்தவர்கள் ஆதரிக்கும் நுழைக் கோவில்களில் சிறீ மாவோ பண்டாரநாயக்கா காவடியாடியதாக நாம் கேள்விப்பட்டுள்ளோம். புத்த பிரான் இதைப் பார்த்திருந் தால் மனவேதனைப் பட்டிருப்பார் உண்மையான புத்த மதத்தவர் எவரும் அருவருப்படைய வேண்டும்.

ஆக. புத்த மதத்தைச் சேர்ந்தவை என்று நாம் கருதும் பல வழக்கங்கள் உண்மையில் இந்து மதத்திலிருந்து பெறப்பட்டவை. ஆதி ஆரம்ப கால சிங்கள மன்னர்களின் அரண்மனைகளில், புத்த மதம் அரசாங்க மதமாகவிருந்த பொலனறுவ காலத்திற் கூட, பிராமணர்கள், புரோகிதர்கள் என்ற முறையில் முக்கிய இடத்தை வகித்தார்கள். முடிசூட்டு தினத்தன்று மன்னருக்கு நெய் முழுக் காட்டுதல் முக்கிய சம்பவங்களுக்கான நேரத்தைக் குறித்தல் போன்ற பல கடமைகளை ஆற்றினார்கள்.

ஆனால் புத்த மதத்தின் ஒரு எதிர் மறைச் செல்வாக்கை நாம் மழுப்பிவிட முடியாது. இலங்கை வரலாற்றின் அதி ஆரம்ப காலத்தில் வத்தகாமினி (கி. மு. 103-102 - கி. மு. 89-77) காலந் தொட்டுச் சிங்கள மன்னர்கள் சங்க குருமார் வருமானம் பெறுவதற்காக விஹாரைகளுக்கு நிலத்தைத் தானம் செய்யும் வழக்கத்தைப் புகுத்தினார்கள். இது புத்த மதக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணானது. ஏனென்றால் சங்க உறுப்பினர்கள் பொருளாயத ஈடுபாடு அற்றவர்களாக இருக்க வேண்டும். தான் நாடு கடத்தப்பட்டு இருந்த நிலைமையில் தனக்கு உதவி செய்த பிக்குவுக்கு வெகுமதியளிக்குமுகமாக இந்த வழக்கத்தை வத்தகாமினி மேற்கொண்டார். மற்ற மன்னர்கள் சங்கத்தின் ஆதரவைப் பெறுவதற்காக இந்த வழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். சங்கத்துக்கு பொருளாதார நலன்கள் வழங்கப்பட்டதினால் அதன் தொகை அதிகரித்தது. ஏனென்றால் சங்க உறுப்பினர்களுக்கு நல்ல வாழ்வு உத்தரவாதம் செய்யப்பட்டது. இது புத்தரின் போதனைகளில் இருந்து முற்றிலும் விலகிச் சென்றுள்ளது. இவ்வாறு இந்தப் பிக்குமார் எந்த வித உற்பத்தி வேலையிலும் ஈடுபடாமல் தமது தேவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளும் சமுதாயப் புல்லுருவிகள் ஆகினர். புத்த பிக்குமாரின் தொகை அதிகரிப்பு பொருளாதாரத்தைப் பாதித்தது. சில கல்விமான்கள் பொலனறுவை ராச்சியத்தின் வீழ்ச்சிக்கு இதை ஒரு காரணமாகக் கூறுகின்றார்கள்.

மகாயானப் பிரிவுக்கு இந்தக் கதி ஏற்படவில்லை. ஏனென்றால் இந்தப் பிரிவின் பிக்குமார் உற்பத்தி இயல்புடைய உடல் உழைப்பில் ஈடுபட்டார்கள்.

ஆகவே, இத்தீவின் முந்திய சிங்களக் கலாச்சாரத்துடன் இந்தியக் கலாச்சாரம் கலந்ததும், புத்த மதத்தின் செல்வாக்குக் கூடுதல் என்றபோதும், புத்த மதம், இந்து மதம் ஆகியவற்றினதும் பின்னர், கிறிஸ்துவ மதத்தினதும் செல்வாக்கைப் பெற்றதுமான இலங்கை நாகரிகம் அல்லது சிங்கள நாகரிகம் பற்றிப் பேசுவது மேலும் சரியானது. அந்நியப் படையெடுப்புக்கள், இலங்கை வரலாற்றில் செல்வாக்கு வகித்த இரண்டாவது மிகப்பெரிய விஷயமாகும். இலங்கை அடிக்கடி அந்நியப் படையெடுப்புகளுக்கு ஆளாகியது. ஆரம்ப காலத்தில் தென் இந்தியப் படையெடுப்புகளும் பிந்திய காலத்தில் ஐரோப்பியப் படையெடுப்புகளும் ஏற்பட்டன. இலேசாகக் கடந்து செல்லக் கூடிய ஒரு குறுகிய நீரிணைதான இலங்கையையும் இந்தியாவையும் பிரித்து வைத்திருப்பதனால், தென் இந்திய ராச்சியம் ஒன்று இந்தியாவில் அதன் போட்டி ராச்சியங்களை வென்றடக்கிப் பலம் பெறும் போதெல்லாம், இலங்கையையும் அதன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அதேபோல பலமான, ஐக்கியப்பட்ட சிங்கள ராச்சியம் ஒன்று இருந்த போதெல்லாம் இத்தீவிலிருந்து, படையெடுப்புகளும் இந்திய அரசியலில் தலையீடும் நிகழ்ந்தன.

சேர, சோழ பாண்டிய மன்னர்களின் ஆட்சி தென் இந்தியாவில் உச்சத்தில் இருந்த இந்திய வரலாற்றுக் காலத்தில் இலங்கை மிகப் பெரிய படையெடுப்பு அச்சுறுத்தல்களைக் கண்டது. ஆனால் இலங்கை வரலாற்றின ஆரம்ப காலந் தொட்டு தென் இந்தியப் படையெடுப்புக்கள் இருந்து வந்தன போற் தெரிகின்றது. முதலாவது மாபெரும் சிங்கள மன்னனான துட்டகைமுனுவின் வரலாறு இலங்கையைத் தமிழரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்த வரலாறாகும்.

சோழர்கள் அதிகாரத்தின் உச்சத்திலிருந்த 11 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை மீதான அடுத்த கடுமையான படையெடுப்பு ஏற்பட்டது. அந்த வேளையில், சோழர்கள் இலங்கையை வென்று அரை நூற்றாண்டுக்கு மேலான காலம் அதை ஆள முடிந்தது. தென் இந்தியாவில் அதிகாரத்துக்கான போட்டி சேர சோழ பாண்டிய ராச்சியங்கள் மத்தியில் நடைபெற்றது போற் தெரிகின்றது. சிங்கள ராச்சியம் இப்பிரதேசத்தில் அதிகாரத்துக்கான நாலாவது போட்டி ராச்சியமாகியது. சோழர்களைப் போலவே ஒரு மாபெரும் கடல் வல்லரசான சிறீவிஜயாவின் மலேசிய ராச்சியமும்

11-ம் 12 ம் நூற்றுண்டுகளில், இந்த அதிகாரத்துக்கான போட்டியில் கலந்து கொண்டு, இலங்கையின் பலம் வாய்ந்த கூட்டணியாகியது போற் தெரிய வருகின்றது.

இந்த ராச்சியங்களுக்கிடையில் தானுகவே ஒரு பலத்தின் சமநிலைக் கொள்கை உருவாகியது போலவும், மிகவும் பலமான ராச்சியத்தை மற்ற ராச்சியங்களின் கூட்டணி ஒன்று கட்டுப்பாட்டில் வைத்திருந்தது போலவும் தெரிய வருகின்றது. நெப்போலியன் யுகத்தில் பிரிட்டன், ஐரோப்பாவில் இத்தகைய கொள்கையைத் தான் கடைப்பிடித்தது. சிங்கள மன்னர்கள் இந்த யுத்தங்களிலும், பலத்தின் சமநிலைக் கொள்கை விளையாட்டிலும் பூரணமாகப் பங்கு பற்றினுர்கள். இதன் விளைவாகச் சிங்களப் படைகள் தென் இந்தியாவிலான படையெடுப்பு யுத்தங்களில் கலந்து கொண்டு அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ள ஒருவரை அல்லது மற்றவரை ஆதரித்தன. சிங்களப் படையின் தலையீட்டின் விளைவாக ஒன்றுக்கு மேற்பட்ட பாண்டிய மன்னர்கள் சிம்மாசனமேறினுர்கள். அது போலவே இலங்கையும் தென் இந்தியாவின் படையெடுப்பைக் கண்டது. தென் இந்தியாவால் வெற்றி கொள்ளப்பட்டது.

இந்த யுத்தங்கள், படையெடுப்புகள், ஆட்சியைக் கைப்பற்றுதல் ஆகியன தேசங்களுக்கிடையில் நடைபெற்றன என்று கருதுவது தவறுனது. அந்தக் காலத்தில் தேசியம் பற்றிய கருத்து உருவாகவில்லை. முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்குப் பின் தான் இந்தக் கருத்து உருவாகியது. இந்த யுத்தங்களிற் சம்பந்தப் பட்ட இளவரசர்கள் அனைவரும் நிலப்பிரபுத்துவ இளவரசர்கள், இவர்களில் அநேகர் ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்கள், அல்லது திருமண சம்பந்தம் உடையவர்கள். யுத்தங்களிலும் கூலிப் படைகள் பெரும்பாலும் சண்டையிட்டன. மொகல்லானன் காசியப்பனைத் தோற்கடித்து இலங்கை சிம்மாசனத்தைக் கைப்பற்றப் பாவித்த படை இந்தியாவிலிருந்து வந்த ஒரு கூலிப் படை என்பதை இலங்கை வரலாற்று மாணவர் அனைவரும் அறிவர்.

தென் இந்திய இலங்கை நிலப்பிரபுத்துவ இளவரசர்களுக்கிடையில் நடைபெற்ற இந்த யுத்தங்கள் பிரெஞ்சு ஆங்கில நிலப்பிரபுத்துவப் பிரபுக்களுக்கிடையில் நடைபெற்ற நூற்றுண்டு யுத்தம் போன்ற யுத்தங்களை ஒத்தவை. இந்த யுத்தங்கள் தேசத்துக்கும் தேசத்துக்குமிடையில், நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையில் ஏற்படவில்லை. நிலப்பிரபுத்துவ இளவரசர்க்கிடையில் மாத்திரம் நடைபெற்ற யுத்தங்களுக்கு தேசிய உணர்வுகளை ஏற்றுவது. இன வெறியைக் கிளப்பி விடுவதற்காக இக்காலத்தவரது தந்திரமேயா

கும். எல்லாளனுக்கு எதிராகவும் அவனுடைய ஆட்சிக்கு எதிராக வும் மகாவம்சம் எதுவும் கூற முடியாதிருக்கின்ற போதிலும், எல்லாளன் ஒரு புத்த மதத்தவன் அல்ல என்ற விஷயத்தை அவனுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடப் பாவிப்பது, கவனிக்கத்தக்க விஷயமாகும். இது அந்தக் காலத்தில் ஏறக்குறையக் கற்பனை கூடச் செய்யமுடியாத ஒரு விஷயமாகும்.

நிலப்பிரபுத்துவ முறையின் கீழ் ஒரு சிங்கள நிலப்பிரபுத்துவ மன்னர் அல்லது பிரபு, சிங்களப் பண்ணை அடிமை அல்லது விவசாயியிலும் பார்க்கத் தமிழ் மன்னர் அல்லது பிரபுவுக்கு நெருங்கியவராக இருந்தார். அவர்களைப் பொறுத்த வரை இனம் அல்லது மொழி முக்கியத்துவம் அற்றதாக இருந்தது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் ஒருவரின் அந்தஸ்துத் தான் முக்கியமானது. இதனுற்தான் பல சிங்கள மன்னர்கள் தென் இந்திய ராணிகளைத் திருமணம் செய்து கொண்டார்கள். சிங்கள மன்னர்களில் மிகவும் மகத்தானவர் என்று கருதப்படும் பராக்கிரமபாகுவைக் கூட சிங்களவர் என்று அழைக்க முடியாது. அவருடைய தகப்பனுர் ஒரு பாண்டிய இளவரசர். தாயார் மாத்திரம் ஒரு சிங்களவர். தாயருடைய தகப்பனுரும் ஒரு சிங்களவர் அல்லர். அக்காலத்தில் சிங்களவர்கள் தாய் வழி வாரிசு முறையைப் பின்பற்றிய படியாற் தான் பராக்கிரமபாகு சிம்மாசனம் ஏறுவதை விரும்பினுர்கள். அதேபோல ஆறும் பராக்கிரமபாகுவிற்காக யாழ்ப்பாணத்தை வென்றடக்கி, அவரின் மகளைத் திருமணஞ் செய்த சப்புமால் இளவரசர் என்ற ஆறும் புவனேகபாகுவும் ஒரு தமிழ் இளவரசன் ஆவான்.

இதனுற்தான் இலங்கையின் இறுதிக்கால மன்னர்கள் தென் இந்தியாவிலிருந்து வந்தார்கள், இது படையெடுப்பால் நடந்ததல்ல. கண்டிப் பிரதானிகளின் முடிவொன்றினுல் ஏற்பட்டது. சிங்களவர்களின் கடைசி மன்னனுன சிறீவிக்கிரமராசசிங்கனை ஒரு தமிழன் என்று தவருக அழைத்த போதிலும் அவர் கண்டிப் பிரதானியான பிலிமத்தலாவுக்கும் ஆந்திராவிலிருந்து வந்த ஒரு இளவரசிக்கும் பிறந்த மகன் ஆவான். அவருடைய அரசவை மொழி தமிழாகும். 1815 கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கண்டிப் பிரபுக்கள் அனைவரும் கெப்பெட்டிப்பொல தவிர, தமிழில் கைச்சாத்திட்டார்கள் என்பது கவனிக்கத்தக்கது. சிறீமாவோ பண்டாரநாயக்காவின் மூதாதையரான ரத்வத்த திசாவவும் தமிழில் கைச்சாத்திட்டார். இந்த விஷயத்தைப் பற்றி அவர்கள் கவலைப் பட்டதில்லைப் போலும்! சிங்கள, தமிழ்ப் பிரபுக்கள் மக்களுக்கு எதிராகப் பெரும்பாலும் விவசாயிகளுக்கு எதிராக நிலப்பிரபுத்துவ உறவுகளால் ஐக்கியப்பட்டிருந்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தான் இந்தியாவையும் இலங்கையையும் பிரித்து வைத்திருக்கும் நோக்கத்

துக்காகவும். இலங்கையில் சிங்களவர்களையும் தமிழர்களையும் பிரித்து வைத்திருக்கும் நோக்கத்துக்காகவும், இந்த நிலப்பிரபுத்துவப் போட்டிகளை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான தேசியப் பகைமையாக சித்திரித்துக் காட்டினார்கள் இந்த விஷயத்தில் அவர்கள் குறிப்பாக இரு தரப்பிலுமுள்ள உள்ளூர் இனவெறியர்களின் ஆதரவுடன் பெருமளவுக்கு வெற்றி கண்டார்கள்.

தென்னிந்திய மன்னர்களுக்கும் சிங்கள மன்னர்களுக்கும் இடையில் தொடர்ச்சியான யுத்தங்கள் நடைபெற்றது போலவே சிங்கள சிம்மாசனப் போட்டியாளர்களுக்கிடையிலும் இடைவிடாத உள்நாட்டு யுத்தங்கள் நடைபெற்றன என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டிய இன்னொரு விஷயமாகும். ராஜரட்ட, உறுகுண, மலாய தேசம் ஆகியவற்றிற்கு அடிக்கடி வித்தியாசமான ஆட்சியாளர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் இலங்கையின் ஏக ஆட்சியாளராக முயற்சித்தார்கள். முதலாம் பராக்கிரமபாகு தனது ஆட்சியின் கீழ் இலங்கையை ஒன்றுபடுத்துவதற்கு முன்னர் கடுமையான உள்நாட்டு யுத்தம் ஒன்றை நடத்த நேரிட்டது. இந்த யுத்தம் கிட்டத்தட்ட நாட்டை நாசப்படுத்தியது.

இந்தத் தொடர்ச்சியான யுத்தங்களின் ஒரு விளைவு, இலங்கையின் வட பகுதியில் தமிழ் ராச்சியம் ஒன்றின் ஸ்தாபகமாகும். இன்னொரு விளைவு, தென்னிந்திய, இலங்கைக் கலாச்சாரங்கள் ஒன்று கலந்தமையாகும். அவர்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளாத வேளையில் தென்னிந்தியர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் பெருமளவு சகவாழ்வும் ஒத்துழைப்பும் இருந்தன. இலங்கை காலனியாகுவதற்கு முந்திய அநேக வரலாற்றுக் காலகட்டங்களில் தென் இந்தியர்கள் சிங்கள ராச்சியத்தில் புரோகிதர்களாகவும், கலைஞர்களாகவும், கூலிப்படையினராகவும் (பொலனறுவைக் காலகட்டத்தின் போது வேள்ளைக்காரர் -தமிழ்க் காவலர்கள்- என்றழைக்கப் படும் படைப் பிரிவு ஒன்றிருந்தது.) மன்னரின் மெய்க்காவலர்களாகவும், வர்த்தகர்களாகவும் விளங்கினார்கள் இவை அனைத்தும் சில தாக்கங்களை ஏற்படுத்தாமலிருந்திருக்க முடியாது.

16ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் ஐரோப்பிய தேசங்களின் பல படையெடுப்புகளை இலங்கை கண்டபோது விஷயம் வேறாகவிருந்தது. இவர்களுடைய நாகரிகம் வேறு. இந்த மக்கள் வேறு. இவர்களுடைய பழக்க வழக்கங்களும், மொழி, மதம், ஆகியனவும் சிங்களவர்களிலும் பார்க்கக் கணிசமான அளவு வித்தியாசமானவை. பலம் வாய்ந்த பொருளாதாரமும், சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டதென்றாலும் - இப்பொழுது கீழை நாட்டு மக்களை அடிபணி

யச் செய்யப் பாவிக்கப்படும் வெடி மருந்தைக் கொண்டிருக்கும் சாதக நிலைமையும் இவர்களுக்கிருந்தன.

ஐரோப்பிய படையெடுப்புகளினால் நீராவிக் கப்பல்கள் றெயில்வே, தந்தி, தொலைபேசி, மோட்டார் வாகனம், விமானம் ஆகியவை இலங்கைக்கு அறிமுகமாகின. முன்னேறிய அறிவு, குறிப்பாக விஞ்ஞானங்கள் பற்றிய அறிவு இதனுடன் எமக்கு வந்தது.

ஆனால் இதனுடன் இலங்கையில் அப்பொழுது நிலவிய இயற்கையான நிலப்பிரபுத்துவ பொருளாதாரம் அழிக்கப்பட்டது. பணத்தை அடிப்படையாகக் கொண்ட காலனித்துவ பொருளாதாரம் புகுத்தப்பட்டது. இதனால் மக்கள் மென்மேலும் சுரண்டப்பட்டார்கள். எமது இயற்கை மூலவளங்கள், முன் கற்பனை செய்திருக்க முடியாத அளவிற்குச் சூறையாடப்பட்டன. எமது மக்களின் உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தமது சூழலுக்கு ஒவ்வாததும், படையெடுப்பாளர்களால் அவர்கள் மீது திணிக்கப்பட்டதுமான அந்நிய கலாச்சாரம் ஒன்றை அடிமைத்தனமாகக் காப்பியடிப்பவர்கள் ஆகினர். இந்தப் போக்கை மாற்றுவதற்கான இயக்கம் ஒன்று பின்னர் ஏற்பட்டது. ஆனால் அது நவீன வரலாறு.

இலங்கை வரலாற்றை விபரமாக எடுத்துக் கூறுவது எமது நோக்கமல்ல. நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் நிரந்தரப் பாதிப்பை ஏற்படுத்திய மிக முக்கியமான அம்சங்கள் பற்றி எடுத்துக் கூறுவதே எமது நோக்கமாகும்.

இலங்கை வரலாற்றைப் பின்வரும் காலகட்டங்களாகப் பிரிக்கலாம்:

(1) அனுராதபுரிக் காலம், (2) பொலனறுவைக் காலம், (3) பொலனறுவை காலத்துக்குப் பிந்திய காலம் முதல் கோட்டை ராச்சிய காலம் வரை, (4) காலனித்துவ காலம், (5) நவ காலனித்துவ காலம்.

ஆரம்பகால இலங்கை வரலாறு பெரும்பாலும் பல்வேறு மன்னர்களினதும் இலங்கையைத் தமது ஆட்சியின் கீழ் ஒன்றுபடுத்த அவர்கள் எடுத்த முயற்சிகளினதும் கதைகளாகும் இந்த மன்னர்களின் பட்டியல் எமக்கு அவசியமில்லை. ஆனால் சில பிரசித்தமான மன்னர்களை மட்டும் குறிப்பிடுவோம்.

குறிப்பிடத் தக்க முதலாவது மன்னர் பாண்டுகாபயன் ஆவான். அவன் முதலாவது நீர்ப்பாசன வாவியைக் கட்டியமைத்து அதன் மூலம் இலங்கைக்குப் புகழைத் தேடித்தந்த ஒரு திட்டத்தை ஆரம்பித்து வைத்தது மாத்திரமல்ல ஆயிரத்துக்கு மேலான ஆண்டு

களாக இலங்கை நாட்டின் செழிப்பின் அடிப்படையான ஒரு திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தான். பண்டுகாபயனுக்குப் பின் வந்த மன்னர்கள் அனுராதபுரத்தைத் தமது தலைநகராக்கினார்கள். இதனால் தான் இவ்வரலாற்றுக் காலம் அனுராதபுர காலம் என்று அழைக்கப்படுகின்றது.

தேவநம்பிய தீசனின் ஆட்சிக் காலத்தில் தான் (கி.மு.250-210) இந்தியச் சக்கரவர்த்தியான அசோகனின் முன் முயற்சியில் புத்த மதம் இலங்கைக்கு வந்தது. அசோகன் தனது மகன் மகிந்தனையும் மகள் சங்கமித்தையையும் இலங்கைக்கு மத போதகர்களாக அனுப்பியதாகக் கூறப்படுகின்றது. சிங்கள மத குரு ஒருவர் இலங்கைப் புத்த மத பீடத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்று மகிந்தன் வற்புறுத்தியதாகக் கூறப்படுகின்றது. இதனால் தான் தேசியபீடம் ஒன்று உருவாவது நிச்சயமாகி ஒரு அந்நிய பீடத்தை, அதாவது ரோமன் கத்தோலிக்க திருச்சபையைச், சேர்ந்திருக்கும் நிலை தவிர்க்கப்பட்டது.

இலங்கையைத் தென் இந்தியத் தமிழரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்த துட்டகைமுனுவே இக்காலத்தின் மகத்தான மன்னனெனக் கருதப்படுகின்றான். பல தசாப்தங்களாக முழு நாட்டினதும் எதிர்காலச் செழிப்பில் செல்வாக்கு வகித்த ஆட்சி மகா சேனனின் ஆட்சியாகும். கி. பி. 276 - 303 ல் ஆட்சி புரிந்த மகா சேனனை வாவி அமைப்பாளன் என்று அழைப்பர். முன்னர் குறிப்பிட்டவாறு மகாசேனனின் ஆட்சியின் போது தான், நீர்ப்பாசனப் பொறியியல் விஞ்ஞானத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. முதலாவதாக பிரமாண்டமான நீர்த்தேக்கங்கள் கட்டி அமைக்கப்பட்டன. 16 வாவிகளையும் பெரியதோர் கால்வாயையும் அவன் கட்டியதாக அறியப்படுகின்றது. மின்னேரியா வாவி (4,670 ஏக்கர்), கவுடுலு வாவி, உறுறுலு வாவி, கன வாவி, மிகிந்தலைக்கு அண்மையில் உள்ள மகாகனன்டற வாவி, மகா உறல் கடலை வாவி முதலியன அவன் கட்டிய வாவிகளில் அடங்கும். அவனுடைய ஆட்சிக் காலத்தில் பூர்த்தியாக்கப்பட்ட எலஉறற - மின்னேரியா - கவுடுலு நீர்த்திட்டம் இலங்கை நீர்ப்பாசன வரலாற்றில் சகாப்த சிருஷ்டிகரமான சம்பவமெனக் கருதப்படுகின்றது.

தாதுசேனன் (கி. பி. 459 - 477) புகழ் பெற்ற, கலாவேவ வாவியைக் கட்டியமைத்தான். அவனுடைய மகனான காசியப்பன் சிகிரியாக் கோட்டையைக் கட்டிப் புகழ் பெற்றான். இன்றும் இந்தக் கோட்டையில் இலங்கையின் மிகவும் அற்புதமான புராதன காலச் சொத்துக்களில் ஒன்றெனக் கருதப்படக் கூடிய மிக அழகான சிகிரியாச் சித்திரங்களை நாம் காண முடியும். காசியப்பன் கலைக

ளின் பெரும் ஆதரவாளனாக இருந்திருக்க வேண்டும். அவனுடைய அரசவையில் பல்வேறு நாட்டுக் கலாசாரங்கள் செழிப்பாகவிருந்தன போல் தெரிகின்றது.

இலங்கையைச் சோழர் வென்றடக்கி, ஐந்தாம் மகிந்தனைக் கைது செய்த போது, (அவன் 1029 ல் கைது செய்யப்பட்ட நிலையில் மரணமடைந்தான்.) ஏறத்தாழ கி. பி. 1000 ஆண்டளவில் அநுராதபுர காலம் முடிவுக்கு வருகின்றது.

இதன் பின் இலங்கையைச் சோழர் அரை நூற்றாண்டுக்கு மேலான காலம் ஆண்டுவந்தனர். இலங்கையைச் சோழ ஆட்சியிலிருந்து விடுதலை செய்து, தனது ஆட்சியின் கீழ் அதனை ஒன்றுபடுத்திய மன்னன் முதலாம் விஜயபாகு (கி. பி. 1055 - 1110) ஆவான். அவன் தனது தலைநகரத்தை பொலனறுவைக்கு மாற்றினான். தென் இந்தியப் படையெடுப்புகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க அவன் இதைச் செய்திருக்கலாம். இதனால்தான், இலங்கை வரலாற்றின் இக் காலம் பொலனறுவைக் காலம் என அழைக்கப்படுகின்றது. பொலனறுவைக் காலத்தை சிங்கள நாகரிகத்தின் உச்சகட்ட வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் காலம் என அழைக்கலாம். அப்பொழுது இலங்கை மகத்தான சிங்கள மன்னனான முதலாம் பராக்கிரமபாகுவின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்டது. சிங்கள ராணுவங்கள் வெற்றிகரமாகத் தென் இந்தியா மீதும் பர்மா மீதும் படையெடுத்தன.

பர்மா மீது படையெடுப்பதற்காக முதலாம் பராக்கிரமபாகு சொந்தக் கடற்படை ஒன்றை அமைத்ததாக வரலாற்றேடுகள் கூறுகின்றன. இதிலிருந்து இக்கால இலங்கையில் கப்பல் கட்டுந் தொழிற்றுறை இருந்திருக்க வேண்டும் என்று புலனாகின்றது.

முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் நீர்ப்பாசன அமைப்பு எப்படி அதன் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். அந்த விபரங்களை மீண்டும் கூறுவது அவசியமில்லை. முதலாம் பராக்கிரமபாகு இறந்த பின் ஏற்பட்ட எந்த நீர்ப்பாசன வேலை பற்றியும் குறிப்புக் கிடைக்கவில்லை. 1186 ல் முதலாம் பராக்கிரமபாகு இறந்தபின், பத்து வருடங்கள் முடிவதற்குள்ளேயே சிங்கள ராஜ்யத்தின் வீழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது. அடுத்த நூற்றாண்டின் இறுதிக்கு முன், சிங்கள மக்களின் மகத்தான சாதனை என எல்லோராலும் கருதப்படும் மாபெரும், நுட்பமான நீர்ப்பாசன அமைப்பு நாசமாகியது.

புராதன சிங்கள நாகரிகம் நாசமாகி வீழ்ச்சியுற்றதன் காரணம், இப்பிரதேசங்களை உற்பத்திப் பிரதேசங்களாகவும் செழிப்பான பிரதேசங்களாகவும் செய்த நுட்பமான நீர்ப்பாசன அமைப்பை நிர்மாணித்துப் பேணுவதற்கான விபரமான சமுதாய நிர்வாக ஸ்தாபனம் வீழ்ச்சியடைந்தமையாகும்.

இந்த நீர்ப்பாசன அமைப்பைப் பேணிப் பராமரிப்பதற்கான உழைப்பாளிகளை வழங்குவதற்குப் பொறுப்பான உள்ளூர்ப் பிரதானிகள் 'குபினு' என்றழைக்கப்பட்டனர். நீர்ப்பாசன அமைப்பைப் பேணிக்காத்தல் உள்ளிட்ட பொது நிர்வாகங்களை நடத்துவதற்குத் தேவையான விசேஷ அறிவையும் அனுபவத்தையும் அவர்கள் பெற்றிருந்தனர்.

அந்நியப் படையெடுப்புகளாலும், உள்நாட்டுப் பிணக்குகளாலும் இந் நடவடிக்கைகள் சீர்குலைந்தன 'குபினுக்கள்' வேறு பிரதேசங்களுக்குத் தப்பியோடினர். இதனால் முழு அமைப்பும் வீழ்ச்சியடைந்தது.

முதலாம் பராக்கிரமபாகு ஆட்சியின் புகழ், மக்களைப் பயங்கரமாகச் சுரண்டியதன் பேரில் ஏற்பட்டதொன்றாகும். அவன் வரிகளைக் கூட்டி அரசுக்கான இலவச சேவையைக் கூடுதலாகப்பெற்று, மக்களைக் கடுமையாக வேலை செய்ய வைத்தான். இந்தக் கட்டணங்களைச் செலுத்தத் தவறியவர் கைது செய்யப்பட்டனர். ஏன் என்றால், அவனது பின்னோரான 2-ம் விஜயபாகுவும் நிசங்கமல்லனும் சூளவம்சம் கூறுகின்ற பிரகாரம், ''முந்திய மன்னரின் வழக்கங்களுக்கு விரோதமாக முதலாம் பராக்கிரமபாகு மன்னன் விதித்த மித மிஞ்சிய சட்ட விரோதமான தண்டனைகளால் அடக்கியொடுக்கப்பட்ட பலரை .....'' விடுதலை செய்தார்களென அறிய வருகின்றது.

அனுராதபுர காலத்தைப் போலவே பொலனறுவைக் காலமும் உள்நாட்டு யுத்தங்களோடு முடிவு பெறுகின்றது. இலங்கை மீண்டும் அந்நிய படையெடுப்புக்காளாகியது. கலிங்கத்திலிருந்து வந்த மாகன், இத்தடவை இலங்கையை வென்றடக்கினான். கலிங்கம் இப்பொழுது இந்தியாவின் ஒரு பிரதேசமாகவல்ல, மலேஷியாவின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது. மாகனின் படையெடுப்பும் ஆட்சியும் இலங்கை கண்ட மிகக் கொடூரமான படையெடுப்பாகக் கருதப்படுகின்றது.

தம்பதேனிய இளவரசர்கள் இலங்கையின் பெரும்பகுதியை விடுதலை செய்தபோது, இலங்கையின் தலைநகரத்தைத் தம்பதேனியாவுக்கு மாற்றினார்கள். பின்னர் தலைநகரம் கம்பளைக்கும்,

றைகமவுக்கும், பின்னர் கோட்டைக்கும் மாற்றப்பட்டது. 1505-ல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கோட்டை தலைநக ராயிருந்தது. இந்தக் காலத்தில்தான் ஆரியச் சக்கரவர்த்திகளால் ஆளப்பட்ட யாழ்ப்பாண ராச்சியம் தோன்றியது. ஆனால் 6-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் போது இப்பிராச்சியம் அடக்கி யொடுக்கப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்தில்தான் இவ்விராச் சியம் பற்றி நாம் மீண்டும் கேள்விப்படுகிறோம்.

இந்தக் காலத்தில் கோட்டையின் சிங்கள மன்னன் ஒருவன் சீனரால் கைதுசெய்யப்பட்டு சீனாவுக்கு கொண்டு செல்லப்பட்ட குறிப்பிடத்தக்க சம்பவமும் நிகழ்ந்தது. மூன்றும் மின் சக்கரவர்த் தியான செங்கு (யுங்லோ) என்பவர் சீனாவை ஆட்சி செய்தபோது 1411-ல் கோட்டை மன்னனான வீர அழகேஸ்வரனுக்கே இக்கதி ஏற்பட்டது. கைது செய்யப்பட்ட இம்மன்னன் சீனாவில் விடுதலை செய்யப்பட்டான். சீன ஆதிக்கத்தின் கீழ் இலங்கையை ஆட்சி புரிய ஆறும் பராக்கிரமபாகு நியமிக்கப்பட்டான். 1412க்கும்-1467 க்கும் இடையில் இலங்கையை ஆட்சி புரிந்த ஆறும் பராக் கிரமபாகு 1416-லும் 1421-லும் சீனாவுக்கு விஜயம் செய்தான். பதிவேடுகளின்படி, சீனாவுக்கு அனுப்பப்பட்ட கடைசித் திறை 1459-ல் ஆகும்.

ஐரோப்பியப் படையெடுப்பு இலங்கையைச் சூழ்ந்து பிடிப் பதற்கு முன், சாதனைகளுடன் கூடிய கடைசி ஆட்சி, கோட்டை யைச் சேர்ந்த ஆறும் பராக்கிரமபாகுவின் ஆட்சியாகும்.

இரண்டாவது அத்தியாயம்

# ஐரோப்பியர்களின் வருகை

''எமது கொழும்புத் துறைமுகத்தில் சிவந்த அழகான தோலுடைய ஒரு இன மக்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் இரும்புச்சட்டைகளையும், இரும்புத் தொப்பிகளையும் அணிந்திருக் கிறார்கள்; அவர்கள் ஓர் இடத்தில் ஒரு நிமிடந்தானும் தங்கி நிற்பதில்லை. அவர்கள் அங்கும் இங்கும் நடக்கின்றார்கள். ஒரு மீனுக்கு அல்லது ஒரு எலுமிச்சம் பழத்துக்கு அவர்கள் இரண்டு மூன்று பவுண் துண்டுகளை அல்லது வெள்ளித் துண்டுகளைக் கொடுக்கின்றார்கள். அவர்களுடைய பீரங்கி வெடி முழக்கம் யுகாந்திரா மலையில் வெடித்து எதிரொலிக்கும் போது சத்தம் இடிமுழக்கத்திலும் பார்க்கக் கூடுதலாக இருக்கின்றது. அவர்க ளுடைய பீரங்கிக் குண்டுகள் பல காததூரம் பறந்து சென்று கருங்கற் கோட்டைகளை அதிரச் செய்கின்றன.''

1505-ம் ஆண்டு நவம்பர் 15-ந் திகதி போர்த்துக்கேயர் கொழும்புக்கு அண்மையில் வந்திறங்கிய போது, கோட்டை மன்ன னான எட்டாம் வீர பராக்கிரமபாகுவுக்கு இவ்வாறு அறிவிக்கப்பட் டது. கிழக்குக்குச் செல்வதற்கான கடல் மார்க்கம் கண்டுபிடிக் கப்பட்டதைப் பாவித்து, ஆசியாவுக்கு, முதலில் வந்த ஐரோப்பிய நாடுகளில் போர்த்துக்கலும் ஒன்றாகும். அவர்கள் வாசனைத் திரவியங்களைத் தேடி வந்தார்கள். இலங்கை, அக்காலத்தில் கறு வாவைப் பெறுவதற்குச் சிறந்த இடமாக இருந்தது. இலங்கையை அக்காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களால் போர்த்துக்கேயர்க ளின் மேம்பாடான கடல் வல்லமையையும் வெடி மருந்துப் பாவிப்பையும் எதிர்த்து நிற்க முடியவில்லை. ''அவர்களுடைய பீரங்கிக் குண்டுகள் பல காத தூரம் பறந்து சென்று கருங்கற் கோட்டைகளை அதிரச் செய்கின்றன'' என்ற மேற்கூறிய கோட்டை மன்னருக்குச் செய்யப்பட்ட அறிக்கையின் கடைசி வசனத்தில், சுதேசப் படைகளுக்கு எதிராகப் போர்த்துக்கேயர் வெற்றி பெற்றதற்கான காரணம் அமைந்திருக்கின்றது.

அப்படி இருந்தபோதும் அது சுலபமான காரியமாக இருக்கவில்லை. போர்த்துக்கேயர் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந் தது. முழுத்தீவையும் அவர்களால் ஒருபோதும் வென்றடக்க முடிய



9-12
12-1

வில்லை. அப்பொழுதிருந்த கோட்டை மன்னன் கொழும்பில்
கோட்டை ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி கோரிப் போர்த்துக்
கேயர் விடுத்த வேண்டுகோளை மறுக்க முடியாதிருந்த போதிலும்,
பிந்திய ஒரு கோட்டை மன்னனான டொன் யுவான் தர்மபால
கிறிஸ்தவ மதத்துக்கு மாறியபின், 1580-ல் போர்த்துக்கல் மன்
னனைத் தனது வாரிசாக நியமித்த போதிலும், மற்றச் சிங்கள
மன்னர்களினதும் இளவரசர்களினதும் எதிர்ப்புத் தொடர்ந்து
இருந்தது. உண்மையில் வரலாற்றின் இந்தக் காலத்தில்தான் அந்
நிய ஐரோப்பிய படையெடுப்பாளர்களுக்கு எதிரான, சிங்களவர்
களின் மிகவும் உறுதியான யுத்தங்கள் சில நடைபெற்றன.
மாயதுன்னையும் அவனுடைய மகனான முதலாம் ராசசிங்கனும்
போர்த்துக்கேயருக்கு எதிராக நடத்திய யுத்தங்கள் இவற்றில்
மிகவும் பிரசித்தி பெற்ற யுத்தங்களாகும். கொழும்பிலிருந்து
9-மைல் தூரத்திலுள்ள முல்லேரியாவில் 1559-ல் நடைபெற்ற
யுத்தம், இந்த யுத்தங்களில் மிகவும் பிரசித்தி பெற்றது. முல்
லேரியா யுத்தத்தில் போர்த்துக்கேயர் கடுமையாகத் தோற்கடிக்
கப்பட்டார்கள். இன்னொரு புகழ் பெற்ற யுத்தத்தில் போர்த்துக்
கேய ராணுவம் 1638-ல் கன்னொறுவ என்ற இடத்தில் இரண்
டாம் ராசசிங்கனால் அழித்தொழிக்கப்பட்டது. கண்டியைத் தாக்
கிய பின்னர், போர்த்துக்கேய ராணுவம் கன்னொறுவாவுக்குப்
பின்வாங்கியது. 38 ஐரோப்பியர்கள்தான், நடந்ததைக் கூறத்
தப்பிச் சென்றார்கள் என்று அறியப்படுகின்றது. போர்த்துக்கேய
ஆட்சியின் முடிவு விரைவில் ஏற்பட்டது.

போர்த்துக்கேய ஆட்சியின் பிற்பாடு, மற்றொரு ஐரோப்பிய
வல்லரசான ஒல்லாந்து, கடல் வல்லரசுகளுக்கு மாபெரும் யுத்ததந்
திர முக்கியத்துவம் வாய்ந்ததான இலங்கை, ஐரோப்பாவிலிருந்து
கிழக்கே செல்வதற்கான முக்கிய வர்த்தக மார்க்கங்களின் மத்தி
யில் அமைந்திருப்பதால், அதன் மீது கண் வைத்தது.
மேலும் திருகோணமலையில் கிழக்கிலுள்ள மிகச் சிறந்த
இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது. இத்துறைமுகத்திலி
ருந்து வங்காள விரிகுடாவையும் இந்து சமுத்திரத்தையும் கட்டுப்
படுத்த முடியும். 1802-ல் திருகோணமலைத் துறைமுகத்தைப்
பிரிட்டிஷார் வென்றெடுத்த பின்னர், அதனை இளம் பிற் என்பார்
பாராளுமன்றத்தில் ''உலகில் மிகவும் மதிப்புள்ள காலனிச்
சொத்து, இந்திய சக்ராதிபத்தியம் ஸ்தாபிக்கப்பட்டது முத
லாக, அதற்கில்லாத பந்தோபஸ்தை இத்துறைமுகம் வழங்குகின்
றது'' என்று வருணித்தார். சமீப காலங்களில் விமானப் படை
மிகவும் முக்கியமான படையாகும்வரை, திருகோணமலை இந்த
யுத்ததந்திர முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அத்துடன்

முன்னர் சுட்டிக்காட்டியவாறு, இலங்கை உலகில் நல்ல தரமுடைய கறுவாவை உற்பத்தி செய்யும் நாடுகளில் முக்கியமானதாக இருந்ததும் ஒல்லாந்தரைக் கவர்ந்திழுத்தது. 1638-ல் கண்டியின் இரண்டாம் ராஜசிங்கன் ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டான். இலங்கையிலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்குத் துணை புரிந்தால் குறிப்பிட்ட சில வர்த்தக உரிமைகளைத் தருவதாக அவன் வாக்குறுதி அளித்தான். இந்த இரண்டு ஐரோப்பியப் போட்டியாளர்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தனது நாட்டுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்று இந்தச் சிங்கள மன்னன் யோசித்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவன் தப்புக்கணக்குப் போட்டான்.

ஒல்லாந்தரின் மேம்பாடான கடற்படைச் சக்தியினால் போர்த்துக்கேயரின் தோல்வி நிச்சயமாகியது. இலங்கையில் போர்த்துக்கேயரின் கடைசிவலுவிடமான யாழ்ப்பாணம், 1658-ல் வீழ்ச்சியடைந்தது. சிங்கள மன்னனுடனான சகல ஒப்பந்தக் கடப்பாடுகளையும் பொருட்படுத்தாமல் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரின் இடத்தில் இலேசாக நுழைந்து கொண்டனர். சிங்கள மன்னன் ஏமாற்றப்பட்டான்.

இலங்கையில் போர்த்துக்கேய ஆட்சியின் பாதிப்புப் பெரிது. ஆனால் நிரந்தரமானதல்ல. அவர்கள் வந்தடைந்தது பற்றிய முதலாவது செய்தி, சரியாகப் படம் பிடித்துக் காட்டியது போல் அவர்கள் முற்றிலும் புதியதோர் நாகரிகத்தையும், புதியதோர் மதத்தையும் (கத்தோலிக்க மதம்) புதிய பழக்க வழக்கங்களையும் கொண்டுவந்தார்கள், முன்னேறிய மேற்கு நாடுகளுடன் பரிவர்த்தனைக்கான வழியை அவர்கள் திறந்து வைத்தார்கள். ஆனால் மலைநாடு தவிர்ந்த நாட்டின் பெரும்பகுதி மீதான அவர்களுடைய ஒன்றரை நூற்றாண்டு கால ஆட்சி மிகவும் கொடிய ஆட்சியாகும். பலவந்த மதமாற்றம், பிற மத வழிபாட்டு இடங்களை அழித்தொழித்தல் ஆகியன உட்பட மிகவும் மோசமான மதசித்திரவதை, பிந்திய ஆக்கிரமிப்பாளர்-குறிப்பாக பிரிட்டிஷார், புகுத்தவிருந்த எந்தவித நாசூக்கான விஷயங்களும் அற்ற உக்கிரமான-நிர்வாணமான சுரண்டல், ஆகியன அவர்களுடைய ஆட்சியில் மலிந்திருந்தன. அவர்கள் இலங்கையில் இன்று காணப்படும் மதங்களில் மிகவும் பிற்போக்கான மதமான கத்தோலிக்க மதத்தை விட்டுச் சென்றார்கள். இலங்கை வாசிகள் இன்று உபயோகிக்கும் பொதுப் பெயர்களான பெரேரா, சில்வா, பர்னாந்து ஆகியவற்றையும் இலங்கை அவர்களிடமிருந்தே பெற்றுக் கொண்டது.

1796 ம் ஆண்டு வரை நீடித்திருந்த இலங்கை மீதான ஒல்லாந்தரின் ஆட்சி, போர்த்துக்கேயர் ஆட்சியுடன் ஒப்பிடும் போது முக்

யெத்துவம் குறைந்தது. அவர்கள் கரையோர மாகாணங்கள் மீது தான் ஆட்சி புரிந்தார்கள். இத்தீவிலிருந்து இயன்றளவு கூடுதலான கறுவாவை எடுத்துச் செல்வது தான் அவர்களுடைய பிரதான குறிக்கோளாக இருந்தது. அந்த வேளையில் பெரும் பகுதி கறுவா மன்னனின் பிரதேசங்களில் தானாகவே வளர்ந்திருந்தது. ஆகவே ஒல்லாந்தர் கண்டி மன்னனுடன் ஒப்பந்தத்துக்கு வர வேண்டியிருந்தது. ஒல்லாந்தர் வர்த்தகத்திற் கவனம் செலுத்தினர்கள். கறுவா தவிர, பாக்கு, யானைகள், கிளிஞ்சிற் சிப்பிகள் (chank shells) முதலியவற்றில் அவர்கள் வெளிநாட்டு வர்த்தகம் செய்தார்கள். இந்த வேளையில் உள்ளூர்ப் பாவிப்புக்கான அரிசி, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பது கவனத்துக்குரியது. மிளகும் கோப்பியும் பயிரிடப்பட ஆரம்பித்தன. பெருமளவிலான தெங்குப் பயிர்ச் செய்கையும் ஆரம்பிக்கப்பட்டது.

ஒல்லாந்தர் இலங்கையில் ரோமன் டச்சுச் சட்டத்தை ஸ்தாபித்து தேசவழமை என்ற தமிழ்ப் பிரதேசத்தின் வழக்கமான சட்டத்தை ஒன்று தொகுத்தார்கள் இன்று வரை இவையிரண்டும் சட்டங்களாக விளங்குகின்றன. இது அவர்கள் இலங்கைக்குச் செய்த பெரும் பணியாகும்.

பல அம்சங்களில் ஒல்லாந்தர் பிரிட்டிஷார் செய்யவிருந்த பல விஷயங்களை முன்னதாகச் செய்தார்கள். அவர்கள் வர்த்தகப் பயிர்களை அறிமுகம் செய்தார்கள். பிரிட்டிஷார் அவற்றை ஒரு பொருளாதாரமாகப் பின்னர் விருத்தி செய்தார்கள். பாடசாலை முறையையும் அவர்கள் ஸ்தாபித்தார்கள். இதன் அடிப்படையில் பிரிட்டிஷார் அதை வளர்த்தார்கள். போர்த்துக்கேயர் பலவந்த மதமாற்றத்தில் ஈடுபட்டார்கள். ஒல்லாந்தர் இதிலும் பார்க்க கபடத்தனமான பொருளாதாரத் தூண்டுதல்களை அளிக்கும் முறையைப் பாவித்தார்கள். ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரம் தான் அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்க்க முடியும். இலங்கை மக்களுக்கு எதிரான கலாசார ஆக்கிரமிப்பு என்ற தமது நோக்கத்தில், மதத்தையும் கல்வியையும் எவ்வாறு பயன் தரும் ஆயுதங்களாக்குவது என்பதையும் ஒல்லாந்தர் செய்து காட்டினர்கள். பிரிட்டிஷார் இந்த முறையை இன்னும் செவ்வனே செய்தார்கள். தோட்டம், ஏகாதிபத்திய பொருளாதார ஆக்கிரமிப்பின் கேந்திரமாகியது போலவே, மதக் கோயில்களும், பாடசாலைகளும் ஏகாதிபத்திய கலாசார ஆக்கிரமிப்பின் கேந்திரமாயின.

1796 ல் பிரிட்டிஷார் இலங்கையில் ஒல்லாந்தரின் இடத்தைப் பிடித்தார்கள். ஒல்லாந்தரின் தோல்வி பிரதானமாக அத்லாந்திக்கில் அவர்களுடைய கடற்பலத்தின் வீழ்ச்சியினுல் ஏற்பட்டது.

முழுத் தீவையும் வென்றடக்கிய முதலாவது ஒரேயொரு ஐரோப்பிய வல்லரசான பிரிட்டிஷாரின் வருகையுடன், இத்தீவின் பொருளாதாரத்திலும் நிறுவனங்களிலும் தீவிர மாற்றங்கள் ஏற்பட்ட காலம் ஒன்றுக்கு நாம் வருகின்றோம்.

ஒல்லாந்தரின் கீழிருந்த கரையோர மாகாணங்களை மட்டும் பிரிட்டிஷார் ஆட்சி புரிந்த முதல் 25 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நிகழவில்லை. 1796 முதல் 1802ம் ஆண்டு வரை கிழக்கிந்தியக் கம்பெனியின் மதராஸ் அரசாங்கம் இலங்கையை நிர்வகித்தது. 1802 ம் ஆண்டில் இலங்கை முடிக்குரிய காலனியாகி இங்கிலாந்திலிருந்து நேரடியாக நிர்வகிக்கப்பட்டது. இறைவரியைத் திரட்டும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியினால், பிரிட்டிஷ் ஆட்சியின் முதல் ஆண்டில் கடுமையான குழப்பங்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக ஒல்லாந்தரின் கீழிருந்தது போன்ற முந்திய முறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் உள் நாட்டிலும், ஐரோப்பாவில் நடைபெற்ற நெப்போலியன் யுத்தங்களிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தது. முழு இலங்கையையும் கைப்பற்றுவதில் அது கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால் உள்ளூர் கவர்னர்கள் மிகவும் பேராசை பிடித்தவர்களாக இருந்தார்கள். அத்துடன் கண்டிப் பிரதானிகள் இடைவிடாமல் தமது மன்னருடன் கொண்டிருந்த போட்டிகளும், நடத்திய சதிகளும் இந்தப் பேராசைகளைத் தூண்டிவிட்டன.

ஏறக்குறைய முதலாவது பிரிட்டிஷ் கவர்னரான பிரடெரிக் நோத் இங்கிலாந்திலிருந்து நேரடியாக நியமனம் பெற்று இலங்கை வந்த அதே வேளையில் கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கா 1797 ல் கண்டி சிம்மாசனத்தில் ஏறினான். பிரதான அதிகாரியான பிலிமத்தலாவ அவனைச் சிம்மாசனமேற்றினான். பிலிமத்தலாவ தான் அவனுடைய தந்தை எனச் சந்தேகிக்கப்படுகின்றது. ஆனால் விக்கிரமராஜசிங்க பிரதான அதிகாரியின் கரங்களில் பாவிக்கக் கூடிய ஒரு கருவியாக விளங்கவில்லை. ஆகவே பிலிமத்தலாவ மன்னனுக்கு எதிராகப் பிரிட்டிஷாருடன் சூழ்ச்சிகளில் ஈடுபடத் தொடங்கினான்.

முதலாம் கண்டி யுத்தம் எனப்படுவது 1803 ல் ஏற்பட்டது. அப்பொழுது பிரிட்டிஷ் சேனை கண்டி வரை சென்றது, கண்டியர்கள் அந் நகரை விட்டுப் பின்வாங்கினார்கள். பிரிட்டிஷார் தமது பொம்மையான முத்துசாமியை சிம்மாசனமேற்றினார்கள். ஆனால் பிரிட்டிஷார் கண்டியைத் தம் கரங்களில் வைத்திருக்க முடியவில்லை. போதிய போக்கு வரத்து வசதியின்மை, நோய், பருவ


STACKS
52795

காலம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பிரிட்டிஷார் பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கண்டியர்கள் கொரில்லாத் தந்திரங்களைப் பாவித்து 1803 ம் ஆண்டு ஜூன் 24 ம் திகதி பிரிட்டிஷ் சேனையை இடைமறித்துத் தாக்கி மகாவலிக் கரைகளில் அதை அழித்தொழித்தார்கள். நெப்போலியனின் புகழ் பெற்ற மொஸ்கோப் படையெடுப்புக்கு நிகழ்ந்த அதே நாசம் ஏறக்குறைய இங்கும் ஏற்பட்டது.

கண்டியர்கள் தம்மை அடிப்படுத்துவதற்கான பிரிட்டிஷாரின் இந்த முதல் முயற்சியை முறியடித்த போதும் அவர்களுடைய இறுதி அழிவு உள்ளிருந்து ஏற்பட்டது. 1811 ல் பிலிமத்தலாவவின் சதிகளுக்காக அவனுடைய தலை கொய்யப்பட்டது. எஹலப்பொல பிரதான அதிகாரி ஆகினான். அவனும் தனது முன்னவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, சிங்களம் நன்கு தெரிந்த டொயிலி என்ற ஆங்கில சிவில் அதிகாரி மூலம் பிரிட்டிஷாருடன் தேசத்துரோகமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டான். மன்னன் தேசத் துரோகமெனச் சந்தேகித்த போது எஹலப்பொல மன்னனுக்கு எதிராக சப்பிரகமுவவிலுள்ள தனது மக்களைக் கிளர்ந்தெழச் செய்ய முயற்சித்துத் தோல்வி கண்டான். ஆகவே, அவன் 1814 மே 23 ம் திகதி பிரிட்டிஷார் பக்கம் சென்றான். அவனுடைய ஊக்கமான உதவியுடன் பிரிட்டிஷார் இரண்டாம் கண்டி யுத்தத்தைத் தொடுத்தார்கள். இந்த யுத்தத்தின் விளைவாகக் கண்டி ராச்சியம் வென்றடக்கப்பட்டது.

ஆகவே, துரோகமும் உட்பிணக்குகளும் 1815 ல் கண்டி ராச்சியம் வீழ்ச்சியடைவதற்கு பிரதான பாத்திரம் வகித்தன. 1815, மார்ச் 2 ம் திகதி பிரவுண்றிக், கண்டியரசவை மண்டபத்தில் கண்டிப் பிரதானிகளின் சரணாகதியை ஏற்றுக் கொண்டான். ஒரு வாரத்துக்குப் பின்னர் கண்டி ஒப்பந்தம் என்ற கேலி நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் சமமானவர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தம். இதனால் கண்டிப் பிரதானிகள் ராஜசிங்கனைத் தாம் ஆதரிப்பதை மாற்றி, பிரிட்டிஷ் மன்னனை மூன்றாம் ஜோர்ஜை ஆதரித்தார்கள் என்று காட்ட முயலும் சிலர் இன்னும் இருக்கின்றார்கள். இந்தப் பாசாங்குக்கு ஆதாரமில்லை. இந்த ஒப்பந்தம் வெற்றியாளனால் உத்தரவிடப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டவர் மீது திணிக்கப்பட்ட ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தத்தின் சந்தர்ப்பவாதத் தன்மையுடைய ஐந்தாம் சரத்து. ''புத்த மதமும் ஆகமமும் ஊறு செய்யப்பட முடியாதவை'' எனவும் ''சங்கவும் அதன் வழிபாட்டுத் தலங்களும் ஆல

யங்களும் வைபவங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்'' எனவும் பிரகடனம் செய்தது என்பதிற் சந்தேகமில்லை. இது உள்ளூர் உணர்வுகளைத் தணிப்பதற்கான முயற்சி என்பதில் ஐயமில்லை. ஆனால் கிறிஸ்தவப் பாதிரிமார் இதனைத் தாக்கினார்கள், 1818-ம் ஆண்டுக் கிளர்ச்சி இந்த வாக்குறுதியை மீறுவதற்கு பிரிட்டிஷாருக்குச் சாக்குப்போக்கை வழங்கியது.

பிரிட்டிஷ் வெற்றியாளர்களின் மேம்பட்ட பொருளாதார சக்தியினதும் பீரங்கிகளினதும் முன், சிங்கள மன்னர்களின் புராதன நிலப்பிரபுத்துவ அமைப்புத் தோல்வி கண்டதில் எதுவித ஆச்சரியமுமில்லை. முதலாம், இரண்டாம் கண்டி யுத்தங்களில் செய்தது போல் நிலப்பிரபுத்துவம் பலவீனமான எதிர்ப்பை நடத்தியது. ஆனால் இது தோல்வியில் முடியும் என்பது முன்னரே தெரிந்தது 1815, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பிரதானிகளில் ஒருவனான கெப்பிட்டிப்பொலயின் தலைமையிலான, வெல்லாசாக் கலகம், என்று வழக்கமாகக் குறிப்பிடப்படும் 1818 கிளர்ச்சி இந்த அணையும் தீயின் கடைசிச் சுடராகும். கரையோரச் சிங்களவர்களான கொங்கலகொட பண்டா (பெலியகொடவைச் சேர்ந்த டேவிட்), புரன் அப்பு ஆகியோருடன் சம்பந்தப்பட்ட 1848 மாத்தளைக் கிளர்ச்சி முந்தியதுடன் ஒப்பிடும் போது மிகச்சிறியதொரு கிளர்ச்சி என்றே கூறவேண்டும். ஒரு பிரிட்டிஷார் தானும் உயிரிழக்காமல் இந்தக் கிளர்ச்சி அடக்கப்பட்டது. இன்று கெப்பெட்டிப்பொலவைத் தேசிய வீரனாகக் காட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்த முயற்சிக்கு ஆதாரங்காட்ட முடியுமா என்பது சந்தேகம். நாம் ஒரு தேசிய வீரன் என்றால் எப்படிப்பட்டவன் என்று இன்று புரிந்து கொள்ளும் முறையில், கெப்பெட்டிப்பொல ஒரு தேசிய வீரன் அல்ல. அந்நிய படையெடுப்பாளர்கள் மக்கள் நேசிக்கும் சுதந்திரத்தை அவர்களிடமிருந்து பறித்தெடுத்து விட்டார்கள் என்று நினைத்து அந்நியப் படையெடுப்பார்களுக்கு எதிராக சிங்கள மக்களின் சார்பில் அவன் போரிடவில்லை. மக்களுக்கு எந்த உரிமைகளும் இருப்பதென்ற கருத்து கண்டிப் பிரதானிகளுக்கு மிகவும் அப்பாற்பட்டதாக இருந்திருக்க வேண்டும். கெப்பெட்டிப்பொல கிளர்ச்சியில் எழுந்த போது, பிரிட்டிஷார் கண்டிப் பிரதானிகளின் பாரம்பரிய அதிகாரங்களை அபகரித்ததையே அவன் எதிர்த்தான். பிரிட்டிஷ் மன்னன் அல்லது அவனுடைய பிரதிநிதி ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் இடத்தை எடுப்பான் எனவும் மிகுதி அமைப்பு முழுவதும் பழையது போல் தொடர்ந்திருக்கும் எனவும் அவன் எதிர்பார்த்தான்.

இந்த விஷயத்தில் பெரும் அதிர்ச்சி ஒன்று அவர்களுக்குக் காத்திருந்தது. இதைக் கண்டதும் ஒரு பகுதி பிரதானிகள் கிளர்ச்சியில்

எழுந்தார்கள். பழைய நிலப்பிரபுத்துவ அமைப்பின் மீட்சிக்காக அவர்கள் போராடினார்கள். மக்களின் சுதந்திரம் என்பது அவர்களின் நோக்கமாக இருக்கவில்லை. இந்தக் கிளர்ச்சி அடக்கப்பட்டதுடன் இன்னும் ஒரு சில சிறிய கிளர்ச்சிகள் ஏற்பட்ட போதும் கண்டி நிலப்பிரபுத்துவ வர்க்கம் பிரிட்டிஷ் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டது. விரைவில் அவர்கள் பிரிட்டிஷ் வெற்றியாளர்களின் ஊக்கமான உடைந்தையாளர்கள் ஆனார்கள். பிரிட்டிஷாருடன் சேர்ந்து மக்களை அடக்கி ஒடுக்கினார்கள். அவர்கள் அந்நிய ஆட்சிக்கான சமூக அடிப்படையாக விளங்கினார்கள். இந்தப் பாத்திரத்தை அவர்கள் அப்பொழுது முதல் இடைவிடாது வகித்து வந்துள்ளார்கள்.

அந்நிய ஏகாதிபத்தியத்தின்பால் கண்டி நிலப்பிரபுத்துவப் பிரபுக்கள் கொண்டிருந்த அடிமைத்தனமான மனோபாவம் தற்காலம் வரை நீடித்துள்ளது. பண்டாரநாயக்கா 1951 ல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகத் தனது போராட்டத்தை ஆரம்பித்த போது, அவருடைய தகப்பனாரின் பக்கத்திலிருந்தோ அல்லது மனைவியின் பக்கத்திலிருந்தோ இந்த நிலப்பிரபுத்துவப் பிரதானிகள் எவரினதும் ஆதரவைப் பெறவில்லை. இதனால் தான் பண்டாரநாயக்கா, அவர்களை ஒரு போதும் நம்பியதில்லை அத்துடன் 1956 ல் அரசாங்கத்தை அமைத்த போது அவர்களை எட்ட வைத்திருந்தார். இவர்களில் சிலர், பின்னர் (1959 க்குப் பின்) பண்டாரநாயக்காவின் கட்சிக்கு பின்னால் சேர்ந்து கொண்டார்கள் என்றால் நிலப்பிரபுத்துவ நிலமை தொடர்ந்தும் இருக்கும் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது அதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

கண்டி மாகாணங்கள் முதலில் தனி மாகாணங்களாக ஆளப்பட்டன. பின்னர் முழுத் தீவினதும் ஒருமைப்பட்ட நிர்வாகத்தில் சேர்க்கப்பட்டன. கண்டியை வென்றடக்கிய பின் பிரிட்டிஷாரின் முதற் பணிகளில் ஒன்று கண்டியைக் கொழும்பு, திருகோணமலை, குருணாகலை ஆகியவற்றுடன் ராணுவ நெடுஞ்சாலைகளால் இணைப்பதாகும். இதனால் முன்னர் நல்ல நெடுஞ்சாலைகள் இல்லாத காரணத்தால் மலை நாட்டுத் தலைநகரம் கொண்டிருந்த சாதக நிலைமை இல்லாதொழிக்கப்பட்டது. இந்த நெடுஞ்சாலைகள் ராஜகாரிய அரச கருமம் என்ற கட்டாய ஊழியத்தின் மூலம் அமைக்கப்பட்டன. இலங்கை மீண்டும் ஒருமைப்பட்டது. இத்தடவை அந்நிய ஐரோப்பிய நாடொன்றின் ஆட்சிக்குக் கீழ் இது நிகழ்ந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தீவு ஒருமைப்பட்டதுடன் இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பிக்கின்றது. இன்று வரை எமது நாட்டின் பொருளாதாரத் தலைவிதி இணைந்துள்ள கால

னிசப் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் தோற்றத்துக்கு நாம் வருகிறோம். ஏற்பட்ட மாற்றத்தின் அடிப்படை இயல்பைப் புரிந்து கொள்ள, ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக சிங்கள மன்னர்களின் கீழ் இலங்கையில் நிலவிய பொருளாதாரத்தின் இயல்புகளைக் குறைந்த பட்சம் சுருக்கமாகக் குறிப்பிடுவது அவசியம்.

ஐரோப்பியர்கள் வென்றடக்கி அதை அழிப்பதற்கு முன் இலங்கையில் நிலவிய பொருளாதாரத்தை நிலப்பிரபுத்துவ இயற்கைப் பொருளாதாரம் என்று அழைக்கலாம். அது சுய தேவைப் பூர்த்திப் பொருளாதாரம். பணம் சிறிய பாத்திரம் வகித்தது; அல்லது எந்தப் பாத்திரமுமே வகிக்கவில்லை. மக்கள் தமக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் உற்பத்தி செய்தார்கள். தம்மிடம் கூடுதலாக உள்ள பொருட்களைத் தம்மிடம் இல்லாத பொருட்களுக்காகப் பரிமாறினார்கள். ரத்தினக் கற்கள், முத்துக்கள், வாசனைத் திரவியங்கள் ஆகிய பொருட்களில் வெளி உலகத்துடன் வர்த்தகம் செய்யப்பட்டது. இலங்கை இப் பொருட்களுக்கு அப்பொழுதும் புகழ் பெற்றிருந்தது.

கண்டி ராச்சியத்தில் நிலவியவாறு இந்த வகை இயற்கைப் பொருளாதாரத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க வருணனை ஒன்றை றொபேட் நொக்ஸ் எழுதிய இலங்கை பற்றிய புகழ்பெற்ற புத்தகம் தருகின்றது. நொக்ஸ் கண்டி ராச்சியத்தில் 1660 க்கும் 1679 க்கும் இடையில் 19 ஆண்டுகளுக்கு மேலான காலம் ஒரு கைதியாக இருந்தார். தீவிலிருந்து தப்பிச் சென்ற பின் அவர் இப்புத்தகத்தை எழுதினார்.

அவருடைய புத்தகத்திலிருந்து ஒரு பகுதியைத் தருகின்றோம்; ''எந்த விதமான பணமும் இங்கு அரிதாக இருக்கின்றது. அவர்கள் அநேகமாகப் பண்டங்களைப் பரிமாற்றுச் செய்வதன் மூலம் கொள்வனவு விற்பனவு செய்கின்றார்கள். அவர்கள் தம்மத்தியில் சிறிது வர்த்தகம் செய்கின்றார்கள். இது இத்தீவின் இயற்கையினால் ஏற்பட்டது. நாட்டின் ஒரு பாகத்தில் வளரும் பயிர்கள் மறுபாகத்தில் பயிரிடப்படுவதில்லை. ஆனால் இத் தீவின் ஒரு பகுதியில் அல்லது இன்னொரு பகுதியில் வேறு எந்த நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உதவியின்றி பண்டங்களைப் பரிமாற்றுச் செய்து தம்மிடம் உள்ளவற்றை எடுத்துச் சென்று தமக்குத் தேவையானவற்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் அவற்றுக்குப் போதுமான பொருட்கள் இருக்கின்றன என நான் கருதுகின்றேன்.''

இது நிலப்பிரபுத்துவத்தின் கீழ் நிலவிய இயற்கைப் பொருளாதாரத்தை நேரடியாகக் கண்டவர் எழுதிய அற்புதமான வரு

ணையாகும். அந்நியர்கள் கைப்பற்றியிருக்கா விட்டால் இலங்கை உரிய காலத்தில் முதலாளித்துவத்தை நோக்கி முன்னேறியிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இப்படி நிகழவில்லை. மாறாக அந்நிய ஏகாதிபத்தியப் படையெடுப்பு இலங்கையில் நிலவிய பின்தங்கிய தேக்கமான நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து புதிய காலனிசத் தோட்டப் பொருளாதாரத்தை ஸ்தாபித்தது. இது அடிப்படையில் ஒரு காசுப் பொருளாதாரமாகும். ஆனால் இது பூரண அர்த்தத்தில் முதலாளித்துவம் அல்ல. உள்ளூர் முதலாளித்துவத்தின் வளர்ச்சி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்குப் பொருந்தியதாக அமைந்திருக்காது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இலங்கை ஒரு மூலப் பொருள் உற்பத்தி நாடாக இருக்க வேண்டும் எனவும் அதன் உற்பத்திப் பொருட்களுக்கான ஒரு சந்தையாக இருக்க வேண்டும் எனவும் விரும்பியது. ஆகவே ஒவ்வொரு கட்டத்திலும் அது முதலாளித்துவ வளர்ச்சிக்கான சகல முயற்சியையும் முறியடித்தது. அது ஒரு காலனிசப் பொருளாதாரத்தை அனுமதித்து ஊட்டி வளர்த்தது. இப் பொருளாதாரத்தினால் தீவின் இயற்கை வளங்கிலிருந்து பெருந் தொகை லாபங்கள் பெறப்பட்டு அவை ஆளும் நாட்டுக்கு செழிப்பூட்டின.

அந்நிய ஆட்சியின் ஒரு விளைவு, சிங்கள மன்னர்களின் பெருமையாக விளங்கி சிங்கள நாகரிகம் உச்ச நிலையில் இருந்தபோது, அதன் செழிப்புக்கு அடிப்படையை வழங்கிய நீர்ப்பாசன அமைப்பு இறுதியில் கைவிடப்பட்டு அழிந்தொழிந்ததாகும். வாவிகள் பழுதுபார்க்கப்படாமல் பாழாகின. அல்லது புதிய பாதைகளை அமைப்பதற்காக அழித்தொழிக்கப்பட்டன. சில பாதைகள் வாவி அணைக்கட்டுகளுக்கு மேல் அமைக்கப்பட்டன. படிப்படியாக வாவிகளைச் சுற்றிக் காடு வளர்ந்தது. இந்த நூற்றாண்டில் புனரமைக்கும் வரை அவை இவ்வாறு இருந்தன. ஒல்லாந்தர் காலம் முதல் இலங்கையர்களின் பிரதான உணவான அரிசியின் இறக்குமதி ஆரம்பித்தது.

முன்னரே குறிப்பிட்டவாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையில் பெருந் தோட்டப் பொருளாதாரத்தைப் புகுத்தினார்கள். ஒல்லாந்தர் காலத்திலேயே கோப்பி சாகுபடி ஆரம்பித்துவிட்டது. ஆனால் வர்த்தகப் பயிர் என்ற முறையில் அதன் வளர்ச்சி பிரிட்டிஷ் காலத்திலேயே ஆரம்பித்தது. பின்னர் தேயிலை, கோப்பியின் இடத்தை எடுத்துக் கொண்டது. ஒரு பயிர்ப் பூச்சியினால் கோப்பி அழிக்கப்பட்ட போது இது ஏற்பட்டது. ரப்பர் பயிரிடுகையும் பெருமளவில் ஆரம்பிபிக்கப்பட்டது.

இந்தத் தோட்டங்களுக்கு பெருந்தொகை நிலமும் பெருந்தொகை உழைப்புச் சக்தியும் தேவையாகவிருந்தது. பிரிட்டிஷார்

அவற்றை எங்கிருந்து பெற்றார்கள்? சகல பூர்வீக மூலதனத் திரட்டையும் போல இலங்கையிலும் பூர்வீக மூலதனத் திரட்டு (இதைப் பொறுத்து நிலம் என்ற வடிவத்தில்) பெருமளவிலான சூறையாடல்மூலம் நடைபெற்றது. 1840 தரிசுநிலச் சட்டம், 1888 தானியவரி ஆகியவற்றின் மூலம் இது செய்யப்பட்டது.

பிரிட்டிஷார் இலங்கைக்கு வந்தபோது ஒல்லாந்தர் தாம் ஆண்ட கரையோர மாகாணங்களில் சட்ட அமைப்பு ஒன்றை அமுல்படுத்தியிருந்தார்கள். நிலத்தைக் கொண்டிருந்தவர்களுக்கு அதை நிரூபிக்க ஏதோ ஒருவகை உறுதி இருந்தது. கண்டி மாகாணங்களில் இப்படி இருக்கவில்லை. அங்கு சகல நிலமும் மன்னருக்குச் சொந்தமானவை. மன்னன் தனது பிரதானிகள்மூலம் விவசாயிகளுக்கு தனது நிலத்தைக் கொடுத்திருந்தான். இந்தக் குத்தகை முறை ஸ்திரமானது. மன்னனுக்கு விவசாயியில் நம்பிக்கையில்லையென்றால்த்தான் அதனை மாற்றமுடியும். ஆனால் பொதுவாக நிலம் நிரந்தரமாக விவசாயியிடம் சந்ததிசந்ததியாக இருந்தது. இது மிகவும் தெளிவான விஷயம். ஆனால் இதை நிரூபிப்பதற்கு உறுதிகள் கிடையாது.

தரிசு நிலச் சட்டத்தின் மூலம் பிரிட்டிஷார் மக்கள் சொத்துரிமை நிரூபிக்க முடியாத நிலமனைத்தையும் முடிக்குரிய நிலமெனப் பிரகடனம் செய்தார்கள். ஒரு குறிப்பிட்ட தொகை விவசாயிகள் தாம் சாகுபடி செய்த நெல்வயல்களைப் பொறுத்து சொத்துரிமையை நிரூபிக்க முடிந்தபோதிலும் பொதுவான காடு, மந்தை மேய்ச்சல் நிலம் ஆகியவற்றிற்குச் சொத்துரிமையை நிரூபிக்க முடியவில்லை. இவை கிராமிய பொருளாதாரத்தின் முக்கிய பகுதியாக விளங்கின. இவையின்றி நெல்வயல்களைச் சாகுபடி செய்ய முடியாது. இதனால் பெருந்தொகை விவசாயிகள் தமது வயல்களை விற்றுவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று குடியேற நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். இந்தக் காடுகளும் நிலங்களும் முடிக்குரிய சொத்தாகப் பிரகடனம் செய்யப்பட்டு நகைக்கத்தக்க குறைந்த விலைகளில் பிரிட்டிஷ் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு விற்கப்பட்டன. சில வேளைகளில் ஒரு ஏக்கர் நிலம் 50 சதத்திற்கும் குறைவாக விற்கப்பட்டது என அறிவிக்கப் பட்டிருக்கின்றது. பின்னர் இலங்கைத் தோட்டச் சொந்தக்காரர்களும் முடிக்குரிய நிலத்தை வாங்க அனுமதிக்கப் பட்டார்கள். இன்னும் சில விவசாயிகள் நிலத்தைக் கொண்டிருந்தார்கள் என்றால் தானியவரி அவர்களைத் தீர்த்துக்கட்டியது. இது குறிப்பிடத்தக்களவு தீங்கான வரியாகும். இந்தவரி விவசாயிகளைத்தான் பாதித்தது. நிலச் சொந்தக்காரர்களின் நிலங்கள், கோயில் நிலங்கள் முதலியனவும் இத்த வரியிலிருந்து

விலக்கப்பட்டிருந்தன. இந்தப்பளுவான வரியைக் கொடுக்க முடியாத நிலைமையில் இன்னும் மீதமிருந்த பெருந்தொகை விவசாயிகள் தமது நிலங்களை விற்றுவிட்டு வெளியேறிச் சென்றார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் பட்டினியால் மரணமடைந்தார்கள் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

அநேகமாக இதே முறையில் பிரிட்டிஷார் 1856-ம் ஆண்டின் கோயில் நிலப்பதிவுச் சட்டம் இல. 10ன் கீழ் கோயில் நிலங்களையும் அபகரித்தார்கள். இதுவும் உண்மையில் விவசாயிகளைப் பாதித்தது ஏனென்றால் இந்த நிலங்கள் ஏற்கனவே சேனைக் குத்தகைக்குச் செய்ய விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. இந்தச் சட்டத்தை நிர்வகிப்பதற்கென நியமிக்கப்பட்ட நிலக்கமிஷனர்கள் சட்டபூர்வமான உறுதிகள் இல்லாதிருப்பதைப் பிரகடனம் செய்தனர். இவ்வாறு ஆயிரக்கணக்கான கோயிற்காணிகள் அரசாங்கத்தாற் கைப்பற்றப்பட்டன

கண்டியர்களின் நிலங்களை அகபகரிக்கும் பணியில் பிரிட்டிஷாருக்கு நிலப்பிரபுத்துவப் பிரதானிகளில் ஒரு பகுதியினர் உதவி புரிந்தார்கள் என்பதைக் குறிப்பிடுவது அவசியம். இந்த உதவியின் போக்கில் இந்தப் பிரதானிகள் பெருந்தொகை நிலத்தைத் தாமும் அபகரித்துக் கொண்டார்கள். உண்மையில் தற்போதைய பெரிய ''நிந்தகம்'' அனைத்தினதும் மூலம் இதுவேயாகும். ''கிராமவாசிகளிடமிருந்து சரியான உறுதிகள் அற்ற நிலத்தை வாங்கும் வாணிக வேலை அநேகமாக அவர்களுடைய நாடற்றவர்களாற் செய்யப்பட்டது'' என்று கவர்னர் கிளிபோட் ஏளனமான முறையிற் கூறினார்.

இவ்வாறு தான் கண்டி விவசாயியின் நிலத்தை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கொள்ளையடித்தார்கள். சட்டரீதியானது என்ற பிரமையின் கீழ் செய்யப்பட்ட போதும் அது சூறையாடலே தவிர வேறெதுவும் அல்ல. இதை மனதில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் தற்கால இன வெறியர்கள் கண்டி விவசாயிகளின் நிலங்கள் கொள்ளையடிக்கப்பட்டதை நினைவுகூரும் போது, கண்டி நிலங்களை யார் கொள்ளையடித்தார்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் உண்மைக் குற்றவாளியான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதியின் இடத்தில் குற்றமறியாத் தோட்டத் தொழிலாளரை வைக்கவும் முயல்கின்றார், இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளியும் ஏகாதிபத்திய சுரண்டலின் ஒரு பலியாள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி தன்னுடைய மூதாதையர் கொள்ளையடித்த நிலத்தில் பெரும் பகுதியை இன்னும் தனது சொத்தாகக் கொண்டிருக்கின்றான்.

கண்டி விவசாயிகள் தமது நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமை, கோதுமைச் சாகுபடியிலிருந்து செம்மறி ஆடு வளர்ப்புக்கு மாறிய போது தொழிற் புரட்சிக்கு முன் இங்கிலாந்து விவசாயிகள் தமது நிலப்பிரபுத்துவப் பிரபுக்களால் வெளியேற்றப்பட்டதை ஒத்தது. ஆனால் இங்கிலாந்து விவசாயிகளில் பெரும்பான்மையினர் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட நகரங்களுக்கு அலைந்து சென்று பின்னர் தோன்றிய தொழிற்சாலைகளில் வேலை செய்து பாட்டாளி வர்க்கமாக மாறினார்கள், வெளியேற்றப்பட்ட கண்டி விவசாயிகளுக்கு இப்படியான ஒரு சந்தர்ப்பம் இருக்கவில்லை. பிரிட்டிஷார் தாம் திறந்த தோட்டங்களில் பெருமளவில் அவர்களை வேலைக்கமர்த்தவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று 1818, 1848 கிளர்ச்சிகளுக்குப் பின்னர் பிரிட்டிஷார் சிங்களவர்களில் சந்தேகம் கொண்டார்கள். இரண்டாவதாக குடியிறக்கக் கூலிகளை அவர்கள் விரும்பியிருக்கலாம். இக் கூலிகளைக் கொண்டு தாம் விரும்பியதெல்லாம் செய்ய வைக்கலாம். அவர்கள் வருடம் பூராவும் வேலை செய்வார்கள்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட கண்டி விவசாயிகள் மெதுவாக மரணமடைய விடப்பட்டார்கள்; அல்லது ஆகக் கூடியபட்சம் மிகவும் மோசமான வாழ்வு நடத்தவிடப்பட்டார்கள். நிலைமை இப்படித்தான் இருந்தது என்பதை 1935 நிலக் கமிஷன் அறிக்கை நிரூபிக்கின்றது. இலங்கையில் விவசாயி வர்க்கம், ஒரு வர்க்கம் என்ற முறையில் அழிந்துபட்டுக் கொண்டிருக்கிறது என்று இந்த அறிக்கை கூறியது. இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்காக முடிக்குரிய நிலத்தைத் தனி முதலாளிகளுக்கு அல்லது கம்பனிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதனைத்தையும் நிறுத்த வேண்டும் எனவும் எதிர்காலத்தில் முடிக்குரிய நிலத்தை விவசாயிகளுக்கு மாத்திரம் கொடுக்க வேண்டும் எனவும் இந்தக் கமிஷன் சிபாரிசு செய்தது. இவ்வாறு தான் 30ம் ஆண்டுகளில் குடியேற்றத் திட்டங்கள் தோன்றின. இந்த நிலக் கொள்கையை 1965 ஐ. தே. க. அரசாங்கம் உட்பட சகல அரசாங்கங்களும் பின்பற்றின. 1965ல் இக் கொள்கை மாற்றப்பட்டு முடிக்குரிய நிலம் மீண்டும் தனி நபர்களுக்கும் கம்பனிகளுக்கும் பங்கிடு செய்யப்பட்டன.

பிரிட்டிஷ் தோட்டச் சொந்தக்காரர்கள் எங்கிருந்து கூலிகளைப் பெற்றார்கள்? அவர்கள் தென் இந்தியாவை நோக்கித் திரும்பினார்கள்; தென் இந்தியாவின் பொருளாதாரத்தைப் பிரிட்டிஷார் ஏற்கனவே நாசப்படுத்தியிருந்தார்கள். தென் இந்தியாவில் பெருந்தொகையான வேலையில்லாத மக்கள் இருந்தார்கள். இந்தியக் கங்காணிகளின் உதவியுடன் பொய் வாக்குறுதிகளால் கவரப்பட்டு

இந்த ஏழைத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து மாடு போல் உழைத்து முதலில் தோட்டங்களைத் திறந்து, பின் அவற்றில் வேலை செய்தார்கள். நூற்றுக் கணக்கானோர் மிருகத்தனமான போக்கு வரத்து முறையினால் மரணமடைந்தார்கள். அவர்கள் படுமோசமான நிலைமைகளில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆகவே வாந்திபேதி (காலரா) போன்ற நோய்கள் பரவின. நிலைமை மிகவும் மோசமாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் இந்திய அரசாங்கம் தலையிட வேண்டி ஏற்பட்டது. அது, இந்தக் குடியிறக்கத் தொழிலாளர்களின் வீட்டு வசதி, சுகாதார வசதி, ஆரோக்கிய வசதி முதலிய வாழ்க்கை நிலைமைகளை, சில குறிப்பிட்ட குறைந்தபட்ச சட்டங்களை இயற்றும்படி ஆளும் இலங்கை அரசாங்கத்தை (இரண்டு அரசாங்கங்களும் தனியானவை என்றாலும் பிரிட்டிஷ் அரசாங்கங்களே) நிர்ப்பந்தித்தது.

இவ்வாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் பெருந்தொகை இந்தியக் குடியிறக்கத் தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்து கண்டியர்கள் மத்தியில் அவர்களைக் கொட்டிக்குவித்து. இன்று வரை இலங்கை அரசியலைத் தொடர்ந்து சிக்கற்படுத்தும் பிரச்சினை ஒன்றைப் பிற்சந்ததியினருக்கு விட்டுச் சென்றார்கள். இலங்கைக்கு இந்தியக் குடியிறக்கத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்குப் பொறுப்பானவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் சட்டசபை போன்ற முதலாவது பிரதிநிதித்துவ நிறுவனங்களின் காலம் முதல் தோட்டங்களுக்காக இந்தியக் குடியிறக்கக் கூலிகளை இறக்குமதி செய்யும் இந்தக் கொள்கையை இலங்கையின் பூர்ஷுவா வர்க்க அரசியல்வாதிகள் ஆதரித்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் சட்ட சபையில் இந்தக் குடியிறக்கத்துக்கு மானியம் வழங்க நிதி அங்கீகரிக்கப்பட்டது. டி. எஸ். சேனநாயக்கா முதல் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா வரை சகல பூர்ஷுவா வர்க்கத் தலைவர்களும் இதற்கு இசைவாக இருந்தார்கள். பின்னர் இந்திய-எதிர்ப்பு வீரசிகாமணிகளுக்கு இதை நினைப்பூட்ட வேண்டும்.

இந்தியத் தொழிலாளியுடன் சேர்ந்து இந்திய வர்த்தகர்களும், வட்டிக் கடைக்காரர்களும் பிற புல்லுருவிகளும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இந்தியர்களையும் இலங்கையர்களையும் ஒரேவிதமாகச் சுரண்டினார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி சென்றவிடமெங்கும் ஒரு இந்தியனைத் தனது சட்டைப் பையில் எடுத்துச் சென்றான் என்ற முதுமொழி ஆபிரிக்காவில் வழங்குகின்றது. இலங்கையைப் பொறுத்த வரை இது நிச்சயம் உண்மையாகும். இந்திய

வர்த்தகர்களினதும் வட்டிக் கடைக்காரர்களினதும் கொள்ளையடித்தலும் மனிதத் தன்மையற்ற சுரண்டலும் தான் இந்திய எதிர்ப்பு உணர்வுக்குப் பெரிதும் காரணமாகும். ஆனால் அந்தரங்க நோக்கமுடைய அரசியல்வாதிகள் இதனைத் துரதிருஷ்ட வசமாக இந்திய வம்சாவழித் தொழிலாளர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டனர். எமது எதிரிகள் யார்? எமது நண்பர்கள் யார்? என்ற கேள்விக்கு சரியாகப் பதிலளிப்பதென்றால், தற்போது இலங்கை - இந்தியப் பிரச்சினையென அழைக்கப்படுவதன் அல்லது சில இலட்சம் இந்திய வம்சாவழித் தொழிலாளர்களின் நாடற்ற நிலைமை என்ற பிரச்சினையின் மேற்கூறிய பின்னணியைப் பூரணமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பின்னணி பற்றிய பொதுவான அறியாமை அல்லது சரியான விளக்கமின்மைதான் 'வெளிநாட்டு-உள்நாட்டுப் பிற்போக்குவாதிகள் நச்சுத்தனமான இந்திய-எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மூலம் இலங்கையின் புரட்சி அணிகளைப் பிளவுபடுத்தி இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை இலங்கை ஜனத்தொகையின் இதர பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தி வைக்கத் துணைபுரிந்துள்ளது. இத்தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தில் கணிசமான பகுதியாக விளங்குகின்றனர் கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிளவு புரட்சிகர இயக்கத்தைப் பெரிதும் பாதித்திருக்கின்றது. இதனால் தான் இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள், சிங்கள விவசாயிகள் ஆகிய இரு சாராரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குப் பலியானவர்கள் எனவும் ஆகவே அவர்கள் எதிரிகளாக வல்ல, இயற்கையான நேச சக்திகளாக விளங்குகின்றனர்கள் எனவும் சுட்டிக்காட்டுவது அவசியமாகின்றது. இத்தகைய அணுகுமுறை மூலம் தான் ஒரு நிரந்தர தீர்வைக் காணமுடியும்.

மேற்கண்டவாறு, பிரிட்டிஷார் புகுத்திய பெருந் தோட்டப் பொருளாதாரம், கண்டி விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்த நிலம் (மூலதனம்), இந்தியக் குடியிறக்கத் தொழிலாளியின் உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வளர்ந்தது. நாட்டின் முழுப் பொருளாதாரமும் தேயிலையையும் ரப்பரையும் பயிரிட்டு தயாரித்து ஏற்றுமதி செய்யும் வேலையைச் சுற்றி அமைக்கப்பட்டது. இதர விஷயங்கள் அனைத்தும் இதில் தங்கி இருந்தன. இது தான் எப்பொழுதும் ஏகாதிபத்திய சுரண்டலின் வடிவமாகும். ஏனென்றால் பொருளாதாரம் ஒன்று அல்லது இரண்டு ஏற்றுமதிப் பயிர்களில் ஏறக்குறையப் பூரணமாகத் தங்கியிருப்பதால், ஏகாதிபத்தியவாதிகள் தம்மிஷ்டப்படி பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்க முடிகின்றது.

உதாரணமாக இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட அந்நிய வங்கிகள் அனைத்தும் தோட்டத் தொழிலுக்கு நிதி உதவி அளிக்க இங்கு அமைக்கப்பட்டன. ஆசியாவில் ஏகாதிபத்திய சுரண்டல் மூலம் ஏற்கனவே பெற்ற லாபங்களிலிருந்து இந்த வங்கிகள் ஸ்தாபிக்கப் பட்டன. ஹொங் ஹொங் அன்ட் ஷாங்காய் பாங் லிமிடெட் போன்ற சில வங்கிகளின் பெயர்களே லாபங்கள் எங்கிருந்து வந்தன என்பதைக் காட்டுகின்றன. வாக்கர் அன்ட் சன்ஸ், கொமர்சியல் கொம்பனி ஆகியன போன்ற என்சினியரிங் கொம்பனிகள் தேயிலை, ரப்பர் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை நிறுவவும், பராமரிக்கவும் பழுது பார்த்துத் திருத்தவும் இங்கு ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. இங்கு ஸ்தாபிக்கப் பட்டபின் உப தொழிலாக அவை கார்களை இறக்குமதி செய்ய ஆரம்பித்தன. என்சினியரிங் வேலைத் தளங்கள் கார்களைப் பழுது பார்க்க ஸ்தாபிக்கப்பட்டன.

நெடுஞ்சாலைகளை அல்லது றெயில் பாதைகளைப் பார்த்தால் தோட்டங்களுக்குச் செல்வன - கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய வற்றுக்குச் செல்வன - சிறந்தவையாக இருப்பதைக் காணலாம். ஏனென்றால் இந்த நெடுஞ்சாலைகள், றெயில் பாதைகள் மூலம் தான் தேயிலை, ரப்பர் ஏற்றுமதிகள் கொழும்புக்கு வரவேண்டும். கொழும்புத் துறைமுகத்தின் விஸ்தரிப்புக்கு இவ்வளவு கூடுதலான அந்நிய உதவி கிடைத்ததற்குக் காரணம், கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளில் எமது தேயிலை உற்பத்தி இரண்டு மடங்குக்கு மேலாகி அதனைத் துரிதமாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதேயாகும்.

தேயிலை, ரப்பர் - தோட்டங்களிலிருந்து குறிப்பாகத் தேயிலைத் தோட்டங்களிலிருந்து பெருந்தொகை லாபம் பிழிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. பிரிட்டிஷ் தோட்டச் சொந்தக்காரர்கள் பிரமாண்டமான செல்வத்தைத் திரட்டியுள்ளார்கள். அநேகமாக ஆரம்பத்தில் முதலீடு செய்யப்பட்ட மூலதனம் பல மடங்காகியிருக்கின்றது. இலங்கை என்றால் தேயிலை என்று அர்த்தப்படும் நிலைமை ஏற்பட்டது. ஒரு காலத்தில் இலங்கை, லிப்ரன் தேயிலைத் தோட்டமென அழைக்கப்பட்டது.

ஆனால், தேயிலை மிகச் சிறப்பாக வளரும் மலைநாட்டில் தோட்டங்களைத் திறந்தமை, அந்நிய ஆக்கிரமிப்பாளருக்கு லாபங்களைப் பெறுவதற்காக இலங்கையின் வளங்களைச் சுரண்டுவது தவிர, மிகவும் பயங்கரமான பாதிப்புகளை ஏற்படுத்தியது. பிரிட்டிஷார் செய்த மிகக் கொடிய செயல்களில் ஒன்று தேயிலைத் தோட்டங்

களை அமைப்பதற்காக எமது மலை உச்சிகளிலிருந்த காடுகளை வெட்டி அழித்தொழித்தமையாகும். மலை உச்சிகளிலுள்ள காட்டு மரங்கள் பயனுள்ள ஒரு வேலையைச் செய்கின்றன என்று எந்தத் தாவரவியலாளரும் கூறுவார். அவை மழை நீருள்ள முகில்களைக் குளிரச் செய்து அவற்றை மழையாக மாற்றுகின்றன. இரண்டாவதாக மரங்களின் பலமான வேர்கள் மழை நீர் உடனே பாய்ந்தோடுவதைத் தடைசெய்கின்றன. மழை நீர் நிலத்துக்குக் கீழ்ச் சென்று வருடம் முழுவதும் நிலத்தடி அருவிகளாக ஓடுகின்றன.

காட்டு மரங்களை வெட்டியபடியால் மழை நீர், இப்பொழுது உடனே பாய்ந்தோடுகிறது. மேலும் தேயிலைப் புதர்களைச் சுற்றியுள்ள நிலத்தை உரம் போடுவதற்காகக் கிண்டி இளகச் செய்கிறபடியால் நிலத்தின் மிகவும் செழிப்பான பகுதியான இளகிய கீழ் மண் மழைவெள்ளத்தால் ஆற்றுக்குள் அடிபட்டுச் செல்கிறது. இலங்கையில் மண்ணிறமாக அல்லது சகதியாக இல்லாத ஆறு ஒன்று தானும் கிடையாது. மண் அரிப்பு என்று அழைக்கப்படும் பிரச்சினை இது தான். பல்லாண்டுகளாக, நதிகளுக்குள் அடித்துச் செல்லப்பட்ட மண் காரணமாக நதிப் படுக்கைகள் உயரத் தொடங்கின. இதன் விளைவாகப் பெருமழையின் போது அவற்றால் மழை நீரைத் தாங்கிப் பிடிக்கமுடிவதில்லை. இதனால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. ஒரு பருவ காலத்தில் வெள்ளப்பெருக்கு, இன்னொரு காலத்தில் வரட்சி. எமது மலை உச்சிகளிலிருந்த காடுகளை வெட்டிய பிரிட்டிஷாரின் மிலேச்சத்தனமான கொள்கையின் விளைவு இது. இந்த நூற்றாண்டின் 30 ம் ஆண்டுகளில் புராதன நீர்ப்பாசன வாவிகள் புனரமைக்கப்பட்ட போதும் முன்னர் போல் போதிய நீரை அவை கொள்ளமுடியவில்லை. ஏனென்றால் பெருந்தொகையாக மழை நீர் வாவிகளை வந்தடைவதற்கு முன் வெள்ளமாக விரயமாக்கப்பட்டது. இவ்வாறு பிரிட்டிஷார் இலங்கை, உணவில் சுயதேவைப் பூர்த்தி செய்வதில் உள்ள பிரதான தடையை உருவாக்கினார்கள். ஏனென்றால் வருடத்தின் இரண்டு பருவ காலங்களிலும் விவசாயத்திற்கு தயாரிக்கப்பட்ட நிலம் முழுவதிலும் சாகுபடிக்குத் துணைபுரியப் போதிய நீர்ப்பாசன வசதிகள் இருக்குமென்றால் இலங்கை, உணவில் சுயதேவைப் பூர்த்தியை நோக்கி முன்னேற முடியும் என்பது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

பிரிட்டிஷார், நாட்டைப் பொருளாதார ரீதியில் கடுமையாகச் சுரண்டியதுடன் தமது அரசியல் தளத்தை ஸ்திரப்படுத்துமுகமாக பல்வகைக் கலாசார ஆக்கிரமிப்பிலும் ஈடுபட்டார்கள். இந்த விஷயத்தில் ஒல்லாந்தர் ஏற்கனவே பாடசாலைகளை ஸ்தாபித்தும் மத மிஷனரி வேலைக்கு ஊக்கமளித்தும் அத்திவாரத்தை இட்டுள்ளார்கள்.

ஆங்கில மொழி, கிறிஸ்தவ மதம் ஆகியவற்றின் மூலம் சுதேசிகளை ஐரோப்பிய மயமாக்கும் முயற்சி ஆரம்பித்தது. ஆங்கில அறிவு முக்கியமானதாக மாத்திரமல்ல, வருமானம் தருவதாகவும் மாறியது. பிரிட்டிஷாரின் நிர்வாக சேவைகளின் கீழ் மட்டங்களில் வேலை செய்ய ஆங்கிலம் கற்ற சிலர்களின் கூட்டம் ஒன்றும் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. ஸ்தாபிக்கப்பட்ட புதிய பாடசாலைகளில் இவர்கள் உற்பத்தி செய்யப்பட்டார்கள். இங்கிலாந்தில் போல பாடசாலைகள் மிஷனரி ஸ்தாபனங்களால் நடத்தப்பட்டபடியால் கிறிஸ்தவ மதமும் ஆங்கில மொழியும் கையோடு கைகோத்துச் சென்றன. விரைவில் ''சுதேசிகளு''க்கு உயர் கல்வி போதிப்பதற்கான கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் மிகவும் தூரதிருஷ்டி உடையவர்கள். அவர்கள் ஏகாதிபத்திய வல்லரசுகளில் மிகவும் அனுபவமுடையவர்கள் என்று கூறலாம். 1818, 1848 அல்லது 1915 ல் செய்தது போல் தேவையென்று அவர்கள் கருதும் போது கொடிய பலாத்காரத்தைப் பாவிப்பதுடன் மாத்திரமல்ல, இனிப்பானதாக்கவும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் கல்வியை, விசேஷமாகப் பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களிலான உயர் கல்வியை, கலாசார ஊடுருவலுக்கான கருவியாகப் பாவித்து ஆங்கில எஜமானனின் மொழி, நடை, உடை ஆகியவற்றைப் பின்பற்றி வரும் இலங்கையை ஒரு ''சிறிய இங்கிலாந்தாக'' மாற்றும் விருப்பமுடையவருமான பொதுநிற இங்கிலீஸ்காரரின் கூட்டம் ஒன்றை உற்பத்தி செய்தார்கள். கவர்னர் மெயிற்லாந்து 1811 ல் இலங்கையை விட்டுப் புறப்பட்ட போது முதலியார் டி சேரத்தின் இரண்டு புத்திரர்கள் பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் உயர் கல்விக்காக அவருடன் சென்றார்கள் என அறிய வருகின்றது. இதனுடன் இந்த லண்டன் ஊர்வலம் ஆரம்பித்து விட்டது.

இங்கிலாந்திலிருந்து திரும்பிய இந்தப் பல்கலைக் கழகக் கல்வி பெற்றவர்கள் கணிசமான காலம் இலங்கை அரசியலில் செல்வாக்கு வகித்தார்கள். தாம் இங்கிலாந்தில் கண்ட மாதிரி இலங்கை அரசியலை அமைத்தார்கள். இன்று வரை அவர்களுடைய செல்வாக்கு நிலவுகின்றது. இதில் பெரும் பகுதி, அந்நிய ஸ்தாபனங்களை கிளிப்பிள்ளை போல் அடிமைத் தனமாகக் காப்பியடிப்பதாகும். இது உள்ளூர் அமைப்பில் வளர்வது சாத்தியமில்லை. உஷ்ணவலயத்தில் இருக்கும் இலங்கை வெப்பமானதென்ற போதும் சுப்ரீம் கோட் நீதிபதிகள் ரோமத் தொப்பி அணிதல் இதில் ஒன்று. சாதி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஏறக்குறையக் கண்டிப்பாகப் பிளவுபட்டிருக்கும் ஒரு சமுதாயத்தில் ஆங்கிலப் பாராளுமன்ற

முறையையும், ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற தத்துவத்தையும் நிலை நாட்டுவதற்கான முயற்சி போன்ற கேலிக்கிடமான விஷயங்கள் இதனால் ஏற்பட்டன.

ஆனால் சில நல்ல விஷயங்களும் ஏற்பட்டன. இந்தப் பரிமாற்றத்தினால் முதலாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய கால கட்டத்தில் இலங்கைக்குப் புரட்சிகர மார்க்சிஸத்தின் விதைகள் ஊன்றப்பட்டன. ஆங்கிலத்தில் உயர் கல்வி பெறுவதனால் தற்போது இலங்கையர்கள் மிகச் சிறுபான்மையினர் என்ற போதும் நவீன அறிவைக் குறிப்பாக விஞ்ஞான ரீதியான அறிவை பெறக் கூடியதாக இருந்தது.

ஆங்கில விஷயங்கள் அனைத்தையும் வழிபடும் இந்த நிலைமைக்கு மாறான எதிரொலிப்பு ஒன்று கட்டாயம் வரவிருந்தது. அது, புத்த மத மறுமலர்ச்சி. சிங்களவர்களின் பண்டைப் புகழ் பேசுதல் ஆகியவற்றின் இயக்கம் என்ற வடிவத்தில் வந்தது. இந்தியாவில், குறிப்பாக வங்காளத்தில் எழுந்த விறுவிறுப்பான இலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்திலும் பார்க்க மிதமான இந்த இயக்கத்துக்கு மிக்கெத்துவத்த குணனந்த தேரோ, அனகாரிக்க தர்மபால, ஆனந்த குமாரசுவாமி, ஆறுமுக நாவலர் முதலியோர் தலைமை தாங்கினார்கள். ஒல்ட்கொட், அன்னிபேசன்ட் ஆகியோர் இதற்கு உதவினார்கள். இவர்களின் நடவடிக்கைகள்பற்றி நாம் அதிகம் புகழ முடியாதென்ற போதிலும் ஆக்கிரப்பாளர்களுடன் தொடர்புடைய மத்துக்கு வரும் எந்த எதிர்ப்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய வாத உணர்வுகளை எழுப்பி விடுவது திண்ணம் என்ற காரணத்தால் அவர்களுடைய வேலை முற்போக்கு அம்சம் உடையது.

அந்நியப் படையெடுப்பாளர்கள், பாடசாலைகள், கிறிஸ்தவக் கோவில்கள் ஆகியவற்றின் மூலம் தமது கலாசார ஆக்கிரமிப்புக் கொள்கையை நடத்தியது போலவே புத்த மத மறுமலர்ச்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அதே முறைகளை எதிர்த்தாக்குதலுக்குப் பாவித்தார்கள். புத்த மத விருத்திச் சங்கம், இந்து மதக் கல்விச் சபை ஆகிய நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. இந்த நிறுவனங்கள் புத்த மத, இந்து மதப் பாடசாலைகளை ஸ்தாபித்து கிறிஸ்தவ மிஷனரிமாருடன் போட்டி போடவும், தவிர்க்க முடியாதவாறு தேசிய உணர்வு உடைய கல்வி ஒன்றை அளிக்கவும் ஆரம்பித்தன. இவ்வாறு ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு அடிப்படை இடப்பட்டது. இதிலிருந்து புத்த மத இந்து மத மறுமலர்ச்சி இயக்கத்தில் மக்களின் ஆரம்பகால ஏகாதிபத்திய எதிர்ப்பு விருப்பங்களும் தமது தேசியப் பெருமையை நிலைநிறுத்தும் விருப்பமும் இருப்பதைக் காணலாம்.

அதே வேளையில் அதாவது புத்த மத மறுமலர்ச்சி இயக்கத்தின் போது, இலங்கையில் மது ஒழிப்பு இயக்கம் ஒன்றும் எழுந்தது. இந்த இயக்கம் பிரிட்டிஷாரின் பார்வையில் பிரிட்டிஷ் எதிர்ப்பு அரசியல் அம்சம் உடையதாக விளங்கியது. பிரிட்டிஷ் அரசாங்கம் சாராய விற்பனையில் ஒரு ஏகபோகத்தை ஸ்தாபித்தது. நாட்டின் உட்புறம் பூராவிலுமுள்ள சிறிய, பெரிய கிராமம் அனைத்திலும் தவறணைகளை ஸ்தாபித்து சாராயத்தை விற்கும் உரிமை: ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டது. பிரிட்டிஷார் சீனாவுக்குள் பலவந்தமாக அபினியைப் புகுத்தியது போல அதே நோக்கத்துடன் தான் இதைச் செய்தார்கள் எனத் தெரிகின்றது. எப்படியென்றாலும் சாராயத் தவறணையை குத்தகைக்குக் கொடுப்பதன் மூலம் பெருந்தொகை பணத்தைச் சேர்த்துக் கொண்ட சிலர் தமது மூலதனத்தைத் தோட்டத் தொழிற் துறைக்கு நகர்த்திய பின் மது ஒழிப்பு இயக்கத்துக்குத் தலைமை தாங்கினார்கள். இவர்களிற் சிலர் முதலாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் பூர்ஷுவாத் தலைமையை அளித்தார்கள்.

பிரிட்டிஷார் பாடசாலை, கிறிஸ்தவக் கோவில் ஆகியவற்றின் மூலம் தமது கலாசார ஆக்கிரமிப்புக் கொள்கையை முன்னடத்திய அதே வேளையில், அடிமைகளை தனது அடிமைத்தனத்துக்கு உடன்படச் செய்யும் நோக்கமுடைய அரசியல் சீர்திருத்தங்களையும் இந்தக் காலனிக்குள் துரிதமாகப் புகுத்தினார்கள். போர்த்துக்கேயரைப் போலல்லாது பிரிட்டிஷாருக்கு நாசூக்கான முறையில் சுரண்டும் கலை தெரியும். இலங்கையை நிர்வகிக்க பிரிட்டிஷாருக்கு உதவி செய்வதில் இலங்கையர்களை இழுத்துக் கொள்ளும் பணியை அவர்கள் ஆரம்பித்தார்கள். பிரிட்டிஷார் உண்மை அதிகாரத்தைத் தமது கரங்களில் வைத்திருந்த அதே வேளையில் அதிகாரம் உண்டு என்ற பிரமையைச் சுதேசிகளுக்குச் சிறிது சிறிதாக அளித்தார்கள். இதற்காக காலத்துக்குக் காலம் பல்வேறு சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. 1831 - 1832 ல் பிரசுரிக்கப்பட்ட கோல்புறுக் - கமெறுன் கமிஷன் அறிக்கையின் சிபாரிசுகளின் பேரில் சட்டசபை, நிர்வாக சபை அகியவற்றின் ஸ்தாபனங்களுடன் இந்தப் போக்கு ஆரம்பித்தது. முதலில், உத்தியோகபூர்வமற்ற அங்கத்தவர்களின் சேர்ப்பு, பின்னர் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டின் அறிமுகம், பின் உத்தியோகபூர்வமற்ற பெரும்பான்மை, இறுதியில் 'டொனமூர் சட்டதிட்டத்தின் கீழ் சர்வஜன வாக்குரிமை, நிர்வாகக் கமிட்டி முறை- பிரிட்டிஷார் ராணுவம், பொது நிர்வாகம், நிதி ஆகியவற்றின் மீதான தமதாட்சியை இறுக்கமாக வைத்திருந்த அதே வேளையில்- பிரிட்டிஷ் கவர்னரின் ரத்துரிமைப் பாதுகாப்பைப் பெற்ற நிலைமையில் இலங்கையர்களுக்குப் பிரிட்டிஷார் அளித்த அதிகாரத்தின் மாயைகளில் இவை சிலவாகும்.

பிரிட்டிஷ் விதிகளின்படி விளையாட்டில் கலந்து கொள்ள விரும்பும் திறமை படைத்த இலங்கையர்களைத் தேடிப் பிடிப்பது பிரிட்டிஷாருக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. ஈ. டபிள்யூ. பெரேரா ஜேம்ஸ் பீரிஸ், பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் போன்றவர்கள் ஒருவர் மாறி ஒருவராக மென்மேலும் கூடுதலான சீர்திருத்தங்களைக் கோரினார்கள். அவர்கள் இடைவிடாது பெட்டிஷன்களை அனுப்பினார்கள். வைட்ஹோலுக்கு அடுத்தடுத்துத் தூதுகோஷ்டிகளில் சென்றார்கள். சீர்திருத்தக் குழு போன்ற சங்கங்களை அமைத்தார்கள். இறுதியில் தமது பிரசார இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த இலங்கைத் தேசிய காங்கிரசை அமைத்தார்கள்.

அவர்கள் எல்லோரும் திறமை வாய்ந்த பூர்ஷுவா சீர்திருத்த வாதிகள். அப்பொழுது நிலவிய சட்டக் கோப்புக்குள் இலங்கையர்களுக்கு நல்ல அந்தஸ்தைப் பெற விரும்பினார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரம் பெறும் பிரச்சினையை அவர்கள் ஒரு போதும் எழுப்பவில்லை. இந்த அர்த்தத்தில் அவர்களை நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களாகக் கருதுவது தவறானது. "இலங்கை பற்றிய இருபதாம் நூற்றாண்டு மனப்பதிவுகள்" என்ற நூலில் (1907 ம் ஆண்டு) அதன் ஆசிரியரான ஈ. டபிள்யூ. பெரேரா கூறியதற்கு அப்பால் அவர்களுடைய அபிலாஷைகள் சென்றதரிது. "பிரிட்டிஷ் ஆட்சியின் நலன்களை மிகுதியும் உணர்ந்துள்ள மிகவும் விசுவாசமான மக்களான இலங்கையர்கள் முழு பிரிட்டிஷ் பிரஜாவுரிமையைப் பெற விரும்புகின்றார்கள். மேலும் சுதந்திரமுடைய சட்டதிட்டம், வெள்ள நிவாரண வேலைகள், தலைவரி ரத்து, ஜன நெருக்கமான மேற்கு - தெற்கு மாவட்டங்களில் இருந்து புனரமைக்கப்பட்ட வாவிப் பிரதேசங்களுக்கு ஒழுங்கான முறையில் குடியேறுதல், கல்விக்கெனக் கூடுதலான பண ஒதுக்கீடு, அரசாங்க சேவையின் உயர் பிரிவுகளில் நாட்டு மக்களுக்குக் கூடுதலான இடம் - இவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் மிகவும் அவசரத் தேவையான சீர்திருத்தங்களில் சிலவாகும். ஒரு நூற்றாண்டு காலம் பிரிட்டிஷ் ராஜரீகம் இலங்கையில் விருத்தி செய்துள்ள உன்னதமான நிர்வாக முறைக்கு இவை சிகரமாக அமையும்."

அண்டைய உப கண்டமான இந்தியாவில் வளர்ந்த தேசிய சுதந்திர இயக்கத்தின் புரட்சிகர இயல்புடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்கை இயக்கத்தின் ஒரு பிரத்தியேக குணம்சம், அதன் முழுக்க முழுக்க சீர்திருத்தவாத இயல்பாகும். இது பெட்டிஷன் எழுதுதல், தூதுகோஷ்டிகளில் செல்லுதல் என்ற குறுகிய எல்லை

களுக்குட்பட்டிருந்தது. பூர்ஷுவா சீர்திருத்தவாதத் தலைவர் எல ரும் - ஈ. டபிள்யு. பெரேரா முதல் டி. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா வரை - தேசிய சுதந்திரக் கோரிக்கையை ஒரு போதும் முன் வைக்கவில்லை. இலங்கையில் தேசிய சுதந்திரக் கோஷம் முதலில் இடதுசாரி இயக்கத்தினுல் தான் எழுப்பப்பட்டது.

ஜேர்மன் பீரங்கிப் படகான எம்டன் இலங்கைக் கரையோ ரத்துக்கு வந்தது என்ற செய்தியினுல் ஏற்பட்ட பரபரப்புத் தவிர முதலாம் உலக யுத்தம் இலங்கையை அவ்வளவு பாதிக்கவில்லை. இந்தக் காலத்தில் இலங்கையைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமான சம்பவம் துக்ககரமான 1915 இனக் கலவரங்களாகும். இந்தக் கலவரங்களுக்கான உடனடிக் காரணம், கண்டி - கம்பளைப் பிரதேசத்தில் புத்த மதத்தவர்களுக்கும் கரையோர சோனகர்களுக் கும் இடையில் ஏற்பட்ட ஒரு மதப் பிணக்காகும்.

சோனகர்கள் புத்த பெரஹரா ஒன்று தமது பள்ளி வாசலைக் கடந்து செல்ல அனுமதிக்காததால் இப் பிணக்கு எழுந்தது. புத்த மதத்தவர்கள் கண்டி ஒப்பந்தம், தமக்கு அளித்துள்ளதாகக் கூறப் படும் உரிமைகளை முன் வைத்தார்கள். கண்டி டிஸ்திறிக் கோட் டின் நீதிபதி கலாநிதி போல் ஈ. பிரிஸ் புத்த மதத்தவர்களின் கோரிக்கை சரியானது எனக் கருதினுர். ஆனுல் இரண்டு ஆங்கில நீதவான்களைக் கொண்ட சுப்றிம் கோர்ட் அவருடைய முடிவை மாற்றியது. இவ்வாறு கலவரத்துக்கு தூபமிடப்பட்டது. ஆனுல் இலங்கையிலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள், அரசாங்க எதிர்ப்பானது என்ற பழிப் பெயரைப் பெற்ற, புதிதாகத் தோன்றிய புத்த மத மறுமலர்ச்சி, மது ஒழிப்பு இயக்கத்தின் பங்கு இதிலும் உண்டு எனச் சந்தேகப்பட்டார்கள். அவர்கள் பீதியடைந்து மிகவும் கடு மையான நடவடிக்கைகளை எடுத்தார்கள். மூன்று மாத காலம் நாடு ராணுவச் சட்டத்தின் கீழிருந்தது. பஞ்சாபி துருப்புக்களின் மூலம் சிங்களவர்களுக்கு எதிராக மிருகத்தனமான பலாத்காரம் பாவிக்கப்பட்டது. கொல்லப்பட்டவர்களின் தொகை ஒரு போதும் மதிப்பிடப்படவில்லை. பலர் சிறையிடப்பட்டார்கள்.

கவர்னர் திருப்பி அழைக்கப்பட்டார். ஆனுல் இதில் சிங்கள வர் பட்ட கஷ்டங்கள் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு களை ஆழமாக்கத் துணை புரிந்தன. அந்நிய ஆட்சியாளர் மீதான அவர்களுடைய பகைமையையும் ஆழமாக்கின. இது சட்டதிட்ட சீர்திருத்தத்துக்கான இயக்கத்தை முன்தள்ளிவிட்டது. ஆனுல் கலகங்களின் போது சிறையிடப்பட்ட சில தலைவர்கள் நன்மை அடைந்தார்கள். இருபது ஆண்டுகள் கழிவதற்கு முன் அவர்கள் தம்மைச் சிறைக்கனுப்பிய அதே ஏகாதிபத்தியத்தின் விசுவாசமான அடிவருடிகளாக, இலங்கையின் அரசியல் தலைவர்கள் ஆகினுர்கள்.

மூன்றாவது அத்தியாயம்

# முதலாம் உலக யுத்தமும் பின்னரும்

முதலாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் உலகில், குறிப்பாக முந்திய இருநூறு ஆண்டுகளுக்கு மேலான காலம் அந்நிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழிருந்த ஆசியாவில், பல மாற்றங்கள் ஏற்பட்டன. மகத்தான அக்டோபர் புரட்சியின் வேட்டுச் சத்தங்கள் பல ஆசிய நாடுகளில் எதிரொலித்தன. உலகில் மிகப் பழையதோர் நாகரிகத்தின் இருப்பிடமும், உலகில் மிகவும் ஜனத்தொகை கூடிய நாடுமான மகத்தான சீனதேசத்தில் புரட்சிச் சுவாலைகள் மூண்டன. ஒல்லாந்தரின் ஆதிக்கத்துக்கு எதிரான கிளர்ச்சி ஒன்று இந்தோனேசியாவில் ஏற்பட்டுத் தோல்வி கண்டது. பூரண சுயராஜ்யத்துக்கான இயக்கம் இந்தியாவில் பெருவேகம் பெற்றது. இலங்கை இவற்றால் பாதிக்கப்படாமலில்லை.

தொழிலாளர்களின் லட்சியத்துக்காக வாதாடும் நபர்களும், ஸ்தாபனங்களும் தோன்றின. பொன்னம்பலம் அருணாசலம், சி.எச். இசட். பர்ணாந்து, மார்ட்டினஸ் பெரேரா ஆகியோர் 1919ல் தொழிலாளர் நலனுக்கான லீக்கை உருவாக்கினார்கள். இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் 1920ல் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அவற்றின் செல்வாக்கு எல்லைக்குட்பட்டதாகவே இருந்தது. இக்காலத்தில் தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடிகளில் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள் ஏ.ஈ. குணசிங்காவும், நடேச ஐயரும் ஆவர். ஏ.ஈ.குணசிங்கா நகரத் தொழிலாளர்களின் நலனுக்காகவும், நடேச ஐயர் தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவும் நின்றார்கள். இவர்கள் இருவரும் சற்றுக்காலம் ஒன்றாக வேலை செய்தனர். ஏ.ஈ. குணசிங்காவும் விக்டர் கொரியாவும் பிறரும் 1922 செப்டம்பரில் இலங்கைத் தொழிலாளர் யூனியனை அமைத்தனர். இலங்கையில் 20,000 தொழிலாளர்கள் கலந்து கொண்ட முதலாவது பொது வேலை நிறுத்தம் 1923 ல் நடைபெற்றது. இந்த வேலை நிறுத்தத்தினால் குணசிங்கா தொழிலாளர் தலைவர் என்ற அந்தஸ்த்தைப் பெற்றார். முன்னர் ஒரு பாடசாலை ஆசிரியராக இருந்த ஏ.ஈ. குணசிங்கா பிரிட்டிஷ் ஸ்தாபனங்களை விசுவாசமாகப் பின்பற்றி பிரிட்டிஷ் தொழிற்சங்க காங்கிரஸ், பிரிட்டிஷ் தொழிற் கட்சி ஆகியவற்றைப் போல தனது அகில இலங்கைத் தொழிற் சங்கக் காங்கிரசையும் அதன் சக பாடியான தொழிற் கட்சியையும் ஸ்தாபித்தார். பிரிட்டிஷ் தொழிற் சங்கக் காங்கிரஸ், பிரிட்டிஷ்

தொழிற் கட்சி ஆகியவற்றின் கூட்டங்களில் ஏ.ஈ. குணசிங்கா வால்த் தொப்பியும் மேல் நாட்டு அங்கியும் அணிந்து கலந்து கொண்டார். அவருடைய செயல் அடிமை, எஜமானை சிறந்த முறையில் காப்பி அடிக்கும் சம்பவமாகும். அவருடைய இபக்கத்தில் சீர்திருத்தவாதமும் அதன் பூர்ஷுவா எல்லைகளும் இருந்த போதும் (அவர் இறுதியில் யு.என்.பி.யின் மடியில் விழுந்து முதலாளிகளின் மிகப் பெரிய நண்பன் ஆகினர்.) அந்த நாட்களில் குணசிங்காவைப் பிரிட்டிஷார் பயங்கரமான போல்ஷிவிக் எனக் கருதினர்கள்!

பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் 1915 கலகங்களின் போது இலங்கையில் செய்த மிதமிஞ்சிய அட்டூழியங்கள் காரணமாக சீர்திருத்த இயக்கம் பூர்ஷுவா சீர்திருத்த வாத எல்லைகளுக்குள் கண்டிப்பாக நின்று கொண்ட போதும், ஒரு உந்துதலைப் பெற்றது. இந்தியாவில் வெகுஜன சிவில் சட்ட மறுப்பு இயக்கங்கள் சுதந்திரக் கோரிக்கைக்கு மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது போல் இந்த இயக்கம் மக்கள் ஆதரவைப் பெறவுமில்லை. இதில் வெகு ஜனங்கள் கலந்து கொள்ளவும் இல்லை. இந்தியாவைப் போலல்லாது, ஏகாதிபத்தியத்தின் இடத்தை எடுக்க விரும்பும் தேசிய பூர்ஷுவா வர்க்கம் ஒன்று இலங்கையில் இன்னும் தோன்றவில்லை என்பது இந்த வித்தியாசத்துக்கான காரணமாகும்.

1927 ல் இலங்கைக்குத் தேவையான சீர்திருத்தங்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்கென பிரிட்டிஷ் அரசாங்கம் டொனமூர் கமிஷனை நியமித்தது. பிரான்ஸ், சுவிற்சிலாந்து போன்ற சில முன்னேறிய ஐரோப்பிய நாடுகளின் பெண்களுக்கு இன்னும் வாக்குரிமை கூடக் கிடைத்திராத தருணத்தில் இலங்கைக்குச் சர்வசன வாக்குரிமை வழங்கியமை டொனமூர் அரசியற் சட்ட திட்டத்தின் முக்கியத்துவமாகும். ஏ.ஈ. குணசிங்காவையும் அவருடைய தொழிற் கட்சியையும் தவிர வேறு எந்த இலங்கையரும் அதைக் கோரியதில்லை.

பிரிட்டிஷார் இந்தக் கட்டத்தில் இலங்கை பிரிட்டிஷ் காலனியாக இருந்த ஒரு வேளையில் - ஏன் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கினர்கள்? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு (தொழிற் கட்சியாயினும் சரி, கொன்சர்வேட்டிவ் கட்சியாயினும் சரி) நேர்மையான நோக்கங்கள் இருந்தன என்று கூறுவது விழல் பேசுவதாகும். சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டமை ஒரு முற்போக்கான நடவடிக்கை, அது பின்னர் ஏற்பட்ட மற்றச் சீர்திருத்தங்களுக்கு வழி கோலியது என்று சிலர் கூறுகின்றார்கள். இது சந்தேகத்துக்கு உரிய கூற்று.

பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் சீர்குலைக்கவும், சாட்டிஸ இயக்க நாட்களில் புரட்சிப் பாதையிலிருந்து அதைத் திசைதிருப்பிவிடவும் பிரிட்டிஷ் பூர்ஷுவா வர்க்கம் ஏற்கனவே தேர்தல்களையும் சர்வசன வாக்குரிமையையும் பாவித்திருந்தது. வளர்ந்து கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் ஐக்கியத்தைப் பிளவுபடுத்தி தவறான வழியில் இழுத்து விடவும், வெகுஜனங்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கவும், பாராளுமன்ற மூலம் சமாதான மாற்றத்தின் சாத்தியப்பாடு பற்றிய பிரமையைப் பரப்பவும், ஆயுதப் படைகள் என்ற அதிகாரத்தின் உண்மையான ஆசனங்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பி விடவும், இந்த ஆயுதப் போராட்டத்தின் இடத்தில் பேச்சுப் போராட்டத்தை வைக்கும் முயற்சியே இது.

இலங்கையில் தேர்தல்கள் சர்வசன வாக்குரிமையின்படி நடைபெற்று வரும் கடந்த நாற்பது ஆண்டுகளைத் திரும்பி நோக்குவோமானால், பிரிட்டிஷார் தாம் எதிர்பார்த்ததிலும் பார்க்கக் கூடுதலான வெற்றி கண்டுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். டொனமூர் யுகத்துடன் தான் வகுப்புவாத அரசியல் அதன் அசிங்கமான தலையை நீட்டியது என்பது தற்செயலானதல்ல. 1915 ராணுவச் சட்டத்தின் போது சிறை வைக்கப்பட்ட சிங்களத் தலைவர்களுக்காக லண்டனில் பிரிட்டிஷ் அதிகார வட்டாரங்களுடன் வாதாடும் முயற்சியில் நீர்மூழ்கிகள் நிறைந்த கடல்களின் ஆபத்தைப் பொருட்படுத்தாதவரும், சிங்கள வாக்காளர்கள் பெரும்பான்மையாக விளங்கும் சட்டசபையில் கல்வி பெற்ற இலங்கையரின் ஆசனத்துக்கான தேர்தல்களில் முறையே சேர் மார்க்கஸ் பெர்ணாந்துவையும், எஸ். டபிள்யூ. ஐயவர்த்தனவையும் இரண்டு தடவை தோற்கடித்தவருமான "வணக்கத்துக்குரிய நைட்"டான பொன்னம்பலம் இராமநாதன், தானும் அவருடைய சகோதரனை அருணாசலமும் ஸ்தாபித்த தேசிய காங்கிரசிலிருந்து இந்த வேளையில் ராஜினாமாச் செய்தார். கபடத்தனமான ஏகாதிபத்திய வல்லரசு ஒன்று வழங்கிய அதிகாரப் பதவிகளை எப்படிப் பங்குபோடுவது என்பது பற்றி சிங்கள, தமிழ்த் தலைவர்கள் உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைத் தலைவர்கள் மத்தியில் பிணக்கை ஏற்படுத்தும் மாயப் பொருள் ஒன்றை வீசி எறிந்துவிட்டது.

மேற்கு மாகாணத்தில் தனியான தமிழ் ஆசனம் ஒன்று வேண்டுமென இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்ததின் பேரில் ஸ்தூலமாக இப் பிணக்கு ஏற்பட்டது. அது ஒரு வகுப்புவாதக் கோரிக்கை என்ற காரணத்தால் சிங்களத் தலைவர்கள் இதனை நிராகரித்தனர். சிங்களத் தலைவர்கள் பிரதேச அடிப்படை

யிலான பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கையை முன்வைத்து இது வகுப்புவாதம் அற்றது என்று கூறினார்கள். உண்மையில் இரண்டு அணுகுமுறைகளும் வேறுபட்ட அளவில் வகுப்புவாதமானவை. பெரும்பான்மையினரைப் பொறுத்தவரை, பிரதேச ரீதியிலான பிரதிநிதித்துவத்தினால் அவர்களுடைய பெருந்தொகையான உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப் படுவார்கள். சிறுபான்மையினரைப் பொறுத்தவரை, இன ரீதியிலான பிரதிநிதித்துவத்தினால் அவர்களுடைய இனத்திலிருந்து கூடுதலான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த இரண்டு நிலைப்பாடுகளினதும் சாதகங்களை மதிப்பிடுவது சாத்தியமில்லை. பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் ஒற்றுமைப்பட்டு பொது எதிரிக்கும் அடக்குமுறையாளனுக்கும் எதிராக ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பது இரு பகுதியினருக்கும் நன்மை பயக்கும் என்று தான் கூற முடியும். ஆனால் இந்த அடிப்படை விவேகம் இருக்கவில்லை. இதனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிதான் வெற்றி கண்டான். சாதி, இன, மத அடிப்படையில் இலங்கையர்கள் இலங்கையர்களுக்கு எதிராகச் சண்டையிட்டுக் கொண்டிருந்த அதே வேளையில் அந்நிய ஏகாதிபத்தியவாதி எல்லோருக்கும் மேல் குதிரை விட்டான். அதேவேளையில் இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான ஏகாதிபத்தியக் கட்டுப்பாடு ஒரு வடிவத்தில் அல்லது இன்னொரு வடிவத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்ந்து இருந்தது.

ஆனால் டொனமூர் அரசியற் சட்டதிட்டம் எந்த ஆட்சேபனையுமின்றி, ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூற முடியாது. அண்டை உப கண்டத்தில் பெருக்கெடுத்திருந்த புரட்சிகரமான தேசிய சுதந்திர இயக்கத்தின் செல்வாக்கில், டொனமூர் சட்டதிட்டம் உண்மைச் சுதந்திரத்திலும் மிகவும் குறைவானதாக இருக்கின்றது என்று விமர்சிக்கும் இயக்கம் ஒன்று எழுந்தது. வாலிபர் காங்கிரஸ் என்று கூறப்படும் ஸ்தாபனம் ஒன்று தோன்றியது. புதிய அரசியற் சட்டத்தின் கீழ் நடத்தப்படவிருந்த தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி அது அறைகூவல் விடுத்தது. தெற்கில் இருந்தும் ஆதரவு கிடைக்குமென வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும் வட மாகாணத்திற் தான் இந்த இயக்கம் வெற்றி கண்டது. வட மாகாண நாலு ஆசனங்களுக்கான தேர்தல்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. வடமாகாணத்தில் தமிழர்கள் முதலாவது சட்டசபையில் நாலு ஆண்டுகளாக பிரதிநிதித்துவம் இன்றி இருந்தனர். வடக்கில் தேர்தல் பகிஷ்கரிப்பை ஒழுங்குபடுத்துவதில் வாலிபர் காங்கிரஸ் இந்தளவுக்கு வெற்றி பெற்றமைக்குக் முற்றிலும் வித்தியாசமானதோர் காரணத்துக்காக, அதாவது டொனமூர் கமிஷன் தமிழர்களுக்கு இன ரீதியிலான பிரதிநிதித்துவத்துக்கான கோரிக்

கையை நிராகரித்தபடியால் கூடுதலான பழமைவாதப் பிரகிருதிகளின் ஆதரவைப் பெற்றதாகும் - என்று சிலர் கூறியுள்ளனர். இதில் ஓரளவு உண்மை இருக்கலாம்.

இக்காலத்தில் வாலிபர் காங்கிரசிற்கு நாட்டின் ஒரு பகுதியில் மாத்திரம் ஆதரவு இருந்த போதும் அது ஒரு முற்போக்கான, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான, வகுப்புவாதமற்ற ஸ்தாபனமாக இருந்தது. ஆனால் வடக்கில் ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவருடைய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் அவிழ்த்துவிட்ட வகுப்புவாத அரசியலில் வாலிபர் காங்கிரஸ் அமிழ்ந்தியது. முன்னரே சுட்டிக் காட்டியவாறு, பிரிட்டிஷார் கைமாற்றத் தயாராயிருந்த கூறப்படும் அதிகாரத்தை எவ்வாறு பங்கிடுவது என்பது பற்றி சிங்கள தமிழ்த் தலைவர்கள் உடன்பாடு காண முடியாத காரணத்தால் இலங்கை அரசியலில் வகுப்புவாதம் தோன்றியது. பிரிட்டிஷார் ஒரு சமயத்தில் ஒரு தரப்பை ஆதரித்தும் மறு சமயத்தில் மற்றத் தரப்பை ஆதரித்தும் இந்த நிலைமையைத் திறமையாகப் பயன்படுத்தி இலங்கையரை இறுதிவரை பிளவுபடுத்தி வைத்தனர். டொனமூர் அரசியலமைப்பின் நகலில் ஒரு சட்டசபையையும் (State Council) நிர்வாகக் கமிட்டி அமைப்பொன்றும் இருந்தன. இதில் அங்கத்தவர்களுக்குச் சட்டமியற்றும் விவகாரங்களில் கூடுதலான பங்கு இருந்தது. அமைச்சர்களைப் பொறுத்தும் அமைச்சரவை கூட்டுப் பொறுப்புப் போன்ற விஷயங்கள் அவர்களைக்கட்டுப் படுத்தவில்லை. அமைச்சரவைத் தலைவருக்கு இன்றைய பிரதமருக்கு இருக்கும் ஏறக்குறைய எதேச்சாதிகாரமான அதிகாரங்கள் இருக்கவில்லை. அமைச்சரவையில் நிதிக் காரியதரிசி, சட்டக் காரியதரிசி, பிரகடன காரியதரிசி ஆகிய மூன்று அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டார்கள்; தெரிவு செய்யப்படவில்லை. பிரிட்டிஷாரின் நலன்களை நன்கு பாதுகாப்பதற்கு இது உத்தரவாதமாக இருந்தது. ஏ. டபிள்யூ. பெரேரா இவர்களைச் சாதாரண உடையணிந்த மூன்று பொலீஸ்காரர் என்று சரியாக அழைத்தார். இந்த மூவரையும் நீக்க முடியாது. அவர்களை நியமித்த கவர்னர்களுக்குத் தான் அவர்கள் பொறுப்பானவர்களாக இருந்தார்கள். இயல்பாகவே நியமன அரசு அதிகாரிகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

பிரேரிக்கப்படும் எந்தச் சீர்திருத்தத்தைப் பொறுத்தும் அமைச்சரவையில் ஒத்த கருத்து ஏற்பட்டால்தான் மேற்கொண்டு எந்தச் சீர்திருத்தத்தையும் பரிசீலனைக்கு எடுக்க முடியும் என்று பிரிட்டிஷார் தெளிவாக்கி இருந்தார்கள். இவ்வாறு பிரிட்டிஷாரின் ஐக்கியத்துக்கு ஒரு உயர் நிபந்தனை விதித்து நிலைமையை மோசமாக்கினார்கள். சிங்கள பூர்ஷுவா வர்க்கத் தலைவர்களில் மிகவும் குள்ள

விவேகமுடையவரும் மிகவும் பிற்போக்கானவருமான டி. எஸ். சேனநாயக்கா சிங்கள - தமிழ்த் தலைவர்களின் ஐக்கியத்தின் அடிப்படையில் அல்லாது சர்வ சிங்கள அமைச்சரவை ஒன்றை உருவாக்குவதன் மூலம் ஒத்த கருத்தை ஏற்படுத்த முயற்சித்தார். 1936 ல் இரண்டாவது சட்ட சபைத் தேர்தலுக்குப் பின்னர் சர்வ சிங்கள அமைச்சர்களின் சபை ஒன்றின் தெரிவை உத்தரவாதம் செய்வதற்கான சூத்திரத்தை உருவாக்கியவர் ஒரு தமிழர் ஆவார். அவர் அப்பொழுது கொழும்புப் பல்கலைக் கழகக் கல்லூரியின் கணிதவியல் பேராசிரியராக இருந்தவரும் சேனநாயக்காவின் நண்பனும் ஆலோசகருமான பிரச்சினைக்குரிய சி. சுந்தரலிங்கமே ஆவார்.

சர்வ சிங்கள அமைச்சர்கள் சபையின் ஸ்தாபகம் வகுப்புவாத வேற்றுமைகளை மேலும் கூர்மையாக்கத் தான் துணைபுரிந்தது. ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் கீழ் தமிழ்க் காங்கிரசிஸ் ன்தார்பிக்கப்பட்டமை 50-50க்கான (அல்லது அவர் அழைத்தவாறு சரி சமப் பிரதிநிதித்துவத்துக்கான) இயக்கம் ஆகியவற்றுக்கேற்ப தெற்கில் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் கீழ் சிங்கள மகா சபை ஸ்தாபிக்கப்பட்டது.

சிங்கள வகுப்புவாதம் தமிழ் வகுப்புவாதத்தால் வளர்ந்தது. அது போலவே தமிழ் வகுப்புவாதம் சிங்கள வகுப்புவாதத்தால் வளர்ந்தது. சிங்களவர்களின் ஐக்கியத்தை ஏற்படுத்தினுற் தான் சகல இனங்களினதும் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்பது பண்டாரநாயக்காவின் வாதமாகும். இந்த வாதத்தை ஆர். ஜீ சேனநாயக்கா பின்னர் மீண்டும் மீண்டும் கூறினுர். ஆனல் பதிலளிக்கப்பட வேண்டிய கேள்வி ஒன்றிருக்கின்றது. எதற்காக ஐக்கியம்? வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளனை வெளியேற்றுவதற்கான ஐக்கியம் என்ருல் அது ஒடுக்கப்பட்ட இனங்கள் அனைத்தினதும் ஐக்கியமாக இருக்க வேண்டும். ஒரு இனத்தின் ஐக்கியமாக மாத்திரம் இருக்க முடியாது, மாருக தமிழர்களுக்கு எதிராகத் தான அது அமைக்கப்பட்டது என்ருல் சிங்கள மகா சபை ஸ்தாபிக்கப்பட்டதற்குக் காரணம் கூற முடியும். இது தான் விஷயமென்ருல் இது ஒரு வகுப்புவாத நடவடிக்கை, இது பொதுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்கத்திலிருந்து பின்வாங்கும் ஒரு நடவடிக்கை. சிங்களவர் தான் இலங்கைத் தேசிய இனம் என்று காட்ட முயன்று இனரீதியான, மொழிரீதியான சிறுபான்மை இனங்களின் நியாயமான உரிமைகளைப் பொருட் படுத்தாதிருக்கும் இந்தப் போக்கு சகல முதலாளித்துவ சிங்கள அரசியல் தலைவர்களினதும் பொதுப் பலவீனமாகும். உண்மையில் இடதுசாரிக் கட்சிகள் தான் ஒரேஒரு வகுப்புவாதமற்ற கட்சிகளாக ஒரு காலத்தில் இருந்தன ஆனல்

லங்கா சமசமாஜ கட்சியும் கொமன் திரிபுவாதக் கும்பலும் 1964-க்குப் பின்னும், மேலும் குறிப்பாக 1970-ல் இருந்து வகுப்பு வாதமற்ற கட்சிகளாக விளங்கவில்லை. யூ. என். பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, அல்லது கொமன் திரிபுவாதக் கட்சி இவற்றில் எந் தக் கட்சியும் தமிழ்ப் பிரதேசங்களில் ஒரு ஆசனத்தைப் பெறு வது இலங்கையர் ஒருவர் சந்திரனில் கால் வைப்பது போல் அரி தானது. இலங்கை அரசியல் எடுத்துள்ள வகுப்புவாதப் போக்கு மிகவும் சோககரமானது என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது. போட்டியிடும் கோஷ்டிகள் ஒவ்வொன்றும் தங்களில் பரஸ்பரம் நம்பிக்கை வைப்பதிலும் பார்க்க ஏகாதிபத்திய எஜ மானனில் கூடுதலான நம்பிக்கை வைத்திருந்தன. இது திரும்பவும் பிரித்தாளும் ஏகாதிபத்தியக் கொள்கையின் வெற்றியாகும். பிரிட்டி ஷாருக்குச் சொந்தமான ''டைம்ஸ் ஒவ் சிலோன்'' அந்த வேளை யில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தையும் அவருடைய 50-50 கூச்ச லையும் முழுதாக ஆதரித்தமை முக்கியத்துவம் வாய்ந்தது. இலே சான வார்த்தைகளிற் கூறின், 100 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சபையில் 50 அங்கத்தவர்கள் சிங்களவர்களாகவும் மிகுதி 50 அங்கத்தவர்கள் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களாக வும் (இலங்கைத் தமிழர்களுக்கு 25, இதர சிறுபான்மையினருக்கு மிகுதி) இருக்கக் கூடிய முறையில் தேர்தற் தொகுதிகள் பிரிக்கப் பட வேண்டும் என்பதே இக் கோரிக்கையாகும். தமிழ்ச் சிறு பான்மையினரே இந்தத் துக்ககரமான மோதலில் இழப்புக்குள் ளாகினர். தமிழ்ச் சிறுபான்மையினருக்குச் சகல விதமான வாக் குறுதிகளையும் அளித்தபின், இறுதியில், இரண்டாம் உலக யுத்தத் தின் முடிவில் நிலவிய வேறுபட்ட நிலைமைகளில் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியவாதிகள் சிங்களப் பெரும்பான்மையினருடன் சமரசம் செய்து கொள்ளத் தீர்மானித்து தமிழர்களைக் கைவிட்டனர். தமிழ்த் தலைவர்கள் தமது சிங்களச் சகோதரர்களுடன் சேர்ந்து ஏகாதிபத்திய எஜமானனுக்கு எதிராக, பொதுக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்! ஆனால் இது இரண்டு சமூகத்தினதும் முதலாளித்துவ வர்க்கத் தலைமையால் ஈடு கொடுக்க முடியாத ராஜரீகமாகும். ஜீ. ஜீ. பொன்னம்பலம், அவருடைய பிற்கால சீடனான எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரின் பெயர்கள், தமிழர்களை அரசியல் வனாந்தரத்திற்குத் திசை திருப்பி இழுத்துச் சென்ற இரண்டு பேர்வழிகளாக சரித் திரத்தில் இடம் பெறும். தமிழர்கள் இன்னும் இந்த அரசியல் வனாந்திரத்தில் வழி தெரியாது திகைக்கிறார்கள். இப்படிக் கூறும் போது சிங்களவர்கள் மத்தியிலான வகுப்புவாதத் தலைவர்களை குற்றமற்றவர்கள் என்று கூற முயற்சிக்கவில்லை. ஆனால் சிறு

பான்மையாக இருக்கின்ற படியாலும், கூடுதலான இழப்பை அடையக் கூடியவர்கள் என்றபடியாலும் தமிழ்த் தலைவர்கள் மிக வும் பொறுப்புடனும் தூரதிருஷ்டியுடனும் இருந்திருக்க வேண்டும்.

இந்த வேளையில் இன்னொரு வகுப்புவாத அம்சம் தலை தூக்கி யது. 1929-31 உலகப் பொருளாதார நெருக்கடியின் எதிரொலி கள் இலங்கையிலும் ஏற்பட்டன. ரப்பர் விலைவாசிகள் மிகவும் குறைந்தன. பலர் செல்வங்களை இழந்தார்கள். முதற் தடவை யாக, சிங்களவர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் கடு மையான பிரச்சினையாகியது. வேலையற்ற சிங்களவர்கள் முழுவேலை உத்தரவாதம் பெற்ற தோட்டங்களிலுள்ள இந்தியத் தொழிலா ளர்களைப் பொறாமையுடன் பார்த்தார்கள். இந்த நிலைமையைப் பயன்படுத்தும் பயங்கரமான சாத்தியப்பாடுகளை முதலில் கண்ட வர் ஏ. ஈ. குணசிங்க ஆவார். அவர் ராட்சத உருவம் எடுத்த இந்திய எதிர்ப்புப் பிரசாரம் ஒன்றைத் தொடக்கி வைத்தார். இந்தியத் தொழிலாளர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண் டும் என்று அவர் கோரினார். இலங்கை-இந்தியர் பிரச்சினை என்று அழைக்கப்படும் பிரச்சினை தோன்றி விட்டது. இலங்கையில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று, இரண்டா வது சட்ட சபையில் விவாதித்து அங்கீகரிக்கப்பட்டது. அந்த வேளை யில் சட்டசபையில் இருந்த சமசமாஜ இரட்டையர்களான என். எம். பெரேராவும் பிலிப் குணவர்தனவும், தொழிலாளி வர்க்கத் துக்குத் தேசிய எல்லைகள் கிடையாது என்ற அவர்களுடைய கட்சியின் உத்தியோக பூர்வமான நிலைமையைப் பொருட்படுத்தா மல், இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை கவனிக் கத் தக்கது. இந்திய-எதிர்ப்பு, இலங்கை அரசியலில் ஒரு முக்கிய அம்சமாகி விட்டது. இதனை டி. எஸ். சேனநாயக்க, யுத்தத்துக் குப் பிந்திய காலத்தில் இடதுசாரி இயக்கத்தைத் தாக்குவதற்கு ஒரு வசதியான ஆயுதமாகப் பாவித்தார்.

இரண்டாம் உலக யுத்தத்துக்கு முந்திய காலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ், அரசாங்கம் ஒன்றை அமைக்க உடன்பட்ட போது பண்டித நேரு இலங்கை-இந்தியர் பிரச்சினையைத் தீர்க் கும் முயற்சியில் 1940-ல் இலங்கை வந்தார். ஆனால் அவரால் தீர்க்க முடியவில்லை. இலங்கையை விட்டுச் செல்வதற்கு முன், இலங்கையிலுள்ள இந்தியர் சமூகத்தை இலங்கை-இந்தியர் காங் கிரசில் ஸ்தாபனப் படும்படி நேரு அவர்களுக்குப் புத்திமதி கூறி னார். இது ஒரு மிகவும் பிற்போக்கான, மிகவும் கண்டிக்கத்தக்க புத்திமதியாகும். இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் தமது

சொந்த - தனியான ஸ்தாபனங்களை அமைக்கும்படி இவ்வாறு தவறான வழியில் இழுத்துச் செல்லப்பட்டு இலங்கையின் இடதுசாரி, முற்போக்கு இயக்கத்தின் பிரதான ஓட்டத்திலிருந்து தம்மைத் துண்டித்திருக்காவிட்டால் அவர்கள் சேனநாயக்காவின் சூழ்ச்சிகளுக்கு இலகுவில் ஆளாகியிருக்க மாட்டார்கள். சிங்களத் தொழிலாளர்கள்-விவசாயிகளிடமிருந்து அவர்களைப் பிரித்து வைத்துத் தனிமைப் படுத்துவதற்கான அவருடைய முயற்சிகளுக்குப் பலியாகியிருக்க மாட்டார்கள். இது ஒரு பெரிய சோக சம்பவம். அதன் விசாலத்தையும் அளவையும் இன்னும் யாரும் சரியாக மதிப்பிடவில்லை.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பத்து லட்சத்துக்கு மேலான மக்கள் சம்பந்தப்பட்டது என்பதால் அல்ல, அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தில் பெருந்தொகையாக அமைகின்றனர், மேலும் அவர்கள் இன்றையஇலங்கையின் செழிப்புக்குப் பொறுப்பான தொழிலில் ஈடுபடுவோர் என்ற காரணத்தால்தான் இலங்கை இந்தியர் பிரச்சினை முக்கியத்துவம் பெறுகின்றது. இடதுசாரி இயக்கம் இதனை அப்படிப் பார்க்காத போதிலும் டி. எஸ். சேனநாயக்கா அதனைச் சரியாக, ஒரு தேசிய இனப் பிரச்சினையாக அல்ல, ஒரு வர்க்கப் பிரச்சினையாகப் பார்த்தார். இந்த இந்திய வம்சாவளித் தோட்டத்தொழிலாளர்கள் பின்னர் புரட்சிகர சக்திகளாக வளரக் கூடியவர்கள், ஆகவே அவருடைய எதிரிகள் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

1947 பாராளுமன்றத் தேர்தல்களில் தமது ஸ்தாபனமான இலங்கை இந்தியர் காங்கிரஸ் மூலம் இந்த தொழிலாளர்கள் ஏழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் யூ. என். பி. எதிர்ப்பாளர்களாக இருந்து பெருந்தொகையான எதிர்ப்பு அபேட்சகர்கள் வெற்றி பெறுவதற்குத் துணைபுரிந்தார்கள். 1947 பொதுத் தேர்தல்களுக்குச் சற்றுப் பின்னர் கண்டியில் நடைபெற்ற உபதேர்தலில் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் இந்திய வாக்குகள் யூ. என். பி. அபேட்சகரின் தோல்வியையும் திரு. ரி. பி. இலங்கரத்னவின் வெற்றியையும் ஏற்படுத்திய போது நாடகத்தின் இறுதிக் கட்டம் நடைபெற்றது என்று கூற வேண்டும். டி. எஸ். சேனநாயக்கா மீண்டும் இது நடைபெறக் கூடாது என்று சத்தியம் செய்து கொண்டார்.

1948ல் அவர் பிரஜாவுரிமைச் சட்டங்களைப் புகுத்தினார். அவை இலங்கைப் பிரஜையாக விரும்பிய இந்திய, பாகிஸ்தான் வம்சாவளி மக்கள் மீது கடுமையான சோதனைகளை விதித்தது. இந்தச் சோதனைகள் வகுக்கப்பட்ட விதத்தில் ஒரு சிலர் தான்

சித்தி எய்த முடியும். அதே வேளையில் பிரஜைகளுக்குத் தான் வாக்களிக்கும் உரிமை உண்டு எனவும் வகுக்கப்பட்டது. ஒரே அடியில் இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் தமது பிரஜாவுரிமை, வாக்குரிமை இரண்டையும் இழந்தார்கள்; நாடற்றவர்கள் என்ற மட்டத்துக்குத் தள்ளிவிடப்பட்டார்கள். அவர்கள் இலங்கைப் பிரஜைகளுமல்ல இந்தியப் பிரஜைகளுமல்ல என்ற நிலை ஏற்பட்டது. அடையாள சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்துவதைத் தவிர இலங்கை-இந்தியர் காங்கிரஸ் எந்தவகைப் பயன்தரும் நடவடிக்கையிலும் இறங்கவில்லை. எக்காலத்திற்கும் வெட்கம் தரும் முறையில் இடதுசாரி இயக்கம் ஸ்தம்பித்திருந்தது. டி. எஸ், சேனநாயக்க பிற்போக்கு சக்திகளின் சார்பில் ரத்தம் சிந்தாத வெற்றி ஒன்றைப் பெற்றுவிட்டார்.

சற்றுப் பின் சென்று பார்ப்போம். இரண்டு யுத்தங்களுக்கு இடையிலான காலத்தில் மாக்சிஸக் கருத்துக்கள் இலங்கையில் பரவின. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் படித்தவர்களும் ரஷ்யாவில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியால் புத்தூக்கம் பெற்ற மாக்ஸிஸத்துடன் அங்கு தொடர்பு கொண்டவர்களுமான மாணவர்கள் இலங்கைக்கு மாக்ஸிஸத்தைக் கொண்டு வந்தார்கள். மாக்ஸிஸக் கருத்துக்களால் ஏற்பட்ட ஊக்கத்தில் 1934-ம் ஆண்டின் சூரிய மல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தேசியவாதிகள், ஏகாதிபத்திய-எதிர்ப்பாளர்கள், சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் ஆகியோரின் நெருக்கமற்ற கூட்டொன்று இதனால் ஏற்பட்டது. நவம்பர் 11 யுத்த நிறுத்த தினத்தில் பொப்பி விற்பது ஒரு பகிரங்கமான ஏகாதிபத்திய சார்பு நடவடிக்கையாகும். ஆகவே சூரிய மல் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அத்தினத்தில் ''சூரிய மல்''களை விற்பதன் மூலம் இதற்கெதிரான இயக்கம் ஒன்றை ஒழுங்குபடுத்தினார்கள். இந்த விற்பனைகள் இரண்டாம் உலக யுத்தத்தின் ஆரம்ப ஆண்டுகள் வரை ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வந்தன.

இவ் வேளையில் 1935-ல் லங்கா சமசமாஜக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இது இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது இடதுசாரிக் கட்சியாகும். இதன் பெரும்பான்மைத் தலைவர்கள் வெளிநாடுகளில் பல்கலைக் கழகப் படிப்பை முடித்தபின் நாட்டுக்குத் திரும்பியவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் முன்னேறிய தீவிரவாதக் கருத்துக்களைக் கொண்டிருந்தனர். பலர் தாம் வெளிநாடுகளில் இருந்தபோது மாக்ஸிஸத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கூறினார்கள். இவர்களில் சிலர் மறைந்திருந்த ட்ரொஸ்கியவாதிகள் ஆவர். தலைமையில் மறைந்திருந்த ஒரு கூட்டம் கடு

மையான ட்ரொஸ்கியவாதிகளாக இருந்தனர் என்பதிற் சந்தேகமில்லை. இது, அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றை ஸ்தாபிக்காத காரணத்தை ஒரு வேளை விளக்குகின்றது.

ஆனால் ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சி பெரிய பிரித்தானியக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் நெருக்கமாக ஒத்துழைத்து வேலை செய்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையிலுள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்ய சில தமிழ் ஊழியர்களை அனுப்பி உதவியது. ல. ச. ச. க. சோவியத் யூனியனை ஆதரிக்கவும் செய்தது. அதன் முதலாவது தலைவரான நியாயவாதி கொல்வின் ஆர். டி. சில்வா முதற் சில ஆண்டுகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் சோவியத் யூனியனைப் பெரிதும் பாராட்டினர். இக் காலத்தில் ல. ச. ச. க. ஏகாதிபத்திய-எதிர்ப்பு, சோஷலிஸக் கருத்துக்களை வெகுஜனங்கள் மத்தியில் பிரசாரம் செய்தது. இக்கட்சியின் தலைவர்களில் இருவரான என். எம். பெரேராவும் பிலிப் குணவர்தனவும் இரண்டாவது சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியினரின் கீழ் இருந்தபோது, தொழிலாளர்கள்-விவசாயிகள் அரசாங்கம் ஒன்றை அமைக்கவேண்டும் என அவர்கள் கோரியதும் சகல தொழிற் சங்க வேலையையும் சீர்திருத்தவாத வேலை என்று அவர்கள் கண்டித்ததும் அவர்களுடைய ஒருமுனைவாதப் போக்கைக் காட்டியது. வாஸ்தவத்தில், இந்தக் கனவான்களில் பலர், அவர்கள் தம்மைத் தாமே அழைத்துக் கொண்டதுபோல் எதுவிதத்திலும் புரட்சிவாதிகள் அல்லர். குட்டி பூர்ஷுவாத் தீவிரவாதிகளே ஆவர். அவர்களுடைய ஒருமுனைவாத, அதீத இடதுசாரிக் கோஷங்கள், உண்மையில் அப்பொழுது டி. பி. ஜெயதிலக, டி. எஸ். சேனநாயக்க ஆகியோரின் தலைமையில், இலங்கை முதலாளித்துவ வர்க்க அரசியல் வாதிகள் காட்டிய அடிமைத்தனமான, முற்றிலும் ஏகாதிபத்திய சார்பு மனப்போக்குக்கு எதிரான எதிரொலிப்பேயாகும். முதலாளித்துவ வர்க்கத்தின் மத்தியில் ஏகாதிபத்திய-எதிர்ப்புப் பிரிவொன்று இலங்கையில் இல்லாததால் ஏற்பட்ட வெற்றிடத்தை அவர்கள் நிரப்பினுர்கள். அவர்கள் இலங்கையின் நேருக்களும் போஸ்களும் ஆவர். அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸின் இடதுசாரியை ஒத்தவர்கள். இந்திய தேசிய காங்கிரஸின் இடதுசாரியில் ஒரு பொறி பறக்கும் பிரமுகரான கமலாதேவி சட்டோபாத்யாய, ல. ச. ச. க. கட்சியின் விருந்தாளியாக இலங்கைக்கு வருகை தந்தார். நேரு 1940ல் இலங்கை வந்தபோது கூட லங்கா சமசமாஜக் கட்சி காலிமுகத் திடலில் பொதுக்கூட்டம் ஒன்றை

ஒழுங்குபடுத்தியது. இன்று, லங்கா சமசமாஜக் கட்சி தன்னை அம்பலப்படுத்தி நிற்கும் இவ்வேளையில் பின்னோக்கிப் பார்க்கும் போது ல. ச. ச. க. கட்சித் தலைவர்களின் பாத்திரத்தைப் புரிந்து கொள்வது சுலபம். அவர்கள் மார்க்ஸிஸப் புரட்சிவாதிகள் அல்லர். அவர்கள் புரட்சிவாதிகளாக வேடம் போட்டிருக்கும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் ஆவர். என்றாலும் அவர்கள் பெரும்தொகையினரை ஏமாற்றுவதில் வெற்றி கண்டுள்ளனர். சோவியத்-பின்லாந்து யுத்தத்தின்போது, 1939-40ல், ல. ச. ச. கட்சியில் முதலாவது பிளவு ஏற்பட்டது. அவ்வேளையில் ஏகாதிபத்திய வாதிகளும் பிற்போக்கு வாதிகளும் அவிழ்த்துவிட்ட சோவியத் எதிர்ப்பு ஜன்னிப் பிதற்றல் ல. ச. ச. கட்சித் தலைமையின் மறைந்திருந்த ட்ரொஸ்கியவாதத்தை வெளிக்குக் கொணர்ந்தது. அவர்கள் மூன்றாவது கம்யூனிஸ அகிலத்தையும் சோவியத் யூனியனையும் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை மத்தியக் கமிட்டியில் பலவந்தமாக நிறைவேற்றினார்கள். இதனை எதிர்த்தவர்கள் அனைவரும் பல்வேறு சாக்குப்போக்குகளில் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்தப் பிளவு வலிந்து கொண்டுவரப்பட்ட ஆதாரங்களில் நடைபெற்றது. இலங்கையில், இயக்கத்தின் கொள்கைகள் அல்லது தந்திரோபாயங்களுடன் அது எவ்வித தொடர்பும் அற்றது என்பதைச் சுட்டிக்காட்டவேண்டும். இதுமுதல், ல. ச. ச. க. எதிர்ப்புரட்சிகரத் தத்துவமான ட்ரொஸ்கியத்தைத் தான் ஆதரிப்பதாகப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்தது. இலங்கையில் தோன்றிய ட்ரொஸ்கியவாதிகளின் குழுக்கள் அனைத்தும் முடிவில் எதிர்ப்புரட்சிகரத் தன்மையுடையனவாகின என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம். இலங்கையில் ட்ரொஸ்கியத்தின் தந்தை என்று கூறப்படும் பிலிப் குணவர்த்தனவின் அரசியல் வாழ்வு யூ. என். பி.யின் மடியில் முடிவடைந்தது. என். எம். பெரேரா தலைமையிலான ட்ரொஸ்கியவாதிகளின் பிரதான பகுதி தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடம் சரணடைந்து தொழிலாளி வர்க்கத்தின் பகிரங்கத் துரோகிகளாகி சகல புரட்சிகர விஷயங்களையும் கைவிட்டுள்ளது. 1964ல் ல. ச. ச. கட்சியை விட்டு விலகிய கோஷ்டியைச் சேர்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான சமரக் கொடியும், மெறில் பர்னாந்துவும் 1964 டிசெம்பரில் யூ. என். பி. யுடன் சேர்ந்து வாக்களித்து கூட்டரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து நீக்கி 1965ல் யூ. என். பி. மீண்டும் அதிகாரத்துக்கு வர வழிகோலினார்கள். தற்போது நாலாவது அகிலத்தின் உரிமை பெற்ற பிரதிநிதியான பாலா தம்பு அமெரிக்கத் தூதரகம் ஒழுங்குபடுத்திய ஆசிய பவுண்டேஷன் ஸ்கொலர்ஷிப் ஒன்றைப் பெற்று

அமெரிக்கா சென்றார். அதே வேளை அவருடைய மனைவி ஏபேட் பவுண்டேஷன் ஸ்கொலர்ஷிப் ஒன்றைப் பெற்று மேற்கு ஜேர் மனிக்குச் சென்றார்.

வெளியேற்றப்பட்ட கம்யூனிஸ்டுகள் முதலில் ஐக்கிய சோஷ லிசக் கட்சியை அமைத்தனர். அது பின்னர் 1943ல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியாகியது. அநேகமாக உயர் மத்திய வர்க்கங் களைச் சேர்ந்த செல்வந்தரைக் கொண்ட லங்கா சமசமாஜக் கட் சியின் தலைமையிலும் பார்க்க இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை வர்க்க மூலத்தைப் பொறுத்தவரையில் வித்தியாச மானதாக இருந்தபோதும் அது எவ்விதத்திலும் கூடுதல் புரட்சி கரமானதாக இருக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந் தலை வர்கள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி மூலம் மாக்ஸிஸத்தைக் கற்றுக்கொண்டவர்கள்; இங்கிலாந்தில் பல்கலைக் கழகத்தில் படித் துக் கொண்டிருந்தபோது அவர்கள் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி யில் சேர்ந்தார்கள். பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி, குருசோவுக்கு முன்பிருந்தே திரிபுவாதக் கட்சியாகும். இவை காரணமாக இக் கம்யூனிஸ்டுகள் அந்த நாட்டுத் 'தோழர்களி''டம் கற்றுக்கொண்ட திரிபுவாதக் கொள்கைகளையும் வேலை நடைமுறைகளையும் இலங் கைக்குக் கொண்டுவந்தார்கள்.

லங்கா சமசமாஜக் கட்சியின் இடதுசாரி ஒருமுனைவாதத்துக்கு எதிரொலிப்பாக கம்யூனிஸ்ட் கட்சி வலதுசாரி சீர்திருத்தவாத நிலைப்பாடுகளை எடுத்தது. இது கம்யூனிஸ்ட் கட்சியைப் பல கேலிக்கிடமான நிலைகளில் மாட்டி வைத்தது. ஆனால் அதிக காலம் செல்வதற்கு முன் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இரண்டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளு மன்றத் தொங்கு தசைகளாகிச் சீரழிந்தன. லங்கா சமசமாஜக் கட்சி சட்ட சபைக்கு (State Council) முதலில் போட்டியிட்ட போது இச் சபையைத் தமது கொள்கைகளைப் பிரசாரம் செய் வதற்கான மேடையாகப் பாவிக்க விரும்பியது என்று கூறியது உண்மை. ஆனால் இந்த நல்ல விருப்பங்கள் இரண்டு கட்சிகளி னதும் தலைவர்கள், சில பத்து ஆண்டுகளாகக் கடைப்பிடித்த பூர் ஷுவா வர்க்கப் பாராளுமன்ற அரசியலின் ஊழலால் ஐஸ் பெட் டியில் வைக்கப்பட்டன. திரு பண்டாரநாயக்கா 1956 தேர்தலில் பெற்ற பிரமாண்ட வெற்றி மீதமிருந்திருக்கக் கூடிய புரட்சிகர ஆற்றல் அனைத்தையும் அடித்துச் சென்றது. இரண்டு கட்சிகளும் பூரணமாக சொல்லுக்கடங்கிய பாராளுமன்றக் கட்சிகளாயின. இரண்டு கட்சிகளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வலதுசாரியின் 1965 ''மசால வடை லைன்'' போன்ற வகுப்புவாதக் கோஷங்களை

அங்கீகரித்துக் கையேற்குமளவிற்குச் சீரழிந்தன. கடவுளையும் மனிதரையும் ஏமாற்றும் முயற்சியில் இக் கட்சியின் தலைவர்கள் தற்போது மத அனுஷ்டானங்களிற் கலந்து கொள்ள ஆரம்பித்தார்கள். புத்த பகவானின் சிலைக்கு மலர் சாத்தும் பொழுது புகைப்படம் பிடிப்பதில் மகிழ்ச்சி கண்டார்கள்.

இக் கட்சிகளில் ஏற்பட்ட பல்வேறு பிளவுகளையும் அவற்றின் கொள்கை மாற்றங்களையும் விபரமாகக் கூறுவது இப் புத்தகத்தின் நோக்கமல்ல. அதைத் தனியாக எடுத்துக் கூற வேண்டும். ஆனால், 1964 ல் கமயூனிஸ்ட் கட்சியிலுள்ள புரட்சிகர நபர்கள் மார்க்சிசம் - லெனினிசம், மாஓ சேதுங் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியாகத் தம்மை அமைத்துக் கொண்டார்கள் என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியம். அதே வேளையில் கெளமன் திரிபுவாதிகள் லங்கா சமசமாஜக் கட்சியுடன் சேர்ந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிடம் சரணடைந்து இம்மூன்று கட்சிகளினதும் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்தனர்.

முதலாம் உலக யுத்தத்தைப் போலல்லாது இரண்டாம் உலக யுத்தம் இலங்கையில் கூடுதலான நேரடிப் பாதிப்புகளை ஏற்படுத்தியது. முதலாவதாக, ஜப்பான், யுத்தத்தில் கலந்து கொண்டதும் இலங்கை யுத்த நடவடிக்கை அரங்கில் புகுந்தது. அதிர்ஷ்டவசமாக ஒரேயொரு ஜப்பானிய விமானத் தாக்குதலுடன் அது தப்பிக் கொண்டபோதும். இலங்கை மவுண்பேட்டனின் தென் கிழக்காசிய கமாண்டின் தலைமை நிலையமாகியது. இத்தலைமை நிலையம் கண்டியில் அமைந்திருந்தது. காமன் வெல்த் துருப்புக்கள் இலங்கையில் நிறுத்தப்பட்டதும் இலங்கையிலிருந்து நடத்தப்பட்ட யுத்த முயற்சி சம்பந்தமான பிரமாண்ட ஏகாதிபத்திய ராணுவச் செலவினங்களும் செயற்கையான செழிப்பொன்றை உருவாக்கின. வேலையில்லாத் திண்டாட்டம் மறைந்தது. பெரும்பான்மையோருக்கு அநேகமாக யுத்தத்துடன் தொடர்புடைய வேலை கிடைத்தது. தேயிலையும், ரப்பரும் நல்ல விலையில் விற்கப்பட்டன. குறிப்பாக ரப்பருக்கு நல்ல விலை கிடைத்தது. யுத்தம், உடனடி லாபங்கள் ஆகியவற்றுக்காக ரப்பர் அநியாயமாக வடித்தெடுக்கப்படும் அளவிற்கு நல்ல விலை. ஆனால், தான் உற்பத்தி செய்த ரப்பரின் உண்மைப் பெறுமதியை இலங்கை பெறவில்லை. பிரிட்டன் எமது ரப்பரில் பெரும் பகுதியைக் குறிப்பிட்ட விலையில் கொள்வனவு செய்தது. இத்தொகை எதிர் காலத்திற் கொடுப்பதற்காக லண்டனில் எமது கணக்கில் போடப்பட்டது. இது தான் ஸ்டர்லிங் நிலுவை என்று அழைக்கப்படுவது. இதனை டி. எஸ். சேனநாயக்கா

உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காகக் குறுகிய காலத்தில் விரயம் செய்தார்.

அமைச்சர்கள் சபை பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் விசுவாசமாக ஒத்துழைத்தது. லங்கா சமசமாஜக் கட்சியும் ஐக்கிய சோஷலிஸக் கட்சியும் (கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடி) 1941-ல் தடை செய்யப்பட்டன. அவற்றின் தலைவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் 1942-ல் சிறையை உடைத்துக் கொண்டு இந்தியாவுக்குத் தப்பி ஓடினார்கள். அங்கு புரட்சிக்குத் தலைமை தாங்கப் போலும்! அவர்கள் லங்கா சமசமாஜக் கட்சியைக் கலைத்துவிட்டு இந்தியாவிலுள்ள சில ட்ரொஸ்கியவாதப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து இந்தியா, பர்மா, இலங்கை ஆகியவற்றின் போல்ஷிவிக்-லெனினிஸக் கட்சியை அமைத்தனர். இது மிகவும் பேராசைபடைத்த பெயர் என்பதிற் சந்தேகம் இல்லை. ஆனால் அது அவர்கள் யதார்த்தத்திலிருந்து விலகியிருப்பதைக் காட்டுகின்றது. அவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு யுத்தத்தின் முடிவுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டனர். அப்பொழுது அவர்கள் லங்கா சமசமாஜக் கட்சியை மீண்டும் ஆரம்பித்தனர். பிலிப் குணவர்தன என்.எம்.பெரேரா ஆகியோரின் தலைமையில் லங்கா சமசமாஜக் கட்சி புனரமைக்கப்பட்டபோது கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்தன ஆகியோரின் தலைமையில் போல்ஷிவிக்-லெனினிஸக் கட்சி தொடர்ந்து செயற்பட்டது. 1951-ல் இரண்டும் ஒன்று கூடின. ஆனால் பிலிப் குணவர்தன மீண்டும் பிரிந்துசென்று விப்ளவகார லங்கா சமசமாஜக் கட்சியை அமைத்தார். இந்த வேளையில் கம்யூனிஸ்டுகள், சோவியத் யூனியன் யுத்தத்திற் பிரவேசித்தமை, ஹிட்லர் - ஜேர்மனிக்கு எதிரான அதன் வெற்றிகள் ஆகியவற்றால் உருவாகிய சாதகமான நிலைமைகளைப் பயன்படுத்தி 1943 ல் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தனர்.

யுத்த ஆண்டுகளில் இலங்கையில் பலமான தொழிற் சங்க இயக்கமும் தோன்றியது. இது, ஒரு புறத்தில் இந்த ஆண்டுகளில் ஏற்பட்ட உழைப்பாளிகளின் பற்றாக் குறையினால்-உழைப்பாளிகள் இருந்த நிலைமையினாலும் மறு புறத்தில் இடதுசாரிக் கட்சிகள் வழங்கிய தலைமையினாலும் ஏற்பட்டது. ஏ.ஈ. குணசிங்கா தொழிற் சங்கத் துறையில் கொண்டிருந்த தலைமை அந்தஸ்து தீர்க்கமான சவாலைக் கண்டு தூக்கி எறியப்பட்டது. குணசிங்காவும் மிகவும் மோசமான வர்க்க சமரசவாதி என அம்பலப்படுத்தப்பட்டார்.

கம்யூனிஸ்டுகள் 1940 ல் இலங்கைத் தொழிற் சங்க சம்மே ளனத்தை (சி. ரி. யு. எப்.) ஸ்தாபித்தார்கள். அது யுத்த ஆண்டு களில் நகரத் தொழிலாளர்கள் மத்தியில் பிரதான சக்தியாக விளங்கியது. லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் யுத்த முடி வில் விடுதலை செய்யப்பட்ட பின்னர் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தைக் கையேற்று சி. ரி. யு. எப். க்கு எதிராக அதைத் தமது தொழிற் சங்கக் கேந்திரமாக வளர்த்தார்கள். இப்படிச் செய்தபோது அவர்கள் தொழிற் சங்கங்களின் பாத்திரம் பற்றிய பழைய சமசமாஜத் தத்துவத்தை வீசியெறிந்தார்கள்.

இலங்கை இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க 1939 - 40 ல் நேரு எடுத்த முயற்சி தோல்வியடைந்த போது அவருடைய ஆலோசனை யின் பேரில் மதராஸ் அரசாங்கம் இலங்கைக்கு இந்தியத் தொழி லாளர்கள் செல்வதைத் தடை செய்தபடியால் தோட்டச் சொந் தக்காரர்கள் இப்பொழுது கட்டுப்பாட்டை மீறும் தொழிலாளர் களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவும், முன்னர் போல் புதிய தொழிலாளர்களை தம்மிஷ்டப்படி கொண்டுவரவும் முடியாத நிலை ஏற்பட்டபோது,, தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்களை தொழிற் சங்கங்களில் ஸ்தாபனப்படுத்துவது ஊக்கம் பெற்றது. நடேச ஐயரின் இந்தியத் தொழிலாளர் சம்மேளனமும் இலங்கை இந்தியர் காங்கிரஸ் சங்கமும் பிரதான போட்டி ஸ்தாபனங்களாக இருந்தன. பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாகிய இலங்கை-இந்தியர் காங்கிரஸ் தொழிலாளர் சங்கம் வெற்றி பெற் றது. ஆனால் அதிலும் பிளவேற்பட்டு அதன் ஒரு பகுதி ஜனநா கத் தொழிலாளர் காங்கிரஸை ஸ்தாபித்தது. இந்தப் பிளவுகள் தனிப்பட்ட தலைவர்களின் அடிப்படையில் ஏற்பட்டன. எந்தத் தெளிவான கொள்கை வேற்றுமைகள் காரணமாகவும் ஏற்பட வில்லை. இரண்டு பகுதிகளினதும் தலைவர்கள் முதலாளித்துவத் தலைவர்கள், ஒரு வர்க்கம் என்ற முறையிலும் தேசியப் பிரிவு என்ற முறையிலும் தோட்டத் தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரச் சினைகளுக்கு அவர்கள் பரிகாரம் எதையும் கொண்டிருக்கவில்லை.

நான்காவது அத்தியாயம்

# நவகாலனிஸத்தின் தோற்றம்

இக்காலத்தில் யுத்தம் காரணமாக வாழ்வுக் காலம் நீடிக்கப்பட்ட இரண்டாவது சட்டசபை மேற்கொண்டு சீர்திருத்தங்களை அடைவதற்காக இன்னும் பெரிய அளவு சுதந்திரத்தை வழங்கும்படி கோரி திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரேரித்த சீர்திருத்தங்கள் பற்றிய தீர்மானம் ஒன்றை அங்கீகரித்தது. பின்னோக்கிப் பார்க்கும் போது ஆங்கிலத்தின் இடத்தில் சிங்களம், தமிழ் இரண்டும் அரசாங்க மொழியாக வேண்டும் என்று இத் தீர்மானம் கோரியது கவனிக்கத்தக்கது.

ஆனால் பிரிட்டிஷார் மேற்கொண்டு சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகளைப் பரிசீலனை செய்ய சோல்பரி கமிஷனை நியமித்தார்கள். டி. எஸ். சேனநாயக்கா உத்தியோகபூர்வமாக இந்தக் கமிஷனைப் பகிஷ்கரித்தார். ஆனால் தனிப்பட்ட முறையில் தனது கருத்துக்களை கமிஷனர்களிடம் கூறினார். சோல்பரி கமிஷன் செய்த சிபார்சுகளை, உலகின் சரித்திரத்தைத் தீவிரமாக மாற்றிய இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஏற்பட்ட மாறிய நிலைமைகளை மனதில் கொண்டு பார்க்க வேண்டும். ஜேர்மன், இத்தாலி, யப்பான் பாசிஸத்தின் தோல்வியும், சோஷலிச சோவியத் யூனியன் பெரும் வல்லரசாக வளர்ந்ததும், ஆசியாவில் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு பிரமாண்ட ஊக்கமளித்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், அதன் காலனிகளை இனிமேலும் பழைய முறையில் ஆள முடியாது என்பதை உணர்ந்து கொண்டது. அதன் காலனிகளிலுள்ள சுதேச முதலாளி வர்க்கத்துடன் சமரசத்துக்கு வரத் தீர்மானித்தது. சுதேச முதலாளி வர்க்கமும் தேசிய விடுதலை இயக்கங்களை மிகுதியும் புரட்சிகரமான முறையில் வளர அனுமதித்தால் ஏகாதிபத்தியத்துடன் தானும் தூக்கியெறியப்படும் என்று பீதியடைந்தது. இவ்வாறு தான் மக்களைக் கூட்டுச் சேர்ந்து சுரண்டுவதற்காக ஏகாதிபத்தியத்துக்கும் சுதேச முதலாளி வர்க்கத்துக்குமிடையில் சமரசத்துக்கான அடிப்படை அமைக்கப்பட்டது. இதில் சுதேச முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தின் இளைய பங்குதாரர்கள் ஆவர். காலனிகளில் பிரிட்டிஷ் பொருளாதார முதலீடுகள் உத்தரவாதம் செய்யப்படுவதற்குப் பதிலாக அதிகார நிழலை வழங்கப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உடன்பட்டது.

சிறிய திருத்தங்களுடன் அதே பழைய காலனிய சுரண்டல் தொடர்ந்து நடைபெற்றது. சில விஷயங்களில் அது மேலும் பலப்பட்டது. ஆனால் தற்போது ஏகாதிபத்தியவாதிகள் பின்னணியில் இருந்தார்கள். அவர்கள் பின்னாசனத்தில் இருந்தார்கள். சுதேச முதலாளி வர்க்கம் முன்னால் சாரதி ஆசனத்தில் அமர்ந்தது. உள்ளூர் அரங்கில் ஆடிய பொம்மைகள் சுதேசிகள். ஆனால் இந்தப் பொம்மைகளை ஆட்டிய கண்காணாத கயிறுகள் வெள்ளைக்காரத் துரைமார்களின் மாளிகைகளிலிருந்து அல்லது வாஷிங்டனிலிருந்து இழுக்கப்பட்டன. இது அமெரிக்க ஏகாதிபத்தியம் லத்தீன் அமெரிக்க நாடுகளுடனான அதன் தொடர்புகளில் ஏற்கனவே பூரணமாக வளர்த்துக் கொண்ட ஒரு முறையாகும். லத்தீன் அமெரிக்க நாடுகள் பெயரளவில் சுதந்திர நாடுகள். ஐ. நா. ஸ்தாபனத்தின் அங்க நாடுகள் கூட. ஆனால் அவையனைத்தும் சர்வவல்லமை படைத்த டாலரின் உறுதியான கட்டுப்பாட்டின் கீழிருந்து அதன் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்தன. இந்த அசல் பொருளாதார ஆதிக்க வடிவம்தான் நவ காலனியம் என அழைக்கப்படுகின்றது. இந்தியா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளுக்கு 1948 ல் சுதந்திரம் என வழங்கப்பட்ட போலிப் பண்டம் இது தான். 1948 ல் இலங்கை காலனிய ஆட்சியிலிருந்து நவ காலனிய ஆட்சியின் கீழ் வந்தது.

சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கிய பாராளுமன்ற முறை அரசாங்கத்தைச் செயற்படுத்த டி. எஸ். சேனநாயக்கா தேசிய காங்கிரஸ், சிங்கள மகாசபை, முஸ்லீம் லீக் ஆகிய முதலாளி வர்க்க கட்சிகள் அனைத்தையும், - தமிழ்க் காங்கிரஸ், தவிர்ந்த அனைத்தையும் ஐக்கியப்படுத்தி, 1947 ல் தனது தலைமையின் கீழ் ஒரு புதிய கட்சியை - ஐக்கிய தேசியக் கட்சியை அமைத்தார். இதற்குப் பின்னர் இலங்கை அரசியல் வரலாற்றை சேனநாயக்கா, பண்டாரநாயக்கா குடும்பங்களுக்கிடையிலான சங்கீதக் கதிரை விளையாட்டுக்கு ஒப்பிடலாம். 1947 முதல் 1956 வரையான முதல் ஒன்பது ஆண்டுகளில் நாட்டைச் சேனநாயக்கா வம்சம் (தந்தை, மகன், மருமகன்) ஆட்சி புரிந்தது. 1956 முதல் 1965 வரையான ஒன்பது ஆண்டுகளில் பண்டாரநாயக்கா குடும்பம் (கணவன், மனைவி) ஆட்சி புரிந்தது. 1965 முதல் 1970 வரையான இன்னொரு 5 ஆண்டுகள் சேனநாயக்கா குடும்பம் (மகன்) அதிகாரத்தில் இருந்தது. 1970 ல் பெண்டுலம் மீண்டும் பண்டாரநாயக்கா குடும்பத்தின் பக்கம் (மனைவி) ஆடியது.

சேனநாயக்காக்களுக்கும் பண்டாரநாயக்காக்களுக்கும் இடையிலோ அல்லது யு. என். பி. க்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்

சிக்கும் இடையிலோ வித்தியாசம் இல்லை என்று நாம் கூற முன்வர வில்லை. வித்தியாசம் இருந்தது. ஆனல் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதைப் பொறுத்து எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துமளவிற்கு அது அடிப்படை வித்தியாசமல்ல. சேனநாயக்கா குடும்பத்தினதும் பண்டாரநாயக்கா குடும்பத்தினதும் 23 ஆண்டுகால முதலாளித்துவ வர்க்க ஆட்சிக்குப் பின்னர் அதே அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருந்து, மேலும் மோசமாகியிருக்கின்றன. வார்த்தைகள் வேறுபட்ட போதும் அதே பரிகாரங்களை இரு தரப்பும் முயற்சித்து அதே தோல்வியைக் கண்டிருக்கின்றன. சாதாரண மனிதனின் வாழ்வோ தொடர்ந்து மோசமாகியிருக்கின்றது.

ஏகாதிபத்திய சார்பான, மேலை நாடு சார்பான, தேசிய விரோதமான தரகு முதலாளி வர்க்கத்தை யு. என். பி. பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. அதன் தலைவர்கள் மொழி, உடை, பழக்க வழக்கங்கள், கலாசாரம் ஆகியவற்றில் மேலை நாடுகளைக் காப்பியடித்தார்கள். எமது பொருளாதாரத்தில் தொடர்ந்து ஏகாதிபத்திய ஆதிக்கத்தை அவர்கள் ஆதரிக்கின்றனர்கள். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இலங்கையின் தேசிய முதலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தின் விளைவாக இலங்கையர்களின் கரங்களில் மூலதனம் திரண்டபடியால் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்திய முதற் பத்து ஆண்டுகளில் இலங்கைத் தேசிய முதலாளி வர்க்கம் ஒரு தனி வர்க்கமாக வளர்ந்தது. இந்தத் தேசிய முதலாளி வர்க்கம், ஏகாதிபத்தியத்தின் இடத்தை தான் எடுத்து தேசிய முதலாளித்துவத்தை வளர்க்க விரும்பியது. அந்தளவிற்கு அதற்கு முற்போக்கு மனோபாவம் இருந்தது. ஆனல் வர்க்கம் என்ற முறையில் அதுவும் முதலாளி வர்க்கமாகும். அதன் வர்க்க இயல்பிலிருந்து தோன்றும் நோய்கள் அனைத்தும் அதற்கிருந்தன. இன்று தேசிய முதலாளி வர்க்கம் அதிகார பீடத்தில் அமர்ந்தது மூன்று தடவையாகும். அதன் அணிகளில் தவிர்க்க முடியாத வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. அதன் சில பகுதிகள் தரகு முதலாளி வர்க்கத்தின் அந்தஸ்துக்கு மாறியுள்ளன. தரகு முதலாளி வர்க்கம் என்பது இனிமேலும் யு. என். பி. அணிகளில் மாத்திரம் காணப்படக் கூடிய ஒன்றல்ல. இது தவிர, அரச கூட்டுஸ்தாபனங்களின் பெருக்கத்தினல் இன்னெரு கூட்டமும் முதலாளிகளாயும் வளர்ந்துள்ளார்கள். இவர்கள் சொந்த மூலதனமின்றி முதலாளித்துவத் தன்மையுடையவர்களாகிய முதலாளிகள் ஆவர். புதிய அரச கூட்டுஸ்தாபனங்களின் தலைவர்களாகிய இவர்கள்

நமது கொழுத்த சம்பளங்கள், ஊழல், லஞ்சம் ஆகியவற்றின் மூலமும் வர்த்தக லைசன்சுகளை விற்றல் கமிஷன்கள் சம்பாதித்தல் இன்னும் பிறவற்றின் மூலம் செல்வம் பெருக்கியுள்ளார்கள். இவர்கள் அனைவரும் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தை ஆதரிக்கின்றார்கள். ஏனென்றால் அதில் அவர்களுடைய வாழ்வே தங்கியிருக்கின்றது. இதனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை முதலாளித்துவத்தை ஒழிப்பதை ஆதரிக்கின்றது என்ற அர்த்தத்தில் ஒரு சோஷலிசக் கட்சி என்று அழைப்பது முற்றிலும் அறிவுக்குப் பொருந்தாத விஷயமாகும். இரண்டு தரப்பும் மக்களை ஏமாற்றுவதற்காக சோஷலிசம் பற்றித் தொடர்ந்து பேசுகின்ற போதிலும் முதலாளித்துவ அமைப்புத் தொடர்ந்து நிலவுவது பற்றி யு.என்.பி. க்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் (தற்போது ஐக்கிய முன்னணிக்கும்) இடையில் பொது உடன்பாடு உண்டு. அடிப்படை விஷயங்களில் அத்தகைய பொதுப் புரிந்துணர்வின்றி முதலாளித்துவ வர்க்கப் பாராளுமன்ற முறையைச் செயற்படுத்துவது சாத்தியமாகாது.

இந்தப் பொதுவான விளக்கத்துடன் 1947 ல் நடந்த முதலாவது பொதுத் தேர்தல் முதலான அரசியல் வளர்ச்சிகளைச் சற்றுப் பார்ப்போம். இந்த ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் தலைமையிலான புகழ் பெற்ற மே-ஜூன் பொதுவேலை நிறுத்தம் நடை பெற்றது. கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், லங்கா சமசமாஜக்கட்சி தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம், அப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி இரண்டாலும் கூட்டாகத் தலைமை தாங்கப்பட்ட அரசாங்கத் தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனம் ஆகியன கூட்டுக் கமிட்டி ஒன்றின் மூலம் உத்தியோகபூர்வமாக இவ் வேலை நிறுத்தத்துக்குத் தலைமை தாங்கிய தொழிற் சங்கங்களாகும். இவ் வேலை நிறுத்தத்தின் உச்ச கட்டத்தில் சுமார் 50,000 ஊழியர்கள் அதில் கலந்து கொண்டார்கள். ஒரு ஆர்ப்பாட்டத்தின் போது கந்தசாமி என்ற அரசாங்க லிகிதர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த வேலை நிறுத்தம் புரட்சிகர இயக்க வரலாற்றில் ஒரு உயர்ந்த கட்டத்தைக் குறித்தது. 1953 ஹர்த்தால் மாத்திரம் இதைத் தாண்டியது. ஆனால் இவ் வேலை நிறுத்தம் அரசின் ஆணையிலிருந்த கொடிய பலாத்காரத்தால், பொய் கூறும் முதலாளித்துவ வர்க்கப் பத்திரிகைகளின் திறமையான உதவியுடன் நசுக்கப்பட்டது. பழிவாங்கும் அரசாங்கத்தாலும் முதலாளி வர்க்கத்தாலும் சகல பகுதிகளையும் சேர்ந்த நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

அதே ஆண்டு வெள்ளையர் மாளிகையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் டி. எஸ். சேனநாயக்கவும் ஒலிவர் குணதிலகவும் இந்த வேலை நிறுத்தத்தைப் பேரம் பேச்சுக் கருவியாகப் பயன்படுத்தினார்கள். அவர்கள் தாம் கேட்டுக் கொண்ட சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டு அதிகாரம் தமக்கு மாற்றப்படாவிட்டால் நடைபெறவிருக்கும் விஷயங்களில் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்துக்கு வருதல் அறிகுறியென இப்பொது வேலை நிறுத்தத்தைச் சுட்டிக்காட்டி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளைப் பயமுறுத்தினார்கள்.

இந்த வேலை நிறுத்தம் எழுப்பிவிட்ட போராட்ட உணர்வுகள் ஒரு தொகை யூ. என். பி. விரோத அபேட்சகர்கள் தேர்தலில் வெற்றி பெறத் துணை புரிந்தன என்பதிற் சந்தேகமில்லை. எப்படியென்றாலும், 1947 ல் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தல்களில் டி. எஸ். சேனநாயக்கவும் அவருடைய யூ. என். பி. யும் பெரும்பான்மையைப் பெறத் தவறிய முக்கிய விஷயத்தை அநேக அரசியல் விமர்சகர்கள் அடிக்கடி வேண்டும் என்றே உதாசீனம் செய்து வருகின்றார்கள். "மார்க்சிசத் தீயிலிருந்து மதத்தைக் காப்பாற்றுங்கள்" என்பது போன்ற கோஷங்களுடைய சுவரொட்டிகளுடன் கூடிய பயங்கரமான மாக்சிச விரோதப் பிரசார இயக்கம் நடத்தப்பட்ட போதும் தேர்தலில் இந்த நிலைமை ஏற்பட்டது. 100 ஆசனங்களில் யூ. என். பி 46 ஆசனங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. தனித் தனியாக தேர்தலில் போட்டியிட்ட மூன்று இடதுசாரிக் கட்சிகளும் 20 ஆசனங்களைக் கைப்பற்றின. (ல. ச. ச. க. 10, பி. எல். பி. 5, க. க. 5) தமிழ்க் காங்கிரசும் இலங்கை - இந்தியர் காங்கிரசும் ஏழு ஏழு ஆசனங்களை கைப்பற்றின. 20 ஆசனங்களைச் சுயேச்சை அபேட்சகர்கள் பெற்றார்கள். சுயேச்சைகளின் கரத்தில் விஷயம் தங்கியிருந்தது என்பது தெளிவு. இரண்டு தரப்பும் அவர்களைக் கவர்ந்திழுக்க முயற்சித்தன. சகல யு. என். பி. எதிர்ப்புச் சக்திகளினதும் புகழ்பெற்ற "ஜமுனு" மாநாடு திரு எச். சிறீசங்காவின் இல்லத்தில் நடைபெற்றது. ஆனால் உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை. பி. எல். பி. த் தலைவரான கொல்வின் ஆர். டி. சில்வா சுயேச்சைகளை மூன்று தலைக் கழுதைகள் என்று திட்டி அவர்களைப் பகைமைப்படுத்திய போது யு. என். பி. யின் வேலை இலகுவாகியது. டி. எஸ். சேனநாயக்க, தான் அமைச்சரவை ஒன்றை அமைப்பதற்கு துணைபுரியுமுகமாக போதிய தொகை சுயேச்சைகளை இழுத்துப் பிடித்தார். ஆனால் இத்தேர்தலில் அவருடைய கட்சி சிறுபான்மை வாக்குகளைத் தான் பெற்றது என்பது கவனிக்கத்தக்கது.

1947 தேர்தலில்தான் இடதுசாரிக் கட்சிகள் நல்ல விளைவுகளைப் பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மொத்தம் 100 ஆசனங்களில் இருபதை(20) இடதுசாரிக் கட்சிகள் பெற்றன. 1952 ல் இத் தொகை 13 ஆகியது. 1956 ல் 17 ஆகியது. 150 ஆசனங்களைக் கொண்டதாகப் பெரிதாகிய 1960 1965 பாராளுமன்றத்தில் இடதுசாரிக் கட்சிகள் வென்ற ஆசனங்கள் வீத அடிப்படையில் குறைந்தன. 1970 ல் மாத்திரம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் செய்து கொண்ட ஐக்கிய முன்னணி உடன்படிக்கை காரணமாக அவை சற்றுக் கூடுதலான ஆசனங்களைப் பெற்றன. ஆனால் இத் தொகை 1947 ல் பெற்ற ஐந்தில் ஒன்றுக்குக் கூட வரவில்லை.

1948 பெப்ரவரியில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குதல் என்ற கேலி நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்த அதிகார நிழல் மாற்றத்தின் அடிப்படையை ஏற்கனவே விபரித்துள்ளோம். ஆனால் இந்த அதிகார நிழல் கூட டி.எஸ். சேனநாயக்கா பாராளுமன்றத்துடன் முதலில் கலந்தாலோசிக்காமல் பிரிட்டனுடன் தற்காப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்ட பின்னரே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டும். இந்த உடன்படிக்கை பின்னர் ரத்துச் செய்யப்படவில்லை என்பதை இங்கு கவனிக்கலாம். காலனியாகவிருந்த இலங்கை ஒரு நவ காலனியாகியது. சுதந்திரத்தின் வெளிப்பூச்சுகள் - தேசியக் கொடி, தேசிய கீதம், ராணி மாளிகையில் ஒரு பொது நிறத்தவர், இன்னும் பிற - எல்லாம் இருந்தன. ஆனால் ஏகாதிபத்திய சுரண்டலின் சாராம்சம் தொடர்ந்தும் இடம் பெற்றது.

டி. எஸ். சேனநாயக்கா தன்னைப் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை மிகுதியும் உணர்ந்திருந்தார். ஆகவே அவருடைய கொள்கைகள் அனைத்தும் அடுத்த பொதுத் தேர்தலில் பூரண பெரும்பான்மையைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. ஒழுங்கான முறையில் தேர்தல் தொகுதிகளுக்கு லஞ்சம் வழங்கும் முறையை அவர் ஆரம்பித்து வைத்தார். உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் அவர் விரைவில் லண்டனில் இருந்த இலங்கையின் ஸ்ரேலிங் நிலுவையை விரயம் செய்தார். இப் பணத்தை தொழிற்துறை இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் முதலீடு செய்திருந்தால் நாட்டிற்கு அதனால் பிரமாண்ட நன்மை ஏற்பட்டிருக்கும். ஆனால் சேனநாயக்கா தொழிற்துறை வளர்ச்சியில் நம்பிக்கை வைத்திருக்கவில்லை.

இது தான் அவருடைய மோசமான தவறல்ல. அவருடைய ஆட்சியின் போது தான், அரிசி மானியம் வழங்கும் முறை ஆரம்

பித்தது. வருடாந்தம் 60 கோடி ரூபாக்களைத் தாண்டும் இந்த மானியத்தால் ஏற்படும் சகிக்க முடியாத சுமையை இன்று அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் தற்போது மானிய அரிசி அரசியலாகியுள்ளது. நாட்டின் பொருளாதார நாசத்துக்கு மிகவும் காலாயிருந்த தனியொரு நடவடிக்கையைச் சுட்டிக் காட்டுவதென்றால், டி. எஸ். சேனநாயக்கா எடுத்த அரிசி மானியம் வழங்கும் இச்செயலைச் சுட்டிக்காட்ட முடியும். எதிர்காலச் சந்ததிகள் அவரை என்றென்றும் சபிக்கும்.

1948 இன் முடிவுக்கு முன் டி. எஸ். சேனநாயக்கா ஒரு மந்திரிப் பதவியைக் காட்டித் தான் முந்தி சமாளிக்க முடியாத எதிராளியான ஜீ. ஜீ பொன்னம்பலத்தை வென்றெடுத்தார். இவர் யாழ்ப்பாண ஆசனத்துக்கான 1947 தேர்தலில் சேனநாயக்காவின் அபேட்சகரான பொன்னம்பலம் அருணசலத்தின் மகன் ஏ. மகாதேவாவைத் தோற்கடித்தார் என்பதை மறக்கக் கூடாது. ஆகவே இந்தக் கூட்டு இருதரப்பையும் பொறுத்த வரையில் முற்றிலும் சந்தர்ப்பவாத இயல்புடையது. இதனால் தமிழ்க் காங்கிரஸ் பிளவுபட்டது. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழ்க் காங்கிரசை விட்டுச் சென்று சமஷ்டிக் கட்சியை அமைத்தார். இக்கட்சி வடக்கில் தொடர்ந்து வகுப்புவாத அரசியலில் ஈடுபட்டது. பொன்னம்பலம் 1970 வரை தன் ஆசனத்தை வென்ற போதிலும் வகுப்பு வாதத்தைக் கைவிடாத தமிழ்க் காங்கிரஸ் 1948 க்குப் பின் தமிழரசியலில் அல்லது இலங்கை அரசியலில் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கவில்லை. பொன்னம்பலம் தன் 50 க்கு 50 என்ற போராட்டத்தைக் கைவிட்டார். இந்திய வம்சாவளித் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்தெடுப்பதற்கான டி. எஸ். சேனநாயக்காவின் நடவடிக்கைகளை ஆதரிக்குமளவுக்குப் பொன்னம்பலம் தனது முந்திய கோட்பாடுகளைக் கைவிட்டார்.

1951 ல் யு. என். பி. யில் நெருக்கடி ஏற்பட்டது. அது இலங்கையின் எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்கும் ஒரு சம்பவமாகும். சபையின் தலைவரும் டி. எஸ். சேனநாயக்காவைச் சுற்றியிருந்தவருள் மிகவும் திறமை படைத்தவரும் இலங்கையின் ஏகாதிபத்திய சார்பு பிரபுக் குடும்பம் ஒன்றின் வாரிசும், கண்டியைச் சேர்ந்த பிரபுத்துவக் குடும்பம் ஒன்றில் திருமணம் செய்தவரும், ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் கல்வி பெற்றவருமான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தன்னை எப்பொழுதும் பதவியேற்க இருக்கும் வாரிசெனக் கருதினர். ஆனால் வயோதிபர் சேனநாயக்காவுக்கு வேறு எண்ணங்கள் இருந்தது போல அச்சமயத்தில்

தெரிந்தது. சேனநாயக்கா தனக்குப் பின் தன் மகன் பதவியேற்க வேண்டும் என்பதில் மனம் வைத்திருந்த அதே வேளையில், எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு தன் மருமகனான சேர் ஜோன் கொத்தலாவலைக்குமிடையிலிருந்த போட்டியைக் கெட்டித்தனமாய் வளர்த்தார். பண்டாரநாக்கா வெறுப்படைந்து ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுச் சென்று எதிர்க் கட்சிப் பக்கம் சேர்ந்தார்.

அதே ஆண்டு பண்டாரநாயக்கா ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார். யு. என். பி. யை விட்டுச் செல்வதற்கு அவரை ஊக்குவித்த காரணங்கள் எதுவாயிருந்த போதிலும் யு. என். பி. விரோத சக்திகளனைத்தையும் ஐக்கியப்படுத்துதல், சாதாரண மனிதனின் தேசியவாத அபிலாசைகளை கவனித்தல் ஆகியவற்றின் சக்தியை அவர் விரைவில் புரிந்து கொண்டார். அவர் ஒரு டொனமூர் புத்தமதத்தவர். சோற்றுக் கிறிஸ்தவர்களின் மற்றப் பக்கம். அவர் தேசிய உடையை அணிந்தார். தான் மேற்கத்திய கலாசாரத்தில் மூழ்கியிருந்த போதிலும், பின்னர் அவர் சிங்கள மொழிக்காக வாதாட ஆரம்பித்தார். இவையனைத்தையும் செய்வது மூலம் பொதுஜன உணர்வுகளை அசாதாரண முறையில் அவர் பிரதிபலித்தார். அது சந்தர்ப்பவாதம் என்றால் மன்னிக்கக் கூடிய சந்தர்ப்பவாதம். ஆனல் அச்சமயத்தில் அவர் அரசியல் வனாந்தரத்தில் இருந்தார்.

பின் 1952 மார்ச் 22 ம் திகதி டி. எஸ் சேனநாயக்கா காலி முகத் திடலில் குதிரையில் ஓடிக்கொண்டிருந்த போது குதிரையிலிருந்து விழுந்து மரணமடைந்தார். உடனே யார் அவர் இடத்தை எடுப்பது என்பதற்காக மிகவும் அசிங்கமான போட்டி நடைபெற்றது. மிகவும் பிரசித்தமான ''பிரதமர் பந்தய ஓட்டங்கள்'' என்ற புத்தகத்தில் போட்டியாளர்களில் ஒருவரான சேர் ஜோன் கொத்தலாவலையின் ஆதரவாளர் ஒருவர் இதனை மிகவும் நன்கு எழுதி வைத்திருக்கிறார். ஆனல் அப்பொழுது ''வயோதிபர்'' தனது கல்லறையிலிருந்து பிரச்சினைக்கு முடிவொன்றைக் கண்டார். தனக்கு (டி. எஸ்.) ஏதேனும் சடுதியாக நிகழ்ந்தால் சோல்பரி அரசாங்கத்தை அமைக்கும்படி தனது மகன் டட்லியை அழைக்க வேண்டும் என்று அப்பொழுது இங்கிலாந்தில் லீவில் இருந்த கவர்னர் - ஜெனரல் சோல்பரிப் பிரபுவுக்கு அவர் ஆலோசனை கூறியிருந்தார் போல் தெரிகின்றது. சோல்பரி அவசர அவசரமாகத் திரும்பியதும் டி. எஸ். சேனநாயக்காவின் மிகவும் சிரேஸ்ட சகாவான சேர். ஜோன். கொத்தலாவலையை உதாசீனம் செய்துவிட்டு இதனையே செய்தார். சேர். ஜோன் சற்றுக் காலம் புறுபுறுத்துத் திரிந்தார். பின் டட்லியின் கீழ் சேவை புரிய ஒத்துக்கொண்டார்.

சரியான வம்ச முறையில் டட்லி சேனநாயக்கா அவருடைய தந்தைக்குப் பின் பதவி ஏற்றதும், திரு பண்டாரநாயக்கா படு கொலை செய்யப்பட்ட போது அவருடைய விதவை அவரின் இடத்தை எடுத்ததும், இதுகால வரை சிங்களவராகவும், கொயிகம சாதியைச் சேர்ந்தவராகவும் புத்த மதத்தவராகவும் இல்லாத ஒருவர் இலங்கையின் பிரதமராக வராததும் நாட்டில் பிரபுத்துவ சிந்தனைகள் எவ்வளவு ஆழமாக நிலவுகின்றன என்பதைக் காட்டுகின்றன. ஒரு தந்தையின் அரசியல் கருத்துக்களை ஒரு மகன் தான் சரியாக விளக்க முடியும் எனவும், மரணமடைந்த கணவனின் அரசியல் பிதுரார்ஜிதத்தை ஒரு விதவை தான் விளக்க முடியும் எனவும் நினைப்பது ஜனநாயக எண்ணமல்ல. மகனைப் பொறுத்த வரை அவர் குறைந்த பட்சம் தனது தந்தையின் அமைச்சரவையில் ஒரு அமைச்சராகப் பணியாற்றினர் என்று சமாதானம் கூறலாம். விதவையைப் பொறுத்த வரை அவரைக் கணவன் அரசியல் ரீதியில் நம்பக்கூட இல்லை. நமது நாடு பிரபுத்துவப் பாரம்பரியங்களிலும் கருத்துக்களிலும் எவ்வளவுக்குச் சிக்கி இருக்கின்றதென்றால் தற்போதைய பிரதமரின் ஒரு நோக்கம் தனது மகனை அப்பதவியில் அமர்த்தும் வரை ஆட்சியில் இருப்பதாகும் என்ற பேச்சு ஏற்கனவே அடிபடுகின்றது.

டட்லி சேனநாயக்கா தனது தந்தையின் மரணத்தை ஒட்டி எழுந்த உணர்ச்சிகளைப் பூரணமாகப் பயன்படுத்திய படியால் 1952 பொதுத் தேர்தல்களில் ஒப்பீட்டளவில் இலேசாக வெற்றி பெற்றார். மத்திய வங்கியின் தலைவரான அமெரிக்கரான ஜோன் எக்செட்டர் வரவிருக்கும் பொருளாதார நெருக்கடி பற்றி எச்சரித்து கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன் தேர்தல் மூலம் புதிய உரிமைக் கட்டளை பெறும்படி புத்திமதி கூறியபடியால் இத் தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாக நடைபெற்றன. யு. என். பி. யின் 1953 பட்ஜட் பொருளாதார நெருக்கடியின் சுமைகளை மக்கள் பால் நகர்த்திவிடும் நடவடிக்கைகளைப் பிரகடனம் செய்தது. அரிசி மானியம் ரத்துச் செய்யப்பட்டது. ஒரு கொத்து அரிசியின் விலை 25 சதத்திலிருந்து 75 சதமாக உயர்ந்தது. ரெயில்வே, தபால் செலவுகள் அதிகரிக்கப்பட்டன. பள்ளிப் பிள்ளைகளின் மத்தியான பணிஸ் பறித்தெடுக்கப்பட்டது.

ஆனால் இந்தச் சுமையை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் பிந்திய காலத்தில் தோன்றிய சீர்திருத்தவாத மட்டத்துக்கு இன்னும் சீரழிந்து விடவில்லை. மூன்று இடதுசாரிக் கட்சிகளினதும் அவற்றின் தலைமையிலான தொழிற் சங்கங்களினதும் ஐக்கிய அறைகூவலின்

பேரில் 1953 ஆகஸ்ட் 12ம் திகதி ஒரு ஹர்த்தால் நடத்தப்பட்டது. மக்கள் இதற்குப் பிரமாண்ட ஆதரவளித்தார்கள். தோட்டத் தொழிலாளர்கள் தவிர தொழிலாளி வர்க்கத்தின் சகல பகுதியினரும் அதில் கலந்து கொண்டார்கள். ஹர்த்தாலுக்கான அறைகூவலை வெளியிடுவதில் சேர்ந்து கொள்ள திரு பண்டாரநாயக்கா மறுத்த போதிலும் கிட்டத்தட்ட யு. என். பி. விரோத சக்திகள் அனைத்தும் இந்தப் பிரமாண்ட ஆட்சேபப் பேரலையில் கலந்து கொண்டன. பஸ்களும் புகையிரதங்களும் ஓட முடியவில்லை. கடைகள் மூடப்பட்டன. சகல வேலைகளும் அரசாங்கமும் ஸ்தம்பித்தன. அமைச்சரவை கொழும்புத் துறைமுகத்தில் கப்பல் ஒன்றில் மறைந்திருந்து கூட்டம் நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. இது இலங்கை இதுகால வரை கண்ட மிக உயர்ந்த மட்டப் புரட்சிகர நடவடிக்கையாகும். ஐக்கியப்பட்ட, புரட்சிகரத் தலைமை அளித்தால் வெகுஜனங்கள் எவ்வளவு தூரம் செல்லத் தயார் என்பதை இது காட்டியது.

துரதிருஷ்டவசமாக, மக்கள் அளித்த பிரமாண்ட ஆதரவைக் கண்டு அரசாங்கம் பயந்தளவிற்கு இடதுசாரிக் கட்சிகளின் சீர்திருத்தவாதத் தலைமையும் பயந்தது. இடதுசாரிக் கட்சிகளின் சீர்திருத்த வாதத் தலைமை 12ம் திகதி மத்தியானமே இந்த இயக்கத்தை வாபஸ் பெற்ற அதே வேளையில் அரசாங்கம் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்து பெருமளவிலான அடக்குமுறையில் ஈடுபட்டது. 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். நூற்றுக் கணக்கானோர் சிறையிலிடப்பட்டார்கள். இந்த ஹர்த்தாலின் ஒரு விளைவு பிரதமர் கால் நடுக்கம் பிடித்து ராஜினாமாச் செய்ததாகும். அவர் 1960ல் திரும்பும் வரை அரசியல் அஞ்ஞாத வாசம் புரிந்தார்.

சேர் ஜோன் கொத்தலாவலை அப்பொழுது பிரதமரானார். அவர் உள் நாட்டில் முற்றுமுழுதான பிற்போக்குக் கொள்கையை அனுசரித்தார். வெளி விவகாரங்களில் முற்றிலும் ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கீழ் பணிவாக இருந்தார். எப்பொழுதும் ஏகாதிபத்திய வாதிகளின் கருவியாக விளங்கத் தயாராயிருந்த அவர் பிரசித்தி பெற்ற பாண்டுங் மகாநாட்டுக்குச் சென்று ஆத்திரமூட்டும் கம்யூனிச விரோதச் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினர். தோழர் சௌ என்-லாய்க்கு சினமூட்டுவது அதன் நோக்கமாகும். ஆனால் சௌ என்-லாய், ''நான் இங்கு சச்சரவில் ஈடுபட வரவில்லை'' என்று கூறி அவரை உதாசீனம் செய்தார். சோவியத் உதை பந்தாட்டக் கோஷ்டி ஒன்றுக்கும். சூரிய கிரகணத்தை அவதானிப்பதற்கான சோவியத் விஞ்ஞானிகளின் குழு ஒன்றுக்கும்

பிரவேச அனுமதியை அவர் மறுத்தார். ''பார்பக்குயூ'' சம்பவம் காட்டியவாறு மக்களின் மத, கலாசார உணர்வுகளை அவர் பகிரங்கமாக உதாசீனம் செய்தார். இவையும் அவர் பிரதமராக இருந்த போது நிகழ்ந்த அவப் பெயர் பெற்ற விஷயங்களாகும். யூ.என்.பி. க்கு நிலைமை மிகவும் சிறப்பாக இருக்கின்றது என்ற தவறான கணிப்பில் தேர்தல்களை காலத்துக்கு முன்னதாக நடத்துவது என்ற அவருடைய தீர்மானம் பொது ஜன உணர்வுடன் அவர் முற்றிலும் தொடர்பற்றவராக இருந்ததைக் காட்டியது.

ஐந்தாவது அத்தியாயம்

# பண்டாரநாயக்கா சகாப்தம்

சேர் ஜோன் கொத்தலாவலையைப் பெரு வெள்ளம் அடித்துச் செல்லுமுன் மொழிப் பிரச்சினை சம்பந்தமாக எழுந்த பிணக்கை அவர் கிளறிவிட்டார். யாழ்ப்பாணத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு தீவில் அவருக்கு முடிசூடல் உட்படக் கிடைத்த வரவேற்பினால் மதிமயங்கி சேர் ஜோன் சிங்களம், தமிழ் இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளிப்பதென வாக்குறுதி அளித்தார். இதனால் தெற்கிலுள்ள சிங்களவர் மத்தியிலிருந்து உக்கிரமான எதிரொலிப்பு ஏற்பட்டது.

சேர் ஜோன் தான் உருவாக்கிய புயலைக் கண்டு விறைத்துப் போய் யு. என். பி. யின் களனி மாநாட்டை நடத்தி சிங்களவர்களின் உணர்வைத் தணிக்க முயன்றார். இம்மாநாட்டில் யு. என். பி. , சிங்களம் மாத்திரம் இலங்கையில் உத்தியோகபூர்வமான மொழியாக விளங்கும் என்ற தீர்மானத்தை எடுத்தது.

இந்தக் குத்துக்கரணத்தின் அசல் அயோக்கியத்தனம் காரணமாக அது யாரையும் ஏமாற்ற முடியவில்லை. இத்தீர்மானத்தினால் யு. என். பி. அதற்கிருந்த தமிழர்களின் ஆதரவு அனைத்தையும் இழந்த அதேவேளையில் சிங்களவர்களும் ஏமாற்றப்படவில்லை. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தான் 24 மணி நேரத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவார் என்ற எதிர்க்கோஷத்தை முன் வைத்ததில் ஆச்சரியமில்லை. ஆகவே 1956 தேர்தலின் போது இரண்டு சிங்களக் கட்சிகளுக்கிடையிலான பிரதான பிரச்சினை, சிங்களம் மாத்திரம் அரசகரும மொழியாக இருக்கும் என்பதல்ல, இதனை அமுல்படுத்த யாரை நம்பலாம் என்பதேயாகும். இந்தப் போட்டியில் சேர் ஜோன் தோல்வி காண்பது திண்ணம். அவர் சிங்களவர்களின் கண்களில் தேசிய விரோத, மேற்கத்தைய சார்பு விஷயங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தினர். அத்துடன் அவருடைய எதிராளியான பண்டாரநாயக்கா ஒரு திறமையான நாவல்லரும் பிரச்சாரரும் ஆவார்.

மொழிப் பிரச்சினை மாத்திரம் 1956 தேர்தல் முடிவுகளைப் பாதித்தன என்று கூறுவது தவறானது. இப்பிரச்சினை முழுத் தேர்தலையும் பெருமளவில் பாதித்தது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் வேறு பிரச்சினைகளும் இருந்தன. பண்டாரநாயக்கா தனது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சுற்றியமைத்த இறுக்கமற்ற ஐக்கிய முன்னணி அப்பொழுது மகாஜன எக்சத் பெரமுனை என்று அழைக்கப்பட்டது. அதில் எக்சத் பிக்கு பெரமுனை என்றழைக்கப்பட்ட இளம், தீவிரவாத புத்த மதகுருமாரின் ஸ்தாபனமும் அங்கம் வகித்தது. இந்த ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள் முழு மூச்சாகச் செயற்பட்டு மக்கள் மீது குறிப்பாகக் கிராமப்புற மக்கள் மீது சங்கங் கொண்டுள்ள செல்வாக்கைப் பாவித்து நிலைமையை எம். ஈ. பி. க்கு ஆதரவாக மாற்றினார்கள். சமீப காலத்தில், இதற்கு முன்னரோ பின்னரோ, புத்த குருமார் இலங்கை அரசியலில் இத்தகைய தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கவில்லை. இந்த மதகுருமார் ஸ்தாபனத்தின் ஒரு முக்கிய பிரமுகரான புத்தரகித்த பின்னர் பண்டாரநாயக்கா படுகொலையில் ஒரு உடந்தையாளர் எனக் குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறைத் தண்டனை பெற்றார். அவர் சிறையில் மரணமடைந்தார்.

பண்டாரநாயக்கா யு. என். பி. யின் தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு பொதுஜனக் காற்றுக்கேற்ப தனது கப்பல் பாய்களை விரித்துவிட்ட அதே வேளையில் இடதுசாரி இயக்கம் பரப்பிய சில தீவிரக் கோஷங்களையும் எடுத்துக் கொண்டார். அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற மிகவும் தீவிரமான கோரிக்கை கூட எம். ஈ. பி. தேர்தல் வேலைத் திட்டத்தில் இடம் பெற்றிருந்தது. இயல்பாகவே, அது ஒருபோதும் அமுல்ப்படுத்தப்படவில்லை. அதிகாரத்துக்கு வந்ததும் பண்டாரநாயக்கா இக் கோரிக்கை பத்து வருடங்களுக்கு பின்போடப்பட்டிருக்கின்றது என்று பிரகடனம் செய்து வாஸ்தவத்தில் அதனைக் கைதுறந்து விட்டார். ஒருவேளை இக்கோஷம் வெறும் கோஷம் போலும், அமுல்ப்படுத்துவதற்கானதல்ல. ஆனால் இக் கோரிக்கை பிந்திய வேலைத் திட்டம் எதிலும் ஒரு போதும் தோன்றவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சியுடனும் கெனமன் திரிபுவாதக் கும்பலுடனும் கலந்தாலோசித்துத் தயாரித்த பொது வேலைத் திட்டத்திலும் அது தோன்றவில்லை.

பண்டாரநாயக்கா, லங்கா சமசமாஜக் கட்சியின் ஒரு ஆரம்ப அங்கத்தவரான பிலிப் குணவர்த்தன தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஒரு குழுவைத் தனது ஐக்கிய முன்னணியில் சேர்ப்பதன் மூலம் இடது பக்கத்துக்குத் தான் நகர்ந்துள்ளதை மேற்கொண்டு கோடிட்டுக் காட்டினார். அவர் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடனும் போட்டியிடா உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார். இதன்

விளைவாக முதல் தடவையாக யு. என். பி. ஏறக்குறைய ஐக்கியப் பட்ட எதிர்ப்பை முகம் கொடுத்து பூரண தோல்வி கண்டது. முன்னர் பாராளுமன்றத்தில் 54 ஆசனங்கள் இருந்த யு. என். பி. க்கு 8 ஆசனங்கள் மாத்திரம் கிடைத்தன. எம். ஈ. பி. 51 ஆசனங்களையும் 40.7 வீதம் வாக்குகளையும் பெற்றது. அது ஒரு பிரமாண்ட வெற்றி.

1956 ல் எம். ஈ. பி. பெற்ற வெற்றி ஒரு வகை சமாதானமான மக்கள் புரட்சி என்று சிலர் கூறுகின்றனர்கள். இக் கூற்று மிகைப்படுத்தல் மாத்திரமல்ல, பொய்யுமாகும். தரகு முதலாளி வர்க்கத்திலிருந்து தேசிய முதலாளி வர்க்கத்துக்கு மேற்குச் சார்பான, ஆங்கிலம் பேசும் ஏகாதிபத்திய சார்பான மனப்பாங்குடைய முதலாளி வர்க்கத்தின் பகுதிகளிலிருந்து நிச்சயம் அதிகாரம் நகர்ந்தது. சமுதாயத்தின் வர்க்க அமைப்பு குலைக்கப்பட்டது என்ற அர்த்தத்தில் புரட்சி எதுவும் ஏற்படவில்லை. 1956 தேர்தல் வெற்றி நாட்டின் பொருளாதாரம் மீதான அந்நிய ஏகாதிபத்தியத்தின் பிடியை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. அதே சுரண்டல் முன்னர் போல் தொடர்ந்து நடைபெற்றது.

எம். ஈ. பி. ஆட்சியின் போது பல தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது சரியானது. பஸ் சேவையும், கொழும்புத் துறைமுகமும் தேசிய மயமாக்கப்பட்டன. ஒரு மிதமான விவசாயச் சீர்திருத்தச் சட்டமான நெற்காணி மசோதா நிறைவேற்றப்பட்டது. பிரிட்டிஷ் தளங்கள் திருகோணமலையிலிருந்தும் கட்டுநாயக்காவிலிருந்தும் வெளியேற்றப்பட்டன. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் கூடுதலான சுதந்திரத்தைப் பெற்றனர்கள். ஊழியர்கள் சேம லாப நிதி மசோதா சட்டமாகியது. சிங்கள மொழியும் புத்த மதமும் முன்னரிலும் கூடுதலான கவனத்தைப் பெற்றன. சோஷலிச நாடுகளுடன் முதற் தடவையாக ராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டன. வெளிநாட்டுக் கொள்கையில் இலங்கை கூட்டு சேராமை என்ற பாத்திரத்தை வகிக்க ஆரம்பித்தது. முன்னர் போல் எப்பொழுதும் ஏகாதிபத்தியவாதிகளுடன் இயற்கையாகவே நாம் சேர்ந்து நிற்கவில்லை. ஆனால் இவையனைத்தும் - சமாதானப் புரட்சி சரி வேறு புரட்சி சரி - புரட்சியாகா. வாஸ்தவத்தில் பண்டாரநாயக்கா செய்தது என்னவென்றால் மத்திய பாதைக் கொள்கைகள் என்று அவர் அழைத்த கொள்கைகளால் மிகவும் அபாயகரமான யு. என். பி. விரோத ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தி அதன் புரட்சிகர முனையை மழுங்கடித்து அதனை முதலாளி வர்க்கப் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற சமாதானப் பாதையில் திசைதிருப்பிவிட்டதாகும். அவர் இடதுசாரி இயக்கத்தின் தலைமையை மிகுதியும் பாதித்தார் என்று கூறலாம்.

எம். ஈ. பி. யின் 1956 தேர்தல் வெற்றியைப் போல் தாமும் பெற வேண்டும் என்ற ஆசையினால், லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைமை கொண்டிருந்த புரட்சிகர வேடங்கள் கூட இல்லாது போயின. அவர்கள் முதலாளித்துவ வர்க்கப் பாராளுமன்றம் என்ற ஆலயத்தின் நல்ல பக்தர்கள் ஆகினார்கள். இந்த முன்னொருகால் புரட்சிவாதிகளை மேற்கொண்டு பழக்கி எடுக்கும் பொறுப்பு பண்டாரநாயக்காவின் மனைவியைக் காத்திருந்தது.

இந்தரீதியில் பின்னோக்கிப் பார்க்கும் போது, பண்டாரநாயக்கா பலாத்காரப் புரட்சியைத் தவிர்க்கத் துணைபுரிந்தார் என்று சில விமர்சகர்கள் கூறுவது மிகையானதல்ல.

எம். ஈ. பி. யும் அதன் ஆதரவாளர்களும் தமக்குள்ள ஆதரவை நிலைநிறுத்த வகுப்புவாத, மொழிரீதியிலான உணர்வுகளை எழுப்ப வேண்டியிருந்தமை, 1956 தேர்தல் வெற்றி எந்தப் பொருளாதாரப் பிரச்சினையையும் தீர்க்கவில்லை என்பதற்கு மிகச் சிறந்த நிரூபணமாகும். எம். ஈ. பி. ஆட்சியின் போது இலங்கை கண்ட மிகப் பெரிய வகுப்புவாதக் கலவரம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தை விபரமாக ஆராய வேண்டும் என்றபடியால் இச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட வகுப்புவாதப் பிரச்சினையை ஆராய்வது நல்லது.

டொனமூர் கமிஷன், சோல்பரி கமிஷன் ஆகியன வகுப்புவாத ரீதியிலான பிரதிநிதித்துவத்தை அல்லது சிறுபான்மையினருக்கு எந்த வடிவ விஷேச பிரதிநிதித்துவத்தையும் அளிக்க மறுத்தமை, சிறுபான்மையினரை நாட்டின் சட்டமியற்றும் அமைப்புகளில் நிரந்தர சிறுபான்மையில் வைத்தது. 1936 ல் சர்வ சிங்கள அமைச்சர்கள் சபையின் அமைப்பும், இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகப் பெரிதும் பாகுபாடு காட்டி அவர்களுடைய பிரஜாவுரிமை, வாக்குரிமை ஆகியவற்றைப் பறித்தெடுத்த பிரஜாவுரிமைச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை ஆகியனவும், தேசியப் பிரச்சினைகளில் தமிழ்ச் சிறுபான்மையினரின் தலைமை காட்டிய முன்யோசனையற்ற, கிட்டத்தட்டப் பொறுப்பற்ற மனோபாவமும் (உ. ம். பிரிட்டிஷ் தளங்களை வெளியேற்றுவதற்கு எதிர்ப்பு, தேசிய தினத்தில் கறுப்புக் கொடி பறக்க விடுதல்) மேற்கொண்டு வகுப்புவாதப் பகைமைக்குத் துணைபுரிந்தன.

உள்ளே புரையோடிக் கொண்டிருந்த வகுப்புவாதப் புற்றுநோய் 1955 ல் மொழித் தகராறு என்ற வடிவத்தில் வெளியே வந்

தது. பண்டாரநாயக்கா இரண்டாவது சட்ட சபையில் சீர்திருத்தங்கள் பற்றிய மசோதாவைப் பிரேரித்தது முதல், அதற்கு முன்னருங் கூட, சகல அரசியற் கட்சிகளும் சிங்களம், தமிழ் இரண்டும் ஆங்கிலத்தின் இடத்தில் உத்தியோகபூர்வமான மொழிகளாகும் என்று ஏற்றுக் கொண்டிருந்தன. சடுதியாக 1955 ல், சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரசாரம் சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்டது.

இந்தப் பிரசாரத்தின் ஒரு பிரத்தியேக அம்சத்தை நாம் உடனே கவனிக்க வேண்டும். பல நாடுகளில், பெரும்பான்மை அதன் மொழி உரிமைகளையும், பிற உரிமைகளையும் காலில் போட்டு மிதிப்பதற்கு எதிராக ஒரு சிறுபான்மை நடத்தும் பிரசாரத்தின் வடிவில் வகுப்புவாதப் பிரச்சினை அமைகின்றது. ஆனால் இலங்கையில் பெரும்பான்மை தான், சிறுபான்மை இனத்தின் மொழி தன் மொழியை ஆக்கிரமிக்கும் என்றஞ்சி அதன் மொழியைப் பாதுகாக்கப் பிரசாரம் ஒன்றை ஆரம்பித்து வைத்தது. இந்தச் சிக்கலான பிரச்சினையைச் சற்றுப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் சிங்களப் பெரும்பான்மையை ஒரு சிறுபான்மை போல் நடந்து செயற்படச் செய்த பிரத்தியேக காரணங்களை ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களவர்கள் உண்மையில் பெரும்பான்மையாக இருக்கும் ஒரு நாட்டில் அவர்கள் சிறுபான்மை போல நடந்து கொள்வதற்கான காரணங்கள் பல. முதலாவது காரணம், தென் இந்தியாவிலிருந்து வந்த புராதன காலத் தமிழ்ப் படையெடுப்புகள் பற்றிய நினைவாகும். இதை மறக்கச் சிங்களவர்கள் ஒரு போதும் அனுமதிக்கப்படுவதில்லை. துட்ட கெமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையில் நடந்த சரித்திர யுத்தம் பற்றி எந்தப்பள்ளிப் பையன் அறியான்? அனுராதபுரம் அல்லது பொலனறுவையிலுள்ள இடிபாடுகளைப் பார்க்கப்போவோருக்கு அடுத்தடுத்த தமிழ்ப் படையெடுப்புகள் காரணமாக சிங்கள நாகரிகத்தின் இந்தப் புராதன புகழ் படைத்த சின்னங்கள் நாசப்படுத்தப்பட்டன என்பது நினைவூட்டப்படுகின்றது. இரண்டாவதாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கடந்த நூற்றுண்டில் தமது பெருந் தோட்டங்களில் வேலை செய்ய சுமார் பத்து லட்சத்துக்கு மேலான தமிழ்த் தொழிலாளர்களைத் தென் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து அவர்களைக் கண்டிப் பிரதேசத்தின் மையத்தில் கொட்டிக் குவித்தார்கள். இவ்வாறு அவர்கள் வகுப்புவாதச் சச்சரவுக்கு இன்னொரு காரணமான இலங்கை இந்தியர் பிரச்சினையை உருவாக்கினார்கள்.

மூன்றாவதாக, கிறிஸ்தவ மிஷனரிமாரின் நடவடிக்கை காரணமாகவும் ஏகாதிபத்தியப் பிரித்தாளும் கொள்கை காரணமாகவும் வடக்கிலுள்ள தமிழர்களுக்குக் கிடைத்த கூடுதலான கல்வி வசதியினால் தமிழர்கள் தமது ஜனத்தொகை விகிதாசாரத்துக்குக் கூடுதலான அரசாங்க வேலைகளையும், டாக்டர், நியாயவாதிகள் முதலிய வேலைகளையும் பெற்றுக்கொண்டார்கள். 1929-31 உலகப் பொருளாதார நெருக்கடிக்குப் பின் சிங்கள மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் வேலையின்மை கடுமையான பிரச்சினையாகி வேலைக்காக அவர்கள் அரசாங்க சேவையை நோக்கித் திரும்ப ஆரம்பித்த போது, தமிழர்கள் ஏற்கனவே அங்கு அரண்கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

பொருளாதாரப் பிரச்சினைகள் மொழி நெருக்கடியின் அடிப்படையாக இருந்தன என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். 1956 க்கு முன் ஆங்கில மொழி அறிவு அரசாங்க சேவைக்கு அனுமதிப் பத்திரமாக விளங்கியது. இதனால் தமிழர்கள் சிங்களவர்களுடன் சமமான அடிப்படையில் அல்லது சிங்களவர்களிலும் சிறப்பான நிலைமைகளில் போட்டிபோட முடிந்தது. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டு சிங்களவர்கள், சிங்களம் மாத்திரம் உத்தியோகபூர்வமான மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அப்பொழுது அவர்களுக்கு அரசாங்க சேவையில் வேலை பெற நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். தொழில்மயமாகாத இலங்கையில் அரசாங்கம் மிகப் பெரிய தனியொரு முதலாளி மாத்திரமல்ல, அரசாங்க சேவைதான் மிகவும் லாபமான தொழிலுமாகும். மொழிப் போர் என்பது உண்மையில் முறையே ஒவ்வொரு மொழியைச் சேர்ந்த மத்தியதர வர்க்கத்தினரதும் அரசாங்க வேலைகளுக்கான போராகும். இதனால் தான் பொருளாதாரப் பரிகாரம் தவிர வேறெந்தப் பரிகாரமும் நிரந்தரமான விளைவுகளை ஏற்படுத்த முடியாது.

நான்காவதாக, பாக்குநீரிணைக்கு அப்பால் 4 கோடிக்கு மேலான மக்கள் பேசும் மொழியாகத் தமிழ் இருக்கின்றது. இது இந்தியாவிலிருந்து கலாசார ஆக்கிரமிப்பு ஏற்படுமென்ற அச்சத்தை உண்டாக்குகிறது.

ஐந்தாவதாக, தமிழ் சிங்களத்திலும் பார்க்கப் பழைய மொழியாகவும், வளர்ந்த மொழியாகவும் திகழ்கின்றது. இது சிங்களவர்கள் மத்தியில் ஒரு தாழ்வுணர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இந்தச் சரித்திர உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் இலங்கையின் மொழிப் பிரச்சினையின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ள

முடியாது. எம். ஈ. பீ. யின் வெற்றிக்குப் பின் பண்டாரநாயக்கா சமஷ்டிக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன் பேச்சு வார்த்தைகள் மூலம் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கப் பாரதூரமான முயற்சி ஒன்றை எடுத்தார். இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவுதான் பிரசித்தி பெற்ற பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தமாகும். இலங்கை முழுவதற்கும் சிங்களம் உத்தியோகபூர்வமான மொழி என்பதை ஏற்றுக் கொள்ளும் பொது நிலைமையில், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மொழிக்குச் சில பாதுகாப்புகளை அது ஏற்றுக் கொண்டது. தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றங்கள் பற்றிய சிக்கலான பிரச்சினைக்கும் அது சில சமரசங்களைக் கண்டது.

இந்த இடத்தில் வகுப்புவாதப் பிரச்சினைக்கும் குடியேற்றத்துக்கும் இடையிலுள்ள உறவைப் பற்றிச் சற்றுக் குறிப்பிடுவது அவசியம். 1935 காணிக் கமிஷன் அறிக்கைக்குப் பின்னர் டி.எஸ். சேனநாயக்கா தனது குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்தபோது இவற்றில் அநேகம் வரண்ட பிரதேசத்தில் அமைந்திருந்தன. ஆரம்பத்தில் அநேக குடியேற்றத் திட்டங்கள் வடமத்திய மாகாணத்தில் இருந்தன. ஆனால் சில குடியேற்றத் திட்டங்கள் தமிழர் தமது பாரம்பரியப் பிரதேசங்கள் என்றழைக்கும் வட, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டன. முழுத் தீவும் ஒரு காலத்தில் சிங்களவர்களுக்குச் சொந்தமாக இருந்தது உண்மை. ஆனால் நாம் கடந்த 4 நூற்றாண்டு காலத்தை எடுத்துப் பார்ப்போமென்றால் வட, கிழக்கு மாகாணங்களில் தாம் வசித்து வந்தார்கள் என்று தமிழர் கூறுவது கற்பனையானதல்ல.

எப்படி இருந்தாலும் தமிழ்த் தலைவர்கள் சிங்களக் குடியேற்றவாசிகள் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேறுவதை எதிர்த்தார்கள். தமிழர்கள் ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ளார்கள், ஆகவே இலங்கையில் ஒரு பகுதியைத் தமது பகுதி என்றழைக்கும் உரிமை அவர்களுக்குண்டா என்ற பிரச்சினையை இது எழுப்புகின்றது. இலங்கைத் தமிழர்கள் ஏற்கனவே ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ளார்களா என்ற கேள்விக்கு இல்லை என்றுதான் பதிலளிக்க முடியும். ஏனென்றால் ஒரு இன மக்களை ஒரு தேசிய இனம் என்று அங்கீகரிப்பதற்கு இருக்க வேண்டிய நிபந்தனைகள் பற்றிய ஸ்டாலினின் புகழ் பெற்ற வரையறைகளிலுள்ள ஒரு நிபந்தனை இலங்கைத் தமிழர்களுக்குக் கிடையாது. அவர்கள் ஒரு பொதுவான பொருளாதாரத்தைக் கொண்டிருக்கவில்லை.

தமிழர் இலங்கையின் மிகவும் செழிப்பற்ற, பொருளாதார ரீதியில் மோசமான சில பகுதிகளில் வாழ்கின்றார்கள். இலங்கை

யின் வட பகுதியில் ஒரு நதிதானும், ஒரு மலைதானும் கிடையாது. இதன் விளைவாகத் தமிழர் வேலை தேடி மலாயாவுக்கோ தென் இலங்கைக்கோ செல்ல வேண்டி ஏற்பட்டது. பிரிட்டிஷார் தமது தோட்டங்களில் வேலை செய்ய இறக்குமதி செய்த தொழிலாளர்கள் பேசும் அதே மொழியை இலங்கைத் தமிழர்கள் பேசுகின்றபடியால் அவர்களிற் பலர் இத்தோட்டங்களில் மேற்பார்வையாளர்களாகவும் லிகிதர்களாகவும் வேலை பெற முடிந்தது. மீதமுள்ளவர்கள் பெருந்தொகையாக அரசாங்க சேவையில் சேர்ந்தார்கள். பல குடும்பங்களில் குறைந்தபட்சம் ஒருவராவது அரசாங்க ஊழியராக இருக்கின்றார்.

இதுதான் தமிழர் வாழ்விலுள்ள முரண்பாடாகும். அவர்கள் இலங்கையின் ஒரு பகுதியில் வாழ்கின்றார்கள். இன்னொரு பகுதியில் பெரும்பாலும் சம்பாதிக்கின்றார்கள். தமிழர்கள் ஒரு பிரதேசத்தில் மட்டும் இருந்தால் தமிழர்களுக்கான ஓரளவு சுயாட்சிக் கோரிக்கையை எதிர்த்து நிற்க முடியாது. அது அடையக் கூடியதாகவும் இருந்திருக்கும். இதேபோல, இலங்கையின் இதரபாகங்களில் நிலச் சொத்துரிமையையும் வேலை பார்க்கும் உரிமையையும் தமிழர்கள் கைவிட முடியுமென்றால் தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றவாசிகளை எதிர்ப்பது தக்கதாக இருந்திருக்கும். இருப்பினும், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்குப் பின்னாலிருந்த அந்தரங்க நோக்கம் இறுதியில் தமிழர் பெரும்பான்மையாக விளங்கும் மாகாணத்தை சிங்களப் பெரும்பான்மை மாகாணமாக மாற்றுவதே என்பதிற் சந்தேகமில்லை. டி. எஸ். சேனநாயக்கா மூளைசாதுரியமுடைய ஒரு சிங்களத் தலைவர். அவர் ஒருபோதும் பகிரங்கமாக வகுப்புவாதம் பேசவில்லை. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்களமயமாக்கும் இலக்கை நோக்கி அவர் உறுதியாக உழைத்தார். இந்த ரகசியத்தை டி. எஸ். சேனநாயக்காவின் சகாக்களில் ஒருவரான வீ. ரத்தினநாயக்கா டி. எஸ். சேனநாயக்காவின் மரணத்துக்குப் பின் நிகழ்த்திய உரை ஒன்றில் அவிழ்த்துவிட்டார்.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் நிலவிய நிலைமைகளில் சாத்தியமான மிகச் சிறந்த சமரசமாக இருக்கலாம். ஆனால் அது சரிவருமா என்று பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. யூ. என். பி. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயன்றது. இந்த ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பை அணிதிரட்டு முகமாக அது கண்டிக்கு ஊர்வலம் ஒன்றை ஒழுங்குபடுத்தியது. பண்டாரநாயக்கா இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவாக ராஜதந்திரி என்ற முறையில் ஒரு வேளை, தன் உச்சக் கட்டத்துக்கு எழுந்தார். கண்டி போகம்பர மைதானத்தில் அவர் நிகழ்த்திய புகழ் பெற்ற

ஒரு வேளை அவருடைய மிகச் சிறந்த சொற்பொழிவு அவரிடம் இருந்த நல்லம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக எப்பொழுதும் நினைவுகூரப்படும். ஆனால் அவருடைய முகாமிலிருந்த இன வெறிச் சக்திகளும் கிளர்ச்சி செய்தார்கள். சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் அவருக்கு உதவி புரிவதற்குப் பதிலாக இத்தருணத்திற் தான் முட்டாள்த் தனமான ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தார்கள். ஒப்பந்தம் கிளித்தெறியப்பட்டது. சமஷ்டிக் கட்சியின் ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்துக்கு எதிராகத் தெற்கில் சிங்களப் போராளி கே. எம். பி. ராஜரத்தின தலைமையிலான தார் பூசும் இயக்கம் ஆரம்பித்தது. இந்த இயக்கத்தில் பொது இடங்களில் உள்ள தமிழ் வார்த்தைகள் மீது தார் தாராளமாகப் பூசப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

இரு தரப்பிலும் நெருக்கடி நிலைமை பெருகியது. இது முடிவில் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட மிகவும் மோசமான வகுப்புவாத ரத்தம் சிந்தும் கலவரத்துக்கு வழிகோலியது. இது நேர்மையான சிந்தனையுடைய இலங்கையர் எவரையும் வெட்கத்தில் தலை குனியச் செய்யும் சம்பவமாகும். எமது நாட்டின் வரலாற்றில் அது ஒரு நிரந்தரக் கறையாக விளங்கும். ஒரு நாளில் மனிதர் மிருகங்களாயினர். வேறு மொழி பேசும் குற்றமல்லாது வேறு எந்தச் சச்சரவுமில்லாத மனிதர் மீது பெற்றோலை ஊற்றி அவர்களைக் கொளுத்துமளவிற்கு அவர்கள் அதலபாதாளத்தில் விழுந்தார்கள்.

இந்தப் பயங்கரமான சம்பவம் ஏற்பட்டதற்கான உடனடிக் காரணத்தை ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்த சமஷ்டிக் கட்சியின் அதிதீவிரவாதத் தலைவர்களும், தார் பூசும் இயக்கத்தை அவிழ்த்துவிட்ட சிங்களவர் மத்தியிலான வெறி பிடித்த வகுப்புவாதிகளும், இயக்கம் பரவியபோது எதுவும் செய்யத் தயங்கிய பண்டாரநாயக்கா அரசாங்கமும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்ட போது தான் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. தெற்கில் போக இடமின்றி இருந்த தமிழர்களைக் கப்பல் மூலம் எடுத்துச் செல்ல வேண்டியிருந்தமை சமீப காலத்தில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான வகுப்புவாத உறவுகள் மிகவும் மோசமான நிலைமையை அடைந்ததைப் பிரதிபலித்தது.

இக் கலகங்கள் சமஷ்டிக் கட்சியின் அரசியல் பங்கலோட்டுத்தனத்தையும் பிரதிபலித்தது. அதன் தலைவர்கள் அவசரகால நிலைமையின் ஆரம்ப நாட்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள். இக் கட்சி, தான் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும்

தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கச் சக்தியற்றிருந்தது. ஆனால் அதன் மலட்டுப் போக்கை அது தொடர்ந்து நடத்தியது. வடக்கில் வகுப்புவாதம் பேசியது. நெற்காணி மசோதா, பாடசாலைகளை எடுத்தல் முதலியன போன்ற இரண்டு பண்டாரநாயக்கா அரசாங்கங்களும் முன்வைத்த ஒவ்வொரு முற்போக்கு நடவடிக்கையையும் எதிர்ப்பதன் மூலம் முற்போக்குச் சிங்கள அபிப்பிராயத்தைக் கூடப் பகைமைப்படுத்தியது. இரண்டு பிரிவிலான சிங்கள அரசியல் வாதிகளுக்கிடையில் தாம் மத்தியஸ்தகர்களாக நடந்து தமிழர்களுக்குச் சந்தர்ப்பவாதப் பேரப் பேச்சொன்றை செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தது. இது தமிழர்களின் உரிமையை இரண்டில் ஒரு சிங்களக் கட்சியின் மேசையில் விற்பனை செய்யும் முயற்சியே தவிர வேறெதுவுமல்ல. இத்தகைய சந்தர்ப்பம் 1965 ல் சமஷ்டிக் கட்சிக்கு வரத்தான் செய்தது. அது பற்றி பின்னர் பார்ப்போம்.

சிங்களம் மட்டும் மசோதா நிறைவேற்றப்பட்டதினால் எம். ஈ. பி. அரசாங்கத்துக்கிருந்த தமிழரின் ஆதரவு கெடுக்கப்பட்டது என்பதை உணர்ந்தபடியால் போலும் பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் தமிழின் நியாயமான உபயோகத்துக்கான மசோதா ஒன்றை நிறைவேற்றினார். 1956 தேர்தலில் பெரும்பாலும் சிங்களப் பிரதேசங்களிலுள்ள தமிழர்கள் யூ. என். பி.யை எதிர்த்து எம். ஈ. பி. யையே ஆதரித்தனர். இந்த மசோதா உண்மையில் ஒரு பாழடைந்த சட்டமாக இருந்தது. இச் சட்டத்தின் கீழ் எந்த விதிகளும் வகுக்கப்படவில்லை. பின்னர் ஏற்பட்ட யூ. என். பி. அரசாங்கம் ஒன்று அதைச் செய்ய முற்பட்ட போது அது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உக்கிரமான எதிர்ப்பைச் சந்தித்தது. என்னவென்றாலும் அது தமிழர்களுக்குத் திருப்தி தரவில்லை.

இக் காலத்தில் சிங்களம், தமிழ் இரண்டுக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கையில் ஊன்றிநின்ற, பெரும்பான்மை சிங்கள அங்கத்துவத்தைக் கொண்ட தேசியக் கட்சிகள் லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஆகும் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும். ஆனால் இது நீண்ட காலம் நிலைக்கவில்லை. பாராளுமன்ற சந்தர்ப்பவாதம், வகுப்புவாதம் ஆகியவற்றின் இரட்டை அமுக்கத்தின் கீழ் அவை இப்பிரச்சினையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிந்தனையை ஏற்றுக் கொண்டன.

சிங்களம் மட்டும் பிரேரணையின் சாதக பாதகங்களை இன்று வாதிடுவது பயனற்றது. ஆனால் முற்போக்குவாதி எந்தப் பிரேரணையையும் ஒரேயொரு வரையறையினூற் தான் சரியா? நியாய

மானதா? என்று பார்க்க வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை அது ஐக்கியப்படுத்துகின்றதா? பிளவுபடுத்துகின்றதா? இந்த அளவு கோலைக் கொண்டு பார்க்கும் போது சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்கும் பிரேரணை பிற்போக்கானது என்று தான் தீர்மானிக்க வேண்டும். அது நிச்சயமாக இரண்டாந் தர முரண்பாடொன்றை (சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலுள்ள முரண்பாடு) விசாலித்து பிரதான முரண்பாட்டை (ஏகாதிபத்தியத்துக்கும் சிங்கள - தமிழ் மக்களுக்குமிடையிலுள்ள முரண்பாடு) பின்தள்ளிவிட்டது. அது நண்பனை விரோதியாக்கி எதிரிக்குச் சந்தோசம் அளித்தது. 1958 இனக் கலவரங்களுக்கும் அது பிரதான காரணமாயிருந்தது.

திரு பண்டாரநாயக்காவின் எம். ஈ. பி. ஆகக் கூடினல் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டுள்ள சக்திகளின் தற்காலிக வசதித் திருமணமேயாகும். அது பண்டாரநாயக்கா என்ற திறமை படைத்த மனிதனுக்குப் பின்னுல் யூ. என். பி. மீதான பொது எதிர்ப்பினுல் ஐக்கியப்பட்டது. இத் தகைய வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட சக்திகளை ஒன்று சேர்த்து வைத்திருப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. 1959 ன் ஆரம்பத்தில் ஒரு விவசாயக் கூட்டுறவு வங்கி, நெல்லின் உத்தரவாத விலையைக் கூட்டுதல் ஆகியன பற்றிய பிரச்சினையில் பிளவு ஏற்பட்டது. பிலிப் குணவர்த்தனவும் அவருடைய சகாவான வில்லியம் சில்வாவும் எம். ஈ. பி.யில் இருந்து பிரிந்து சென்ருர்கள். இந்த வேளையில் நடைபெற்ற சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் குருணுகலை மாநாட்டில் பண்டாரநாயக்கா தனது முதலாவது கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சொற்பொழிவை நிகழ்த்த நிர்ப்பந்திக்கப்பட்டார்.

பண்டாரநாயக்கா மந்திரி சபையின் தீவிரவாதச் சக்திகள் விலகிச் சென்றபடியால் அவர் பிற்போக்குப் பகுதிகளின் கைதியானர். இப் பிற்போக்குப் பகுதிகளின் சில பிரகிருதிகள் 1959 செப்டம்பர் 25-ம் திகதி சதித்திட்டம் தீட்டிப் பண்டாரநாயக்காவைப் படுகொலை செய்தார்கள். அவருடைய விருந்தையில் அமர்ந்திருந்த புத்தகுரு ஒருவருக்கு மதிப்புத் தெரிவிக்க அவர் குனிந்த போது அப்புத்தகுரு தனது மஞ்சள் அங்கியின் மறைவில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்து பிரதமரின் மெல்லிய உருவத்துக்குள் குண்டுகளைப் பொழிந்தார். அத்தினம் பிரதமர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்குச் செல்வதற்குத் திட்டமிட்டு இருந்ததற்கு முந்திய தினமாகும். அடுத்த நாள் அவர் மரணமடைந்தார்.

அவருடைய மரணம் ஏற்பட்ட சூழ்நிலை, மரணத்துக்கு முன்னிலையில் அவர் காட்டிய துணிவு, தன்னைச் சுட்டவனுக்கு அவர் காட்டிய மன்னிப்புமனப்பான்மை ஆகியன காரணமாக அவரைச் சுற்றி ஒளிவட்டம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. அவரைத் தெய்வமாக்கும் முயற்சி கூடச் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையில் இலங்கை அரசியலில் அவருடைய ஸ்தானம் நிதானமான முறையில் மதிப்பிடப்படவில்லை. அவர் பின்பற்றியதாகக் கூறப்படும் ''பண்டாரநாயக்கா கொள்கைகள்'' பற்றிய கட்டுக்கதை ஒன்று எழுந்திருக்கின்றது. பண்டாரநாயக்கா கொள்கைகள் என்பதன் அர்த்தம் யாது என்று எவரையேனும் விளக்கம் தரும்படி கேட்டால் திருப்திகரமான பதில் கிடைப்பதில்லை. ஒருவேளை இந்தக் கருத்தின் தெளிவற்ற தன்மை காரணமாக யாரும் தன்னிஷ்டப்படி அதை விளக்கிக் கூறி தன்னிஷ்டப்படி செயற்படும் அதே வேளையில் பண்டாரநாயக்கா கொள்கையை விசுவாசமாகப் பின்பற்றுபவர்தான் என்று கூறிக் கொள்ள முடிகின்றது, இது தான் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பண்டாரநாயக்கா பின்பற்றிய கொள்கைகளில் ஒருவர் தெளிவான அம்சம் எதனையும் காணமுயன்றால் அவர் தன்னை இரண்டு உலகங்களுக்கிடையிலுள்ள ஒரு பாலமாக-இன்னும் இறக்காத ஒரு உலகத்துக்கும் இன்னும் பிறக்காத ஒரு உலகத்துக்கும் இடையிலுள்ள ஒரு பாலமாக-கருதினார் என்று தான் கூறலாம். இதனால் தான் இலங்கையின் தற்போதைய கட்டத்தை மாற்றத்திற்கானகாலம் என்றழைக்க அவர் பிரியப்பட்டார். அவர் மத்திய பாதை என்று, தான் அழைத்ததை வகுக்க முயற்சித்தார். முதலாளித்துவம், கம்யூனிசம் இரண்டினதும் கடைகோடி அம்சங்களைத் தவிர்த்தல் என்று அவர் இதற்கு அர்த்தம் கொடுத்தார். இது உண்மையில் தர்க்கத்துக்கு முரணான, விஞ்ஞான பூர்வமற்ற கருத்தாகும். இலங்கையைப் பொறுத்தவரை தெரிவு முதலாளித்துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையில் அல்ல. எப்படி இருந்தாலும் இந்த இரண்டுக்குமிடையில் மத்திய பாதை கிடையாது. இலங்கையைப் பொறுத்த வரையில் தெரிவு நவகாலனிசத்தின் அடிமை முறைக்கும் உண்மையான தேசிய சுதந்திரத்துக்கும் இடையிலாகும். பண்டாரநாயக்காவால் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் இறந்த போது நவகாலனிசத்தின் சங்கிலிகள், அவர் பதவியேற்ற காலத்திலும் பார்க்க இலங்கை மீது மேலும் இறுகியிருந்தன. வெகுஜனங்கள் அனுபவிக்கும் சுரண்டல் பழைய மாதிரிக் கடுமையாக இருந்தது. எந்த ஒரு பொருளாதாரப் பிரச்சினை தானும் தீர்க்கப்படவில்லை. மத்திய பாதை என்ற கருத்து உண்மையில் நிகழ்வு நிலை தொடர்ந்து

இருப்பதை அழகுபடுத்தும் முயற்சியாகும். தீவிர மாற்றத்தைப் பின்போடுவதற்கான சாக்குப் போக்காகும்.

குறைந்த பட்சம் வெளிவிவகாரத் துறையில் பண்டாரநாயக்காவின் கூட்டுச் சேராக் கொள்கை என்பது இலங்கை, ஏகாதிபத்திய வல்லரசுகளின் இயல்பான ஆதரவாளன் என்ற நிலையில் இருந்து நகர்ந்தது என்று அர்த்தப்படும். ஆனல் கூட்டு சேராமை என்பது ஒரு ஆற்றல் வாய்ந்த கொள்கை அல்ல. அது பெரும்பாலும் இரண்டு உலகங்களிலிருந்தும் நன்மையைப் பெற்று ஒன்றுக்கு எதிராக மற்றதைப் பாவிப்பது என்று அர்த்தப்படும். இருப்பினும் அது ஓரளவிற்கு நன்மை பயந்தது. அதற்கப்பால் சகல நாடுகளும் பக்கம் எடுக்க வேண்டும். இந்தியா போன்ற மிகவும் உரத்துக் கூச்சலிட்ட சில கூட்டுச் சேரா நாடுகள் தற்போது மிகவும் கூட்டுச் சேர்ந்த நாடுகள் மத்தியில் இருக்கின்றன. எப்படி என்றாலும் பண்டாரநாயக்காவின் கூட்டுச் சேராக் கொள்கைகள் சர்வதேசிய அரங்கில் இலங்கைக்கு முன்னெப்பொழுதிலும் பார்க்கக் கூடுதலான நண்பர்களைப் பெற்றுத் தந்துள்ளன.

பண்டாரநாயக்காவுக்கு ஒரு வாரிசு தோன்றவும் ஏதோ ஒரு வகை அரசியல் நிதானப்பாடு ஏற்படவும ஏறக்குறைய ஒரு வருடம் பிடித்தது. பண்டாரநாயக்கா மரணமடைந்த போது சபையின் தலைவரான சி. பி. டி. சில்வா அரசியல் ரீதியில் அதிகாரத்துக்கு வந்திருக்க வேண்டும். ஆனல் அவர் குறைந்த சாதியில் பிறந்துவிட்டார். இலங்கையில் நிலப்பிரபுத்துவத்துக்கு அதிர்ஷ்டமான முறையில் சி. பி டி. சில்வா அப்பொழுது நோய்வாய்ப்பட்டு தனது தலைவரின் மரணத்தின் போது லண்டனில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். மந்திரிசபை பிரதமர் பதவி வெற்றிடத்தை நிரப்ப டபிள்யூ. தகநாயக்காவைத் தேர்ந்தெடுத்தது. அது மிகவும் முட்டாள்த்தனமான தெரிவு. எப்படி அது செய்யப்பட்டது என்பதை யாரும் விளக்கிக் கூறவில்லை. நல்ல காலம், அது நீண்டகாலம் நிலைக்கவில்லை. தகநாயக்கா ஏறக்குறைய அரைவாசி அமைச்சரவையை வெளியே தள்ளிவிட்டு தனது ஆட்களை நியமித்தார். பாராளுமன்றத்தில் அவருக்குச் சவால் விட முடிவதற்கு முன், பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு, புதிய தேர்தல்களை நடத்தும்படி அவர் உத்தரவிட்டார். அவர் தேர்தலில் போட்டியிடப் புதிய கட்சி ஒன்றை அமைத்தார். தகநாயக்கா உட்பட இந்தக் கட்சியின் சகல அபேட்சகர்களும் தேர்தலில் தோல்வியுற்றார்கள். அநேகர் தமது கட்டுப் பணங்களை இழந்தார்கள்.

1960 மார்ச தேர்தல்கள் எந்தத் தீர்க்கமான முடிவையும் தர வில்லை. எந்தக் கட்சியும் பாராளுமன்றத்தில் பூரண பெரும்பான்மையைப் பெறவில்லை. ஆனால் யூ. என். பி. பாராளுமன்றத்தில் தனியொரு மிகப்பெரிய கட்சியாகியது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இரண்டாம் இடத்தைப் பெற்றது. இடதுசாரிக் கட்சிகள் மோசமான முடிவுகளைப் பெற்றன. மூன்று இடதுசாரிக் கட்சிகளும் தனித்தனியாகத் தேர்தலில் போட்டியிட்டு மோசமான தோல்வி கண்டன. என். எம். பெரேராவும், பிலிப் குணவர்த்தனவும் முறையே தமது கட்சிகளின் ஆதரவுடன் மாத்திரம் பிரதமராக விண் முயற்சி எடுத்த தேர்தலாக இத் தேர்தல் நினைவுகூரப்படும். இதிலும் மோசமான ஒருமுனைவாதத்தையோ, யதார்த்தத்திலிருந்து விலகிய நிலைமையையோ கற்பனை செய்ய முடியாது. லங்கா சமசமாஜக் கட்சி இத் தேர்தலில் "என். எம். மைப் பிரதமராக்குங்கள்" என்ற கோஷத்துடன் போட்டியிட்டது என்பதை இப்பொழுது நம்புவது கஷ்டம்.

டட்லி சேனநாயக்கா யூ. என். பி அரசாங்கம் ஒன்றை அமைக்க முயற்சித்தார். ஆனால் முதலாவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலேயே தோல்வி கண்டார். இந்த வேளையில் சமஷ்டிக் கட்சி யூ என். பீ. யுடன் சேர்ந்துகொள்ள மறுத்தது. 1960 ஜூலையில் புதிய தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது. இத்தேர்தலில் யூ என். பி. விரோத சக்திகள் மத்தியில் கூடுதலான பகுத்தறிவும் யதார்த்த நிலைமை பற்றிய விளக்கமும் நிலவின. திருமதி பண்டாரநாயக்கா இக்காலத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டார். கொட்டம் அடங்கிய லங்கா சமசமாஜக் கட்சி, மார்ச்சிலும் ஜூலையிலும் பொதுவான யூ. என். பி. விரோத ஐக்கிய முன்னணிக்காக வாதாடிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் இன்னும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராயில்லாத போதிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் போட்டியிடா ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளத் தயாராயிருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுக்கிடையிலான இந்தப் போட்டியிடா ஒப்பந்தங்களினால் யூ. என். பி. விரோத சக்திகளுக்கு தெளிவான வெற்றி கிடைத்தது. ஆனால் முற்றிலும் எதிர்பாராத விதத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தானே தனியாக அரசாங்கம் அமைக்கக் கூடிய அளவுக்குப் போதுமான ஆசனங்களைப் (75) பெற்றது. இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு தனது ஆதரவு தேவையாகவிருக்கும் ஒரு நிலைமை ஏற்படும் என்று நம்பிக் கொண்டிருந்த லங்கா சமசமாஜக் கட்சிக்குக் குறிப்

பாக ஒரு பெரிய ஏமாற்றமாக அமைந்தது. ஆகவே புதிய அரசாங்கம் முழுதாகச் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமாக (இடதுசாரிச் கட்சிகளின் ஆதரவுடன்) அமைந்தது. இது இரண்டாவது பண்டாரநாயக்கா அரசாங்கமாகும். இத்தடவை திருமதி பண்டாரநாயக்கா பிரதமரானார். அவர் ஒரு ஆசனத்துக்குப் போட்டியிடவில்லை. சம்பிரதாயங்கள் அனைத்தும் ஒதுக்கி விடப்பட்டு அவருக்குச் செனேட்டில் ஒரு ஆசனம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு அவர் உலகின் முதலாவது பெண் பிரதமரானார்.

ஆனால் திருமதி பண்டாரநாயக்காவுக்கு விஷயங்கள் கஷ்டமாகவிருந்தன. அவர் முதற்தடவை பிரதமராக வந்த காலம் கொந்தளிப்பான காலமாகும். மோசமாகிய பொருளாதார நெருக்கடி, சமஷ்டிக் கட்சியின் சத்தியாக்கிரக இயக்கம், உயர் ராணுவ பொலீஸ் அதிகாரிகளின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி, ஐக்கிய இடதுசாரி முன்னணியின் தோற்றமும் வீழ்ச்சியும், தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி, கூட்டரசாங்கத்தின் அமைப்பு, சிறீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கைச்சாத்திடு, இடதுசாரி இயக்கத்தில் மேற்கொண்டு பிளவுகள், பிரச்சினைக்குரிய பத்திரிகை மசோதா சம்பந்தமாக அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆகியன இக்காலத்தில் ஏற்பட்டன.

புதிய அரசாங்கம் பதவி ஏற்ற அதி ஆரம்பத்தில் அரிசி மானியத்தின ஒரு பகுதியை இல்லாது செய்யும் பிரேரணை ஒன்றின் மூலம் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பும் ஒரு முயற்சியை எடுக்க நிதி அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நிர்ப்பந்திக்கப்பட்டார். அரசாங்கத்தின் பாராளுமன்றக் கட்சி இதை எதிர்த்த படியால் அவர் இதில் பின்வாங்க வேண்டி ஏற்பட்டது. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப அவர் தனது பதவியிலிருந்து ராஜினமாச் செய்தார் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஐந்தாண்டு காலத்தில் ஐந்து தடவை அதன் நிதி அமைச்சரை மாற்ற வேண்டி இருந்தமை இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் மோசமான நிலைமையைக் காட்டுகின்றது. யாராலும் அதற்குப் பரிகாரம் காண முடியவில்லை. இறுதிப் பரிகாரம் (அது பரிகாரமல்ல) ஒரு அரசியல் பரிகாரமாகும். இது பற்றிப் பின்னர் குறிப்பிடுவோம்.

மொழிப் பிரச்சினையில் தாம் பெற்ற தோல்வி காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் தமக்கான ஆதரவு குறுகி வருவதையும் வகுப்புவாதக் கலவரத்தின் போது தமது கையாலாகாத் தனத்

தையும் கண்ட சமஷ்டிக் கட்சியின் தலைமை, மக்களின் மதிப்பை மீண்டும் பெற்று அவர்களின் ஆதரவைப் பேணுவதற்கு ஏதேனும் உணர்ச்சியைத் தூண்டும் விஷயத்தைச் செய்ய வேண்டி இருந்தது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக இயக்கம் ஒன்றை ஒழுங்குபடுத்தத் தீர்மானித்தார்கள். எதிர்பார்த்தது போலவே இதற்குப் பிரமாண்ட வரவேற்புக் கிடைத்தது. சமஷ்டிக் கட்சி இதற்குப் பெருமளவிலான ஆதரவை ஒழுங்குபடுத்தியது. தொடர்ந்து கூட்டம் கூட்டமான சத்தியாக்கிரகிகள் கச்சேரி வாசலை வெற்றிகரமாக முற்றுகையிட்டார்கள். இந்த இயக்கத்தின் வெற்றி சமஷ்டிக் கட்சித் தலைவர்களைத் தலை கிறுகிறுக்கச் செய்தது. அவர்கள் கலக வாடை வீசும் நடவடிக்கைகளிலும் தனியரசொன்றை ஸ்தாபிப்பது போன்ற முயற்சியிலும் ஈடுபட்டார்கள். தமது முத்திரைகளை விநியோகிக்க அவர்கள் தொடங்கினர்கள்.

அரசாங்கம் செயற்படத் தீர்மானித்தது. சத்தியாக்கிரகிகளை வெளியேற்றும்படி அதன் துருப்புகளுக்கு உத்தரவிட்டது. இதை எதிர்ப்பின்றி அவர்கள் செய்ய முடிந்தது. இத்தகைய நிலைமைக்கு முகம் கொடுக்க சமஷ்டிக் கட்சி திட்டங்கள் வகுக்கவில்லை. அவர்களுடைய இயக்கம் சரிந்து வீழ்ந்தது. மீண்டும், தமிழர்கள் தம்மத்தியில் மிகப் பெரும் ஐக்கியம் இருந்தபோதிலும் சற்றுத்தானும் வட அயர்லாந்திலுள்ள கிளர்ச்சி போன்ற ஒரு இயக்கத்தைக் கூட செய்யமுடியாமல் போனதற்குக் காரணம், பல தமிழர்களின் பொருளாதார நலன்கள் தென் இலங்கையில் இருப்பதாகும்.

1962 ல் உயர் மட்ட பொலீஸ் ராணுவ அதிகாரிகள் எடுத்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியும் ஏற்பட்டது. இலங்கைத் தொண்டர் படையின் கப்டன், கடற்படைக் கமாண்டர், துணைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், இதர பல உயர் மட்ட பொலீஸ் அதிகாரிகள். சிவில் அதிகாரிகள், பிரசித்தி பெற்ற வர்த்தகர்கள் ஆகியோர் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு அரசியல் சகாக்கள் இருந்ததினல் அது ஒரு போதும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஒரு பொலீஸ் அதிகாரி (இன்றைய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ஸ்ரான்லி சேனநாயக்கா) கால் நடுக்கமெடுத்து சதியைத் தனது மனைவிக்குக் கக்கித் தள்ள, அப்பெண் அதைத் தனது தந்தையான பி. டி. எஸ். குலரத்தினவிடம் சொல்ல அவர் அதை பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் கூறினர். சரியான நேரத்தில் அது நடைபெற்றது.

ஓரிரு சதிகாரர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். மற்றவர்கள் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் எனக் காணப்பட்டு சுப்றீம் கோட்டால் தீர்ப்பு வழங்கப்பட்டார்கள். ஆனால் பிரிவிக் கவுன்சிலில் சட்டப் பிரச்சினை ஒன்றை எழுப்பி விடுவிக்கப்பட்டார்கள். இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியும் அதில் சம்பந்தப்பட்ட பெரும் புள்ளிகளின் பெயர்களும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும். இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி சம்பந்தப்பட்ட பரிசீலனைகளின் போது ஏற்பட்ட சில சந்தேகங்களின் பேரில் அரசாங்கம் கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகாவை ராஜினாமாச் செய்யும்படி நிர்ப்பந்தித்தது. கொள்கையளவில் அவர் ராணியின் பிரதிநிதி. அவரை நீக்குவதற்கு முன் ராணியின் அனுமதியைப் பெறுதல் அவசியம். நுண்ணிய பேச்சுவார்த்தைகள் மூலம் அனுமதி பெறப்பட்டது. ஆனால் சில நிபந்தனைகளின் பேரில் இது செய்யப்பட்டது. ஒவ்வொரு பிரதமருக்கும் திரைக்குப் பின்னால் ஆலோசகராக இருந்தவரும் எமது தீய மேதை என்று சிலரால் அழைக்கப்பட்ட ஒருவருமான ஒலிவருக்கு இது அவமானம் தரும் முடிவாகும். திருமதி பண்டாரநாயக்காவின் சொந்தக்காரரான வில்லியம் கோபல்லாவ அவரின் இடத்தை எடுத்தார். சதிகாரர்கள் அனைவரும் பொது ஜன ஆதரவோ அனுதாபமோ அற்ற பிரசித்தி பெற்ற பிற்போக்குவாதிகள் என்ற காரணத்தால் அரசாங்கம் மீதான அனுதாபம் அதிகரித்தது.

பொருளாதார நெருக்கடி மோசமடைய ஆரம்பித்தது. வேலை நிறுத்தங்கள் அடிக்கடி ஏற்பட்டன. துறைமுக வேலை நிறுத்தம், வங்கி வேலை நிறுத்தம், வெள்ளவத்தை ஆலை வேலை நிறுத்தம் ஆகிய இலங்கை வரலாறு கண்ட மிக நீண்டகால வேலை நிறுத்தங்கள் இக்காலத்தில் நடைபெற்றன. அரசாங்கம் சம்பளத்தைக் கூட்டுவதில்லையென்ற கொள்கை ஒன்றைப் பிரகடனம் செய்து வேலை நிறுத்தங்களைக் கவனிக்காது விட்டு அத்தியாவசிய சேவைகளில் வேலை நிறுத்தங்களை முறியடிக்க ராணுவத்தைப் பாவிக்கும் கொள்கை ஒன்றை அனுசரித்தது. இது தொழிற்சங்க வட்டாரங்களில் பாரதூரமான புனராலோசனையைப் பெற்றது. 1963ம் ஆண்டின் முற்பாதியில் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் (சி. ரி. யு. எப்.) தொழிலாளி வர்க்கத்தின் தனித்தனியான வேலை நிறுத்த நடவடிக்கைகள் அனைத்தும் வெற்றியின்றி முடிவடைதலால் அரசாங்கப் பகுதி, தனியார் பகுதி இரண்டிலுமுள்ள முழுத் தொழிற் சங்க இயக்கமும், ஐக்கியப்பட்ட தொழிற் சங்க நடவடிக்கைக்காக பொதுவான கோரிக்

கைகளின் பின்னல் ஒன்று திரள வேண்டும் என்று பிரேரித்தது. சி. ரி. யு எப். அதன் அலுவலகத்தில் 1963 ஏப்பிரலில் சகல பிரதான தொழிற் சங்க மத்தியஸ்தானங்களினதும் முதலாவது மகாநாட்டையும் கூட்டியது. இவ்வாறு தான் முழுத் தொழிற் சங்க இயக்கத்தினதும் சார்பில் பிரசித்தி பெற்ற 21 கோரிக்கைகளை வகுத்த தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி தோன்றியது. இது இலங்கையில் ஏற்பட்ட மிக உயர்ந்தகட்ட தொழிற் சங்க ஐக்கியத்தைப் பிரதிபலித்தது. தனியார் துறை ஊழியர்களும் அரசாங்க ஊழியர்களும், லிகிதர்களும் லிகிதர்கள் அல்லாதவர்களும், தோட்டத் தொழிலாளர்களும், நகரத் தொழிலாளர்களும் எல்லோரும் முதற் தடவையாக தனியொரு பொது முன்னணியில் ஒன்றுபட்டார்கள். தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டியின் முதலாவது அகில இலங்கை மாநாடு 1963 செப்டம்பரில் சிலின்கோ ஹோட்டலில் நடைபெற்றது.

அதே வேளையில் இடதுசாரி இயக்கத்தின் ஐக்கியத்திற்கான இயக்கம் ஒன்று ஆரம்பித்தது. இடதுசாரி இயக்கத்தின் முதல் நாலு ஆண்டுகள் தவிர அதன் ஐக்கியமின்மை இந்த இயக்கத்தின் சாபமாகும். லங்கா சமசமாஜக் கட்சி பிளவுபட்டது; மீண்டும் பிளவுபட்டது. கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பிளவுக்குப் பின்னர் ஸ்தாபிக்கப்பட்டது. பிலிப் குணவர்த்தனவின் கோஷ்டி இன்னொரு பிளவின் விளைவாகும். இந்தக் கட்சிகளைப் பிளவுபடுத்திய தத்துவ வேற்றுமைகளை பொது மக்கள் புரிந்து கொள்ளவில்லை. தாம் பிற்போக்குக்கு எதிராகத் தீர்க்கமான முறையில் போரிட்டு தாம் மிகுதியும் கனவு காணும் முறையில் சுரண்டலுக்கு முடிவு கட்ட வழி கோலுவதற்கு சகல இடதுசாரிக் கட்சிகளும் ஐக்கியப்பட வேண்டும் என்று மக்கள் இயல்பாகவே விரும்பினார்கள்.

பிலிப் குணவர்தன 1951ல் லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து பிளவுபட்டுச் சென்றதும் அவருடைய கட்சி கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கிய முன்னணி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. இது கம்யூனிஸ்ட் கட்சி-லங்கா சமசமாஜக் கட்சி ஐக்கிய முன்னணி என்றழைக்கப்பட்டது. இந்த வேளையிற் தான் என். எம். பெரேரா தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சி நவ லங்கா சமசமாஜக் கட்சி என்று அழைக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி - லங்கா சமசமாஜக் கட்சி ஐக்கிய முன்னணி, இடதுசாரி ஐக்கியத்துக்கான விசாலமான இயக்கம் ஒன்றை நடத்தியது. இதனல் லங்கா சமசமாஜக் கட்சியில் இன்னொரு பிளவு ஏற்பட்டது. நவ லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமை

இடதுசாரி ஐக்கியத்தை எதிர்த்ததை ஆட்சேபித்து ரி. பி சுப சிங்கா, வில்லியம் சில்வா, ஸ்ரான்லி திலகரத்ன ஆகியோர் உட்பட ஒரு செல்வாக்கான பகுதி நவலங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றது. இந்தக் கோஷ்டி முதலில் பிலிப் குணவர்தனவின் கட்சியைச் சேர்ந்தது. ஆனல் ஓராண்டுக்குள் சுபசிங்கா, வில்லியம் சில்வா ஆகியோர் போன்ற ஒரு சிலரைத் தவிர சகலரும் கம்யூனிஸ்ட்கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். 1956 தேர்தல்களுக்குமுன் பிலிப் குணவர்தன கம்யூனிஸ்ட் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி ஐக்கிய முன்னணியை உடைத்துக் கொண்டு பண்டாரநாயக்காவையும் அவரது எம். ஈ. பி. யையும் சேர்ந்தார்.

1963 ல் குறிப்பாக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி திறம்பட இயங்காததாலும் அதிபிற்போக்குச் சக்திகள் மீண்டும் அதிகாரத்துக்கு வரும் ஆபத்துஇருந்ததாலும் இடதுசாரி ஐக்கியத்துக்கான இயக்கம் பெருவேகம் பெற்றது. 1963 மேதினத்தில் போதிய முன்னேற்றம் ஏற்பட்டு மூன்று இடதுசாரிக் கட்சிகளும் ஐக்கிய மேதினக் கூட்டம் ஒன்றுக்கு அறைகூவல் விடுத்தன. இடதுசாரி ஐக்கியம் பற்றிய சாதாரண மக்களின் உற்சாகத்தை அத்தினத்தில் நடைபெற்ற பிரமாண்ட ஊர்வலம், கூட்டம் ஆகியவற்றில் இருந்து கணிப்பிடலாம். முன்னரோ பின்னரோ இலங்கை இது போன்றதொன்றைக் கண்டதில்லே. முன்காணுதவாறு பல்லாயிரக் கணக்கணக்கானேர் ஆர்ப்பாட்டத்தில் சென்றது மாத்திரமல்ல. இன்னும் பல்லாயிரக் கணக்கானேர் இந்த அரிதான காட்சியைப் பார்க்க வழி நெடுகிலும் நிற்கக்கூடிய இடம் அனேத்திலும் நிறைந்திருந்தார்கள். பலருக்கு இது தமது நீண்டகால ஆசைக் கனவின் நிறைவேற்றமாகும். காலிமுகத் திடல் மனித சமுத்திரம் போல் காட்சியளித்தது. இதனுடன் ஒப்பிடும் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, யூ. என். பி. ஆகியவற்றின் போட்டிக் கூட்டங்கள் அற்பமாகத் தெரிந்தன. இத்தகைய காட்சிகளே சோஷலிச நாடுகளில் மேதின அணிவகுப்பு அல்லது தேசிய தினக் கொண்டாட்டங்களின் போது தான் காண முடியும். அடுத்த ஆண்டான 1964 ல் கூட்டரசாங்கத்தின் ஸ்தாபகத்தால் செய்யப்பட்ட துரோகத்தின் ஆழத்தைப் பூரணமாகக கணிப்பிட இந்த 1963 மே தினத்தில் இடதுசாரிச் சக்திகள் பிரமாண்ட அணிதிரட்டல் பிரதிநிதித்துவப்படுத்திய சக்தியை மனதில் வைத்திருக்க வேண்டும். ஆனல் மூன்று தலேவர்களும் மேதின ஊர்வலத்தின் முன்னணியில் ஜீப்பில் சவாரி செய்த அதே தருணத்தில் மக்கள் தம் மீது காட்டிய இந்த நம்பிக்கையை தாம் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றுர்கள் என்பது பற்றி வேறு கருத்துக்கள் கொண்டிருந்தார்கள்.

ஐக்கிய இடதுசாரி முன்னணியை ஏற்படுத்தும் சம்பிரதாய பூர்வமான உடன்படிக்கை சுதந்திரச் சதுக்கத்தில் வைபவம் ஒன்று டன் 1963, ஆகஸ்ட் 12 ம் திகதி ஹர்த்தால் நினைவுதினத்தின் போது கைச்சாத்திடப்பட்டது. ஆனால் அந்த ஆண்டு மேதினத் தின் உற்சாக நிலைமையைத் திரும்ப உருவாக்க முடியவில்லை. தலை வர்களின் நேர்மை பற்றிச் சந்தேகங்கள் எழ ஆரம்பித்துவிட்டன. இவை ஒன்றுடன் கால் நூற்றாண்டுக்கு மேலான காலம் சண்டை போட்டுக் கொண்டிருந்த மூன்று கட்சிகள். சடுதியாகத் தமது சக்திகளை ஐக்கியப்படுத்தத் தாம் உடன்பட்டுள்ளதாகத் தலைவர் கள் பிரகடனம் செய்தார்கள். ஆனால் யார் முன்னர் தவறு? அல் லது தவறு எங்கேயிருந்தது என்பது பற்றி சுயவிமர்சன அறிக்கை எதுவும் செய்யப்படவில்லை. வேறு வார்த்தைகளில் கூறின் பல் லாண்டுக்கால இடதுசாரி ஐக்கியமின்மைக்கு காரணம் கூறுவதற்கு அவர்கள் மக்களை நம்பவில்லை. அவசர அவசரமாக முடிக்கப்பட்ட ஐக்கிய உடன்படிக்கை, பாராளுமன்றத்தில் இயன்றளவு கூடுத லான ஆசனங்களை வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பவாத உடன் படிக்கை. அதில் கோட்பாடு எதுவும் இருக்கவில்லை என்ற முடி வுக்கு வருவதைத் தவிர்ப்பது கஷ்டம்.

ஐக்கிய இடதுசாரி முன்னணி ஓராண்டு காலம் கூட நிலைத்து நிற்கவில்லை என்பது இந்த மதிப்பீடு சரியென நிரூபிக்கின்றது.

1963 ல் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே ஒரு புறத்தில் மாக்சிசம் லெனினிசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகளினதும் மறு புறத்தில் நவீன திரிபுவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்தி களினதும் போராட்டம் நடைபெற்றது. முன்னர் சுட்டிக் காட்டியவாறு, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை பெரிய பிரித்தா னிய, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தத்துவார்த்தச் செல் வாக்கின் கீழ், பிரதானமாக திரிபுவாதத் தலைமையாகவிருந்தது. பொதுவான நம்பிக்கைக்கு எதிர்மாறாக 1956 க்கு முன்னர் இலங் கைக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப் பட வேண்டும். இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாவது கம் யூனிஸ்ட் அகிலம் கலைக்கப்பட்ட பின் ஸ்தாபிக்கப்பட்டது என் பது இதற்கான காரணமாகும். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுட னான முதற் தொடர்பு 1956 ல் நடந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி யின் 8 வது காங்கிரசில் செய்யப்பட்டது. அப்பொழுது இலங் கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்கள். அவர்களும் சீனக் கட்சி யின் காங்கிரசில் கலந்து கொள்ள வந்திருந்தார்கள்.

ஆனல் அரண்மனைப் புரட்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தை அபகரித்த பின், குருச்சோவ் நவீன திரிபுவாதத் துரோகப் பாதையை மேற்கொண்டு மாக்சிசம் லெனினிசத்தின் புரட்சிகரக் கோட்பாடுகளை வீசி எறிந்துவிட்டு சகல கம்யூனிஸ்ட் கட்சிகளையும் திரிபுவாத வட்டத்துக்குள் கொண்டுவர விரும்பினுர். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 21 வது காங்கிரஸ் முதல், சோவியத் கட்சியின் சகல காங்கிரசுகளுக்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தவருது அழைப்பிதழைப் பெற்றது. சோவியத் கட்சியின் 20 ம், 22 ம் காங்கிரசுகளின் எதிர்ப் புரட்சி முடிவை ஆதரிக்கும் தீர்மானம் ஒன்றை கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியில் நிறைவேற்ற வேண்டும் என்ற "கட்டளை"யுடன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியான பீட்டர் கெனமன் 1962 ல் நடைபெற்ற 22 வது காங்கிரசிலிருந்து திரும்பினுர். அவர் இந்தக் காங்கிரசில் ஏற்கனவே சோவியத் ஆணைக் கோலின்படி நடந்து கொண்டு, மத்தியக் கமிட்டியிலிருந்து எந்த அதிகாரமுமின்றி, குருச்சோவையும் அவருடைய திரிபுவாதத்தையும் எதிர்த்ததற்காக அல்பேனியாவைத் தாக்கியிருந்தார்.

ஆனல் கெனமனின் வேலை சுலபமாக இருக்கவில்லை. குருச்சோவ், ஸ்டாலின் மீதான தனது தாக்குதலைத் தொடுத்த சோவியத் கட்சியின் 20 வது காங்கிரஸ் பற்றி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஒருபோதும் உத்தியோக பூர்வமாக விவாதிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும். இதற்கான காரணம் என்னவென்றல் இந்தக் கட்சி ட்ரொஸ்கியவாதத்துக்கு எதிரான அதன் போராட்டத்தின் போக்கில் ஸ்டாலின் என்ற நாமத்தை உச்சரித்துக் கொண்டு பிறந்தபடியால் முழுக் கட்சியும் கூடுதலாக ஸ்டாலின் சார்பாக இருந்ததாகும். தலைமைக்கு இது தெரியும். ஆகவே விவாதத்தைச் செய்து பார்க்கத் துணியவில்லை. ஆனல் இனிமேலும் அதனைப் பின்போட முடியவில்லை.

இந்த வேளையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாக்சிச-லெனினிச மார்க்கத்துக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் நவீன திரிபுவாத மார்க்கத்துக்குமிடையிலான வேற்றுமை அம்பலத்துக்கு வந்தது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டிக்குள்ளே நடந்த விவாதம், சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட மார்க்கங்களுக்கிடையிலான வேற்றுமையைப் பிரதிபலித்தது. பெரும்பான்மை மத்தியக் கமிட்டியினர் நவீன திரிபுவாதப் பாதையை ஏற்றுக் கொண்டு மாக்சிச-லெனினிச வாதிகளுக்கு எதிராக வேட்டையாட ஆரம்பித்தனர். மாக்சிச-லெனினிசவாதிகள் சட்டதிட்டத்துக்கு விரோதமாகத் தலைமையினுல் மீண்டும் மீண்

டும் பின் போடப்பட்ட கட்சியின் 7 வது மாநாட்டைக் கூட்டி மாக்சிச-லெனினிச இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியாகத் தம்மை அமைத்துக் கொண்டார்கள். மாக்சிசம்-லெனினிசம்-மாசேதுங் சிந்தனையைத் தாம் அனுசரிப்பதாகப் பிரகடனம் செய்தார்கள் இதற்கு முன்னர் இரண்டு கோஷ்டிகளுக்கும் இடையிலான பலப் பரீட்சை ஒன்று 1963 டிசம்பரில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழுள்ள மிகப் பெரிய வெகுஜன ஸ்தாபனமான சி.ரி.யு.எப். பின் 13 வது காங்கிரசில் நடைபெற்றது. நவீன திரிபுவாதிகள் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டார்கள். சி ரி. யு. எப். பின் தலைமை மாக்சிச-லெனினிசவாதிகளின் கரங்களில் இருப்பது உத்தரவாதம் செய்யப்பட்டது.

1964 ம் ஆண்டில் பெருகிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஐக்கிய இடதுசாரி முன்னணி, தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி ஆகியவற்றின் இரட்டைத் தோற்றம் தொழிலாளி வர்க்கம் மத்தியில் வளர்ந்த அதிருப்திப் பேரலையைக் காட்டியது. திருமதி பண்டாரநாயக்கா பீதியடைந்தார். 1964 மார்ச் 21 ம் திகதி தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி அதன் 21 கோரிக்கைகளுக்கு ஆதரவாகக் காலிமுகத் திடலில் பிரமாண்டமான கூட்டம் ஒன்றை நடத்திய போது, நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் லொறிக் கணக்காக தொழிலாளர்கள் கூட்டத்துக்கு வருவது பற்றிய செய்தியை அறிந்தபடியால், கொழும்புக்கு வெளியே கூட்டமொன்றில் உரை நிகழ்த்தவிருந்த திருமதி பண்டாரநாயக்கா அதனை ரத்துச் செய்து விட்டு அலரி மாளிகைக்குள்ளே தங்கியிருந்தார்.

அவர் தாமதிக்காமல் செயற்படத் தீர்மானித்தார். வெளிப்படையான அடக்குமுறை முடியாத விஷயம். அவர் எதிரியின் கோட்டையை உள்ளிருந்து கைப்பற்றும் புகழ் பெற்ற தந்திரத்தைப் பாவிக்கத் தீர்மானித்தார். லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் விருப்பத்தை அவர் தெரிவித்தார். திருமதி பண்டாரநாயக்கா நீட்டிய விரலை மடிப்பதற்கு முன் என். எம். பெரேரா, பிலிப் குணவர்தன இருவரும் வேறு வேறு கதவுகளால் முண்டியடித்துக் கொண்டு அலரி மாளிகைக்குச் சென்றார்கள். பாவம்! கெனமன். பிரவேசத்தைக் கெஞ்சி மன்றாடிக் கொண்டு வாசலில் நின்றார். ஐக்கிய இடதுசாரி முன்னணி முடிந்துவிட்டது. சில மாதங்களுக்கு முன் அதனை ஸ்தாபித்த அதே ஆட்கள் அதனை அழித்தொழித்தார்கள். இது திருமதி பண்டாரநாயக்காவின் திறமையான தந்திர நடவடிக்கையாகும். ஒரு அடியில், அவருடைய கணவனுக்குத் தப்பி நழுவிய

இடதுசாரித் தலைவர்களின் கீழ்ப் பணிவை அவர் பெற்றுக் கொண்டார். அவரிலும் பார்க்கத் திறமை படைத்த கணைனுக்கு லெப்டினென்டுகளாக (உப தலைவர்களாக) இருக்க மறுத்த பேர்வழிகள் தற்போது ஏறக்குறைய அவருடைய காலடியில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்தார்கள். தொழிலாளி வர்க்கமும், இடசாரி இயக்கமும் படுமோசமாகக் காட்டிக் கொடுக்கப்பட்டன. என். எம். பெரேராவும் அவருடைய கட்சியின் இரண்டு சகாக்களும் அமைச்சர் பதவிகளைப் பெற்றூர்கள். கூட்டரசாங்கம் தோன்றியது. கூட்டரசாங்கம் என்பது சோஷலிசத்தின் துரோகிகளுடன் சேர்ந்து பூர்ஷுவா வர்க்கம் அமைக்கும் கூட்டு அமைச்சவை என்ற லெனினுடைய புகழ் பெற்ற வரையறை எமது நினைவுக்கு வருகின்றது. லெனின் இதைக் கூறியபோது 1964 ம் ஆண்டின் இலங்கையை மனதில் கொண்டிருக்க வேண்டும்.

லங்கா சமசமாஜக் கட்சி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் சேரத் தீர்மானித்ததன் ஒரு விளைவாகக் கட்சியில் இன்னெரு பிளவு ஏற்பட்டது. சமரக்கொடி, மெறில் பர்ணுந்து, பாலாதம்பு ஆகியோர் தலைமையிலான ஒரு கோஷ்டி பிளவுபட்டு ல. ச. ச. கட்சி (பு) வை அமைத்தார்கள். புரட்சி என்பதைப் "பு" குறிக்கின்றது. இந்தக் கோஷ்டி மீண்டும் பிளவுபட்டது. சமரக்கொடி அதனை விட்டுச் சென்று "பு" வை முன்னுக்குப் போட்டு 'பு' ல. ச. ச. க. வை அமைத்தார். இந்த இரண்டு கோஷ்டிகளும் யார் உண்மையான ட்ரொஸ்க்கியவாதிகள் என்பதையிட்டுச் சண்டைப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

தேர்தல் ஒன்று விரைவில் நடைபெறவிருந்த சமயத்தில் திருமதி பண்டாரநாயக்கா இந்தியாவுக்குச் சென்று இலங்கை-இந்தியர் பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தைகளை நடத்திஞர். சிறீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை 3 லட்சம் இந்திய வம்சாவளி மக்களுக்குப் பிரஜாவுரிமை கொடுக்க உடன்பட்டது. 5 லட்சத்து 45 ஆயிரம் பேரை இந்தியா ஏற்றுக் கொள்ள உடன்பட்டது. மிகுதிப் பேரின் கதி பின்னர் தீர்மானிக்கப்படும். இந்தப் புள்ளி விபரங்களை இலங்கை ஏற்றுக் கொண்டதே முந்திய சட்டங்கள் அநீதியானவை என்பதை மறைமுகமாக ஏற்றுக் கொள்கின்றது, ஆனல் இந்த ஒப்பந்தத்தின் பிரதான பலவீனம் என்னவென்ருல் இந்தப் புள்ளி விபரங்கள் சுயேச்சையான முறையில் அடையப் பெருவிட்டால் என்ன நடக்கும் என்பது பற்றி அது ஒரு வார்த்தைதானும் குறிப்பிடாது விட்டதாகும். 5 லட்சத்து 45 ஆயிரம் பேர் இந்தியப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்யாவிட்டால்? பலாத்காரம் பாவிப்பதா? இந்தப் பிரச்

சினை நேர்த்தியான முறையில் தெளிவற்றதாக விடப்பட்டது. இந்த ஒப்பந்தம் பிந்திய தேர்தல்களில் பிரதான அம்சமாக விளங்கிய போதும், இன்றுவரை (1971) அதை எந்தளவுக்கும் அமுல் படுத்த அவ்வளவு வேலை செய்யப்படவில்லை.

கூட்ட ரசாங்கத்தின் காலத்தில் ஏற்பட்ட பிரதான பிணக்கு, பத்திரிகை மசோதா சம்பந்தமானதாகும். இந்தப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள இலங்கையில் பத்திரிகைகளின் அமைப்பைப் புரிந்து கொள்வது அவசியம். 1945 முதல் இலவசக் கல்வி கிடைத்து வருவதால் இலங்கையில் நிலவும் உயர் மட்டக் கல்வியறிவு காரணமாக மக்கள் மனங்களைப் பாதிப்பதில் பத்திரிகைகள் முக்கிய பாத்திரம் வகித்தன. லேக் ஹவுஸ் என்று அழைக்கப்படும் அசோசியேட்டெட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் அக்காலத்தில் பத்திரிகைத் துறையில் ஆதிக்க அந்தஸ்தை வகித்தது. மூன்று மொழிகளிலும் பல தினசரிப் பத்திரிகைகளை அது நடத்தியது. டி. ஆர். விஜயவர்தன அதை ஸ்தாபித்தார். அவர் அப்பொழுதிருந்த பத்திரிகைகளை வாங்கி தனது கம்பெனியை வாஸ்தவத்தில் ஒரு ஏக போகமாக்கினார். இதற்கு எதிராக, முன்னர் பிரிட்டிஷாருக்குச் சொந்தமாகவிருந்த டைம்ஸ் ஒப் சிலோனும் தமிழ்த் தினசரியான வீரகேசரியும் தான் இருந்தன.

டி. ஆர். விஜயவர்தன சீர்திருத்தங்களின் தலைவர் என்று அடிக்கடி பாராட்டப்படுகின்றார். சுதந்திர இயக்கத்திலான அவர் பங்கும் போற்றப்படுகின்றது. தனது பத்திரிகைகள் மூலம் அவர் சுதந்திர இயக்கத்தை ஆதரித்தார். ஆனால் பத்திரிகைத் துறையில் அவருடைய முயற்சிகளைக் கொண்டு அவரை மதிப்பிடுவதென்றால் இலங்கையில் மிகப் பெரிய பொய் உற்பத்தி ஆலையையும் மிகப் பெரிய பிற்போக்கின் கோட்டையையும் ஸ்தாபித்த பெருமை அவரைச் சாரும். ஏரிக்கரை இலங்கையில் பிற்போக்கான சகல விஷயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. அரசாங்கம் முன் வைத்த ஒவ்வொரு முற்போக்கு நடவடிக்கையையும் அது எதிர்த்தது. அது செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகளைத் திட்டமிட்ட முறையில் மீறி (விஜயவர்தனவின் மரணத்துக்குப் பின்னர் என்ற போதும்) அதன் மூன்று டிரக்டர்களின் தனிப்பட்ட கணக்குகளில் ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய்களைக் குவித்த அதன் ஊழல் நடவடிக்கைகள் பற்றிய அரசாங்க கமிஷனின் சமீபத்தைய அறிக்கை, எல்லோரும் விரும்புவது போல் ஏரிக்கரைக்கு நிரந்தர ஓய்வு கொடுக்கும் போது அதன் கல்லறை வாசகமாக அமைய வேண்டும்.

ஏரிக்கரை ஆரம்பத்திலிருந்து இடதுசாரி இயக்கத்துக்கு எதிராகப் போராடியது. அது சகல விதமான ஆயுதங்களையும் - அவதூறு, மறைமுகமாகக் குற்றம் சுமத்தல், அரை உண்மைகள், நூற்றுக்கு நூறு வீதம் பொய்கள் இன்ன பிற பாவித்தது. இடதுசாரி இயக்கத்தைத் தாக்கப் பாவிக்க முடியுமென்றால் அது எதனையும் பாவிக்க தயாராயிருந்தது. பண்டாரநாயக்காவும் ஏரிக்கரையின் பூரண எதிர்ப்புக்கு மேலாக வெற்றிகாண வேண்டியிருந்தது. சிறந்த நாவல்லரான பண்டாரநாயக்கா அரசாங்க வானொலியை முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கு எதிராகப் பாவித்தார். ஆனால் அவருடைய வாரிசுகளுக்கு இந்தத் திறமை இருக்கவில்லை. அவர்கள் ஏரிக்கரையைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்தார்கள். ஏரிக்கரையை அரசு எடுக்க வேண்டும் என்ற பொதுஜனக் கோரிக்கை ஒன்று ஏற்கனவே எழுந்திருந்தது. கூட்டரசாங்கம் அப்பொழுது ஏரிக்கரையை எடுக்கும் மசோதா ஒன்றை முன் வைத்தது. இதில்தான் அது தவறிழைத்தது. அது அதன் அதிகாரத்தைப் பாவித்து (அவசியம் என்றால் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்து) ஏரிக்கரையை எடுத்த பின்னர் விவாதம் நடத்தியிருக்க வேண்டும். இத்தவறினால் இந்த முயற்சி தோல்வியடைந்தது.

ஏரிக்கரை அதன் பெரும் பீரங்கிகளைச் சமருக்காக நகர்த்தத் தொடங்கியது. அரசாங்கக் கமிஷனின் அறிக்கை, ஏரிக்கரையின் வாழ்வுக்கேற்பட்ட இந்த அச்சுறுத்தலை எதிர்த்து நிற்க எடுத்த நடவடிக்கைகளை எடுத்துக் கூறுகின்றது. ஓரிரு டிரெக்டர்கள் தாம் விரும்பியபடி செலவழிக்கப் பல லட்சம் ரூபாக்கள் ஒதுக்கப்பட்டன. 1964, டிசெம்பர் 4 ம் திகதி எதிர்த் தரப்புக்குச் சென்று அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம் வழங்கப்பட்டது என்ற குற்றச்சாட்டுப் பின்னர் பாராளுமன்றத்தில் செய்யப்பட்டது அரசாங்கக் கமிஷன் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்த பின்னர் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதரவாக எந்தச் சாட்சியத்தையும் பெறவில்லை என்று அறிவித்தது. ஆனால் அதே வேளையில், தமக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பெருந்தொகை பணத்தைத் தாம் இக்காலத்தில் எவ்வாறு செலவழித்தார்கள் என்பது பற்றி ஏரிக்கரை டிரெக்டர்கள் தக்க விளக்கம் கொடுக்கவில்லை என்று அது கூறியது. நாம் எமது சொந்த முடிவுகளைச் செய்து கொள்ளலாம்.

ஏரிக்கரைக்கு எதிரான இயக்கம் இலங்கை கண்ட மிகப்பெரிய இயக்கங்களில் ஒன்று. ஆனால் ஏரிக்கரை அரசாங்கத்தின் பலயீனமான தந்திரோபாயங்களுக்கு எதிராக வெற்றி கண்டது. லங்கா சமசமாஜக் கட்சியின் ''தங்க மூளைகள்'' பத்திரிகை மசோதாவை

வருத்து அதைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதைக் குழப்பி யடித்தார்கள். ஏரிக்கரையை எடுப்பதற்கான இன்னொரு மசோதாவை விவாதிக்கும் ஒரே நோக்கத்துக்காக பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. 1964 டிசெம்பர் 4 ம் திகதி சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான வாக்களிப்புத் தினத்தின் போது அரசாங்கத்தை ஒரு வாக்கால் தோற்கடிக்கக் கூடியளவிற்குப் போதிய தொகை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த் தரப்புக்குச் செல்வது ஒழுங்கு செய்யப்பட்டது. ல. ச. ச. க. (பு) வின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான சமரக்கொடியும் மெறில் பெர்னாந்துவும் யூ. என். பி. யுடனும் இதர பிற்போக்கு வாதிகளுடனும் சேர்ந்து வாக்களித்து 1965 ல் யூ. என். பி. மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு வழி கோலினர்.

ஆனால் திருமதி பண்டாரநாயக்கா பிரதமராக வந்த முதலாவது அரசாங்கத்தின் காலத்தில் பல முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். பாடசாலைகளை எடுத்தமை, இலங்கை வங்கியையும், இன்சூரன்சையும் தேசியமயமாக்கியமை, அந்நியப் பெற்றோலியக் கம்பெனிகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டமை ஆகியன முக்கியமான நடவடிக்கைகளாகும். அந்நியப் பெற்றோலியக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை பற்றிப் பிணக்கொன்று எழுந்தது. அமெரிக்க அரசாங்கம் அதன் உதவித் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தியது. அரசாங்கம் இறுதியில் அமெரிக்கர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தொகை ஒன்றை வழங்க ஒப்புக் கொண்டது. இந்த அரசாங்கத்தின் காலத்தில் தான் அமெரிக்க சமாதானப் "படை" யின் முதற்குழு (Peace Corp) ஆட்கள் இலங்கை வந்தார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

1965 தேர்தல் யாருக்கும் தீர்க்கமான வெற்றியை வழங்கவில்லை. ஆனால் யூ. என். பி கூடுதலான ஆசனங்களைப் பெற்ற தனியொரு கட்சியாகியது. சமஷ்டிக் கட்சியை இருதரப்பும் கவர்ந்திழுக்க முயற்சித்தன. ஏனென்றால் அதன் ஆதரவுடன் இரண்டில் ஒரு கட்சி அரசாங்கத்தை அமைக்க முடியும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, யூ என். பி., சமஷ்டிக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததைப் பின்னர் கடுமையாகக் கண்டித்த போதும், இக் கட்சி சமஷ்டிக் கட்சியுடன் உடன்படிக்கை ஒன்றுக்கு வரப் பெரிதும் முயற்சி எடுத்தது என்பதிலும் இந்த விஷயத்தில் தன்னால் இயன்றளவு விட்டுக் கொடுக்கத் தயாராய் இருந்தது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் டட்லி சேனநாயக்காவுக்கும் செல்வநாயகத்

துக்கும் இடையில் ஏற்பட்ட இரகசிய ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் யூ. என். பி. தேசிய அரசாங்கம் என்று கூறப்பட்ட அரசாங்கத்தை அமைத்தது. பிலிப் குணவர்தனவும், டபிள்யூ. தகநாயக்காவும் இதில் சேர்ந்திருந்தனர். இந்த ஒப்பந்தம் உண்மையென ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் வெளியிடப்படவில்லை. செல்வந்தத் தோட்டச் சொந்தக்காரரும் அதே வேளையில் விந்தையான முறையில் தோட்டத் தொழிலாளர்களின் மிகப்பெரிய தொழிற்சங்கத்தின் தலைவருமான தொண்டமானையும் யூ. என். பி. இழுத்தெடுத்துக் கொண்டது. தொண்டமான் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காக அல்ல தனது வர்க்கத்தின் நலன்களுக்காக, ஒரு வேளை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் வழங்கிய புத்திமதியுடன் இந்தக் குத்துக் கரணத்தை அடித்து 1948-ல் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களை உதைத்த அதே காலை நக்கினார்.

நிராகரிக்கப்பட்ட கூட்டரசாங்கக் கட்சிகள் முன்காணாத உக்கிரமான வகுப்புவாத இயக்கம் ஒன்றை அவிழ்த்து விட்டன. இந்த இயக்கத்தின்போது தமிழரின் உணவுப் பழக்கங்களை இழிவுபடுத்தும் கூற்றுக்கள் நிறைந்திருந்தன. அப்பொழுதுதான் 'மசால வடை'' கோஷம் தோன்றியது. லங்கா சமசமாஜக் கட்சியும் கெனமன் திரிபுவாதக் கும்பலும் இந்தக் கொச்சையான வகுப்புவாத இயக்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் பார்க்க சளைத்தவர்களாக இருக்கவில்லை.

1966, ஜனவரி 8-ம் திகதி டட்லி சேனநாயக்க தமிழ் மொழியின் நியாயமான பாவிப்பு மசோதாவின் கீழ் வகுக்கப்பட வேண்டிய விதிகளை அங்கீகரிக்க முயற்சித்தபோது எதிர்க்கட்சிகள் வகுப்புவாத வேலைநிறுத்தம் ஒன்றையும் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் ஒழுங்கு படுத்தினார்கள். இதில் ஒரு புத்தமத குரு சுடப்பட்டுக் கொல்லப் பட்டார். அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப் பட்டது. இந்த ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட தவறான வழியில் இழுத்துச் செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அரசாங்கத்தாலும் அரசுக் கூட்டுஸ்தாபனங்களாலும் பழிவாங்கப் பட்டார்கள். சமஷ்டிக் கட்சியின் சந்தர்ப்ப வாதம் பலன் தரவில்லை. சமஷ்டிக் கட்சி கேட்டுக் கொண்டபடி டட்லி சேனநாயக்க, மாவட்டங்களுக்கு ஓரளவு சுயாட்சி வழங்குவதற்காக மாவட்டசபை மசோதா ஒன்றை முன் வைத்தார். கூட்டுக்கட்சிகள் நாட்டிலும் யூ. என். பி. அணிகள் மத்தியிலும் பேரிய கொந்தளிப்பை ஏற்படுத்திய படியால் டட்லி அந்த மசோதாவைக் கைவிட வேண்டியேற்பட்டது.

விரைவில் மந்திரி சபையில் இருந்த சமஷ்டிக் கட்சிப் பிரதிநிதி ராஜிஞமாச் செய்தார். தேசிய அரசாங்கம் என்ற மாயத் தோற்றம் மறைந்தது.

இது தவிர, 1965 டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தின் காலத்தில் பொருளாதார நெருக்கடி மேற்கொண்டு மோசமடைந்தது. பவுண் ஸ்டேர்லிங் மதிப்பிறக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, உலக வங்கியின் கோரிக்கையின் படி ரூபா 20 வீதம் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. உலக வங்கி மதிப்பிறக்க விகிதத்தை ஒட்டித் திருப்தியடையாத படியால் வெளிநாட்டுச் செலாவணி உரிமைப் பத்திரத்திட்டம் என்ற வடிவத்தில் இன்னுெரு மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. அரிசிமானியம் அரைவாசியாகியது. ஆனல் முதற் கொத்து அரிசி இலவசமாகக் கொடுக்கப்பட்டது. வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்தது. வேலையின்மை பெருகியது. தனியார் துறையிலும் அரசாங்கத்துறையிலும் முறையே 1967 லும் 1968 லும் பொது வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. இலங்கையில் பெருகும் பொருளாதார நோய்களுக்கு அரசாங்கத்தின் ஒரேயொரு பரிகாரம் உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களிலிருந்து பெருமளவில் கடன் பெறுவதாகும். அது வேறெந்த அரசாங்கத்திலும் பார்க்கக் கூடுதலாகக் கடன் பெற்றது. இவ்வாறு அந்நிய ஏகாதிபத்தியத்துடன் இலங்கையைக் கட்டிப் போட்ட சங்கிலிகளை மேலும் இறுக்கியது.

அரசியல் ரீதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கெனமன் திரிபுவாதக் கும்பல் ஆகியன பொது வேலைத் திட்டம் ஒன்றின் அடிப்படையில் ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்தன. இந்த வேலைத் திட்டம் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் 1956 எம். ஈ. பி. தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பார்க்க மிகவும் பலவீனமானது.

இந்தக் காலத்தில் வடபகுதியில் ஒடுக்கப்பட்ட, ''தீண்டத்தகாத மக்கள்'' அனுபவித்து வரும் சமூக அடக்குமுறையும் அம்பலப்படுத்தப்பட்டது. தீண்டாமை, சாதிமுறை ஆகியவற்றை ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்தின் தலைமையில் இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் ஆலயப் பிரவேசப் பிரச்சினையில் அடக்குமுறையாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்கள். அரசாங்கம் உயர் சாதி இந்துக்களின் பக்கத்தையடுத்து, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதிராக அடக்குமுறையை அவிழ்த்து விட்டது. மாக்சிச-லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரம் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குப் பகிரங்கமாக ஆதரவளித்து அவர்களுக்குத் தலைமையளித்தது. இந்த மக்கள் துணிவுடன்

போராடினூர்கள். பல உயிர்த் தியாகங்கள் ஏற்பட்டன. இந்த இயக்கம் இத்தகைய, மிலேச்சத்தனமான அமைப்பு நிலவுவதை யும் சிங்களவர்களுடன் சம உரிமைகளைக் கோரும் அதே வேளை யில் தமது மொழியைப்பேசிய போதும் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களான அந்த மக்களை சமமானவர்களாக நடத்தத் தயாரில்லாத சமஷ்டிக் கட்சியின் ஆஷாடபூதித் தனத்தையும் அம்பலப்படுத்தியது.

1970 பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணிக்கும் யூ.என். பி. க்கும் இடையில் நேரடியான எதிர் மோதல் நடைபெற்றது. மாக்சிச-லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரம் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்ற மோசடியில் நம்பிக்கை வைக்க வேண்டாமென்று மக்களை எச்சரித்து தேர்தலை பகிஷ்கரிக்கும்படி அவர்களை அறைகூவி அழைத்தது. அந்த வேளையில் சிலரே இந்த அறைகூவலைப் பொருட்படுத்திய போதும் ஓராண்டு முடிவதற்கு முன் இந்த வேண்டுகோள் தவறற்றது என அநேக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத் தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலான பிரமாண்ட உரிமைக் கட்டளையுடன் அதிகாரத்துக்கு வந்த போதும் அதற்கு முடக்குவாத நோய் ஏற்பட்டது. மக்களின் எந்த அடிப்படைப் பிரச்சினையையும் தீர்க்க முடியாதிருந்தது. மாறாக வாழ்க்கைச் செலவு மேலும் வானளாவ உயர்ந்தது. வேலையின்மை மேலும் மோசமாகியது.

அதன் பாராளுமன்றப் பெரும்பான்மையின் மிகவும் பிர மாண்டத் தன்மையில் அதன் அழிவுக்கான விதைகள் இருந்தன. அதற்கு இத்தகைய பிரமாண்ட உரிமைக் கட்டளையை அளித்த மக்கள், தாம் எந்தச் சாக்குப் போக்குகளையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிவித்தார்கள். அரசாங்கத்தைப் பொறு த்து அதிருப்தி ஏற்படுவதற்கு நீண்ட காலம் பிடிக்கவில்லை. சந் திரனைப் பிடித்துத் தருவோமென்று வாக்குறுதி அளித்துவிட்டு புதிய அரசாங்கம், யூ. என். பி. சென்ற அதே பாதையில் செல்ல ஆரம்பித்தது. உலக வங்கிக்குக் கீழ்ப்பணிவாக இருக்கின்றது என்று யூ. என். பி. யை கூச்சலிட்டுக் கண்டித்துவிட்டு புதிய நிதி அமைச்சரான ட்ரொஸ்கியவாதி டாக்டர் என். எம். பெரேரா வின் முதற் செயல் பிச்சைப் பாத்திரம் ஏந்தி உலக வங்கியிடம் சென்றதாகும். ஓராண்டு முடிவதற்கு முன் அரசாங்கம் உலக வங்கி விதித்த நிபந்தனைகள் அனைத்தையும் நிறைவேற்றியது. பொரு ளாதார நெருக்கடியின் சுமைகளைப் பொது மக்கள் தலையில் ஏற்றி விட்டது. வெடிப்பு ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கவில்லை.

ஆறுவது அத்தியாயம்

# இலங்கையில் ஏற்பட்ட 1971 ஏப்ரல் சம்பவங்கள் பற்றிய ஓர் ஆய்வு

1971 ஏப்ரல் 5-ம் திகதி வெள்ளவாயாவில் வெடித்த துப்பாக்கி வேட்டுக்கள் ஜனதா விமுக்தி பெரமுனேயின் 'தோல்வி நிச்சயமான' கிளர்ச்சி ஏற்பட்டதைக் குறித்தன. அவை அன்று கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிளைக் கொன்றது மட்டு மல்ல, முதலாளித்துவப் பத்திரிகைகளும் முதலாளித்துவ அரசி யல் வாதிகளும் ஊக்கத்துடன் பரப்பி வந்த இலங்கை பற்றிய பல கட்டுக் கதைகளையும் தீர்க்கமான முறையில் உடைத்தெறிந் தன.

எமது நாட்டின் கொலைவிகிதம் கிட்டத்தட்ட உலகின் மூன் றுவது கூடிய கொலை விகிதம் என்ற போதிலும் இலங்கை, ''மைத்திரிய'' அகிம்சை ஆகிய தத்துவத்துடன் இணைந்த சமா தான-நாடென ''தம்ம தீப'' மெனக்-கருதப்பட்டது. புத்த பக வான் பரிநிர்வாணமடையு முன் செய்துகொண்ட விசேஷ வேண்டு கோளின்பேரில் சாக்ரா இலங்கையைப் பாதுகாப்பதைஇந்திராவின் விசேஷ கவனத்தில் பொறுப்பாக விட்டார். மாற்று இனத்தைச் சேர்ந்த ஒரே குற்றத்திற்காக மனிதர் உயிருடன் எரிக்கப்பட்ட 1958 வகுப்புவாதக் கலவரங்களின் போது காணப்பட்ட கொடிய பலாத்காரத்தைக் கொண்டிருந்த போதும், இலங்கை மக்கள் ஜன நாயக வாழ்வுடன் இணைந்த மக்கள், புரட்சியையும் பலா த்காரத்தையும் எதிர்ப்பவர்கள் என்ற கட்டுக்கதை உருவாக்கப் பட்டது. வாஸ்தவத்தில், கிளர்ச்சி ஆரம்பிப்பதற்கு சில வாரங் களுக்கு முன் கண்டியில் நடைபெற்றற பொதுக் கூட்டம் ஒன்றில், இலங்கை விசேஷமாகக் கடவுள்களால் பாதுகாக்கப்படுகின்ற படியால் நாட்டில் பலாத்காரம் எதுவும் ஏற்படவில்லை என்று திருமதி பண்டாரநாயக்கா கூறினர்.

இலங்கை மக்கள் முதலாளித்துவ ஜனநாயகத்தின் கோட் பாடுகளுடன் உறுதியாக இணைந்தவர்கள், பிரிட்டிஷ் துரைமாரி டமிருந்து ஜனநாயக அரசாங்கம் பற்றிய கலையை ஊக்கத்துடன் கற்றுக் கொண்ட ஒரே ஒரு நாடு இலங்கை. நாம் ஜனநாயக முறையின் மூலம் அரசாங்கங்களை வெற்றிகரமாக மாற்றியுள்

ளோம். மற்றப்படி கொந்தளிப்பான உலகில் இலங்கை ஸ்திர மான அரசாங்கமுடைய ஒரு பசுந்தரை - இது தான் இலங்கை பற்றிப் பிரச்சாரம் செய்யப்பட்ட மிகப் பெரிய கட்டுக்கதையா கும்,

இந்தத் தத்துவங்கள் அனைத்தும் தற்போது மண்ணோடு மண் ணாகியுள்ளன. அவர்கள் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்ட போதும், அவர்களுக்குத் தவறான தலைமை அளிக்கப்பட்ட போதும், அவர்கள் முற்றிலும் தவறான தந்திரோபாயங்களைப் பாவித்த போதும் அவர்கள் பிற்போக்கு நோக்கங்களுக்காகப் பின்னணியில் இருப்பவர்களால் பாவிக்கப்பட்ட போதும் தொகை தொகையான எமது இளைஞர்கள் - ஆண்களும் பெண்களும் - தமது உயிரைத் தியாகம் செய்ய முன்வந்த துணிவும் அவர்களுடைய அர்ப்பணிப்பும் எமது மக்கள் புரட்சிகரமற்றவர்கள் என்று கூறும் தத்துவத்தை நிரந்தரமாக அழித்தொழித்தது. எமது மக்கள் எவருக்கும் சளைத்தவரல்லர். இது பிற்போக்கு வாதிகளுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும். புரட்சிவாதிகளுக்கு ஊக்கமாக அமையட்டும்.

இரண்டாவதாக, மிகவும் ''ஜனநாயக ரீதியில்'' தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் முன்காணாத, மிகுதியும் கொடிய சர்வாதிகார அதிகாரங்களைக் கொண்டு ஆள வேண்டியிருக்கின்றது. இலங்கையில் முதலாளித்துவ ஜனநாயகம் எப்பொழுதும் ஒரு கேலி நாடகமாக இருந்து வருகின்றது. காலஞ்சென்ற திரு பண்டாரநாயக்காவின் 1956 எம். ஈ. பி. அரசாங்கம் முதல் அவசர கால நிலைமை ஒரு சாதாரண விஷயமாகியுள்ளது. திருமதி பண்டாரநாயக்காவின் 1960 அரசாங்கம், டட்லி சேனநாயக்காவின் 1965 அரசாங்கம் இரண்டும் எந்த அரசாங்கம் கூடுதலான காலம் அவசரகால நிலைமையின் கீழ் ஆட்சி புரியும் என்பதிற் போட்டி போட்டிருக்கின்றன. யூ. என். பி. சிறிய கால இடைவெளியால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்கடித்திருக்கின்றது. எப்படியென்றாலும் இரண்டு அரசாங்கங்களும் தமது ஆட்சிக் காலத்தில் பெரும் பகுதியை அவசரகால நிலைமையின் கீழ் 'ஒப்பேற்றி' யிருக்கின்றன. அதுதான் இலங்கையின் ஜனநாயகம்.

ஆனால் திருமதி பண்டாரநாயக்காவின் தற்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கம், இவை அனைத்தையும் தோற்கடித்து விட்டது. மூன்றில் இரண்டுக்கு மேலான முன்காணாத பாராளுமன்றப் பெரும்பான்மையுடன் அதிகாரத்துக்கு வந்த இந்த அரசாங்கம் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்யாமல் ஒரு ஆண்டு காலம் தானும் ஆட்சி நடத்த முடியவில்லை. அதன் வாழ்வுக்

காலத்தில்-அது எவ்வளவு குறுகியதாக இருந்தாலும்-அது தவிர்க்க முடியாததாய் இருந்தது. 1970 மே மாதத்தில் ஐக்கியமுன்னணி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த போது, இந்தப் பாராளுமன்றப் பெரும்பான்மையின் பிரமாண்ட தன்மையில் அதன் அழிவு விதைகள் அடங்கியிருக்கின்றன என்று மாக்சிய-லெனினிச வாதிகள் சுட்டிக் காட்டினார்கள். ஐக்கிய முன்னணி எதிர்க் கட்சியாக இருந்த போது மக்களுக்குத் தாராளமாக வாக்குறுதிகளை அளித்தது அவர்கள் வாக்குறுதியளியாத விஷயம் எதுவும் இருக்கவில்லை. தாம் எதிர்க் கட்சியாக இருந்த ஐந்து ஆண்டுகளில் தாம் ஒரு ''மகத்தான'' திட்டத்தை வகுத்துள்ளதாகவும் இத்திட்டம் தாம் அதிகாரத்துக்கு வந்ததும் அமுல்படுத்தப்படும் என்றும் அதன் தலைவர்கள் ஜம்பமடித்தார்கள். அவர்கள் மக்களிடம் ஒரேயொரு விஷயத்தைத் தான் கேட்டார்கள். நாம் மற்றக் கட்சிகளில் அல்லது குழுக்களில் தங்கியிருக்கத் தேவையில்லாத முறையில் எமக்குப் பூரண பெரும்பான்மையைத் தாருங்கள். மக்கள் இதற்குக் கூடுதலாகச் செய்தார்கள். அவர்கள் ஐக்கிய முன்னணிக்கு மூன்றில் இரண்டுக்குக் கூடுதலான பெரும்பான்மையை அளித்தார்கள். அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்தத் தடையும் இருந்ததாகத் தெரியவில்லை. கீழே விழுந்த எதிர்க்கட்சியும் தான் ஆதரவளிக்கும் என்று வாக்குறுதி அளித்தது. தேர்தல் வாக்குறுதிகளை அமுல்படுத்தாமைக்குச் சாக்குப் போக்கு எதுவும் இருக்க முடியாது. மக்கள் தம்மிடம் கேட்டதைச் செய்து விட்டார்கள். இப்பொழுது பலன் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

1970 மே தேர்தல் வெற்றிக்கு முன்னரும் கூட மாக்சிச-லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி, முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் என்ற கேலி நாடகத்தை நிராகரிக்கும் படியும் எந்த விதத்திலும் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டாம் எனவும் மக்களை அறைகூவி அழைத்த போது, தற்போதைய ஏகாதிபத்திய - பிரபுத்துவ - பெரு முதலாளித்துவ பொருளாதார கட்டுக்கோப்பு உடைக்கப்படாதிருக்கும் வரை, அதன் காவல் நாயாகச் செயற்படும் அடக்குமுறைத் தன்மை வாய்ந்த முதலாளித்துவ அரசு இயந்திரம் பலாத்காரம் மூலம் உடைத்தெறியப்படாதவரை முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் அதிகாரத்துக்கு வரும் எந்த அரசாங்கமும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என நாம் எச்சரித்தோம்.

இந்த எச்சரிக்கை சரியென நிரூபிக்கப்பட்டது. இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது சேனநாயக்கா, பண்டாரநா

யக்கா குடும்பங்களுக்கிடையிலான சங்கீதக் கதிரை விளையாட்டாக இருந்து வருகின்றது. 1947 முதல் 1956 வரை, 9 ஆண்டுகளாக சேனநாயக்கா வம்சம் ஆட்சி புரிந்தது. 1956 முதல் 1965 வரை அடுத்த 9 ஆண்டுகளாக பண்டாரநாயக்காக்கள் - கணவனும் மனைவியும் - ஆட்சி புரிந்தார்கள். பின்னர் 1965 முதல் 1970 வரை சேனநாயக்காக்கள் ஆட்சி புரிந்தார்கள். இப்பொழுது 'பென்டுலம்' பண்டாரநாக்கா குடும்பத்தின் பக்கத்துக்கு ஆடியுள்ளது. இந்த வேளையில் லங்கா சமசமாஜக் கட்சியும் கெனமன் திரிபுவாதக் கும்பலும் இந்த வாத்தியக் கோஷ்டியில் சேர்ந்துள்ளன. ஆனால் சமுதாய பொருளாதார அமைப்பில் எந்த அடிப்படையான மாற்றமும் ஏற்படவில்லை, இலங்கை தொடர்ந்து நவ காலனிச, அரைப் பிரபுத்துவ நாடாக இருந்து வருகின்றது. இலங்கைப் பொருளாதாரத்தின் உச்ச பீடங்கள் இன்னும் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் வசம் இருக்கின்றன. நாட்டின் தேசிய செல்வத்தின் பெரும் பகுதியை இன்னும் தந்து கொண்டிருக்கும் தேயிலை, ரப்பர்த் தோட்டங்களில் பெரும் பகுதி, நாட்டின் வங்கிகளில் பெரும்பாலானவை, இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகம், கப்பல் துறை இவை அனைத்தும் அந்நிய ஏகாதிபத்தியக் கரங்களில் இருக்கின்றன. இலங்கை அரசியல் மேடையில் ஆடும் பொம்மைகள் இலங்கையில் செய்யப்பட்டன. ஆனால் அவற்றை ஆட்டும் கண்ணுக்குத் தெரியாத கயிறுகள் இன்னும் லண்டனிலிருந்தும் வாஷிங்டனிலிருந்தும் இழுக்கப்படுகின்றன.

சோஷலிசம் பற்றி உரத்து வெற்றுக் கூச்சல்களை எழுப்பிய போதும் ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1970 மே மாதத்தில் அதிகாரத்துக்கு வந்த பின்னர் இந்த நிலைமையில் எந்த அடிப்படை மாற்றமும் செய்யப்படவில்லை. நாட்டின் பெரும் பகுதி வருமானத்தைத் தரும் தேயிலை, ரப்பர்த் தோட்டங்களும் வங்கிகளும் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் கரங்களில் தொடர்ந்து இருக்கின்ற அதே வேளையில் சோஷலிசத்தைக் கட்டியமைப்பது பற்றி அறிவிலிகள் அளந்து கொட்டுவதை மக்கள் கண்டார்கள். சோஷலிசம் பற்றிய புதிய வரைவிலக்கணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சோஷலிசம் என்றால் இன்னும் கூடுதலான கட்டுப்பாடு, கடின வேலை, வயிற்றை இறுக்குதல் என்று மக்களுக்குக் கூறப்பட்டது. ஆனால் உயர் இடங்களில் இதற்கேற்ற தியாகம் எதுவும் செய்யப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குத் தாமே அலவன்சைக் கூட்டினார்கள். ''சோஷலிச'' அமைச்சர்கள் தமக்கெனப் புதிய குளிரும் வெப்பமும் கட்டுப்படுத்தப்பட்ட (ஏயர் கொண்டிஷன்) அலுவலகங்களை அமைத்தார்கள். பிரதமரின் பிள்ளைகள் வெளிநாட்டுக்குக் கல்வி கற்கச் சென்றார்கள். பென்ஸ் கார்

களும் மாடமாளிகைகளும் அதிகரித்தன. பெரிதும் பிரசித்தம் கொடுக்கப்பட்ட வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டங்களைக் கூட அமுல்படுத்த முடியவில்லை. ஏனென்றால் நாட்டின் மிகப் பெரிய வீட்டுச் சொந்தக்காரர்களில் சிலர் அமைச்சரவையில் இருந்தார்கள். பிரகடனம் செய்யப்படும் என பெரிதும் வாக் குறுதியளிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரம் ஒருபோதும் வெளியிடப்படவில்லை.

இதே சமயத்தில், வாழ்க்கைச் செலவு வானளாவ ஏறிக் கொண்டே போனது. புதிய அரசாங்கம் அரசியல் ரீதியில் பழி வாங்கி முந்திய ஆட்சியால் சேர்க்கப்பட்ட 10,000 விவசாயப் படையினர் உட்பட முந்திய ஆட்சியால் அரச கூட்டுத்தாப னங்கள் பலவற்றில் வேலைக்கமர்த்தப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததினுல் ஏற்கனவே சகிக்க முடியாத நிலையிலிருந்த வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் மோசமாகியது. அரிசியையும் வட்டியற்ற கடனையும்வழங்கும் சீனுவின் தாராள குணத்தினுற் தான் அரசாங்கம் கூப்பனுக்கு இரண்டாவது கொத்தரிசியை வழங்குவது என்ற அதன் வாக்குறு தியை நிறைவேற்றவும் காலத்தைக் கடத்தவும் முடிந்தது. உலக வங்கியிலிருந்து கடன்கள் பெறும் முந்திய அரசாங்கத்தின் கொள் கையை மிகவும் கடுமையாக விமர்சித்த பேர்வழிகள் சடுதியாகப் பிச்சைப் பாத்திரம் ஏந்தி அதே உலக வங்கியிடம் கடன்களைக் கெஞ்சிக் கேட்டார்கள்.

நாடு பூராவிலும், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் விரக்தி யும் வெறுப்பும்ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை. மக்கள் ட்ரொட்ஸ்கிய வாதிகளிடமிருந்தும் திரிபுவாதிகளிடமிருந்தும் எதையோவெல்லாம் எதிர்பார்த்திருந்த படியால் இந்த விரக்தி மோசமாகியது. ட்ரொட் ஸ்கிய வாதிகளும் திரிபுவாதிகளும் தற்போது அரசாங்கத்தின் அங்க மாகியுள்ளார்கள். முன்னர் அவர்கள் மிகவும் புரட்சிகரமான உரைகளை நிகழ்த்தி மிகவும் புரட்சிகரமான வாக்குறுதிகளை அளித் தார்கள். ஆனல் அமைச்சர்ப் பதவிக்கான உடைகளை அணிந்து குளிரூட்டப்பட்ட அலுவலகங்களில் அமர்ந்துதான் தாமதம் அவர் கள் இன்றுள்ள அமைப்பினதும் நடைமுறையினதும் பலமான ஆதரவாளர்கள் ஆகினர். கூட்டரசாங்கம் என்பது முதலாளி வர்க்கம் சோஷலிசத்தின் துரோகிகளுடன் சேர்ந்து அமைத்துக் கொள்ளும் கூட்டு அமைச்சரவை என்று லெனின் சரியாக வரு ணித்தார்.

இந்த முன்னுள் இடதுசாரிக் கட்சிகள் மக்களின் நம்பிக்கை யை குறிப்பாக இளைஞர்களின் நம்பிக்கையைப் பூரணமாக இழ ந்து விட்டன என்பதிற் சந்தேகமில்லை. ஏப்ரல் சம்பவங்கள்

இந்தப் போலிப் புரட்சிவாதிகளை பூரணமாகத் தோலுரித்துக் காட்டின. இவர்கள், இலங்கை கண்ட மிகமோசமான ரத்தக் களரியையும் ஏற்கனவே 12 மாதகாலமாக சகல அரசியல் கருத்துக்களையும் கொண்ட 14,000 க்கு மேலான கைதிகளை விசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைத்திருப்பதையும் சற்றும் தயக்கம் இன்றிப் பொருட்படுத்தாதிருக்கும் இந்தக் கூட்டம், எதிர்ப்புரட்சிவாதிகள் என்பது நிர்வாணமாக அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இன்றைய நிலைமையில் ஆட்கொணர்வுச் சட்ட உரிமை (Habeas Corpus) பொதுக் கூட்டங்களை நடத்தும் உரிமை ஆகியன உட்பட சகல சிவில், ஜனநாயக உரிமைகளும் இல்லாதொழிக்கப்பட்டிருக்கின்றன. கடுமையாக அமுல்படுத்தப்படும் அவசரகால நிலைமையின் கீழ் வாஸ்தவத்தில் ஒரு ராணுவ ஆட்சி நிலவுகின்றது. அத்துடன் கடுமையான பத்திரிகைத் தணிக்கை, முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் பற்றிய விரக்தியைப் பூரணமாக்கியிருக்கின்றது. பிரமாண்ட பெரும்பான்மை மக்களால் (உண்மையில் 49 வீதம் மாத்திரம்) தெரிந்தெடுக்கப்பட்டது என்று கருதப்படும் மக்கள் அரசாங்கம் தற்பொழுது ஆயுதந் தாங்கிய பொலீசாரின் சக்தியைக் காட்டாமல் மக்களுக்கு முன்னால் வரமுடியவில்லை. ''மக்கள் பிரதமர்'' பலத்த ஆயுதப் பாதுகாப்பின்றி தனது வீட்டுக்கு வெளியே வர முடியவில்லை. முதலாளித்துவக் கட்சிகளில் எது அதிகார ஆசனங்களில் இருந்தாலும், உண்மையான அதிகாரம், சுரண்டலின் உண்மையான காவலர்களும் காவல் நாய்களுமான ராணுவம், கடற்படை, விமானப் படை, பொலீஸ் படை ஆகியவற்றிடமே இருக்கின்றது என்ற மாக்சிச-லெனினிச வாதிகளின் ஆய்வு முழுக்க முழுக்கச் சரியென நிரூபிக்கப்பட்டிருக்கின்றது இவற்றின் அதிகாரிகள் இன்னும் சன்ட்ஹேர்ஸ்டிலும், நியூ-ஸ்கொத்லான்ட் யார்ட்டிலும் பயிற்றப்படுகின்றனர். உதாரணத்துக்கு ஒரு கிராம சேவகர் போன்ற ஒரு சிறிய அதிகாரி, தெரிந்தெடுக்கப்படாத அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சிறு உத்தியோகஸ்தர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அல்லது மாநகர சபை உறுப்பினரை சிறையில் தள்ள முடிந்தது. அதே வேளையில் பிரதிநிதிகள் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எல்லோரும் என்ன செய்வதென்றறியாது கபோதித்தனமாக, பேச்சுரிமை கூட இல்லாது பார்த்துக் கொண்டிருந்தனர். இலங்கை உற்பத்தி செய்த மிக உரத்துக் கத்தும் தவளைகள் பிரதிநிதிகள் சபையில் இருந்த போதும் இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் அப்பொழுதைய நடத்தை முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் வரலாற்றில் மிகவும் கபோதித்தனமான ஒன்றாக நிச்சயம் அமைந்தது. ஒவ்வொருவரும் பீதியடைந்தார்கள். ஒவ்வொருவரும் சற்றுக் காலம் தமது தேர்தல்

தொகுதிகளுக்குப் போகத் துணியவில்லை. பிரதமர் கூடப் பாராளுமன்றத்தில் அரிதாகத் தோன்றினர். ராணுவமும் பொலீசும் தாம் விரும்பியவாறு அரசாங்கத்தை வைத்திருந்தன. இலங்கை இன்னொரு விஷயத்தை முதலாவது தடவையாக நன்கு செய்திருக்கின்றது. அதாவது சிவில் போர்வை போர்த்திய ஒரு ராணுவ அரசாங்கத்தை அது கொண்டிருந்தது.

இந்த இரட்டை அம்சங்களுடன் அதாவது முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகம் மீதான மக்களின் அதிருப்தியும், முன்னாள் இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்து அவர்கள் கொண்ட விரக்தியும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கையாலாகாத் தனமும் சேர்ந்து இலங்கை ஜனத்தொகையில் பெரும் பகுதியாக விளங்கும் கிராமிய இளைஞர்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் மத்தியில் ஜே. வி. பி. ஆதரவு பெறுவதற்கு வழிகோலின.

மார்க்சிச லெனினிச இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி திரிபுவாதக் கட்சியிலிருந்து பிரிந்து, 1964 ல் வித்தியாசமான கட்சியாகத் தன்னை அமைத்துக் கொண்டது முதல் மிகவும் உறுதியான முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் பங்கலோட்டையும் ட்ரொட்ஸ்கிய வாதிகள், நவீன திரிபு வாதிகள் ஆகியோரின் துரோகம், காட்டிக்கொடுப்பு ஆகியவற்றையும் அம்பலப்படுத்தியது. சமுதாய மாற்றத்துக்கான ஒரேயொரு வழியாக புரட்சிகரப் பாதையை முன்வைத்து வந்திருக்கின்றது.

ஆனால், 1956 ல் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, புத்திசாலித்தனமாக மத, மொழி, இனப் பிரச்சினைகளை பாவித்த அதே வேளையில் தனக்கு முன் இடதுசாரி இயக்கம் பரப்பியிருந்த தீவிர கோஷங்களை எடுத்துக் கொண்டது போலவே, தற்போது ஜே. வி. பி. யும் வகுப்புவாதம் (இந்திய எதிர்ப்பு), சாதி ஆகியவற்றையும் கூடுதலாகப் பாவித்து மாக்சிச லெனினிச வாதிகள் செய்த வேலையின் பலனைப் பெற்றது. இதனைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கலாம், கடந்த காலத்தில் டி. எஸ். சேனநாயக்கா முதல் ஆர். ஜி. சேனநாயக்கா, ஹேமா பஸநாயக்கா, கே. எம். பி. ராஜரத்தின வரையான அரசியல் வாதிகள் பிற்போக்கு அரசியலுடன் வகுப்பு வாதத்தை இணைத்தார்கள். ஜே. வி. பி. புதிய கலவை ஒன்றை முயன்று பார்த்தது. அவர்கள் இந்திய எதிர்ப்புக் கோஷத்துடன் புரட்சிச் சொற்றொடர்களைச் சேர்த்துக் கொண்டார்கள். இலங்கைத் தொழிலாளி

வர்க்கத்தின் கணுசமான பகுதியினரான இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் பகைடைக்காய்கள் எனக் காட்டப்பட்டார்கள். அத்துடன் சாதியையும் கபடத்தனமாகப் பாவித்துக் கொண்டார்கள்.

இது எங்களை ஜே. வி. பி. யின் இயல்பு பற்றிய ஒரு ஆய்வுக்கு இட்டுச் செல்கின்றது. அரசாங்கத்தின் தலைவர்கள் செய்த ஆய்வுகள் பல பாரதூரமற்றவையாக இருக்கின்றன. அவர்கள் ஜே. வி. பி. பிற்போக்குவாதிகளின் ஏஜன்ட் என்ற ஆய்வில் தொடங்கி, அவர்கள் அதிதீவிர இடதுசாரித் துணிச்சல் வாதிகள் என்ற ஆய்வில் முடிக்கின்றார்கள். ஆனால் ஜே. வி. பி. யின் உண்மை இயல்பு யாது?

இதில் கவனிக்க வேண்டிய முதல் அம்சம், தலைமை எத்தகைய சந்தேகத்துக்குரியது என்றாலும், அதன் சாதாரண உறுப்பினர்கள் வியந்து பாராட்டக்கூடிய அர்ப்பணிப்புச் சிந்தையும் இலங்கை காணாத அளவு தமது உயிர்களைத் தியாகம் செய்யும் துணிவும் நேர்மையுமுடைய புரட்சிகர உள்ளம் படைத்தவர்கள் எனவும் தெரிகின்றது என்பதாகும். இந்தத் தியாகம் வீணே சிந்தப்பட்டது தான் அநியாயம். தலைமையில் ஒரு பகுதி அந்தரங்க நோக்கங்களுக்காகப் பிற்போக்குச் சக்திகளால் பின்னாலிருந்து ஆட்டிப்படைக்கப்பட்டன என்பதிற் சந்தேகமில்லை.

இலங்கையில் வளரும் மாஓசேதுங் சிந்தனையின் செல்வாக்கை எதிர்க்க இந்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது என்பதிற் சந்தேகம் எதுவுமில்லை. ட்ரொட்ஸ்கியத்தின் தத்துவங்களும், சமாதான சகவாழ்வு, பாராளுமன்றம் மூலம் சமாதான மாற்றம் ஆகிய திரிபுவாதத் தத்துவங்களும் மென்மேலும் அவமானத்தைச் சந்தித்துள்ள படியால், இளைஞர்களை மாஓசேதுங் சிந்தனையின் புரட்சிகர உண்மைகளிலிருந்து திசை திருப்பி விடுவதற்காகப் பிற்போக்குவாதிகள் 'சேகுவேரா' என்ற நாமத்துடன் தொடர்பான போலிப் புரட்சித் தத்துவத்தைத் துணைக்கு அழைக்க வேண்டியிருந்தது. அவர்கள் தமது ஆதரவாளர்களை ஏமாற்ற மாஓசேதுங்கின் மேற்கோள்களை அரைகுறையாகப் பாவித்தார்கள். ஆனால் அவர்களுடைய தத்துவம் முழுக்க முழுக்க மார்க்சிச - லெனினிச எதிர்ப்புத் தத்துவமாகும்.

ஒப்பீட்டளவில் ஒரு சிறிய கூட்டம், ஆயுதந் தாங்கிய வீரசிகாமணிகள் அல்லது கொரில்லாக்கள் அரசு இயந்திரத்தைக் கைப்பற்றி விட்டு, அதன் பின்னர் மக்களை தமது பக்கம் வென்றெ

டுக்க முடியும் என்றசேகுவேராவின் தத்துவத்தை அவர்கள் பரப்பி னார்கள். இது பலமான தனிநபர்வாதமும், தொழிலாளி வர்க்கத் தின் மீது நம்பிக்கையற்ற குட்டி முதலாளித்துவ வர்க்கத்தைப் பொறுத்த வரை அவர்களுக்கு மிகவும் விருப்பமான ஒரு தத்துவ முமாகும். அது வெகுஜனங்கள் கலந்து கொள்வதைத் தவிர்க்கின் றது. அது தோழர் மாஓசேதுங் விளக்கிக் கூறிய மக்கள் யுத்தம் பற்றிய தத்துவத்துக்கு மிகவும் நேர் விரோதமான தத்துவமாகும்.

''புரட்சிகர யுத்தம் என்பது வெகுஜனங்களின் யுத்தம். வெகு ஜனங்களை அணிதிரட்டி அவர்களில் சார்ந்திருப்பதன் மூலம் தான், அதனை நடத்தமுடியும்'' என்று தோழர் மாஓசேதுங் எமக்குப் போதி த்திருக்கின்றார். வெகுஜனங்களின் ஆதரவு ஏறக்குறையப் பூரண மாக இல்லாதிருந்ததும், ஸ்தாபன ரீதியான தொழிலாளி வர்க்கத் திலிருந்து ஏறக்குறைய பூரணமாக தனிமைப்பட்டிருந்ததும் ஜே. வி. பி. யின் கூறப்படும் கிளர்ச்சியின் மிகவும் கவனிக்கத்தக்க அம்சமாகும்.

அவர்களுடைய ராணுவத் தந்திரங்களும் ஒரு நாட் புரட்சி யில் சடுதி வெற்றி என்ற துணிச்சல் வாதத் தந்திரங்களிலிருந்து பெறப்பட்டன. எதிரியின் உண்மையான பலத்தை முற்றிலும் புரிந் சொள்ளாமை, தோழர் மாசேதுங் முன் வைத்த நீண்ட கால யுத்தம் பற்றிய பிரசித்தி பெற்ற தத்துவங்களை முற்றிலும் அறிந்து கொள்ளாமை ஆகியவற்றினால் இது ஏற்பட்டது. எதி ரிப் பலத்தின் கேந்திர ஸ்தானங்களான அத்தனை தொகை பொ லீஸ் நிலையங்களின் மீது, ஏக காலத்தில் தாக்குதல் தொடுத்ததில் ஜே. வி பி பாவித்த தந்திரோபாயங்கள், கருத்தில் ஏறக் றை யச் சிறுபிள்ளைத்தனமானது. இதனால் உண்மையில் நிகழ்ந்தவாறு ஏற்பட்ட அழிவைத் தான் அடைய முடியும்.

ஜே. வி. பி. யின் தலைவர் ரொஸ்கோ லுமும்பாப் பல்கலைக் கழகத்தின் ஒரு மாஜி - மாணவன் மாக்சிச - லெனினிச அணிகளில் நுழைவதை இலேசாக்குவதற்காக சோவியத் விரோத நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கப்பட்டு சோவியத் யூனியனிலிருந்து வெளியேற் றப்பட்டார். தலைமையைக் கைப்பற்ற முடியாததனால் அவர் வெளியே சென்று ஜே. வி. பி. யை அமைத்தார்.

ஜே. வி. பி. நாங்கள் அறிந்தது போல் ஒரு அரசியல் கட்சி யாக ஸ்தாபனப்படுத்தப்படவில்லை. அது இரகசியமாகச் சரி, பகி ரங்கமாகச் சரி எந்த மாநாட்டையும் நடத்தவில்லை. தலைமை தேர்ந்தெடுக்கப்படவில்லை. தலைவரைச் சுற்றி கற்பனை செய்ய முடி யாத அளவுக்கு தவறான தனிநபர் வழிபாடு வளர்க்கப்பட்டது.

மார்க்சிச-லெனினிச வாதிகள் என்று தம்மை அழைத்துக்கொண்ட போதும், அவர்கள் ஜனநாயக மத்தியத்துவத்தை அறியாதவர்க ளாக இருந்தார்கள். இது ஆத்திரமூட்டல் சம்பவங்களை உண் டாக்கும் ஏஜன்டுகளும், மறைந்திருக்கும் பிற்போக்கு வாதிகளும் கூடச் செயற்பட்டு தமது பிற்போக்கு நோக்கங்களுக்காக இயக் கத்தை வழிநடத்திச் செல்வதற்கு மிகவும் சிறந்த நிலைமையாகும்.

ஜே. வி. பி. யைப் பற்றிய பல விஷயங்கள், தற்போதைக்கு ஒரு வேளை பூரணமாகத் தெளிவாக மாட்டா. முந்திய யூ. என். பி. ஆட்சியின் பொழுது அரசாங்கத்தின் விசேஷ பாதுகாப்பு ஆலோசகரால் (ஒரு முன்னாள் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்) ஜே. வி. பி. யின் நடவடிக்கைகள் பற்றித் தயாரிக்கப்பட்ட இரண்டு விசேஷ அறிக்கைகளும் இந்த இரண்டு அறிக்கைகளின் அடிப்ப டையில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரிய தரிசியால் தொகுக்கப்பட்ட இன்னொரு முழு அறிக்கையும் அப் பொழுதைய பிரதமருக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக் கைகள், ஜே. வி. பி. யின் நடவடிக்கைகளின் கேந்திர இடங்கள் பற்றியும், அதன் முக்கியமான ஆட்களின் பெயர்ப் பட்டியலையும் அவர்கள் பெற்ற பயிற்சியின் தன்மை உட்பட அவர்கள் ஈடுபட் டிருந்த நடவடிக்கைகள் பற்றியும் சம்பவங்கள் நிரூபித்த ஆறு சரியான தகவலைக் கொண்டிருந்தன என்று கூறப்படுகின்றது. ஆயுதப்படைகளின் தலைவர்களைக் கொண்ட பந்தோபஸ்துக் கவுன் சிலுக்கோ அமைச்சரவைக்கோ பிரதமர் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை. இந்த அறிக்கைகளையொட்டி எந்த நடவடிக் கையும எடுக்கப்படவில்லை. பொலீசார், தலைவர் உட்பட சில நபர்களை மாத்திரம் கைது செய்துவிட்டுப் பின்னர் அவர்களை விடு தலை செய்து அவர்களுக்கு அரசியல் ரீதியில் பெரும் பிரசித்தத் தைக் கொடுத்தனர்.

பாராளுமன்றத்தில் இது பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்ட போதும் முந்திய பிரதமர், தான் நடவடிக்கைகள் எடுக்காமல் விட்டதற்குத் திருப்திகரமான விளக்கத்தைக் கொடுக்கவில்லை. புதிய அரசாங்கமும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மர்மமானது இந்த அறிக்கைகள் சி. ஐ. டி. யின் விசேஷப் பிரிவு அலுவலகத்தில் இருந்தன. சிறிய மாற்றங்களுடன் அதே ஆட் கள் தொடர்ந்து பதவியிலிருந்தார்கள். அவர்கள் ஏன் நடவடிக் கை எடுக்கவில்லை? அல்லது நடவடிக்கை எடுக்கும்படி அரசாங் கத்துக்கு ஆலோசனை கூறவில்லை? எங்களுக்கு இதற்கான கார ணம் ஒருபோதும் தெரியாமலே போகலாம். ஜே. வி. பி. யின் நோக்கங்களை எப்பொழுதும் தெரிந்து கொண்டிருந்த அதே ஆட்

கள் தான் இப்பொழுதும் பரிசீலனைகளை நடத்திக் கொண்டிருக் கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

முதலாளித்துவப் பத்திரிகைகள் ஜே. வி. பி. க்குக் கொடுத்த பிரச்சாரமும் இதே போல மர்மமானது. முதலாளித்துவக் கும்ப லின் மூன்று பத்திரிகைகளில் ஒன்றிலாவது ஜே. வி. பி. யைப் பற்றி ஏதோ ஒரு செய்தியை தாங்கி வராத நாள் கிடையாது. இலங்கையில் வேறெந்த அரசியல் இயக்கமும் இத்தகைய பிரச்சார ஆதரவைப் பெறவில்லை. இதை நினைவூட்டுவதை இப்பத்திரிகை விரும்பமாட்டாது. ஆனால் சிலோன் டெயிலிநியூஸ் நடுப்பக்கத்தில் கட்டுரை ஒன்றை வெளியிட்டு விஜயவீராவை, டி. எஸ். சேனநா யக்கா, எஸ், டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகியோரின் அடுத்த வாரிசு என்று வருணித்தது. இவை அனைத்தும் தற்செய லானவையாக இருக்க முடியாது.

அடுத்ததாக ஆயுதங்கள், வெடி குண்டு மருந்துகள் ஆகிய வற்றின் பிரச்சினை எழுகின்றது. துப்பாக்கிகள் களவாடப்பட் டன என்ற பேச்சை நாம் ஏற்றுக் கொண்டாலும், இலங்கையில் முன்னொரு போதும் கண்டிராத இத்தகைய நவீன குண்டுகள் எங் கிருந்து வந்து சேர்ந்தன? இன்னும் கடுமையான பிரச்சினை, இவ் வளவு வெடி குண்டு மருந்து எங்கிருந்து கிடைத்தன? ஜே. வி. பி. செலவழித்ததாகக் கூறப்படும் பணத்தின் தொகைக்கும் விளக் கம் வேண்டும். குறிப்பிட்டதோர் சாதியைச் சேர்ந்த வர்த்தகர் கள் இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்தை விழுங்கி விட்டு ஆயிரக் கணக்கான ரூபாக்களைக் கக்கித் தள்ளினார்கள் என்பது, இதுவரை கொடுக்கப்பட்ட ஒரேயொரு திருப்திகரமான பதிலாகும். இது சாத்தியமான விளக்கம் ஆகும்.

எப்படியென்றாலும், ஜே. வி பி, சந்தேகமின்றிக் கொச்சை யான இந்திய எதிர்ப்பு வகுப்புவாத இயக்கம் ஒன்றை நடத்தி யது. சிங்கள அர்சைக் காப்பாற்றத் தமிழர்களின் ரத்த சமுத் திரத்தக்கூடாகத தாம் நீந்திக் கொண்டு செல்வார்கள் என்று கூட அவர்கள் பேசினார்கள். இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் தோட் டப் பிரதசங்களிலும் குறிப்பிடத் தக்க சம்பவம் எதுவும் நிக ழாமல் விட்டதற்கு இது காரணமாகும். ஜே. வி. பி. யின் அங் கத்தவர்கள் மத்தியில் அல்லது தலைவர்கள் மத்தியில் தமிழர்கள் இல்லை என்பது ஒரு உண்மையாகும்.

புதிய அரசாங்கம் அம்பலப்படுத்தப்பட்டு மக்களிடமிருந்து தனிமைப்படுவதற்குப் போதிய காலமளிக்காமல் கிளர்ச்சியை

ஆரம்பித்த காலமும் ஒன்றில் அரசியல் பக்குவமின்மையை அல்லது ஆத்திரமூட்டும் சம்பவங்களை உண்டுபண்ணும் ஏஜன்டுகள் இருந்ததைக் காட்டியது. ஏக காலத்தில் சகல பொலீஸ் நிலையங்களையும் தாக்கும் தந்திரோபாயத்தின் முட்டாள்த்தனத்தைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அரசாங்கத்தின் ஆயுதப் படைகள் எந்த வேளையிலும் இவர்களிலும் பார்க்க பெரிய சக்தியைத் திரட்ட முடியும். உண்மையில் அவ்வாறு தான் நடந்தது.

அரசாங்கத்தை விமர்சிப்பது, இடதுசாரிக் கட்சிகளின் முந்திய வேலைத் திட்டங்களிலிருந்து பொறுக்கியெடுத்த சில அம்சங்கள் போன்றவை தவிர ஜே. வி. பி. யிடம் தெளிவான அரசியல் வேலைத்திட்டம் எதுவும் இருக்கவில்லை. ஜே. வி. பி. அங்கத்தவர்களின் அரசியல் முதிர்ச்சி, அதிர்ச்சி தருமளவிற்கு மிகவும் குறைவானதாக இருந்தது. அவர்களுடைய அரசியல் கல்வி ஐந்தே ஐந்து வகுப்புகளில் அடங்கியிருந்தது. அதற்கு அப்பால் கற்றுக்கொள்ள அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. மாக்சிசம்-லெனினிசம் மாசேதுங் சிந்தனை பற்றிச் சிங்களத்தில் புத்தகங்கள் அரிதாக இருப்பதும் உண்மையில் ஒரு கஷ்டத்தை ஏற்படுத்தியது. ஆகவே லுமும்பாப் பல்கலைக் கழகத்தில் விஜயவீரா கற்றுக் கொண்ட புரட்சிகர சொற்றொடர்களுடன் செய்யப்பட்ட கொச்சையான வகுப்புவாதத்தின் கலவையே மாக்சிச - லெனினிசம் எனக் கருதப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உண்மையில் இந்த குறைந்த அளவு அரசியல் மட்டம், கண்டபடி ஆட் சேர்ப்பு ஆகியவற்றினுற் தான், கைது செய்யப்பட்டவர்களிற் பலர் தகவல் கொடுப்போராக மாறி சி. ஐ டி. க்கு தகவல்களைக் கொடுத்தனர்.

ஜே. வி, பி. பொது எதிரிக்கு எதிரான சகல புரட்சிகர வர்க்கங்களினதும் குழுக்களினதும் ஐக்கிய முன்னணியைக் கட்டியமைக்கவும் முயற்சி எடுக்கவில்லை.

அதே வேளையில், நாம் யதார்த்த பூர்வமாக இருந்து இந்த இயக்கத்தின் ஆக்கபூர்வமான அம்சங்களைச் சுட்டிக் காட்ட வேண்டும். ஜே. வி. பி. புரட்சித் தத்துவத்தை பிரசாரம் செய்தது. ஆனுல் மாக்சிச-லெனினிச வாதிகளைப் போலப் பூரணமாக அதனைச் செய்யவில்லை. ஏனென்றுல் கடந்த தேர்தல்களில் ஐக்கிய முன்னணி அபேட்சகர்களுக்கு ஜே. வி. பி. ஆதரவளித்தது. அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரும் கூட அரசாங்கம் சோஷலிசத்தைக் கட்டியமைக்குமென்றுல் தம்மைக் கலைத்துக் கொள்வார்கள் என்று கூடப் பிரகடனம் செய்தது. இவ்வாறு பாராளு

மன்ற சோஷலிசம் மீதான பிரமை தொடர்ந்து நிலவியது. ஆனால் பிரதான அழுத்தம் புரட்சியில் செலுத்தப்பட்டது.

கிராமிய மாணவர்களிலும் இளைஞர்களிலும் கவனத்தைச் செலுத்தியது அவர்கள் செய்த இன்னொரு சரியான விஷயமாகும். இந்த பரம்பரை லங்கா சமாமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன அவற்றின் முந்தியப் புரட்சிகரக் காலகட்டத்தில் நடத்திய அரசியல் வகுப்புகளைக் கேட்காத பரம்பரையாகும். இந்த இளைஞர்களுக்கு ஜே. வி. பி. அளித்த அரசியல் ரீதியிலான அர்ப்பணிப்புச் சிந்தனை, உண்மையில் குறிப்பிடத்தக்கது. தமது நடவடிக்கைகள் அனைத்தையும் இரகசியமாக நடத்தும் அவர்களுடைய முந்திய தந்திரோபாயங்கள் சரியானவை. ஆனால் ஐக்கிய முன்னணியின் தேர்தல் வெற்றிக்குப் பின் ஜே. வி. பி. இதனை நிராகரித்து விட்டு பகிரங்கமாக வேலை செய்ய ஆரம்பித்தது. கவர்ச்சிகரமான பொதுக் கூட்டங்களை நடத்துவதில் தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியது. இவ்வாறு அதன் ஊழியர்களைப் பகிரங்கமாக வெளிக்காட்டியது. அத்துடன் தமது இயக்கத்துக்குள் மற்றவர்கள் ஊடுருவ அனுமதித்தது. ஆயுதங்களை சேர்ப்பதிலும் குறைந்த பட்சம் ஒரு பகுதி உறுப்பினர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் அது காட்டிய திறமை பாராட்டத்தக்கது.

ஆனால், இந்த அம்சங்கள் அனைத்தும் அடிப்படையில் இந்த இயக்கம், பொதுவாக ஒரு எதிர்ப் புரட்சி இயக்கம் என்ற உண்மையிலிருந்து தப்பிச் செல்ல உதவ முடியாது. தலைமையின் பிரமையின் பிரதான பகுதி பிற்போக்கு சக்திகள் தன்னை ஆட்டிப் படைப்பதை அனுமதித்தது. எமது பிரதான எதிரிகள் யார்? எமது நண்பர்கள் யார்? என்ற கேள்விக்கு அவர்கள் சரியான பதிலளிக்கவில்லை. வேறு வார்த்தைகளிற் கூறின் அவர்கள் புரட்சியின் கட்டம் பற்றியும் அதன் உடனடி கடமைகளின் தன்மை பற்றியும் தவறாகப் புரிந்து கொண்டிருந்தார்கள். ஒரு ஏகாதிபத்தியவாதி தானும் உயிரிழக்கவில்லை. ஏகாதிபத்திய அல்லது நிலப்பிரபுத்துவ சொத்துக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பது இதற்குத் தெட்டத் தெளிவான நிரூபணமாகும். பெரும் முதலாளிகள் அல்லது நிலப்பிரபுக்களும் ஜே. வி. பி. யினால் சேதப்படவில்லை.

பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்படுத்தப்படக் கூடிய சகல புரட்சிகர சக்திகளினதும் ஐக்கிய முன்னணியைக் கட்டியமைக்கவும் எதுவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. அதன் விளைவாகத் தியாகம் செய்யப்படவிருந்த எண்ணற்ற இளம் புரட்சிகர உயிர்

கள் பற்றி எதுவும் சிந்தியாது ஜே. வி. பி. தலைமை பாவித்த முற்றிலும் தவறான சிறு பிள்ளைத்தனமான - ராணுத் தந்திரங்கள் பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். எந்தப் புரட்சிப் போராட்டத்திலும் தியாகம் தவிர்க்க முடியாதது. அனாவசிய மான தியாகங்களைப் புரட்சிவாதிகள் தவிர்க்க வேண்டும்.

ஆனால் இவையனைத்தும் அரசாங்கமும் அதன் பிற்போக்கான அரசு இயந்திரமும், பிரதானமாகப் பொலீசாரும் ராணுவமும் அவிழ்த்துவிட்ட வெகுஜன அடக்குமுறைச் சாக்குப் போக்காக முடியாது. கடுமையான அவசரகால நிலைமை, பூரணமான பத்திரிகைத் தணிக்கை ஆகியவற்றின் கீழ் நாடு உண்மையில் ராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது. இலங்கை அதன் வரலாற்றில் ஒரு போதும் கனவு காணாத இரத்தக் களரிக்கூடாகச் சென்றது.

அப்பொழுது அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்திருந்த பேராசிரியர் றெனி டியூமொண்ட் பாரிஸ் லா நொவெல் ஒப்சேர்வற்றறில் எழுதினார். தலைநகரத்திலிருந்து வடக்கு நோக்கிப் பாயும் ஆற்றில் பிரேதங்கள் மிதந்து செல்வதை, நான் விக்ரோறியாப் பாலத்திலிருந்து கண்டேன். நூற்றுக் கணக்கான மக்கள் அசையாது அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது ஏப்பிரல் 12 ம் தேதி நிகழ்ந்தது. இந்த ஆட்களைக் கொன்ற பொலீசார் மக்களைப் பயமுறுத்துவதற்காக பிரேதங்களை ஆற்றில் மிதக்க விட்டார்கள்.

அரசாங்கத்துக்கு ஏற்படும் ஆபத்தை வேண்டுமென்றே மிகை மதிப்பீடு செய்து உள்ளூரிலுள்ள சகல பிற்போக்கு ஆயுதப்படைகளும் மக்கள் மீது அவிழ்த்து விடப்பட்டது மாத்திரமல்ல, இந்திய விஸ்தரிப்பு வாதிகள் மேற்கத்தைய ஏகாதிபத்திய வாதிகள், சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகள் ஆகிய அனைவரினதும் வெளிநாட்டு உதவியும் பாவிக்கப்பட்டது. முன்காணாத முறையில் மக்களை வேட்டையாடிப் பயமுறுத்த இந்தியக் கடற்படையும் ஹெலிகொப்டர்களும் ரஷ்ய மிக் விமானங்களும் ஆங்கில அமெரிக்க ஆயுதங்களும் வெடி குண்டு மருந்துகளும் பாவிக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் அமெரிக்கக் கடற்படையை அழைப்பது பற்றிக் கூடப் பேசப்பட்டது. கொரிய எதிர்ப்பு, சீன எதிர்ப்பு ஆத்திரமூட்டல்களும் செய்யப்பட்டன. எந்த வெளிநாட்டுச் சக்தியும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று பின்னர் கூறிய போதும் வட கொரியத் தூதரகத்தின் அலுவலர்களும் வெளியே அனுப்பப்பட்டார்கள். சீன செய்தி நிறுவனத்தின் அலுவலர்களும் சீன என்சினியர்களும் மூன்றரைக் கோடி ரூபா வேலைத் திட்டத்தை

நிர்மாணித்துக் கொண்டிருந்த பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத் தலமும் பொலீசாரால் சோதனையிடப்பட்டன. மாஓ சேதுங்கின் நூற்றுக் கணக்கான புத்தகங்கள் அனைத்தையும் தீயிட்டு எரித்தார்கள்.

சீனர்களின் சரியான ராஜ தந்திர நடத்தை. அவர்கள் வழங்கிய தாராளமான உதவி (உண்மையில் கிளர்ச்சிக்கு முன்னர் வாக்குறுதியளிக்கப்பட்டவை) ஆகியன தான் அரசாங்கம் பூரணமாக ஏகாதிபத்திய முகாமுக்குள் விழாமல் தடுத்து நிறுத்தின. 15 கோடி ரூபா வட்டியற்ற கடனை வழங்குவதென்ற சீனாவின் வாக்குறுதியை அமைச்சரவை ஒரு மாத காலம் தளர்த்தியே மக்களுக்குத் தெரிவித்தது என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகள், சமூக ஏகாதிபத்தியவாதிகள், இந்திய விஸ்தரிப்பு வாதிகள் ஆகியோரிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட ராணுவ உதவி தனது அரசாங்கத்தின் கூட்டுச் சேராக் கொள்கை சரியென்பதை நன்கு நிரூபித்திருக்கின்றது என்று காட்ட திருமதி பண்டாரநாயக்கா பகீரதப் பிரயத்தனம் செய்திருக்கிறார். உண்மையில் இது இன்னொரு நாட்டின் உள் விவகாரங்களில் அப்பட்டமான தலையீடு தவிர வேறெதுவுமல்ல. குறிப்பாக இலங்கையைச் சுற்றிப் பாதுகாப்பு வலையம் ஒன்றை அமைத்த இந்தியக் கடற்படையின் தாமதமற்ற செயல், சில இந்திய வட்டாரங்களில் பிரகடனம் செய்யப்பட்ட விஸ்தரிப்பு வாதக் கருத்துக்களை மனதிற் கொண்டு பார்த்தால் எதிர்காலத்துக்கு கெட்ட சகுனமாக அமைகின்றது. அந்நிய ராணுவ உதவியினுற் தான் இந்த அரசாங்கம் தப்பிப் பிழைத்துக் கொண்டது என்ற உண்மையின் அடிப்படையில் அது இனிமேலும் மக்கள் அரசாங்கம் என்ற பெயருக்குப் பாத்தியதை கொண்டாட முடியாது. இந்த நெருக்கடியான தருணத்தில் மக்கள் எங்கிருந்தார்கள்? அவர்கள் கிளர்ச்சிவாதிகளை ஊக்கத்துடன் ஆதரிக்கவில்லை என்றாலும் கூட, தாம் தேர்ந்தெடுத்து விட்ட அரசாங்கத்துக்கு ஆதரவாக அவர்கள் ஏன் எழவில்லை? மக்களின் பாராமுகத்துக்கான ஒரு காரணம், பொலீசாரும் ராணுவமும், குற்றம் புரிந்தவர்கள் - குற்றமறியாதவர்கள் அனைவர் மீதும் இழைத்த முன்காணாத அட்டூழியங்களாகும். கண்ட இடத்தில் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். வெறும் சந்தேகம் அல்லது பொய் முறைப்பாட்டின் பேரில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டார்கள். பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். இளைஞர்கள் குறிப்பிட முடியாத கொடிய விதத்தில் சித்திரவதை செய்யப்

பட்டார்கள். இவற்றின் காரணமாக அவர்கள் வாழ்வு முழுவதும் ஊனப்பட்டவர்களாயுள்ளார்கள். அவசர கால நிலைமை இருப்பதும் ஆயுதப் படைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சர்வ சம்பூரணமான சர்வாதிகார அதிகாரங்களும் தான், மக்கள் பழிவாங்குவதிலிருந்து அவர்களைக் காப்பாற்றி இருக்கின்றன.

பல விஷயத்தில் கூறப்படும் கிளர்ச்சி, அரசாங்கத்துக்கு உள்ளேயும் பின்னாலும் உள்ள பிற்போக்கு சக்திகளுக்குத் தெய்வீக வரப்பிரசாதமாகும். கிளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அரசாங்கத்தை விமர்சித்த அல்லது அதனை நூறு வீதம் ஆதரிக்காத சகலரையும் அவர்கள் கூட்டுமொத்தமாகக் கைது செய்தார்கள். குறிப்பாக, சகல புரட்சிகர சக்திகளும் எதிர்காலத்தில் புரட்சிச் சக்திகளாக வளரக் கூடியவையும் கடுமையான அடக்குமுறையைக் கண்டன. மார்க்சிச-லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் பல தலைமை உறுப்பினர்களும் தடைக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். தொடர்ந்து அவ்வாறு செய்யப்பட்டிருக்கின்றார்கள். கிளர்ச்சிக்கு வெகு காலத்திற்கு முன்னரே ஜே. வி. பி. யின் எதிர்ப் புரட்சி இயல்பை அம்பலப்படுத்திய முதலாவது அரசியல் ஸ்தாபனமாக இக்கட்சி விளங்கிய போதும் இது செய்யப்பட்டிருக்கின்றது. கட்சியின் பொதுக் காரியதரிசியும் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவராவார். கட்சியின் தலைமை அலுவலகம் சோதனையிடப்பட்டது. அங்கு அச்சகம் கண்டபடி சேதப்படுத்தப்பட்டது. தோழர் மாஓ சேதுங்கின் நூற்றுக் கணக்கான சிங்கள தமிழ்ப் புத்தகங்களும் இதர புத்தகங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. அவை திருப்பித் தரப்படவில்லை. இவ்வாறு பிற்போக்குச் சக்திகள் புரட்சிகர இயக்கத்தின் வாயை நிரந்தரமாக மூட விரும்பின. சீன சார்பானவர்கள் என்று பெயர் பெற்ற பல பிரசித்தி பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள்.

லங்கா சமசமாஜக் கட்சியின் வாலிபர் சங்கங்களின் தலைவரான ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் ஜே. வி. பி. உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இரண்டாவது பெரிய பங்குதாரரான லங்கா சமசமாஜக் கட்சி அவரை விடுவிக்கத் தவறியமை, லங்கா சமசமாஜக் கட்சியின் வரலாற்றில் மிகவும் வெட்கக்கேடான சம்பவமாக அமையும். இதற்கு மாறாக திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஜே. வி. பி. உறுப்பினர் என்ற அதே சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தனது மகனை நாலு மணி நேரத்துக்குள் விடுவித்

தார். இது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் மூளைசாலித்தனமான முதலீடாகும். ஏனென்றால் அவசர கால நிலைமை, தடுப்புக் காவற் கைதிகள் ஆகியன சம்பந்தப்பட்ட சகல அடிப்படைப் பிரச்சினைகளிலும் எதிர்க் கட்சித் தலைவரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வாயை இது தீர்க்கமாகப் பூட்டுவதற்கு உதவியது. அத்துடன் இது இந்த அரசாங்கத்தின் வர்க்க சார்பையும் காட்டியது. என்ன இருந்தாலும் ஜெயவர்த்தனாக்களும் பண்டாரநாயக்காக்களும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா?

இது தவிர, 15000க்கு மேலானோர், பிரதானமாக இளைஞர்கள் ஜே. வி. பி. யுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். பிரதமர் அளித்த மன்னிப்பு வாக்குறுதியின் பேரில் சில ஆயிரம் பேர் சரணடைந்தார்கள். அவர்களும் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இதிலும் பார்க்கப் பெரிய அரசியல் கொந்தளிப்புகளுக்கு முகங்கொடுத்த எகிப்தும் பாகிஸ்தானும் இதிலும் குறுகிய காலத்தில் விஷயங்களைப் பரிசீலனை செய்து, தலைவர்களை விசாரணைக்குட்படுத்தி, மற்றவர்களை விடுதலை செய்து, அவசர கால நிலைமையை முடித்து செய்தித் தணிக்கையை நீக்கியுள்ளன. ஆனால் எமது சின்னஞ்சிறு இலங்கையில் பரிசீலனைகள், இன்னும் நடைபெறுகின்றனவென்றால் அது நத்தை வேகத்தில் நடைபெறுவதையே காட்டுகின்றது.

இலங்கையில் ஒரு தொகை ட்ரொட்ஸ்கியக் குழுக்கள் இருந்த போதும் இக்குழுக்கள் சிலவற்றின் தலைவர்கள் ஜே. வி. பி. யுடன் பொது மேடைகளில் தோன்றி அதற்கு நெருங்கியவர்களாக இருந்த போதும் தனியொரு ட்ரொட்ஸ்கிய வாதி கூடக் கைது செய்யப்படாதமை இந்தக் கைதுக்களின் மர்மமான ஓர் அம்சமாகும். இது நாம் துப்புத் துலக்க முடியாத மர்மமாகும்.

ஆனால் பொருளாதார முன்னணியில் தான் அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, முந்திய யூ. என். பி. அரசாங்கங்கள் கூடச் செய்யத் துணியாத மக்கள் விரோத நடவடிக்கை எடுத்தது. கூட்டம் நடத்தும் உரிமை, பேச்சுரிமை, வேலை நிறுத்த உரிமை, ஆகியவையும் அல்லது இதர எந்த வடிவ ஆட்சேபனை உரிமையும் மறுக்கப்பட்ட ஆதரவற்ற மக்களுக்கு முன்னால் காட்டப்பட்ட துப்பாக்கி முனைகளுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டு அரசாங்கம் அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள உலக

வங்கி இலங்கைக்கு கடன் கொடுப்பதற்கு வகுத்த நிபந்தனைகள் அனைத்தையும் நிறைவேற்றத் தொடங்கியது. பஸ் புகையிரதக் கட்டணங்கள், தபால் தந்தி விகிதங்கள், மின்சாரக் கட்டணங்கள், பாண், சீனி, பால், பெற்ரேல், சிகரட் ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டன. அரிசி மானியம் குறைக்கப்பட்டது. முன்னர் இலவசமாக இருந்த சுகாதாரச் சேவைக்கு ஒரு கட்டணம் அறவிடப்பட்டது. வாழ்க்கைச் செலவு மேலும் உயர்ந்து சென்றது. யூ. என். பி. ஆதரவாளர்கள் லங்கா சம சமாஜக் கட்சியின் டாக்டர் என். எம். பெரேராவின் இந்த ஆண்டுப் பட்ஜெட்டை வெடி கொழுத்தி வரவேற்றுர்கள்.

இந்தப் பெரும் சுமைகளையெல்லாம் மக்கள் மீது திணித்த அதே வேளையில் ஆயுதப் படைகளுக்கான செலவினங்கள் அதிர்ச்சி தரும் முறையில் அதிகரிக்கப்பட்டன. புத்த பகவான் போதித்த சுத்த அகிம்சைத் தத்துவத்தின் உறைவிடமான இந்தச் சமாதானத் தீவு இந்த ஆண்டில் அதன் ஆயுதப் படைகளையும் பொலீசாரையும் 25 வீதம் அதிகரிக்க விரும்புகின்றது. 1971 ம் ஆண்டுப் பட்ஜெட்டில் படைகளுக்கான மொத்த ஒதுக்கீடு 81,069,093 ரூபாக்களிலிருந்து 151,779,255 ரூபாக்களாக அதிகரித்திருக்கின்றது. கடற்படைக்கான ஒதுக்கீடு 23,778,540 ரூபாக்களிலிருந்து 36,601,880 ரூபாக்களாகியிருக்கின்றது. ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கான ஒதுக்கீடு 1,490,000 ரூபாக்களிலிருந்து 4,800,000 ரூபாக்களாக அதிகரித்துள்ளது. இலங்கை ஒரு பொலீஸ் ராஜ்யமாகும் பாதையில் துரிதமாகச் சென்று கொண்டிருக்கின்றது.

உலக வங்கியின் நவ காலனிஸ உதவியை இலங்கை பெறுவதற்கான நிலைமைகள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது எமது பொருளாதாரத்தை மேலும் அந்நிய ஏகாதிபத்திய ரதத்தின் சக்கரங்களில் கட்டிப்போடும். இன்றைய பொருளாதார அமைப்பு முறியடிக்கப்படாமற் தொடர்ந்திருக்கும் வரை ஏகாதிபத்திய, பிரபுத்துவ, முதலாளித்துவ சுரண்டல் அமைப்பு இடையீடின்றித் தொடர்ந்திருக்கும் என்பதை ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிரூபித்திருக்கின்றது.

சோஷலிசம் என்ருல் கூடுதலான கட்டுப்பாடு, கடின உழைப்பு என்று தற்போது மக்களுக்குச் சொல்லப்படுகின்றது. இது மோசடிப் பேச்சு, சோஷலிசம் என்பது முதலாளித்துவத்தை ஒழிப்பதாகும். இதைப் பண்டாரநாயக்கா, என். எம். பெரேரா

பீட்டர் கெனமன் கொம்பெனி செய்யவில்லை, ஒரு போதும் செய்ய விரும்பவுமில்லை. கடும் உழைப்பு என்பது முதலாளித்துவம் சோஷலிசம் இரண்டுக்கும் பொதுவான அம்சமாகும். முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் முதுகுமுறிய உழைப்பதன் விளைவுகள் முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் செல்வந்தர்களாக்குகின்றன. சோஷலிசத்தின் கீழ் கடும் உழைப்பின் பலன் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கிடைக்கின்றது. இரட்டை டாக்டர் பட்டம் பெற்ற மனிதர் எவ்வளவு நேர்மையற்ற வார்த்தை ஜாலத்தில் ஈடுபட்டாலும் இந்தச் சாதாரண உண்மையை மூடி மறைக்க முடியாது.

அரசாங்கமும் அதற்கும் பின்னுள்ள பிற்போக்கு வாதிகளும் மக்கள் மீது உண்மையில் ராணுவ சர்வாதிகாரம் ஒன்றைச் சுமத்தி அதன் பாதுகாப்பில் பணக்காரரை மேலும் பணக்காரராக்குவது ஏழைகளை மேலும் ஏழைகளாக்குவது என்ற தற்போது நிலவும் ஏகாதிபத்திய - பிரபுத்துவ - பெரும் முதலாளித்துவ பொருளாதார சுரண்டல் முறைக்கு முண்டு கொடுக்க சகல மக்கள் விரோத பொருளாதார நடவடிக்கைகளையும் எடுக்க கிளர்ச்சி நல்லதோர் சந்தர்ப்பத்தை அளித்திருக்கின்றது.

ஏழாவது அத்தியாயம்

# முடிவுகள்

வகுப்புவாதப் பிரச்சினைகள் உட்பட இலங்கை மக்களை எதிர்நோக்கும் சகல அடிப்படைப் பிரச்சினைகளும் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் நாட்டின் பொருளாதாரத்தின் நவ காலனித்துவ இயல்பும் அதன் ஆழமாகும் பொருளாதார நெருக்கடியுமாகும். நாடு ஆண்டுக் கணக்காகத் தொடர்ந்து நெருக்கடி நிலைமையில் இருந்து வருகின்றது. தொடர்ந்து விரிவடையும் எமது ஜனத்தொகைக்குத் தேவையான பாவனைப் பொருட்களை நாம் உற்பத்தி செய்ய முடியாமையினால் அல்லது எமது ஏற்றுமதிப் பயிர்கள் பெறும் விலைகளுக்குப் பரிமாற்றாக அவற்றை இறக்குமதி செய்ய முடியாமையினால் இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. எமது பொருளாதாரத்தின் செழிப்பையும் செழிப்பின்மையையும் தீர்மானிக்கும் இலங்கையின் ஏற்றுமதிப் பயிர்களின் பிரதானமாகத் தேயிலை, ரப்பர், தென்னை ஆகியன விலைகள் ஏகாதிபத்தியவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சர்வதேசிய சந்தையின் ஏற்ற இறக்கத்தினால் நிர்ணயிக்கப்படுவது இந்த நிலைமைக்கான காரணமாகும். உலக சந்தை மீது இலங்கைக்கு கட்டுப்பாடு கிடையாது.

எமது பொருளாதாரம் தேயிலையிலும், ரப்பரிலும் அளவுக்குக் கூடுதலாகத் தங்கியிருப்பதாலும் எமது பொருளாதாரத்தின் உச்ச பீடங்கள் எமது தேசிய செல்வத்தின் பெரும் பகுதியை இன்னும் உற்பத்தி செய்யும் தோட்டங்களில் பெரும்பாலானவை. எமது பெரும்பாலான வங்கிகள், எமது ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் பெரும் பகுதி, கப்பல் துறை இன்னபிற-இன்னும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாலும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. பல பத்தாண்டுகளாக ஏகாதிபத்தியவாதிகள் திட்டமிட்ட முறையில் எமது தேயிலை, ரப்பர் ஆகியவற்றின் விலைகளைக் குறைத்துள்ளார்கள். அதேபோலத் திட்டமிட்ட முறையில் உரம், இயந்திரங்கள் இன்னபிற போன்ற எமக்கான அவர்களுடைய ஏற்றுமதிகளின் விலைகளை அதிகரித்துள்ளார்கள். இவ்வாறு இலங்கை இரண்டு பக்கத்தாலும் பிழிந்தெடுக்கப்படுகின்றது. இந்தக் கொள்ளையில்

ஒரு பகுதி எமக்கு உதவியாக அல்லது கடனாக வருகின்றது. இதற்கு நாம் வட்டி கொடுக்க வேண்டும்; நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். கூறப்படும் சுதந்திரம் கிடைத்து 23 ஆண்டுகள் ஆகியபோதும், அரசாங்கங்கள் பல தடவை மாறிய போதும் யூ. என். பி. சரி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சரி, ஐக்கிய முன்னணி சரி எந்த அரசாங்கமும் எமது பொருளாதாரத்தின் மீதான அந்நிய ஏகாதிபத்தியத்தின் இந்தப் பிடியை அடிப்படையில் முறியடிக்க எதுவும் செய்யவில்லை.

நெருக்கடி கடுமையாகும் போதெல்லாம் சகல அரசாங்கங்களும் பொருளாதார நெருக்கடியின் சுமைகளை மக்கள் மேல் சுமத்துவதில் தமது திறமையைக் காட்டின. 1953 ல் யூ. என். பி. அரசாங்கம் அரிசி மானியத்தை நீக்கி தபால், புகையிரத விகிதங்களைக் கூட்டி, பள்ளிப் பிள்ளைகள் பெற்ற மத்தியானப் பணிசைத் தட்டிப் பறித்தது. 1962 ல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரிசி மானியத்தை குறைக்க முயற்சித்தது. ஆனால் பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டது. 1967 ல் யூ. என். பி. ரூபாவின் மதிப்பைக் குறைத்தது. அரிசிப் பங்கீட்டை அரைவாசியாக்கியது. அதே வேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலுள்ள உலக வங்கியிலிருந்து பெருமளவில் கடன் பெற்றது. 1971 ல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் புகையிரத, பஸ், மின்சார, தொலைபேசி, தபாற் கட்டணங்களையும் பெற்றோல், சிகரெட் இதர பல அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளையும் அதிகரித்து இலவச சுகாதார சேவையைக் குறைத்தது.

இந்த நடவடிக்கைகளிற் பல கடன் வழங்குவதற்கான முன் நிபந்தனையாக உலக வங்கி போட்ட உத்தரவுகளின் பேரில் இந்த அரசாங்கங்களால் எடுக்கப்பட்டன. இலங்கையின் எதிர்காலம் ஏற்கனவே உலக வங்கிக்கு அடைவு வைக்கப்பட்டிருக்கின்றது. சோஷலிசம் பற்றிய வெற்றுப் பேச்சுகளுடன் மக்கள் மீது சுமைகள் அதிகரிக்கின்றன. வசதி படைத்தவர்கள் அதற்கேற்ற தியாகங்களைச் செய்யவில்லை. நாட்டிற்குப் பெரும் வருமானத்தைத் தரும் தோட்டங்கள் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் கரங்களிற் தொடர்ந்திருக்கும் போது சோஷலிசத்தைக் கட்டியமைப்பது பற்றிப் பேசிக் கொண்டிருப்போர் மிகவும் நகைப்புக்கிடமான நாடகத்தை நடித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரும் யூ. என். பி. யின் துணைத் தலைவரும் இலங்கை முதலாளி வர்க்கத்தின் மிகுதியும் புத்திசாதுரியமான தலைவர்களில் ஒருவருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஐக்கிய முன்

ஹணி அரசாங்கத்தின் சோஷலிசத்தைக் கட்டியமைக்கும் முயற்சி
யின் சமீபகால ரசிகர்களில் ஒருவராவர். அவர் அரசாங்கத்துக்கு
ஆதரவைத் தெரிவித்ததுடன் நின்றுவிடவில்லை. அதில் ஒரு
அமைச்சராகவும் சேரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.
தனது வர்க்கத்தின் நலனைக் கருத்திற் கொண்டு அவர் இந்த
அரசாங்கம் யூ. என். பி. செய்யக் கூடியதிலும் பார்க்கத் திறமை
யாக முதலாளி வர்க்கத்துக்குச் சேவை புரிகின்றது என்பதையும்
அது புரட்சிக்கு எதிரான மிகச் சிறந்த கோட்டை, ஆகவே
அதற்கு முண்டு கொடுக்க வேண்டும் என்பதையும் உணர்ந்திருக்
கின்றார்!

நாற்பது ஆண்டு காலமாகச் சர்வஜன வாக்குரிமை இருந்து வருகின்ற போதும், கூறப்படும் சுதந்திரம் பெற்று 23 ஆண்டுகளாகிய போதும் இலங்கையை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினை எதுவும் தீர்க்கப்படவில்லை. உண்மையில் அவை கடுமையாகியுள்ளன. வேலையின்மை கட்டுப்படுத்த முடியாத அளவை அடைந்திருக்கின்றது. வாழ்க்கைச் செலவு கற்பனை செய்ய முடியாதவாறு ஏறியிருக்கின்றது. பரிகாரம் கிடைக்கும் என்று தெரியவில்லை. காரணம் விளங்கக் கூடியது. இலங்கையை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வு அதன் பொருளாதாரத்தை அந்நிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை செய்வதன் மூலந்தான் பெற முடியும். எத்தனை அரசாங்கங்கள் மாறினாலும் முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் இதனைச் செய்ய முடியாது.

முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற கேலி நாடகத்தின் மூலம் எந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தாலும் ஏகாதிபத்திய-பிரபுத்துவ-பெரும் முதலாளித்துவ வர்க்க பொருளாதார அமைப்பு உடைக்கப்படாதிருக்கும் வரை இதனைப் பாதுகாக்கும் முதலாளித்துவ வர்க்க, அடக்குமுறை அரசு இயந்திரம் பலாத்காரத்தினால் உடைத்தெறியப்படாத வரை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருக்கும்.

ஒரே பதில் மாக்சிசம் - லெனினிசம் - மாசேதுங் சிந்தனையின் பிரகாசத்தால் ஒளியூட்டப்பட்ட புரட்சிப் பாதையாகும்.

இக்கட்டுரை 1970-ம் ஆண்டில் ''சேகுவேராக் கும்பலினுல் திசை திருப்பப்பட்டவர்களுக்கு'' என்ற தலைப்பில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையாக ''கம்கறுவா'' ''தொழிலாளி'' ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. அக்கட்டுரை மீண்டும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

# சேகுவேரா கும்பலினுல் திசை திருப்பப்பட்டவர்களுக்கு: புரட்சிகரத் தத்துவத்திற்கு வெறும் வார்த்தை ஜாலம் பதில் அல்ல!

புதிதாக உருவாகியுள்ளது எனக் கூறப்படுகின்ற ஒரு அரசியல் இயக்கத்துக்கு சமீப காலமாக முதலாளித்துவப் பத்திரிகைகள் தமது சொந்த நோக்கத்துக்காக பரந்த அளவு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இந்த இயக்கத்துக்கு ஒரு வித கவர்ச்சியை கொடுப்பதற்காகவும் இந்த இயக்கத்தை சேகுவேராவின் பெயருடன் இணைத்து இப் பத்திரிகைகள் பிரமாதப்படுத்துகின்றன.

இந்தப் போலிப் புரட்சி இயக்கம் இப்பொழுது அரங்குக்கு வந்துள்ளது. அது தன்னை மக்கள் விடுதலை முன்னணி எனக் கூறிக்கொள்கிறது. இந்த இயக்கத்தினர் ஒரு பத்திரிகையையும் வெளியிடத் தொடங்கியுள்ளனர். இதில் பல குழப்பமான செய்திகள் கூறப்பட்டுள்ளன. இப் பத்திரிகையில் சண்டமாருத வார்த்தைப் பிரயோகங்கள் பாவிக்கப்பட்ட போதிலும் அவை வெறும் வார்த்தை ஜாலங்களே.

மாக்சிசம் - லெனினிசம் - மாசேதுங் சிந்தனை எனும் சரியான புரட்சிகர தத்துவத்தினுல் எமது கட்சி வழி நடத்தப்படுவதால் இந்தக் கும்பலின் வெத்து வேட்டுக்களை அம்பலப்படுத்துவது எமது கடமையாகும். இப் புதிய கட்சியின் பாத்திரத்தைப் பற்றி மக்கள் சரியான கருத்தைப் பெறுவதற்கும், இந்தக் கட்சியினுல் பிழையாக வழிநடத்தப்படுவோரை சரியான புரட்சிப் பாதைக்கு வென்றெடுப்பதற்கும் இவர்களை அம்பலப்படுத்துவது எமது கடமையாகும்.

இந்த இயக்கம் உருவாகுவதற்கு பல காரணங்கள் உள்ளன. நீண்ட நெடுங்காலமாகப் பேணிக் காக்கப்பட்டு வந்த புரட்சி

வாதத் தத்துவத்தை சமசமாஜக் கட்சித் தலைமையும், செனமன் திரிபுவாதக் கும்பலும் காட்டிக் கொடுத்து விட்டதால், இந் நாட்டில் உள்ள நேர்மையான புரட்சிவாதிகள் அடைந்த விரக்தி இந்த இயக்கம் உருவாகுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். இக் காட்டிக் கொடுப்பின் பின்னணியி, சரியான புரட்சிகரத் தலைமை அளிக்கும் நோக்கத்தோடு தான் எமது கட்சி மாசேதுங் சிந்தனையின் அடிப்படையில் மாக்சிச - லெனினிசக் கட்சியாக புனரமைக்கப்பட்டது. எமது கட்சி காட்டிய சரியான புரட்சிகரப் பாதை மக்களின் கவனத்தைப் பெறத் தொடங்கியது.

மாசேதுங் சிந்தனை இலங்கையில் படிப்படியாக வளர்ச்சி அடைவதை நவீன திரிபுவாதக் கும்பலோ, அல்லது பல்வேறு பட்ட ட்ரொஸ்கிய வாதக் கும்பல்களாலோ தடுக்க முடியவில்லை. இக் கால கட்டத்தில் தான் மாசேதுங் சிந்தனை பரவுவதை தடுப்பதற்காக சில எதிர்புரட்சிவாதிகள் மாசேதுங் சிந்தனையுடன் போட்டியிடும் நோக்கத்துடன் சேகுவேராவுடன் இணைந்துள்ள போலிப் புரட்சித் தத்துவத்தை முன்வைக்கத் தொடங்கினார்கள். நவீன திரிபுவாதிகளோ, அல்லது ட்ரொட்ஸ்கிய வாதிகளோ செய்ய முடியாததை மாக்சிச - லெனினிச விரோதக் கும்பல் செய்ய முயற்சிக்கிறது.

இந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோவியத் நவீன திரிபுவாதிகளால் மாஸ்கோவிலுள்ள லுமும்பாப் பல்கலைக் கழகத்தில் பயிற்றப்பட்டது ஏதோ தற்செயலானதல்ல. இவர் திரிபுவாத விரோதி என்ற சாட்டில் மாக்சிச - லெனினிச இயக்கத்தை சீர்குலைப்பதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டார். மாக்சிச - லெனினிச வாதிகள் மத்தியில் சென்று, அவர்கள் மத்தியிலேயே இருந்து கொண்டு, மாக்சிச - லெனினிச இயக்கத்தை உடைத்தெறிவதற்காக அனுப்பப்பட்டார். இவர் இக் கலையை மாஸ்கோவில் நன்கு கற்றுத் தேறியுள்ளார். மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் போது, சீனாவிலிருந்த சில எதிர்ப்புரட்சிவாதிகள் செங்கொடியைத் தாக்குவதற்காகச் செங்கொடியைத் தூக்கியதைப் போல, மக்கள் விடுதலை முன்னணி எனக் கூறிக் கொள்ளும் இவர்களும் இலங்கையிலுள்ள புரட்சிகர இயக்கத்தை தாக்குவதற்கு எதிர்ப்புரட்சி வாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதற்காக புரட்சிக் கொடியைத் தூக்கியுள்ளனர்.

ஒருவன் தன்னைப் பற்றிக் கூறுவதைக் கொண்டு அவனை எவ்வாறு எடைபோட முடியாதோ அதைப் போலவே ஒரு கட்சியும் அது தன்னைப் பற்றிக் கூறுவதைக் கொண்டு அதை எடைபோட முடியாது. மக்கள் மத்தியில் வைப்பதற்குத் தம்மிடம் ஒரு தெளிவான தத்துவம் இல்லை என்பதை இந்த முன்னணியினர் பிரசுரித்துள்ள முதலாவது பத்திரிகையில் வெளிப்படுத்தியுள்ளார்கள். தத்துவம் ஒன்று இல்லையென்றால் அதன் அர்த்தம் முதலாளித்துவ தத்துவம் இருக்கிறது என்பதுதான். அது மட்டுமல்ல, இந்த முன்னணியின் தலைவர்கள் சில காலமாக பரப்பி வந்த தத்துவத்தையும் மறைப்பதற்கு இப் பத்திரிகை முயல்கின்றது. அவர்களின் "பிரசித்தி பெற்ற" ஐந்து சொற்பொழிவுகளில் இந்திய

வப்சாலழி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இந்த முன்னணியின் தலைவர்கள் தொடுத்த படு மோசமான வகுப்புவாதப் பிரசாரத்தைப் பற்றி இப்பத்திரிகையில் கூறப்படவில்லை.

புரட்சிகரக் கொள்கைகளுடன் வகுப்புவாதத்தையும் கெட்டித்தனமாகக் கலந்து. சிங்கள வாலிபர்களின் சில பகுதியினரை கவர்ந்து கொண்டதன் மூலம் இக்கும்பல் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. வகுப்புவாதம் மனிதனின் கீழ்த்தரமான உணர்ச்சியாகும் அதனைத் தட்டி எழுப்புவது மிகவும் சுலபம். இதற்கும் மாக்சிச-லெனினிசத்துக்கும் அல்லது வேறு எந்த வித புரட்சிகர தத்துவத்துக்கும் ஒட்டுமில்லை; உறவுமில்லை. உண்மையில் இதற்கும் சேகுவேராவுக்கும் கூட சம்பந்தமில்லை. சேகுவேராவோ, அல்லது அவரது ஆதரவாளர்களோ பரப்புகின்ற எந்தக் கொள்கையோடாவது நாம் இணங்குவதில்லை. குறிப்பாக, தொழிலாளி வர்க்கத்துக்கு தலைமை தாங்க சரியான புரட்சிகரத் தத்துவத்தைக் கொண்ட அரசியல் கட்சி ஒன்றின் அவசியத்தையும், எந்த ஒரு புரட்சி இயக்கத்திலும் வெகுஜனங்கள் பங்குபற்ற வேண்டிய அவசியத்தையும் சேகுவேரா நிராகரித்துள்ளார். இதனை நாம் ஒத்துக்கொள்வதில்லை. எனினும். சேகுவேரா ஒரு குறுகிய தேசிய வாதியோ, வகுப்புவாதியோ அல்ல. அவர் ஒரு இனத்தைப் பற்றி, அல்லது நாட்டைப் பற்றி அக்கறை கொண்டவரல்ல. ஆர்ஜண்டைனவில் பிறந்த அவர் கௌதமாலாவில் புரட்சிக்காக வேலை செய்தார். கியூபா புரட்சியில் பங்கு கொண்டார். பொலிவியாவில் அங்குள்ள கொரில்லாக்களுக்கு உதவ முயற்சித்து இறந்தார்.

ஆனல், இங்குள்ள சேகுவேர கும்பல். இந் நாட்டுச் செல்வத்தின் பெரும் பகுதியை உருவாக்குகின்றவர்களும், இந் நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் குறிப்பிட்ட தொகையினருமான தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக புரட்சியின் முனையை நீட்டுகிறார்கள். இங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்பாளர்களின் கைக் கருவிகளாம். பிரிட்டிஸ் ஏகாதிபத்தியவாதிகள் இயற்றிய பயன்படுத்த முடியாத காணிச் சட்டம் போன்ற காட்டுமிராண்டித்தனமான சட்டங்களுக்கு ஆளாக்கப்பட்டு, தமது பாரம்பரியமான நிலங்களிலிருந்து கண்டி விவசாயிகள் எவ்வாறு வெளியேற்றப்பட்டார்களோ, அதே போல, இத் தோட்டத் தொழிலாளர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் செயல்களுக்குப் பலியானவர்களாவர்.

வெளி நாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெருமுதலாளித்துவம் ஆகியவற்றினுல் சிங்கள தொளிலாளர்களும் விவசாயிகளும், தோட்டத் தொழிலாளர்களும் கூட்டாகச் சுரண்டப்படுகிறார்கள். எனவே, இச் சக்திகள் யாவும் பொது எதிரிக்கான போராட்டத்தில் நேச சக்தியாக விளங்குபவர்கள். இச் சக்திகள் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டவையல்ல. புரட்சி வெற்றியீட்ட வேண்டுமானுல், இதனை சகல புரட்சிவாதிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். சிங்கள தொழிலாளர்களும், விவசாயிகளும்

தோட்டத் தொழிலாளர்களும் ஐக்கியப்பட்டால் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றுக்கு மரண அடி கொடுக்க முடியும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இதனால்தான் டி. எஸ். சேனநாயக்காவிலிருந்து ஆர். ஜி. சேனநாயக்கா, ஹேமா பலநாயக்கா, கே. எம். பி. ராஜரத்தின, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வலதுசாரியினர் உட்பட அனைவரும், இலங்கையில் புரட்சிகர இயக்கத்துக்கு அடி கொடுப்பதற்காக இந்த இரு பகுதி மக்களிடையே பிளவு ஏற்படுத்துவதற்கு எப்போதும் முனைந்து வந்துள்ளனர்.

இப்போது மக்கள் விடுதலை முன்னணியினரும் சிங்கள வாலிபர்கள் மத்தியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான வெறுப்புணர்வை வளர்க்க முனைகின்றனர். இந்நாட்டில் புரட்சி வெற்றி பெற வேண்டுமானால், அதற்காக ஏகாதிபத்திய விரோத புரட்சிகர ஐக்கிய முன்னணி அமைக்கப்படுவதை இதன் மூலம் இவர்கள் சீர்குலைத்து வருகின்றனர். இவர்கள் எவ்வளவு தான் புரட்சியைப் பற்றி வாய்கிழியக் கத்தினாலும், உண்மையில் இவர்கள் டி. எஸ். சேனநாயக்கா, ஆர். ஜி. சேனநாயக்கா ஹேமா பலநாயக்கா, கே. எம். பி. இராஜரத்தின போன்றோரின் கேடு கெட்ட சீர்குலைவு வேலையைத்தான் செய்து வருகின்றனர். இவர்கள் உணர்வு பூர்வமாக எதிர்ப்புரட்சி வாதிகள். இக்குற்றச்சாட்டை இத்தலைவர்களுக்கு எதிராக நாம் வைக்கின்றோமேயல்லாமல் அவர்களினால் தவறாக வழிநடத்தப்படுகின்றவர்களுக்கு எதிராக அல்ல.

இன்று ஒரு பக்கத்தில் திரிபுவாதம், சீர்திருத்தவாதம் மற்றும் பலதரப்பட்ட ட்ரொட்ஸ்கியவாதம் இன்னொரு பக்கத்தில் வகுப்பு வாதம் ஆகிய இரு அபாயங்கள் புரட்சிகர இயக்கத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன எனவே நவீன திரிபுவாதம், ட்ரொட்ஸ்கிய வாதம் மற்றும் தொழிலாளி வர்க்கத்துக்குள்ளே புகுந்துள்ள தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான, வேறான உதவாக் கரைத் தத்துவங்களுக்கு எதிராக நாம் இடைவிடாது நடத்துகின்ற தத்துவார்த்த போராட்டத்தைப் போல வகுப்புவாதத்துக்கு எதிராகவும் போராட வேண்டும்

தோழர் மாசேதுங் அவர்களின் ''நோர்மன் பெத்யூனின் ஞாபகார்த்தமாக'' என்ற கட்டுரையைப் படிக்கும் படியும், அதனைத் திரும்பத் திரும்ப படிக்கும் படியும் நாம் ஒவ்வொருவரையும் தூண்ட வேண்டும். நோர்மன் பெத்யூன் கனடாவைச் சேர்ந்த டாக்டரும் ஒரு கம்யூனிஸ்டுமாவார். அமெரிக்க - கனடா கம்யூனிஸ்ட் கட்சிகளினால் சீன செஞ்சேனையுடன் சேர்ந்து பணி புரிவதற்காக இவர் சீனாவிற்கு அனுப்பப்பட்டார். தென் சீனாவில் வந்திறங்கிய இவரை சியாங்கை-ஷேக்கினால் அவனுடைய ராணுவத்தில் சேவை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். பொருளாதார வெகுமதிகள் அளிப்பதாக உறுதி கூறப்பட்டது. எனினும் அதனை பெத்யூன் உதறித் தள்ளினார்.

அதன் விளைவாக, அவர் சீனக் கம்யூனிஸ்ட் படைகளை சென்றடைவதற்கு தேவையான போக்குவரத்து வசதிகள் மறுக்கப்பட்டன. ஐம்பது வயதினரான பெத்யூன் கொஞ்சமும் பயமின்றி ஆயிரக்கணக்கான மைல்கள் கால் நடையாக நடந்து யெனனை யும் தலைவர் மாஓ சேதுங்கையும் வந்தடைந்தார். போர் முனையில் பணிபுரிய விருப்பம் தெரிவித்த அவர், இறுதியில் போர்முனையிலேயே ஒரு வருடத்திற்கும் மேலாக நிகரற்ற சேவை செய்தார். அங்கு அவர் தனது கைவிரலில் ஏற்பட்ட காயத்தையும் பொருட்படுத்தாது ஒரு சத்திர சிகிச்சை செய்யும்போது ஏற்பட்ட தொத்து நோயின் தாக்குதலுக்கு ஆளாகி இறுதியில் தியாகியாகி உயிரிழந்தார். அவரின் ஞாபகார்த்தமாக மாஓ எழுதிய கட்டுரை அவர் எழுதிய கட்டுரைகளிலேயே மிக அதிகமாக வாசிக்கப்படும் கட்டுரையாக திகழ்கிறது.

இக் கட்டுரையில் தோழர் மாசேதுங் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறுர். ''சிறிதளவேனும் சுயநலமின்றி, சீன மக்களின் விடுதலை லட்சியத்தை தமது சொந்த லட்சியமாக ஒரு அந்நியனைக் கருதும்படி செய்த இவ்வுணர்வு எத்தகையது? இது தான் சர்வதேசிய உணர்வு: கம்யூனிச உணர்வு. இந்த உணர்வை ஒவ்வொரு சீன கம்யூனிஸ்டும் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே நமது சர்வதேசியம்; குறுகிய தேசிய வாதம், குறுகிய தேசாபிமானம இரண்டையும் எதிர்க்க நாம் கைக்கொள்ளும் சர்வதேசியம்''.

இது நாமும் மனதில் பதித்துக்கொள்ள வேண்டிய ஒரு பாடமாகும். புரட்சியும் வகுப்புவாதமும் ஒன்று சேர்க்க முடியாதவை. வகுப்புவாதத்தையும், இனத்துவேஷத்தையும் பிரச்சாரம் செய்பவன் உண்மையான மாக்சிஸ்ட்-லெனினிஸ்டாக இருக்க முடியாது.

சிறந்த கோஷங்களை எழுப்புவதன் மூலம் புரட்சிவாதி ஒருவன் திருப்தியடைய முடியாது. உண்மையான புரட்சிவாதி, புரட்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பொது எதிரியை அடையாளம் கண்டு அவனைத் தனிமைப்படுத்துவதிலும், பொது விரோதிக்கு எதிராக ஐக்கியப்படுத்தக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப் படுத்துவதிலும், போராட்டத்தில் சரியான முறைகளைக் கையாள்வதிலும் வல்லவனுயிருக்க வேண்டும். இவற்றில் ஒன்றிலாவது அவன் தவறினுல், அவன் பிற்போக்குவாதிகளின் கையில் தான் சிக்குவான். அவன் விரும்பியோ விரும்பாமலோ அவர்களின் கைக்கருவியாக மாறுவான்.

எனவே உகிலேயே சிறந்த, மிகவும் முன்னேறிய புரட்சித் தத்துவமான மாசேதுங் சிந்தனையின் ஒளியில் இலங்கையின் அரசியலை ஆராயுமாறு மக்கள் விடுதலை முன்னணியின் - அல்லது சேகுவேரா வாதிகள் எனப்படுவோரின் எதிர்ப் புரட்சித் தத்துவத்தினுல் திசைதிருப்பப்பட்ட உண்மையான புரட்சிவாதிகளை நாம் கேட்டுக் கொள்கின்றேம்.

இதன்படி அவர்கள் இலங்கை அரசியலை ஆராய்வோர்களேயா ஞல், ''சுதந்திரம் கிடைத்து இருபத்திரண்டு வருடங்களுக்குப் பின்ணரும் நாட்டின் பொருளாதாரம் ஆங்கில, அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள். அவர்களின் அடிவருடிகள் ஆகியோரின் கைகளில் தொடர்ந்துமிருப்பதினுல் தான் இன்று இன, மொழி வேறுபாடு இன்றி மக்கள் மத்தியில் நிலவுகின்ற வேலையில்லாத் திண்டாட்டமும், நிலமில்லாத நிலைமையும் உருவாகின்றது என்பதை உணர்வார்கள். அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெரு முதலாளித்துவம் ஆகியனவே இந்நாட்டு மக்களின் பிரதான எதிரி என்பதையும், அவனைத் தனிமைப்படுத்துவதற்காக இன, மொழி வேறுபாடின்றி ஐக்கியப்படுத்தக் கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்தல் எமது தந்திரோபாயக் கடமை என்பதையும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள், மாணவர்கள், வாலிபர்கள், மற்றும் தேசபக்த சக்திகள் அனைவரையும் ஒரு புரட்சிகர ஐக்கிய முன்னணியின் கீழ் ஐக்கியப்படுத்தல் எமது கடமை என்பதையும் உணர்வார்கள். தொழிலாளர்-விவசாயிகள் ஐக்கியம் இந்த ஐக்கிய முன்னணியின் அடித்தளமாக இருத்தல் வேண்டும்.

அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யு. என். பி. யின் தலைமையிலுள்ள உள் நாட்டுப் பிற்போக்கு சக்திகள் ஆகியவற்றை முற்று முழுதாக அடியோடு தூக்கி எறிவதே ஐக்கிய முன்னணியின் நோக்கமாகும். சுரண்டும் வர்க்கங்களின் பொருளாதார, அரசியல் அதிகாரத்தை சீர்திருத்தங்களின் மூலம், அல்லது பாராளுமன்ற சமாதான மாற்றத்தின் மூலம் அழித்தொழிக்க முடியாது என்பதை உணர்வதற்கு மாசேதுங் சிந்தனை நமக்கு வழிகாட்டுகின்றது. இக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒரே யொரு வழிதான் உண்டு. அதுவே பலாத்காரப் புரட்சியாகும். ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரு முதலாளித்துவ அமைப்பு முறையை உடைத்தெறிந்து சுரண்டலின் காவல் நாய்களாக விளங்குகின்ற அரசு இயந்திரத்தை நிர்மூலமாக்கி, மாக்ஸ் கூறுவதைப் போன்று, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை - அதாவது தொழிலாளி வர்க்கத்தின் அரசு யந்திரத்தை நிறுவினுல் தான் மக்களின் பிரச்சினைக்கு இறுதியான தீர்வுகாண முடியும்.

எமது சகாப்தத்தின் மாபெரும் மாக்சிஸ்ட்-லெனினிஸ்டான தலைவர் மாசேதுங் அவர்கள் கூறியவாறு, அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கிறது என்ற அடிப்படை உண்மையை சகல புரட்சிவாதிகளும் கிரகித்துக் கொள்ள வேண்டும். எளிதான இந்தக் கோஷத்தில் மாக்சிச-லெனினிசத்தின் சாராம்சம் அடங்கியுள்ளது. முதலாளித்துவப் பாராளுமன்றம் வெறும் பம்மாத்து விளையாட்டு என்பதை சகல புரட்சிவாதிகளும் அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் இதனை முற்றுமுழுதாக நிராகரித்தல் வேண்டும். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தமது நேரத்தை வீணுக்கக் கூடாது. தேர்தல்களில் பங்குபற்றுமாறு மக்களுக்கு அழைப்புக் கொடுத்து அவர்களை ஏமாற்றக் கூடாது.

மக்களைப் பிளவுபடுத்தி, அவர்களை ஏமாற்றுவதற்கும், பாராளு மன்றத்தின் மூலம் சமாதானமாக சோஷலிச மாற்றத்தை ஏற் படுத்த முடியும் என்ற மாயையைப் பரப்பி அவர்களின் வர்க்க உணர்வையும், அவர்களின் போராட்ட உணர்வையும் மழுங்க டிப்பதற்கும், ஆயுதப் படைகளில் தங்கியுள்ள உண்மையான அதிகார பீடத்திலிருந்து மக்களின் கவனத்தை திருப்புவதற்கும், ஏகாதிபத்திய வாதிகளினுல் பாவிக்கப்படும் கருவி தான் பாராளு மன்றம் என்பதை அவர்கள் உணர வேண்டும். இது ஆயுதப் போராட்டத்துக்குப் பதில், வார்த்தை போராட்டத்தை நடத்தும் முயற்சியாகும்.

இதை உணர்ந்து கொள்வது, புரட்சிப் பாதையில் செல்வ தற்கு ஓர் அடிப்படையான முதல் நடவடிக்கையாகும். முதலா ளித்துவ பாராளுமன்ற ஏமாற்று விளையாட்டை நிராகரிக்கின்ற உறுதியான முடிவை நமது கட்சி மட்டும் தான் எடுத்தது என் பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றேம். மக்கள் விடுதலை முன் னணியினர் தமது முதலாவது மத்திரிகையில் வெளியிட்டுள்ள அறிக்கையை ஒருவர் ஆராய்ந்து பார்த்தால், இக்கும்பலும் பாராளுமன்ற வாதத்திலிருந்து விலகிக் கொள்ளவில்லை என்ற முடி வுக்குத்தான் வருவார். இவர்கள் கடந்த தேர்தலில் முக்கூட்டு முன்னணிக்கு வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்ட தோடு திருப்திப்படாமல், சோஷலிசத்தைக் கொண்டு வருமாறு இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறுர்கள். இதன் மூலம் புரட்சியில்லாமல் சோஷலிசத்தைக் கொண்டுவர முடியுமென்ற தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்கள். இது மட்டு மல்ல, இவர்கள் ஒரு புதிய ஆலோசனையையும் முன்வைத்துள்ள னர். அதாவது, அரசியல் அதிகாரத்தை தேசியமயப்படுத்த வேண்டுமாம். இது திரிபுவாதச் சிந்தனையின் வெளிப்பாடாகும். முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறை அரசு இயந்திரத்தை அப் படியே கையேற்று, அதனை தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்குப் பாவிக்க முடியும் என்ற கொள்கைக்கு எதிராக தோழர் லெனின் கடுமையாகப் போராடினுர். பழைய அரசு இயந்திரத்தை நிர்மூல மாக்கி விட்டு முற்றிலும் புதிதான தொழிலாளி வர்க்கத்தின் அரசு இயந்திரத்தை நிறுவ வேண்டும் என்று இதனுல்தான் தோழர் லெனின் கூறினுர். இதனை அறிந்து கொள்ளாதவர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளாதவர்கள் மாக்சிஸ்ட் - லெனினிஸ்டாக இருக்க முடியாது.

புரட்சியை வெகுஜனங்களால் தான் நடத்த முடியும். விரல் விட்டெண்ணக்கூடிய சில நபர்களினுல் அவர்கள் எவ்வளவு தான் பயிற்றப்பட்ட போதிலும் சரி, அல்லது ஒரு பொலீஸ் நிலையத் திற்கு ஐம்பது பேர் என இருந்தாலும் சரி-புரட்சியை நடத்த முடியாது என்பதை நாம் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேம். மக்கள் மீது நம்பிக்கை வையுங்கள், தனி நபர்கள் மீது அல்ல என தலைவர் மாஓ கூறுகின்ருர். பிற்போக்கின் மத்திய ஸ்தானமும், முதலாளித்துவ அரசு இயந்திரம் குவிந்துள்ள இடமுமான நகரங் களிலிருந்து மக்கள் சக்தி அதிகமாக உள்ள கிராமப்புறங்களுக்குச் சென்று, கிராமப்புற மக்களைத் தட்டி எழுப்பி, கிராமப்புறத் தளப் பிரதேசங்களை அமைத்து, புரட்சிகர ஆயுதப் படைகளைக் கட்டி

எழுப்பி, அதனை விஸ்தரித். ... தி.த்திய வாதிகள், பிற்போக்கு வாதிகள் ஆகியோரின் ஆயுதம் தாங்கிய அடக்கு முறையை இவர்கள் தற்காலிகமாக புரட்சிவாதிகளிலும் பார்க்க பலமுடையவர்கள்-நீண்டநாள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் முறியடித்து, கிராமங்கள் மூலம் நகரங்களைச் சுற்றி வளைத்து, இறுதியாக நகரங்களைக் கைப்பற்றுதல் புரட்சிவாதிகளின் கடமையாக இருத்தல் வேண்டும்.

இத் தந்திரோபாயத்தையும், யுத்த தந்திரோபாயத்தையும் தலைவர் மாசேதுங் வகுத்தார். மகத்தான சீனப் புரட்சி தேசம் பரந்த வெற்றியை ஈட்டியதற்கு இவை வழிகாட்டின. தேவையான மாற்றங்களுடன் இத் தந்திரோபாயங்களையும் யுத்த தந்திரோபாயங்களையும் பாவித்தால் தான் இலங்கைப் புரட்சியும் வெற்றியடையும். எமது சகாப்தத்தின் மாபெரும் மாக்சிஸ்ட்-லெனினிஸ்டான மாசேதுங் அவர்களினால் வகுக்கப்பட்ட பொதுவான இந்தப் புரட்சி மார்க்கத்திலிருந்து விலக முயற்சித்தால், அல்லது வளர்ந்து வரும் புரட்சி இயக்கத்தை வகுப்புவாத வழிகளில் திசை திருப்ப முயற்சித்தால் அழிவு நிச்சயம்.

சமசமாஜ கட்சி, கௌமன் திரிபுவாதக் கும்பல் போன்ற பழைய ''இடதுசாரி'' கட்சிகள் இன்று மக்களின் முன் நிர்வாணமாக அம்பலப்பட்டு நிற்கின்றன. அவர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. இன்றைய அரசாங்கம் தான் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும், அல்லது மக்களின் அடிப்படைத் தேவைகளை அது பூர்த்தி செய்யும் என மக்கள் நம்பவில்லை. சோஷலிசம் பற்றிய வெறும் வார்த்தை ஜாலங்களை நம்பி மக்கள் ஏமாறப் போவதில்லை.

மக்கள் புதிய புரட்சிகரத் தலைமையை நாடுகின்றார்கள். ஆனால் புதிய பாதையைத் தேடிப் போய் குழிகளில் விழுந்துவிடக் கூடாது. ஒரே எஜமானனின் பல்வேறு தாளங்களுக்கேற்ப ஆடுகிறவர்களுக்கு மக்கள் இரையாகக் கூடாது.

மாசேதுங் சிந்தனையைக் கற்று, அதுதான் இலங்கைப் புரட்சியின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் ஒரேயொரு புரட்சிகரத் தத்துவம் என்பதை ஏற்றுக்கொள்ளுமாறு புதிய புரட்சிகர தலைமையை தேடிச் செல்கின்றவர்களை குறிப்பாக உள்நாட்டு சேகுவேரா கும்பலினால் திசைதிருப்பப்பட்டவர்களை நாம் கேட்டுக் கொள்கின்றோம். புரட்சி என்பது ஒரு அரசியல் சதியல்ல. அது தலைவர் மாஓ குறிப்பிட்டுள்ளதைப் போன்று ''ஒரு எழுச்சியாகும். ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை தூக்கியெறியும் பலாத்கார நடவடிக்கையாகும்.'' அதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கு பற்ற வேண்டும். அது விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படல் வேண்டும். தோழர் லெனின் குறிப்பிட்டுள்ளதைப் போல் ''புரட்சிகர தத்துவம் இல்லாவிட்டால் புரட்சிகர நடவடிக்கைகள் இருக்க முடியாது.

பிழையான தத்துவம் பிழையான நடவடிக்கைக்கே இட்டுச் செல்லும். எனவே, மக்கள் விடுதலை முன்னணி சரியான பாதையில் செல்ல முடியாது. அவர்களின் தத்துவம் மாசேதுங் சிந்தனைக்கு எதிரானது. ஆகையால் சகல புரட்சிவாதிகளும் மாசேதுங் சிந்தனையை ஏற்று, அதை இலங்கையின் ஸ்தூல நிலைமைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

கொழும்பு
10-8-70

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி

SOUTH ASIA SECTION
STACKS 52795

2 F 02

